MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor :

T. CHANDRASEKHARAN, M.A., L.T.,

Curator, Government Oriental Manuscripts Library, Madras.

No. LXXXV

பிள்ளைப் பிணி வாகடம்

குழந்தைகளின் வியாதிகள், அவற்றிற்குரிய பரிகாரமுறைகள் பற்றிய
ஒரு குறிப்புநூல்

13

PIḶḶAIP-PIṆI-VĀKAṬAM

A collection of Notes on certain ailments and recipes of Children

CRITICALLY EDITED WITH INTRODUCTION AND NOTES

BY

Āyurvedabhūṣaṇa Āyurvedācārya, Vaidyaratna,
Pandit M. DURAISWAMI AIYANGAR, A.K.A.C.
Ayurvedic Medical Practitioner (Regd.)

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

1952

Price Rs. 4-12-0

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
MADRAS-1

INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May, 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication, The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B L.
2. ,, R. P. Sethu Pillai. B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayy a, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D

13. Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Haq, M.A., D. Phil., (Oxon.)
18. Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. Sri P. D. Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Govt. Memo. 7297-E/50-3, Edn., D/—19—5—'50 and Govt. Memo. No. 15875-E/50-4, Edn., D/—7—9—'50.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., and C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph. D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication during 1949-50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

TAMIL

1. Kappal Śāttiram
2. Anubhava Vaiddiya Muṟai
3. Āttānakōlāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōḷaṉ Pūrva Paṭṭayam
6. Śivajñāna Dīpam

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭuvu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam—(Tantrasārasaṅgraha)
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

MALAYĀLAM

1. Garbha Cikitsa
2. (a) Vāstulakṣaṇam
   (b) Śilpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram—(Bālaprabōdham)

KANNADA

1. Lōkōpakāram
2. Raṭṭamataṁ

3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra

ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

"B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

TAMIL

1. Śarabendra Vaidya Muṟai (Diabetes)
2. Do. (Eyes)
3. Do. (Anaemia)
4. Do. (Svāsakāsam)
5. Agastiyar
6. Koṅkaṇarśarakku Vaippu
7. Tirucciṟṟambalakkovaiyār with Padavurai
8. Tālasamudram
9. Bharatanāṭyam
10. (a) Paṇḍikēḷi Vilāsa Nāṭakam
    (b) Purūrava Cakravarti Nāṭakam
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library
12. Rāmaiyaṉ Ammāṉai

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāladaśāprāṇapradīpikā
3. Raghunātha Nāyakābhyudayamu
4. Rājagōpāla Vilāsamu
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRĀṬHI

1. Nāṭyaśāstra Saṅgraha
2. (a) Book of Knowledge
   (b) Folk Songs
   (c) Dora Darun Veṇi Paddhati
   (d) Asvasa Catula Dumani
3. (a) Pratāpasimhendra Vijaya Prabandha
   (b) Sarabhendra Tīrthāvali
   (c) Lāvaṇi
4. Devendra Kuravañji
5. Bhakta Vilāsa
6. Śloka Baddha Rāmāyaṇa

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations
2. Rājamṛgāṅka
3. Ānandakandam
4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. (a) Coḷacampū
   (b) Sahendra Vilāsa
7. Dharmākūtam—Sundara Kāṇḍa.
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Saṅgīta Darpaṇa
11. Bījapallava

During 1950, only the Sub-committee for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages during 1950-51.

TAMIL

1. Daṭcanāyaṇār-Vaiddiya-Aṭṭavaṇai
2. Vaiddiyak Kalañciyam
3. Anubhava Vaiddiya Muṟai Vol. 3

TELUGU

1. Śaivācārasaṅgrahamu
2. Anubhava Vaidyam
3. Abhinayadarpaṇamu

SANSKRIT

1. Ārogyacintāmaṇi
2. Tattvasāra with Ratnasāriṇī
3. Sūtrārthāmṛta Lahari
4. (a) Ratnadīpikā
   (b) Ratnaśāstra

MALAYĀLAM

1. Aśvacikitsa
2. Phalasārasamuccaya

KANNAḌA

1. Vaidya Sāra Saṅgraha

During 1951–52, only the Sub-committees for TAMIL, TELUGU and MALAYALAM met in the month of April 1951. The following books were taken up for publication in the various languages.

TAMIL

1. Saptariṣināḍi
2. Karnāṭakarājākkaḷ Savistāra Caritram
3. Bharata Siddāntam
4. Pillaippiṇivākaṭam
5. Anubhava Vaiddiyam Vol. 4
6. Māṭṭuvākaṭam

TELUGU

1. Brahmavidyā Sudhārṇavamu
2. Rāgatāḷacintāmaṇi
3. Vaidyacintāmaṇi
4. Kumārarāmuni Kathā
5. Kāṭamarāju Kathā

SANSKRIT

1. Devakeralam—Candrakaḷā Nāḍi
2. Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri Śaṅkarācārya

MALAYĀLAM

1. Kiḷivaṇḍusamvādam
2. Advaita Vedāntam
3. Bārhaspatyasūtra with Malayālam commentary
4. Karaṇapaddhati

KANNAḌA

1. Sadgururahasyam

ARABIC

2. Shawakil-Ul-Hur

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the footnotes except in the case of a few books in which the correct readings have been given in the footnote or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for

readily consenting to edit the manuscripts and see them through the press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present work is based on two palm-leaf manuscripts preserved in the Government Oriental Manuscripts Library, bearing R. Nos. 508 and 1797. The former manuscript was presented to this Library in the year 1921—22 by Kombai Sri Sankaranarayana Vadhyar of Uttamapalayam, Madurai District. The other manuscript was presented in the year 1949-50 by Mridangam Sri Subbaiyar of Chattapuram village, Palghat. Both the manuscripts are now printed as Part I and Part II respectively.

Government Oriental Manuscripts Library, Madras-5.
31—1—1952

T. CHANDRASEKHARAN,
General Editor,
Madras Govt. Oriental Series.

PREFACE

This book *Pillaip-pini Vakatam* is a work on the diseases peculiar to children and their treatment. The special medical subject termed as *Kaumara Bhrtyam* in Āyurveda is called Bāla Vākaṭam or Pillaip-piṅi Vākaṭam in Tamil. But the Ayurvedic term Kaumāra Bhṛtyam is used in a wider sense than the Tamil phrase Pillaip-piṇi Vākaṭam or Bāla Vākaṭam, since the subject Kaumāra Bhṛtyam deals with the method of bringingup the children from the time of their birth up to their juvenile state and various kinds of treatment during their healthy and unhealthy conditions in addition to a number of peculiar ailments that affect the children. The phrase "Management of children" is the exact and appropriate English term to indicate the Sanskrit word Kaumāra Bhṛtyam. So this Tamil phrase Pillaip-piṇi Vākaṭam or Bāla Vākaṭam does not carry the fuller idea or meaning of Kaumāra Bhṛtyam. This Pillaip-piṇi Vākaṭam deals solely with some diseases of children and some curious ways of treatment adapted by Tamil Vaidyas and charmers.

This book is neither a standard work nor is to be considered as one of the important minor Tamil medical works written by the ancient authors such as Agastiyar, Teraiyar, Pulippani, Bhogar and others. My conviction is that this is a collection of several medical notes made by a person of neither ancient nor of recent time. The subject matter might have been gathered from various old Tamil medical works as well as works of recent origin. The person who was inquisitive to gather

some peculiar recipes and pieces of information as regards the children's diseases, has also included many matters heard from some physicians and others in this book, as he regarded them to be useful and note-worthy. I am of opinion, therefore, that this is an old Note-book of medical matters collected from time to time by a physician, or most probably by an amateur interested in medicine and demonology.

This book vaguely describes various diseases of children and the ill-effects supposed to be caused by the attacks of ghosts or devils with their treatments by medicaments, spell of charms and offering of Bhūta-bali to hostile demons. The description of diseases etc. is not regular and the whole subject matter is to be considered written at random. In many places we can notice the repetition of passages. Many names of the diseases etc., are found to be quite peculiar, rude and not mentioned in any ancient recognised Tamil medical works.

In this book the subject matter is written in prose and poetry. Poetical passages form the major part of the book. The portions, where the passages are found in prose form, deal invariably with the illness caused by evil spirits or devils and their treatment by the spell of Mantras and Yantras. This portion of prose contains generally more blunders. The compiler does not invariably follow the grammatical rules or any other principles adopted by the recognised Tamil authors.

It seems to be an incomplete book. In the beginning we find neither the traditional benedictory verse nor any introductory passage. The authentic Tamil medical works—major or minor—do not begin abruptly with a passage stating a child's complaint as this

book curiously does. The book ends similarly with some passages containing absolutely irrelevant and unnecessary subjects, most vulgar in character. This kind of abrupt conclusion, especially in indecent way was never approved by standard authors. In some pages many lines or passages are missing owing to the loss of the leaves in the original manuscript.

I have to say a few words about an important fact as regards the revising and editing of this book. When I undertook the editorship of this work, I had only the press copy of the manuscript supplied by the Curator of the Government Oriental Manuscript Library. I had no other copy of this book to compare with and scrutinise the work at hand. Then I took the book Bāla Vākaṭam (a copy of which I possess) edited by Vaidyaratna Murugesa Mudaliar and read it. The reason for this attempt of mine was the synonymous character of these two names, Pillaippiṇi Vākaṭam and Bāla Vākaṭam. Then I noticed with surprise the similarity in character of these two books in various places. I have compared the poetical portions of this book under notice with those of Bāla Vākaṭam and found most of the verses of these two books are the same.

While I was correcting and revising the press copy manuscript of this book with the help of Bāla Vākaṭam and its printing work also was in progress, I was in search of another authentic work unlike the present book, called Bāla Vākaṭat-tiraṭṭu which came to my notice already some time ago. Fortunately I was able to borrow a copy of this ancient work from my friend Āyurveda Bhūṣaṇa P. Somasundara Devar of Choolai. So I have used these two Tamil medical works—Bāla Vākaṭam and Bāla Vākaṭat-tiraṭṭu to correct, compare and scrutinise the present book

Pillaip-piṇi Vākaṭam in order to edit this book properly and critically. Bāla Vākaṭam edited by the late Murugesa Mudaliar and published in 1933, does not indicate anywhere its author's name or its origin or any other information with regards its authenticity. The other book Bāla Vākaṭat-tiraṭṭu is an old printed work and apparently an authentic one. Its title page unfortunately is missing. Its characteristic old appearance indicates its age and I think that it would have been printed seventy or eighty years ago. The very title Bāla Vākaṭat-tiraṭṭu specifies that that work is also a compilation of matters collected from different earlier works of Agastyar, Dhanvantari, Teraiyar and others. I have gathered these and other informations from the prefatory notes written by some learned Pandits in Bāla Vākaṭat-tiraṭṭu. I learn through the preface of that book that there was another "Bāla Vākaṭam" written by Agastyar himself which must be the earliest work on this special subject and the authors of Bāla Vākaṭat-tiraṭṭu and also Bāla Vākaṭam edited by the late Murugesa Mudaliar might have taken the necessary subject matters from that ancient work of Agastyar. Bāla Vākaṭam edited by the late Murugesa Mudaliar is almost an adaptation of Bāla Vākaṭat-tiraṭṭu, for, the subject matter, the verses, the way in which the chapters are divided and the names given for almost all the chapters are found to be identically same in both the books. Bāla Vākaṭat-tiraṭṭu must, evidently be an earlier work than Bāla Vākaṭam and most of the verses found in Pillaip-piṇi Vākaṭam might have therefore been taken either from Bāla Vākaṭat-tiraṭṭu or from another ancient Bāla Vākaṭam of Agastyar. The name of the author of this book, Pillaip-piṇi Vākaṭam its origin, date and object of its writingare not known.

In this brief preface I am not giving necessary reasons and facts with regards my ideas and views expressed above. Many detailed accounts about the character of this book aud the facts related to my remarks and view points stated above can be found in my Tamil critical Introduction printed along with this preface.

This book, however, may be useful for those who want to know the real nature and standard of mcdical knowledge the Tamil Vaidyas possessed and their made of medical practice some time ago.

At the end I have to express my thanks to Sri T. Chandrasekharan, M.A., L.T., Curator, Government Oriental Manuscripts Library, Madras, for his kindness in offering me the editorship of this book.

Kilpauk, Madras,
15th January, 1952.

M. DURAISWAMI AIYANGAR.

முகவுரை

தமிழ் நாட்டில் அகத்தியர், போகர், தேரையர், புலிப்பாணி, யூகிமுனி முதலிய பண்டைக்காலத்திய வைத்தியாசிரியர்கள் இயற்றிய வைத்தியநூல்களும், யோகநூல்களும், வாதநூல்களும் பொதுவாக வைத்தியம், யோகம், இரஸவாதம் ஆகிய வற்றைக் கூறுகின்றன. நாம் இப்பொழுது பரிசோதித்து அச்சிடும் "பிள்ளைப் பிணி வாகடம்" என்கிற இந்நூல் அந் நூல்களைப்போல் வைத்தியம் முதலிய விஷயத்தைப் பொது வாகக் கொள்ளாமல், குழந்தை வைத்தியம் என்னும் பிரத்தியேக வைத்தியமுறையைக் கூறுவதற்காக ஏற்பட்டதாகும். தமிழ் நாட்டில் சில வைத்தியர்களும், தமிழ் மாந்த்ரிகர்களும், வைத்தியரல்லாத பொதுமக்களிற் சிலரும் வழங்கும் விநோத மான பல குழந்தைப்பிணிகளின் பெயர்களையும், அவற்றிற்கான பரிகாரமுறைகளையும் இந்நூலிற் காணலாம். இந்நூலின் அமைப்பு வகைகளையும், நாம் பரிசீலனை செய்துள்ளபடி இந் நூல் ஏற்படுவதற்கான முகாந்தரங்களையும், இதன் குணகுணங் களையும் விளக்குவதற்கு முன், "பிள்ளைப் பிணி வாகடம்" என்னும் நூலின் பெயரைப்பற்றி சிறிது ஆராய்ச்சி செய்வோம்.

"வாகடம்" என்னும் சொல் "வாக்படன்" என்கிற பெயரின் திரிபினல் அமைந்த வைத்தியப் பெயர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஆசார்ய வாக்படன் என்னும் பிரபல வைத்திய நூலாசிரியர் இருந்தார். அக்னிவேசர் முதலியவர்களால் வட மொழியில் விவரிக்கப்பட்டுள்ள காயசிகித்ஸை என்னும் முறையையும்[1], தந்வந்தரி முதலியவர்களால் அநுஷ்டிக்கப்பட்டு

1. காயசிகித்ஸை—ஜ்வரம், அதிஸாரம், கூயம், குஷ்டம் முதலான (வாதாதி தோஷக்கோளாறுல் உண்டாகும்) ரோகங்களுக்கு ஔஷதங்களை யுபயோகித்துச் செய்யப்படும் வமநம், விரேசநம் முதலிய சிகித்ஸாமுறை களை விளக்கும் வைத்தியப் பகுதி.

வந்த சல்யசிகித்ஸா முறையையும்[1] ஒன்றுகூட்டி அஷ்டாங்க ஹ்ருதயம், அஷ்டாங்கஸங்க்ரஹம் முதலான அரிய ஆயுர்வேத நூல்களை அந்த வாக்படாசாரியர் இயற்றியிருக்கிறார். காய சிகித்ஸை சல்யசிகித்ஸை என்னும் அவ்விரு பெரிய பிரிவு களடங்கிய வைத்தியசாஸ்திரத்தை மீண்டும் அஷ்டாங்கங்கள் என்னும் எட்டுப் பிரிவுகளாக[2] வகுத்து, வைத்தியசாஸ்திரத்தில் புதிய சீர்திருத்தங்களைச் செய்தவரும் அவ் வாக்படரேயாவர். வாக்படர் ஒழுங்கு படுத்திய அஷ்டாங்கங்கள் என்னும் இச்சீர் திருத்தமுறை அமைந்ததுமுதல் ஆயுர்வேதசாஸ்திரத்தைக் கற்பதும், அச்சாஸ்திரமுறைகளின்படி வைத்தியம் செய்வதும் இச்சாஸ்திர வழியில் நடபட விரும்பியவர்களுக்கு வெகு எளி தாய் விட்டது. அஷ்டாங்கங்களும் தனித்தனி வகுக்கப்பட்டு, வைத்தியசாஸ்திரம் வாக்படர் மூலமாய் பூர்ணமான ஒழுங்கு முறையில் அமைந்ததையுணர்ந்த பண்டைய வைத்தியாசாரியர் கள் முழு வைத்தியசாஸ்திரத்தையுமே வாக்படமுறை அல்லது பாஹடமுறை என்று வழங்கத்தலைப்பட்டனர். அதைப் பிற் காலத்தில் கிரமக்கிரமமாக பாஹடம் அல்லது வாகடம் என்று

1. சல்யசிகித்ஸை—சஸ்த்ரங்களையும், யந்த்ரங்களையும் பிரயோகித் துச் செய்யப்படும் ரணசிகித்ஸை; இந்த சல்யசிகித்ஸையே கழுத்துக்குக் கீழ்ப்பட்ட அவயவங்களிற் செய்யப்பட்டால் அது ஸாமான்ய சஸ்த்ரசிகித்ஸை என்றும், தோளுக்கு மேற்பட்ட அவயவங்களிற் செய்யப்பட்டால் அது சாலாக்ய சிகித்ஸை என்றும் கூறப்படும்.

2. அஷ்டாங்கங்கள்—காயசிகித்ஸை, பாலசிகித்ஸை, க்ரஹசிகித்ஸை, ஊர்த்வாங்கசிகித்ஸை (இதுவே சாலாக்யம்), சல்யமென்னும் சஸ்த்ர சிகித்ஸை, விஷசிகித்ஸை, இரஸாயநசிகித்ஸை, வாஜீகரணசிகித்ஸை என்னும் இவை ஆயுர்வேதத்தின் எட்டு அங்கங்களாகும்.

மாற்றியும் தமிழ் நாட்டில் வழங்கலாயினர்[1]. பிறகு, பாஹுடம் அல்லது வாகடம் என்னும் சொல் வைத்தியம் என்கிற பொதுப் பெயரைக் குறிக்கும் முக்கியமான மொழியாகவும் ஆகிவிட்டது. அதிலிருந்து பல வேறு வைத்திய விஷயங்களுடன் வைத்தியம் என்னும் பெயருக்குப் பதிலாக அதே பொருளில் வழங்கப்பட்ட வாகடம் என்கிற மொழியைச் சேர்த்து, தமிழ் வைத்திய நூலாசிரியர்கள் ஔஷதவாகடம், குணவாகடம், பாலவாகடம் என்றவாறு வெவ்வேறு வைத்தியப் பிரிவைச் சேர்ந்த நூல்களுக்கும் பெயரிடுவது வழக்கமாயிற்று. பிள்ளைப் பிணி வாகடம் என்பதும் அவ்விதம் ஏற்படுத்திய ஒரு பெயராகும். பால வாகடம் என்பதும் பிள்ளைப் பிணி வாகடம் என்பதும் ஒரே வகையான வைத்தியநூலின் பெயரைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களாம். பாலவாகடம் என்பதற்குக் குழந்தைகளின் நோய்களையும் அவற்றின் பரிகாரங்களையும் விளக்கும் நூலென்று

1. அஷ்டாங்கஹ்ருதயம் முதலிய நூல்களின் கர்த்தாவான ஆசாரிய வாக்படரை வெகு காலமாய் பாகடர் என்று வழங்குகிறார்கள். ஆந்திர தேசத்தில் வாக்படரை பாஹடன் என்றும், அவரியற்றிய நூல்களைப் பொது வாக (அஷ்டாங்கஹ்ருதயத்தை) பாஹடம் என்றும் விசேஷமாகக் கூறு கிறார்கள். சிந்தாமணி, பஸவராஜீயம் முதலிய தெலுங்கு வைத்தியக் கிரந்தங்களில் வாக்படரைக் குறிப்பிடும் ஸந்தர்ப்பங்களில் பாஹடர் என்றும், அவரது நூலை பாஹடம் என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அஷ்டாங்கஸங்கிரஹ வியாக்யாநத்தில் (இந்து வியாக்யாநம்) மங்கள ச்லோ கத்திற்குப் பிறகு உள்ள ச்லோகத்திலும் வாக்படரை பாஹடர் என்று அந்த வியாக்யாதா கூறியிருப்பதையும் பார்க்கலாம். ப, வ என்கிற எழுத்துக் களை ஸம்ஸ்க்ருதத்தில் சிற்சில விடங்களில் பேதமில்லாமல் ஒன்றுக்கு மற்றொன்றை மாற்றி யுபயோகிப்பது வழக்கம். அந்த முறையில் பாஹடம் (பாகடம்) என்பது வாகடம் என்று திரிபடைந்தது. P. ராமநாதன் தொகுத்து வெளியிட்டுள்ள தமிழ்ப்பேரகாதியிலும் (1909-ஆம் வருஷப்பதிப்பு) பிரபல ஆயுர்வேத நூல்களியற்றிய பாஹடாசாரியர் என்பவரே வாகடர் என்றும், அவர் இயற்றிய சிறந்த வைத்தியநூலே வாகடம் என்றும் வழங்கப்படுவதாய் குறிக்கப்பட்டுள்ளது.

தான் பொருள். வடமொழி வைத்தியநூல்களில் கூறப்பட் டுள்ளபடி குழந்தைகளின் பராமரிப்பு முறைகளையும், அவர்களுக்குத் தோன்றும் நோய் முதலியவற்றையும் பற்றி விவரிக்கும் வைத்தியப்பகுதி கௌமாரப்ருத்யம் எனப்படும்[1]. ஆயுர்வேத நூல்களில் கௌமாரப்ருத்யப் பகுதியில் விசேஷமாக குழந்தைகள் பிறந்தது முதற்கொண்டு வாலிபப் பருவம் அடையும் வரையில் ஆரோக்கியநிலைமையிலும், அநாரோக்கிய நிலைமையிலும் அவர்களை எவ்வெவ்வாறு பராமரிக்க வேண்டு மென்கிற உபாயங்கள் ஒழுங்காகவும் விளக்கமாகவும் விவரிக்கப் பட்டுள்ளன. பாலவாகடம் அல்லது பிள்ளைப் பிணி வாகடம் என்னும் இக் கௌமாரப்ருத்ய நூலில் குழந்தைகளை ஆரோக்கிய நிலைமையில் எவ்வாறு பரிபாலிக்கவேண்டுமென்கிற உபாயங் களையோ விதிநியமங்களையோ காணவில்லை. குழந்தைகளைப் பீடிக்கும் சில பிணிகளையும், பேய் பிசாசு முதலியவற்றால் ஏற்படுவதாகப் பண்டைக்காலத்தவர் கருதிய சில சங்கை களென்னும் கோளாறுகளையும், அவற்றிற்கான சில பரிகார வகைகளையும் மாத்திரம் ஒருவிதமாய் இதிற் காணலாம்.

அகஸ்தியர் முதலிய பிரபல வைத்தியாசிரியர்கள் இயற்றி யுள்ள பண்டைக்காலத்து எத்தமிழ் நூலிலும் படித்தறியாத மிகவும் விநோதமான நோய்களின் பல பெயர்களை இந்நூலிற் காணலாம். சாஸ்திரப்பயிற்சியிற் பிற்போக்கான, ரோகங்களின் நிதாந லக்ஷணாதி சாஸ்த்ரீய வழிகளில் அநுபவமுமில்லாத நபர் கள் இவ்விதப் பெயர்களை வழங்கியிருக்க வேண்டுமென்றுதான்

1. பாலர்களின் பராமரிப்பு முறை, பாலர்களின் வியாதிகள், அவற் றின் சிகித்ஸாக்ரமம் ஆகிய விஷயங்களை விளக்கும் வைத்தியப்பகுதி ஆயுர்வேதத்தில் கௌமாரப்ருத்யம் எனப்படுகிறது. (குமாரன் ஒன்றுல் குழந்தை அல்லது பிள்ளை; அதைப் பரிபாலிக்கவும் சிகித்ஸிக்கவும் ஏற்ற பணி ப்ருத்யம் எனப்படும்; அது ஸம்பந்தமான சாஸ்திரம் கௌமாரப்ருத்யம்). கௌமாரப்ருத்யம், பாலவாகடம், பிள்ளைப் பிணி வாகடம் என்பவை ஒரே விஷயத்தைக் குறிக்கும் பர்யாயபதங்களாகும்.

நமக்குத் தோன்றுகிறது. வால்கிரிசை, துட்டுமாந்தம், வால குமாகண்டன், வாலகிறுகை, குண்டலியாகணம், கெந்தபாளி, அந்தகசிரகணம், வெண்கண்ணன், கருடக்கண்ணன் முதலிய நோய்களும், கண்டி, துடரி, பேணுகாடி, அக்கா தைவங்கள் முதலான பேய் பிசாசுகளாலுண்டாவதாகக் கூறப்படும் கோளாறுகளும், ராடிகட்டுதல் முதலிய சங்காதோஷ பரிகார முறைகளும் இந்நூலிலன்றிப் புலிப்பாணி, தேரையர் முதலானோரின் பழைய வைத்தியநூல்களில் எதிலும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை; இவ்விதமான கோளாறுகளின் பெயர்களையும் லக்ஷணங்களையும் கைதேர்ந்த வைத்தியசாஸ்திரவல்லோர் வழங்குவதாகவும் நாம் கேள்விப்பட்டதில்லை. இந்நூலின் இரண்டு பாகங்களிலும் பிறந்தது முதல் பன்னிரண்டு பதின்மூன்று வயது வரையில் குழந்தைகளை கண்டி, சாமுண்டி, துடரி, பேணுகாடி, எரிண்டி, பிரங்காளமுனி, காடுமதி முதலிய பலவேறு பெயருள்ள பேய்கள் என்னும் க்ஷுத்ர தேவதைகள் தாக்கித் துன்பப்படுத்துவதாகக் கூறும் அபூர்வமான விஷயங்களையும், அவற்றின் குறிகள் விந்தையான பரிகாரமுறைகள் ஸம்பந்தமான விசேஷங்களையும் இந்நூலிற் படிக்கலாம். அல்லாமலும் அப் பேய்தோஷம் முதலியவற்றின் பரிகாரத்திற்காகக் கொச்சையான பாஷையில் சில மந்திரங்களும், குளிசங் கட்டுவது முதலியவற்றைக்குறிக்கும் யந்திரங்கள் என்னும் வேறு சில விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன. யந்திரங்களுக்கான சில சக்கிரங்களும் அம்மந்திராதிகளுக்கு அடுத்து வரையப்பட்டிருப்பதையும் காணலாம். இக்காலத்தில், சாஸ்திரதத்துவப்படியும் அநுபவரீதியிலும் நம்பி ஆதரிக்கக் கூடியவாறு விளக்கப்படும் ரோக நிதாநாதிகளையும், ரோகங்களைப் பரிகரிப்பதற்கான அவ்விதசாஸ்த்ரீய சிகித்ஸா முறைகளையும் தவிர்த்து, சாஸ்திர தத்துவங்களுக்கும் அநுபவத்திற்கும் ஒவ்வாத பிணிப் பெயர்களிலும், பேய் பிசாசு முதலியவை தாக்குவதால் தோன்றுவதாகக் கூறப்படும் கோளாறுகளிலும், அவற்றின் பரிகாரத்திற்காக உபயோகமுள்ளவையென்று குறிக்கப்படும்

மந்திர யந்திரங்களிலும் நாகரிகப்பழக்கமுள்ள ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படுவது ஸாத்யமாவென்கிற கேள்வி உண்மையில் ஏற்படுவது இயல்பு. ஆகிலும் தமிழ் நாட்டில் சில காலத்திற்கு முன்பு தொழில் புரிந்துவந்த வைத்தியர்களுடைய கல்விப்பயிற்சியின் தன்மையும், நாகரிக வாழ்க்கையின் வகையும், ரோகபரிசீலனமுறையும், சிகித்ஸைகள் செய்யும் கிரமமும் எவ்விதமிருந்தனவென்பதை விளக்குவதற்கு இவ்வித நூல்கள் சாஸ்திராராய்ச்சிக்காரருக்கு ஒருக்கால் உபயோகமாயிருக்கக் கூடும். இந்நூலின் குணகுணங்களைப்பற்றி மீண்டும் நமது கருத்துக்களை பின்னல் ஆராய்ச்சி முறையில் சிறிது விளக்குவோம்.

இந்நூலின் பெயரையும், இதிலுள்ள அநேகம் செய்யுட்களையும், வேறு பல அம்சங்களையும் நாம் நுட்பமாகப் படித்து வந்ததில், பாலவாகடத்திரட்டு என்னும் பழைய வைத்தியநூல் இதற்குப் பெரிதும் ஆதாரமாயிருந்திருக்கவேண்டுமென்று தெரியவந்தது. ஆனல் இந்நூலில் பிள்ளைகளைப் பீடிப்பதாகக் கூறப்படும் பேய் பிசாசங்களைப் பற்றியாவது, மந்திர யந்திரங்கள் ஸம்பந்தமான பரிகார முறைகளைப்பற்றியாவது பாலவாகடத்திரட்டில் ஒன்றுங் கூறப்படவில்லை. ஆகவே பாலவாகடத்திரட்டிலிருந்து பெரும்பகுதியும், வேறு முகாந்தரங்கள் மூலமாக வேறு சிற்சில பகுதியும் தொகுத்து இக்குறிப்புச்சுவடியை ஒருவர் எழுதி வைத்திருக்கலாமென்று தோன்றுகிறது[1]. பாலவாகடம் என்கிற பெயரிலுள்ள பால என்கிற சொல்லுக்குப் பதிலாகப் பிள்ளை என்னும் சொல்லை

---

1. பலவேறு துறைகளிலிருந்து கேட்டும் பார்த்தும் வந்த வைத்தியக் குறிப்புகளை அவ்வப்போது குறித்து வைத்துக்கொண்டு ஒருவர் எழுதி வைத்த குறிப்பேடாக (நோட்புஸ்தகம்) இருக்கவேண்டுமேயன்றி, ஓர் ஆசிரியர் இயற்றிய முக்கிய நூலாக இருக்குமென்று இதைத் தீர்மானிக்கக் கூடவில்லை.

மாற்றிப் போட்டு, பிணி, வாகடம் என்னும் சொற்களையுங் கூட்டி, "பிள்ளைப் பிணி வாகடம்" என்று அக்குறிப்புப் புஸ்தகத்திற்கு வேறு பெயர் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்றும் கருதுகிறோம். பிள்ளைப் பிணி வாகடம் என்கிற இப்புஸ்தகத்தை எழுதிச் சேர்க்க பாலவாகடம் அல்லது பாலவாகடத்திரட்டிலிருந்து எவ்வளவு விஷயங்கள் கையாளப்பட்டிருக்கின்றனவென்பதை இங்கு விவரித்துக் கூற இடமில்லை. இப்புஸ்தகத்தில் நாம் ஆங்காங்கு எழுதிச் சேர்த்துள்ள உரையை முற்றிலும் படித்துப் பார்க்கும் வாசகநேயர்களே பாலவாகடத்திரட்டு என்னும் பழையநூல், இக்குறிப்புச்சுவடி எழுதுவதற்குப் பெரிதும் ஆதாரமாயிருந்ததென்பதைச் சுயமாய் எளிதில் அறிந்து கொள்வர்.

பிள்ளைப் பிணி வாகடம் எழுதுவதற்கு பாலவாகடத்திரட்டு என்னும் நூல் பெரிதும் ஆதாரமாயிருந்ததென்றால், பாலவாகடத்திரட்டு எத்தகையதென்பதையும் நாம் இங்கு விளக்க வேண்டியது அவசியமாகிறது. இப்புஸ்தகம் நமது பரிசோதனைக்கு வருவதற்கு முன்பே, பாலவாகடத்திரட்டு என்னும் நூலைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருந்தோம். இந்நூலைப் பதிப்பிக்க ஆரம்பித்தது முதல் பல வைத்திய நண்பர்களிடமும் அப்புஸ்தகத்தைப்பற்றி விசாரித்து வந்தோம். அவ்வாறு முயற்சிசெய்து வருகையில் சூளை வைத்தியரென்று பிரசித்தி பெற்ற காலஞ்சென்ற ஸ்ரீகங்காதரதேவர் குமாரரும் நமது பழைய நண்பருமான ஆயுர்வேதபூஷணம் சோமசுந்தரதேவரிடமிருந்து அப்புஸ்தகம் ஒன்று கிடைக்கப் பெற்றோம். இதற்குள் நாம் பதிப்பிக்க ஆரம்பித்த இப் பிள்ளைப் பிணி வாகடநூல் அரை வாசிக்குமேல் அச்சாய்விட்டது. அதுவரையில் காலஞ்சென்ற வைத்தியரத்னம் முருகேச முதலியார் பதிப்பித்த "பாலவாகடம்" என்னும் நூலின் உதவியால் சில பாட வேறுபாடுகளையும் மற்றும் சில அம்சங்களையும் நமது உரையில் குறித்துச் சிற்சில பரிசோதனை செய்யலானோம். ஆனால் "பாலவாகடத்திரட்டு"

என்னும் பழைய வைத்தியநூல் கிடைத்து அதைப் படித்துப் பார்த்ததில், ஸ்ரீமுருகேமுதலியார் பதிப்பித்த "பாலவாகட நூல்[1]" பழைய பாலவாகடத்திரட்டின் மாறுபட்ட மற்றோர்

---

1. பாலவாகடம் என்கிற இந்நூல் ஸ்ரீ க. ச. முருகேச முதலியாரால் பார்வையிடப்பட்டு 1933-இல் அச்சிடப்பட்டது; இந்த நூல் இயற்றியவர் யாரென்றறிவது, இதற்கு ஆதாரமான எட்டுப் பிரதியைப்பற்றிய எத்தகவலாவது, இந்நூலைப்பற்றிய எவ்வித வேறு வரலாறுவது ஸ்ரீ முதலியாரவர்களால் சிறிதும் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இப்புஸ்தகத்தில் பாலவாகடத்திரட்டிலுள்ளபடி விஷயங்களின் வகுப்புகள் சற்றேறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. பாலவாகடத்திரட்டில் சுர வகுப்பு, சன்னி வகுப்பு இவை வெவ்வேறு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டும் பாலவாகடத்தில் ஒரே வகுப்பில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விதமே பற்பல வியாதி வகுப்பு, விரேசன வகுப்பு என்னும் இரண்டு பிரிவுகள் பாலவாகடத்திரட்டில் காணப்பட, அவ்விரண்டும் பாலவாகடத்தில் ஒரே வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே முந்திய நூலில் 13-வகுப்புகளும், பின்னர் கூறிய நூலில் 11-வகுப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் பாலவாகடத்திரட்டில் முதலில் எல்லா நூல்களிலும் வழங்கப்படும் விதமாய்க் காணப்படும் கடவுள் வணக்கம் முதலிய விஷயங்களைப்பற்றிய செய்யுட்கள் பாலவாகடத்தில் விலக்கப்பட்டுள்ளன. அதுபோலவே நூலின் முடிவுரையிலுள்ள "அகத்திய முனியுரைத்த ஆயுர்வேதந்தன்னில்....." என்கிற செய்யுளும், வேறிடங்களில் அவ்விதமே ஆயுர்வேதச் சொல் அடங்கிய வேறு சில விஷயங்களும் பாலவாகடப் புஸ்தகத்தில் விலக்கப்பட்டிருக்கின்றன. அல்லாமலும் "கேளே நீ பிறக் கணமும்" என்கிற பாட்டில் (பாலவாகடம் பக்கம்-98) "ஆயுர்வேதக் குறிப்பறிந்தார்" என்பதை (பாலவாகடத்திரட்டு பக்கம்-எத) "மருந்து நூலின் குறிப்பறிந்தார்" என்றவாறு மாற்றியும், இதுபோலவே வேறிடங்களில் சில விஷயங்களை வேறுபடுத்தியும், சில பாகங்களை முன் பின்னுகப் பூரட்டியும் பாலவாகடம் என்னும் நூலைப் பதிப்பித்திருப்பதற்குப் பிரமாணமொன்றும் அப்புஸ்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. அகஸ்தியருக்கும் பாலவாகடநூலுக்கும் உள்ள எவ்வித ஸம்பந்தத்தையாவது, பாலவாகடத்திரட்டு என்னும் பழைய நூலையாவது பாலவாகடத்தின் முன்னுரையில் சிறிதும் குறிப்பிடாமல் விட்டதும் எனென்று தெரியவில்லை. பிள்ளைப் பிணி வாகடத்தைப் போலவே பாலவாகடம் என்னும் நூலும் எவராலோ எழுதப்பட்டு எட்டுப் பிரதியாக ஸ்ரீ முதலியாருக்குக் கிடைத்திருக்கலாம். எட்டுப் பிரதிகளில் இருப்பது போலவே ஸ்ரீ முதலியார் பதிப்பித்த புஸ்தகத்திலும் நூலாசிரியர் வரலாறு முதலியவை விளக்கப்படவில்லை.

உருவென்றே தெரியவந்தது. நமக்குக் கிடைத்த "பாலவாகடத் திரட்டுப்" புஸ்தகத்தில் முகவேடு (டைடல் பேஜ்) காணப்பட வில்லை. ஆகவே அது அச்சிட்ட இடம், காலம், அச்சிட்டுப்பதிப் பித்தவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. ஆயினும் அதன் பழுப்பேறிய ஏடுகளையும், அச்சிடப்பட்ட வகையையும், மழுங்கிய எழுத்துக்களையும் உற்று நோக்கியதில், அது சற்றேறக் குறைய என்பது வருஷங்களுக்கு முன் அச்சியற்றப்பெற்றதா யிருக்குமென்று ஊகிக்கின்றோம். இந்த பாலவாகடத்திரட்டு ஆயுர்வேதநூல்கள் இயற்றிய தந்வந்தரி, புலிப்பாணி, தேரையர், பிரமமுனி, போகர் முதலானோரின் பண்டைக்காலத்திய நூல் களையும், அகஸ்தியமாமுனிவர் இயற்றிய பாலவாகட சாஸ்திரத்தை வெகு முக்கியமாயும் ஆதாரமாகக்கொண்டு ஏற்பட்டதாக அந்நூலின் முகவுரைகளிலிருந்து தெரியவருகிறது[1].

பாலவாகடத்திரட்டைப் பதிப்பித்தவர் இன்னரென்று அப்புஸ்தகத்திலிருந்து அறிந்துகொள்ள முடியாவிடினும், அதில் அடங்கியுள்ள முகவுரை, சிறப்புப்பாயிரம், பண்டிதரிலக்கணம் முதலான முன்னுரைப்பகுதிகளில் காணப்படும் விஷயங்கள் தமிழ் வைத்தியத்தில் சிறப்பு வாய்ந்த பண்டிதர்களால் அப் பால வாகடத்திரட்டுத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டதாய் விளங்கு கிறது. பாலவாகடத்திரட்டிள்ள சிற்சில அம்சங்கள் பின்னுல் வெளியிட்ட பாலவாகடத்தில் ஒருவாறு மாற்றப்பட்டிருக் கின்றன. ஒரேவிதமான வைத்தியவிஷயத்தைக் கூறுவதற் காகவும், ஒன்றை (முந்தியதை) மற்றொன்று (பிந்தியது) ஆதாரமாகவுங்கொண்டு ஏற்பட்ட பாலவாகடத்திரட்டிலும், ஸ்ரீமுதலியார் பதிப்பித்த பாலவாகடத்திலும் விஷயங்கள் பல

1. "அகத்தியமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய பாலவாகட சாஸ்திரத்தை சர்வத்திராளுக்கும் பிரயோஜனமாகும்படி" என்று பால வாகடத்திரட்டின் முகவுரையில் குறிப்பிட்டு, அகஸ்தியரின் பாலவாகடத்தை ஆதாரமாகக்கொண்டு பாலவாகடத்திரட்டு இயற்றப்பட்டதாகக் கூறப்பட் டிருக்கிறது. மேலும் "பகரம் பரவிய பாலவாகடத்துடன்-ஆயுர்வேதத்தழகு தந்வந்தரி—பாயிரமுதற் புலிப்பாணி தேரையர்—முடலேயம் பிரமமுனியும் போகர்—திடபரமாகச் செப்பிய பலவும்—சேர்த்து" என்றவாறு பாலவாக டத்தையும் தந்வந்தரி புலிப்பாணி முதலிய பிரபல ஆயுர்வேத சாஸ்திரஞ்ஞர் கூறிய விஷயங்களையும் தொகுத்து பாலவாகடத்திரட்டு இயற்றியதாக அந்நூலின் சிறப்புப்பாயிரமும் கூறுகிறது.

விடங்களில் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்விதம் நாம் யோசிக்கவேண்டியிருந்தும் முந்திய நூலிலுள்ள பல விஷயங்கள் பிந்தியதில் மாற்றியமைக் கப்பட்டிருப்பதோடு, பொழிப்புரையில் பொருத்தமில்லாதபடி பொருட்களும் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு அடியிற் கூறப்படும் (பாலவாகடத்தின் ஆரம்பத்திலேயே—2-ஆம் வகுப் பின் ஆரம்பத்தில் உள்ள) பொழிப்புரையே மிகப்பொருத்த மான திருஷ்டாந்தமாகும்.

சிறந்த பண்டிதர்கள் பதிப்பித்த பாலவாகடத்திரட்டில் தோஷவகுப்பில் "தோஷம் வருமாறு" என்றும், "தோஷ குணம்" என்றும், தோஷம் என்கிற சொல் "ஷ" என்கிற எழுத்தோடு விளங்கக் குறிக்கப்பட்டிருக்கிறது. (பாலவாகடத் திரட்டு பக்கம்-10). ஆனல் பாலவாகடத்தில் ஸ்ரீமுதலியார் அவர்கள் தோடவகுப்பு என்று அவ்வகுப்பைக் குறித்துவிட்டு, தோடம் என்று அச்சொல்லை "ட" என்னும் எழுத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். அவ்விதம் "ஷ" எழுத்துக்குப் பதிலாக "ட" எழுத்தைக் குறிப்பதில் பிழையொன்றுமில்லை. தமிழில் "ஷ" வுக்குப் பதில் "ட" போடுவது வெகு ஸாதாரணமான வழக்கம். வருஷத்தை வருடமென்றும், ஔஷதத்தை ஔடதமென்றும், சிலேஷ்மையை சிலேடை என் றும் எல்லோரும் வழங்குகிறார்கள். ஆனல் பாலவாகடத்தில் "தோஷவகுப்பு" என்பதை "தோடவகுப்பு" என்று எழுதி விட்டு, "தோடம்" என்பதற்கு "குற்றம்" என்று வைத்திய சாஸ்திரத்திற்குப் பொருந்தாமற் பொருள் கூறியதோடு, "தொடு" என்னும் முதனிலை தோடு என்று நீண்டு, அம் என்னும் இறுதிநிலையைப் பெற்றுத் தான் திரியாமல் பாடம் என்னும் சொல்லைப்போல் தோடம் என நின்ற தொழிற்பெயர் எனக் கொள்க; தோடம் என்பது தொடுதல் என்னும் பொருள் பயந்து கண்ணுற்றிருடுதல், கையாற்றிருடுதல், ஊறுற்றிருடுதல் என்று மூன்று பிரிவினதாம்;" என்றவாறு தோடம் என்பதற்கு உரை எழுதப்பட்டிருப்பது முற்றிலும் விந்தையாயிருக்கிறது. தோடம் என்பதற்கு வைத்தியசாஸ்திரப்படி குற்றமென்றுவது, தொடு தல் என்றுவது பொருள் கூறுவதற்குச் சாஸ்திரப்பிரமாணம என்னவென்று விளக்கக் காணேம். "தொடு" என்னும் சொல் முதனிலையாயிருந்து கொண்டு "தோடு" என்றும், "தோடம்" என்றும் திரிபடைய இலக்கணநூலின்படியும் ஆதாரம் காட்டப் படவில்லை. தோடு என்பதோடு "அம்" என்னும் இறுதிநிலை

எங்கிருந்து எவ்வாறு சேர்ந்தது என்பதற்கும் முகாந்தரம் கூறப் படவில்லை. விதண்டாவாதரூபமான பிரச்னைகளில் இறங்குபவர், தாம் கூறும் விஷயங்களுக்கு முகாந்தரம் கூறுவதெங்ஙனம்? தோஷம் அல்லது தோடம் என்னும் சொல் சாஸ்திரமுறைப்படி வாத பித்த சிலேஷ்மங்களையும், சில ஸமயம் பொதுவாக வியாதி களையும் குறிப்பிடும் பிரஸித்தமான வைத்திய பரிபாஷையே யன்றி வேறல்ல[1]. வாதாதிகளைக் குறிப்பிடும்போது வாததோஷம், பித்ததோஷம், கபதோஷம், த்வந்த்வதோஷம் என்றவாறு தோஷ குணத்தையும், வியாதிகளைப் பொதுவாகக் குறிக்கும்போது பூத தோஷம், கிரஹதோஷம், பக்ஷிதோஷம் முதலிய கோளாறுகளை யும் அறிவிக்கும் சாஸ்த்ரீயச்சொல் தோஷம் அல்லது தோடம் என்பது. கற்றறிந்த எச்சாஸ்திர அறிஞரும் தோஷம் அல்லது தோடம் என்னும் வைத்திய பரிபாஷையைக் குற்றம் என்றுவது தொடுதல் என்றுவது பொருள்கூற நாம் ஒருபோதும் கேள்விப் பட்டதில்லை. பாலவாகடத்தில் உள்ள வேறு பல சாஸ்திரத்திற் கொவ்வாத விஷயங்களுக்கு நூலின் ஆரம்பத்திலேயே தோஷம் அல்லது தோடம் என்பதைப்பற்றிய பரிபாஷைக்கு எழுதியுள்ள இப்பொழிப்புரையை ஒரு முக்கிய திருஷ்டாந்தமாக இச்சந்தர்ப் பத்தில் நாம் எடுத்துக் காட்ட வேண்டியதாயிற்று. பாலர்களுக் குக் காணும் நோய்கள், அவற்றிற்கான பரிகாரமுறைகள் முதலிய வற்றைக் கூறும் பாலவாகடத்திரட்டு என்னும் நூல் கையெழுத்து ஏட்டுப்பிரதியாயில்லாமல், சில பண்டிதர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அநேகம் ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டிருந்தும், அதை அதிகாரிகள் எவரும் தேடிப் பார்க்க முயலாமலோ, அவ்வச்சிட்ட நூல் ஒன்று வெகுநாட்களா யிருப்பதைக் குறிப்பிட விரும்பாமலோ, பாலவாகடத்திரட்டில் அடங்கிய விஷயங்கள் அடங்கப்பெற்ற "பாலவாகடம்" என்னும் மற்றொரு நூலைப் பதிப்பித்து வெளியிட்டதன் கருத்து விளங்கவில்லை.

---

1. "வாயு: பித்தம் கபச்சேதி த்ரயோ தோஷா:"—வாயு பித்தம் கபம் என்பவை மூன்று தோஷங்கள் என்று ஆயுர்வேத நூல்கள் ஒருங்கே கூறுகின்றன. "உயல கொளுந் திரிதோஷமுடன் உயரும்" என்கிற செய்யுளுக்கு அடியில் "திரிதோஷம் என்றுல் வாத பித்த சிலேஷ்மங்கள்" என்று பாலவாகடத்திரட்டின் உரையிலும் (பா. வா. திரட்டு பக்கம் 223.) கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

பிள்ளைப் பிணி வாகடம் என்னும் இந்நூலிலுள்ள பெரும் பான்மையான செய்யுட்களும் பாலவாகடத்திரட்டிலிருந்தோ, அல்லது அதற்கும் மூலமாயிருந்த அகஸ்தியரது பாலவாகடம் முதலியவற்றிலிருந்தோ எடுக்கப்பட்டவையேயாம். இவ்வுண் மையை முன்னமே ஒரு சிறிது குறிப்பிட்டிருக்கிறோம். ஸ்ரீமுரு கேச முதலியார் பதிப்பித்துள்ள பாலவாகடநூல் பிள்ளைப் பிணி வாகடம் அமைய ஆதாரமாயிருந்ததாகக் கூறுவதற்கில்லை. பாலவாகடம் முதலியார் அவர்களால் ஸமீப காலத்தில் (இன்றைக்குப் பதினெட்டு வருஷங்களுக்கு முன்) பதிப்பிக்கப் பெற்றது. அது எந்த மூலப்பிரதியை வைத்துக்கொண்டு அச்சிடப்பட்டதென்கிற எத்தகவலும் முதலியாரவர்களால் குறிக்கப்படவில்லை. பிள்ளைப் பிணி வாகடத்தின் மூலப்பிர தியான ஓலைச்சுவடி இதற்குப் பலவருஷங்களுக்கு முன் எழுதி வைக்கப்பட்டதாயிருக்க வேண்டும். மேலும் ஸ்ரீ முதலியார் பதிப்பித்த பாலவாகடநூலில் பிள்ளைப் பிணி வாகடத்தைப் பற்றி யாவது, பாலவாகடத்திரட்டைப் பற்றியாவது, அகஸ்தியர் இயற் றியதாகக் கூறப்படும் ஆதியிலிருந்த பாலவாகடத்தைப்பற்றி யாவது எவ்விடத்திலும் ஒரு சிறிய குறிப்பும் காணக் கிடைக்க வில்லை. விஷயம் இவ்வாறிருக்கையில் ஸ்ரீ முதலியர் பதிப்பித்த பாலவாகட நூலிலிருந்து பிள்ளைப் பிணி வாகடம் எழுத பல செய்யுட்களோ வேறு அம்சங்களோ எடுத்துக் கையாளப் பட்டன வென்று ஊகிக்கவும் வழியில்லை. ஆகவே பாலவாகடத் திரட்டிலிருந்தேனும், அதற்கும் முந்திய அகஸ்தியர் முதலானோரின் குழந்தைப் பிணி ஸம்பந்தமான நூல்களிலிருந் தேனும் செய்யுட்களிற் பெரும்பான்மையானவையும் பிள்ளைப் பிணி வாகடம் எழுத உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று விளங்குகிறது. அல்லாமலும் இந்நூலில் காணப்படும் ஓர் ஒழுங்கு முறைக்கும் உட்படாத வசன ரூபமான ஏனைய பாகங்களும் வேறு மந்திர தந்திர நூல்களைப் பார்த்தோ, பிறர் சொல்லக் கேட்டோ எழுதப் பட்டவை யென்றும் தோன்று கிறது. இந்நூலிலுள்ள விஷயங்களைப் பரிசீலனை செய்தும், நூல் அமைந்துள்ள வகைகளை உற்றுப் பார்த்தும், இதிற் காணப் படும் சில விநோதமான பரிபாஷைகளைக் கவனித்தும் பார்த்து ஆலோசித்ததில் இந்நூலைப்பற்றிய வரலாறுகள் இவ் வளவுதான் நமது ஆராய்ச்சிக்கு எட்டுகின்றன. இக்குறிப்புச் சுவடியை எழுதியவரைப்பற்றியேனும், இது ஏற்பட்ட காலத்

தைப்பற்றியேனும், இதை எழுதிய உத்தேசத்தைப்பற்றி யேனும் விவரம் ஏதும் தெரியவில்லை.

இந்நூலில் விஷயங்களின் பாகுபாடுகளைக் காட்டக்கூடிய அத்தியாயங்களாவது வர்க்கங்களாவது வேறுவித வகுப்பு அமைப்புகளாவது ஏற்படுத்தப்படவில்லை. இப் புஸ்தகத்தை முதலில் எழுதியவர், தான் படித்தோ கேட்டோ தெரிந்து கொண்ட வைத்திய விஷயங்களை அவ்வப்பொழுது குறித்து வைத்துக்கொண்டு அதில் விஷயவிபாகங்களைச் செய்யாமலும், இதை ஒரு முக்கியமான வைத்திய நூலாகச் செய்ய நோக்க மில்லாமலும் தோன்றியவாறு எழுதி வைத்த ஒரு குறிப்புச் சுவடியாகையால், இதில் விஷயவிபாகம் முதலிய ஒழுங்கு முறைகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை யென்று தோன்று கிறது. நூல் இயற்றுபவர் எவரும், முக்கியமாக முற்காலத் தில், ஆரம்பத்தில் தெய்வ வணக்கம் செய்யாமல் நூல் இயற்ற முயல்வது அரிது. மேலும் நூல் இயற்றும் உத்தேசத்தையும், அந்நூலில் விவரிக்கப் போகும் விஷயங்கள் இவை என்பதை யும் முன்னுரை உருவத்தில் அவர்கள் குறிப்பிடுவது வழக்கம். இந்நூலில் அவ்வித ஸம்பிரதாய விஷயமெதுவும் ஆரம்பத் திலாவது அந்திமத்திலாவது கூறப்படவில்லை. எவ்வித ஒழுங்கு முறையுமின்றி, ஸம்பிரதாய வழிகளின் அநுஸரிப்பு மின்றி தோன்றியவாறு விஷயம் ஆரம்பிக்கப்பட்டு, தோன்றிய வாறு விஷயங்கள் தொகுக்கப்பட்டு, தோன்றியவாறு முடிக்க வும்பட்டுள்ளது. நூலாரம்பத்தில் திடீரென்று "பிள்ளை பிறந்த முதல்நாள் முதல்மாதம் முதல்வருஷம் கண்டி என்னும் பேய் அணுகும்" என்று கூறப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, முக்கியமான நூல் ஒன்றை இவ்விதம் ஓர் ஆசிரியர் ஆரம்பிப்பதுண்டா என்று எந்த விவேகியும் நிச்சய மாய் நினைக்க நேரிடும். பிறகு தொகுத்துள்ள விஷயங்களின் வரிசையிலும் ஒன்றுக்கொன்று எந்த விதத்திலும் ஸம்பந்த மிருக்கக் காணவில்லை. பகுதி தோஷம், குளிர்சுரதோஷம் மாந்தங்கள் எட்டு, மசரிப்புழு நோய், காக்கை வலிப்பு. மீண்டும் மந்தம் இவ்வாறு ஒழுங்கு முறையின்றி விஷயங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இந்நூல் முற்றிலும் பிள்ளைப் பிணிகளைப் பற்றியதாகவே ஏற்பட்டிருக்க, "பிள்ளைப் பிணிக்கு மருந்து" (64, 80-ஆம் பக்கங்

கள்) என்று பலவிடங்களில் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை கணைக்குக் கஷாயம், பிணிக்கு மந்திரம், பேய்நாய்க்கடிக்குப் பரி காரம், பார்வைக்கு மருந்து, முசல் முட்டு என்னும் மாட்டின் கண் தோஷத்திற்கு மருந்து என்று முதற்பாக முடிவில் குறிக்கப் பட்டுள்ள விஷயங்களுக்கு ஒன்றோடொன்றுள்ள ஒழுங்கான ஸம்பந்தம் ஏதும் காணமுடியாது. குழந்தை நோய்களைப்பற் றிய நூலில் மாட்டின் கண்தோஷ விஷயம் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?. முடிவில் உள்ள கைமுலை சுரைக்காய், போகிக்க மருந்து ஆகிய விஷயங்களும் பிள்ளைப் பிணிக்கு எவ்விதத்திலும் ஸம்பந்தமற்றவையாயிருப்பதுடன், நூலின் முடிவுரைக்கு ஒவ்வாதவையாயும் விரும்பத்தகாதனவாயும் இருக்கின்றன. மேலும் இப்புஸ்தகத்திற்கு ஆதாரமான மூலப் பிரதியில் இடையிடையே சில ஏடுகள் தவறிப்போயிருப்பதால் ஆங்காங்கு இதில் சில பாகங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. இந்நூலின் இறுதியிலுள்ள விஷயங்களும் இது முடிவு பெறுத நூலாயிருக்குமென்பதைக் குறிக்கின்றன. ஆராய்ச்சி முறையில் நாம் கூறியுள்ள வேறு இவ்விஷயங்களைப் பற்றிய அநேக அம் சங்களையும் புஸ்தகத்தின் அந்தந்தப் பக்கத்திலுள்ள நமது உரையிலும் படித்தறியலாம்.

இந்நூலில் பல விஷயங்கள் கற்றறிந்தவராலும் கருத் துணரமுடியாதபடி எழுதப்பட்டிருப்பதை நாம் மிக்க முயற்சி செய்தும் சீர்திருத்தமுடியவில்லை. பல வாக்கியங்களிலும் சொற்களிலும் இலக்கண ரீதியான பல ஏற்றத்தாழ்வுகளும் காணப்படுகின்றன. அவ்விடங்களிலும், நமக்கு ஐயந்தரும் வேறிடங்களிலும் (?) இவ்விதமான ஸந்தேகக் குறி இடப் பட்டிருப்பதைப் பார்த்து, படிக்கும் அறிஞர்கள் கூடுமானால் அவற்றை ஏற்றவாறு திருத்திப் படிப்பாராக. அன்றியும் வேறு பல இடங்களிலும் சில எழுத்துக்கள் அல்லது சொற்கள், தலையங்கங்கள் முதலானவை பிழையுள்ளனவாகவோ குறை வாகவோ காணப்படுவதால், அவ்விடங்களிலெல்லாம் இரு பிறை கள் வடிவமான () இவ்வித வட்டங்களுக்குள் அச்சொற்கள் முதலியவை நமது திருத்தத்துடன் போடப்பட்டிருப்பதையும் வாசக நேயர்கள் கவனிக்கக் கோருகிறோம். அநேக விஷயங் களுக்கு அவசியமிருக்குமிடங்களில் பொருட்கள் கருத்துரைகள் ஆகியவற்றையும், விஷய வித்தியாஸமுள்ள விடங்களில்

அவற்றை விளங்கச் செய்ய விரிவுரையையும், பாலவாகடத் திரட்டு முதலியவற்றிலிருந்து கிடைத்த பாட பேதங்களையும் தொகுத்து நாம் எழுதிச் சேர்த்துள்ள உரையும் படிப்பவருக்கு உபயோகமாயிருக்கு மென்று நம்புகிறோம்.

பாலர்களுக்கு மூன்றுவித காரணங்களால் காணும் கோளாறுகளைப்பற்றி இந்நூலில் விஷயங்களைக் காணலாம். ஒன்று தெய்வக்கோளாறு; அதைக் காற்று சங்கை யென்றும் சிலர் வழங்குவர். இரண்டாவது தீட்டுள்ள ஸ்த்ரீகளாலும் பக்ஷி முதலியவற்றாலும் தோன்றும் கோளாறுகள்; அவற்றையே தீட்டு தோஷமென்றும், பறவை தோஷமென்றும் கூறுவர். மூன்றுவது காய்ச்சல், கழிச்சல், மாந்தம், இருமல் முதலிய பிணிகள் என்னும் உடற்கோளாறுகள்; இப்பிணிகள் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் தோஷங்கள் விகாரமடைவதால் தோன்றும் கெடுதிகள். பலவகைக் காரணங்களாலும், குறிகள் முதலியவற்றாலும் வித்தியாஸப்பட்டு நூற்றுக்கணக்காய் உண்டாகும் குழந்தைக்கோளாறுகள் யாவும் பொதுவாகவும் சுருங்கவும் முற்கூறிய மூன்று வகுப்புகளிலேயே அடங்கி யுள்ளன வென்பதை இந்நூலை முற்றிலும் உற்றுப் படிப்பவர் அறியக்கூடும். அவ்விதமே அவ்வெல்லாக் கோளாறுகளுக்கும் தனித்தனியே சிகித்ஸா முறைகள் வேறு வைத்திய நூல் களில் நூற்றுக் கணக்காகக் கூறப்பட்டும் அநுபவத்தில் காணப் பட்டும் இருந்து வந்தபோதிலும், முற்கூறிய மூன்று வகுப்பு களிலும் அடங்கிய பிள்ளைப் பிணிகள் அனைத்துக்கும் பழைய கொள்கைப்படி [1]மணி-மந்திர-ஔஷதங்கள் என்னும் மூன்று வித பரிகாரமுறைகள் பொதுவாக வழங்கப்படுவதுண்டு. இந்நூலை முற்றிலும் அலசிப் பார்த்ததில் பாலர்களுக்குத் தோன்றும் அம்மூன்றுவகைக் கோளாறுகளுக்கும் மணி-மந்திர-ஔஷதங்கள் என்னும் மூவகை உபாயங்களைக் கொண்டு நிறை வேற்றக் கூடிய பரிகார முறைகளை இந்நூல் ஒருவாறு விவரிப் பதாக நாம் பகுத்தறிய நேர்ந்தது.

வைத்தியக் குறிப்புகள் அமைந்த இப்புஸ்தகத்தில் செய்யுட் களும் வசனங்களும் கலந்துள்ளன. சற்றேறக் குறைய மூன்றில்

1. குளிசங் கட்டுவது முதலியவையும் மணி என்னும் பரிகார முறையைச் சேரும்.

இரண்டு பாகத்திற்குச் சிறிது அதிகமாகச் செய்யுட்களும், மூன்றி லொரு பங்குக்குச் சொற்பம் குறைவாக வசனங்களுமாகச் சேர்ந்து இப்புஸ்தகம் அமைந்துள்ளது. செய்யுட்களிற் பெரும் பான்மையும் பாலவாகடத்திரட்டிலிருந்தோ அகஸ்தியர் இயற் றிய பாலவாகடத்திலிருந்தோ எடுக்கப்பட்டிருப்பதாக முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். சில செய்யுட்களுக்கு வேறு நூல்களும் ஆதாரமாயிருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவ்வித செய்யுட்கள் அடங்கிய பாகத்தைக் கற்றறிந்த வைத்தியர்கள் ஒருவாறு பிரமாணவாக்கியங்களாகக் கருதலாம். வசன ரூபமான வாக்கியங்களுக்கு ஆதாரமான நூல்கள் எவை யென்று தெரியவில்லை. அவ்வசனங்களிற் சில கொச்சையான மந்திரங்களாகவும், யந்திரங்களிற் பொருத்தவேண்டிய எழுத் துக்களாகவும், வேறு சில பொருளறியக்கூடாத சொற்றொட ராகவும் இருக்கின்றன. பல வசனங்கள், ஔஷத முறை முதலியவற்றைக்கூறும் விஷயங்கள் அடங்கியவையாகவு முள்ளன. பல செய்யுட்களாலும், சில வசனங்களாலும் தொகுக்கப்பட்டுள்ள இப் பிள்ளைப் பிணி வாகட நூலில் நாம் மேலே வகுத்துக் கூறிய மூவகை பரிகார முறைகளையும் வாசக நேயர்கள் படித்துப் பரிசீலனை செய்வாராக.

இப்புஸ்தகத்தைப் பரிசோதித்துப் பதிப்பிக்கும் நமக்கு மற்றப் பரிசோதகருக்கு இல்லாத விசேஷ இடுக்கண் நேர்ந் துள்ளது. அவ்விடுக்கண் நாம் பதிப்பிக்கும் இந்நூலின் குண தோஷங்களைப் பரிசீலனை செய்து விளக்குவதேயாம். ஒரு நூலைப் பரிசோதிக்க ஏற்றுக் கொண்டவர்கள் அந்த நூலில் குணங்கள் இருந்தாலும் குறைகள் இருந்தாலும் பெரும்பாலும் அதைப் புகழ்ந்து கூறுவதே வழக்கமென்பதை அநுபவத்தில் அடிக்கடி யும் பார்த்து வருகிறோம். தாம் பதிப்பிக்கும் நூலிலடங்கிய ஏறறத் தாழ்வான அம்சங்களை உணராமையாலோ, உணர்ந்தும் ஒழுங்கீனங்களை உரைத்திட எண்ணங்கொள்ளாமையாலோ அப்புகழுரையைப் பெரும்பாலோர் வெளியிடுகிறார்கள். ஒரு நூல் எழுதப்பட்ட பிறகு, முக்கியமாய் அச்சியற்றி வெளியான பின்பு அதில் காணப்படும் குணங்களையும் தோஷங்களையும் மறைப்பதெங்ஙனம்? அவ்விதம் வெளியாகும் நூலை உற்றுப் படிக்கும் அருமைப் பண்டிதர் சிலரே; பாமரர் பலர்; அவ்வரு மைப் பண்டிதர் ஒரு சிலரேனும் இந்நூலைக் கண்டு "இவ்வீண்

புகழுரையேன்?'' என்று உள்ளத்திலேனும் நகைக்காமலிருக்கக் கருதியே, நமது முகவுரையில் இந்நூலிலுள்ள குண தோஷங் களை ஒளிவு மறைவின்றி ஒத்துப் பரிசீலனை செய்து விளக்கி யிருக்கிறோம். இப்புஸ்தகத்தை அச்சிட்டுப் பிரசுரிப்பவர் கல்வியில் தேர்ந்த விவேகிகளாகையால், நமது பரிசோதனை முறையையும், குணதோஷ விமர்சங்களடங்கிய இம்முகவுரை முதலியவற்றின் ரீதியையும் உற்று நோக்கி ஆமோதிப்பார் களென்று நம்புகிறோம்.

கவர்ன்மெண்டு ஓரியண்டல் கையெழுத்து நூல் நிலயத்தின் முக்கியாதிகாரியான ஸ்ரீமான் டி. சந்திரசேகரன் எம்.ஏ., எல்.டி., அவர்கள் இத்தமிழ் வைத்திய நூலைப் பரி சோதித்துப் பதிப்பிக்கும் சிறந்த ஊழியத்தை நமக்கு ஒப்படைத்து, இப்பொறுப்பை நிறைவேற்ற ஏற்ற சந்தர்ப்பம் அளித்ததற்கு நாம் மனமுவந்து அவருக்கு நன்றி செலுத்து கிறோம்.

ஆர்ய இருஹம்,
வேப்பேரி, மதராஸ்
30—12—1951.

எம். துரைஸ்வாமி ஐயங்கார்.

LSB 84

பிள்ளைப் பிணி வாகடம்

முதற் பாகம்

உ

ஹரி: ஓம்

பிள்ளைப் பிணி வாகடம்

† (முதற் பாகம்)

*வால்கிரிசைக்கு செய்யும் படிக்கு (?)

முதல் வருஷத்திற்கு (வருஷத்தில்)

(வசனம்)

பிள்ளை பிறந்த முதல் நாள், முதல் மாதம், முதல் வருஷத்தில் கண்டி என்னும் பேய் அணுகும்.

அதன் குணம்

உடல் வெதுப்(ம்)பும்; வயிறு கழியும்; உடலில் குளிர் நடுக்கும்.

இதற்கு பலி

மாவினுல் பாவை செய்து, சிவந்த சோறும், சிவந்த புஷ்பமும், (அதற்குச்) சூட்டி, விளக்கேற்றி, புதுக் கலசத்தில் (சோற்றை) இட்டு, உச்சி நேரம்(த்தில்) நாற்சந்தியில் (அவற்றை) வைக்கவும். பிள்ளைக்கு பிச்சி[1] இலையும், புடல் இலையும் துவைத்து, துவாலை[2] இடவும். பன்றி விட்டை புகை பிடிக்கவும்.

---

† ( ) இவ்விதம் இரு பிறைகளுக்கு இடையில் குறிப்பிடப்பட்டுள்ளவை சீர்த்திருத்தப்படி இருக்க வேண்டியவை யெனக் கருதி பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டவையாம்.


*வால்கிரிசை என்பது பாலக்கிரகதோஷம் என்பதைக் குறிப்பது எனத் தோன்றுகிறது.

1. பிச்சி = இருவாட்சி.
2. துவாலை = பூச்சு மருந்து.

மந்திரம்

களிப்பு முகத்தில்[1] "ஓம் விடுவீர்" என்று சொல்லி விடவும்.

இதற்கு யந்திரம்



இந்தப்படி யந்திரம் எழுதிக் கட்டத் தீரும்[2].

பிள்ளை பிறந்த இரண்டாம் நாள் இரண்டாம் மாதம்.

(இரண்டாம் நாள், இரண்டாம் மாதம்) இரண்டாம் வருஷம் துடரி என்னும் பேய் அணுகும்.

இதன் குணம்

தலை நடுங்கும். பாகா(?)முழிக்கும். குடித்த பால் எடுக்கும்[3]. உடல் வெதுப்(ம்)பும். வயிறு மஞ்சள் போல் கழியும். உடம்பு துணுக்கிடும்[4]. சற்றே முழிக்கும். முலை உண்ணாது. பூனை சத்தமாய் இருக்கும்[5].

இதற்கு பலி

மாவினால் பாவை பண்ணி, (அதற்கு) எருக்கம் பூச்சூட்டி, பாலின் (பால் கூட்டிய) சோறு, அகத்திக்கீரை, பொரி கரி(றி) பொரி(?), ஓட்டப்பம் (இவற்றை) கலசத்தில் இட்டு, மாவிளக்கு ஏற்றி வைத்து, எருக்கிலை கொண்டு மூடி, உச்சி நேரத்தில் நாற்சந்தியில் வைக்கவும். உணு(நுணு)இலை துவைத்து, காடி


1. களிப்பு முகத்தில் = களிகூர்ந்த முகத்துடன்.
2. தீரும் = பேய் தோஷம் நீங்கும்.
3. பால் எடுக்கும் = பாலைக் கக்கும்.
4. துணுக்கு = அச்சக்குறி.
5. பூனைபோல் சத்தமிட்டு அழும் எனக் கருத்து.

விட்டுப் பிசைந்து, பிள்ளைக்குத் துவாலை இட்டுக் குளு(ளி)ப் பாட்டவும். பன்றி விட்டையும், புழுங்கலரிசித் தவிடும் கூட்டி புகை காட்டவும்.

மந்திரம்

"ஹூம் பச(ஸ)வாய நம ஃ". காலென்று சொல்லிவிடவும்.

இதற்கு யந்திரம்



இந்தப்படி சுற்றிக் கா(க)ட்டவும். தீரும்[1].

மூன்றும் நாள், மூன்றும் மாதம், மூன்றும் வருஷம் பேனுகாடி என்னும் பேய் அணையும் (அணுகும்).

இதன் குணம்

உடம்பு வெதுப்(ம்)பும். துணுக்கிடும். மயங்கி முழிக்கும். வய(யி)று கழியும். கைவிடாத வேதனைப்படும்[2].

இதற்கு பலி

உளுந்து சோறும்[3], எள்ளுப்பொரியும், கீரைச்சாறும், மாவாலே பாவை செய்து, மாவிளக்கு ஏற்றி, செவ்வற(ர)ளிப் பூச்சூடி, புதுக்கலசத்தில் இட்டு[4], தீபம் தூபம் கொடுத்து, மாலை நேரம் நாற்சந்தியிலாவது சுடலையிலாவது (அவற்றை)


1. தீரும் = துடரிப்பேய் தோஷம் நீங்கும்.
2. கைவிடாத வேதனை = ஓயாத சங்கடம்.
3. உளுந்து கலந்த அன்னம்.
4. இட்டு = பாவையை வைத்து.

வக்கவும். பிள்ளைக்குச் சிறுகிளா இலையைத் துவைத்து, வாலை இட்டு, குளிப்பாட்டவும். கழுதை விட்டேயு(டையும்) விடும் புகை பிடிக்கவும்.

இதற்கு மந்திரம்

"ஓம் ஹூ ஈ சு பரா" (ஈச்வரா)வென்று சொல்லிவிடவும்.

இதற்கு யந்திரம்



இந்தப்படி எழுது காட்ட(எழுதிக்கட்ட)வும்.

நான்காம் நாள், நான்காம் மாதம், நான்காம் வருஷம் மாமுனி என்னும் பேய் அணையும்.

இதன் குணம்

வய(யி)று கழியும். மூலை யுண்ணுது. உச்சி குளி(ழி)யும். துணுக்கிடும். வய(யி)று பொருமும். குரு வேர்வை காணும். உள்ளறும்[1].

இதற்கு பலி

மாவாலே பாவை செய்து, செவ்வற(ர)ளிப் பூச்சூடி(ட்டி), உளுந்த(து)ஞ் சோறும் நெய் வார்த்துப் பிசைந்து, நறுகேய(?) மாவிளக்கு ஏத்தி(ற்றி), தீபம் தூபம் கொடுத்து, புதுக் கலசத்


1. உளறும் என்று இருத்தல் மேல். 'உள்ளறும்' என்றே இருக்கு மானால் மூர்ச்சையுறும் என்று அதன் பொருள்.

தில் புள்ளிக்(கள்) குத்தி, அதில் (அவற்றை) வைத்து, மாலை நேரம் நாற்சந்தியில் காளிகோட்டத்தை நோக்கி வைக்கவும். மாவிலை, புங்கிலை இடித்துத் தூவாலை இட்டு, குளு(ளி)ப்பாட்டவும். பசுவின் கொம்பும் பாம்புச் சட்டையும் புகை பிடிக்கவும்.

இதற்கு மந்திரம்

"ஓம் ஸ்ரீ ஹூ கேசவாய நமஃ" என்று சொல்லவும்.

யந்திரம்



என்று எழுதிக் கட்டவும்.

ஐந்தாம் நாள், ஐந்தாம் மாதம், ஐந்தாம வருஷம மா(சா)முண்டி என்னும் பேய் அணுகும்.

இதன் குணம்

உடம்பு வெதும்பும். கொட்டாவி கொள்ளும். சீரி(றி) அழும். துணுக்கிடும். வய(யி)று மாப்போலே கழியும். கால் கை சுருங்கி வலிக்கும். மற்றும் பல விகாரம் செய்யும்.

இதற்கு பலி

மாவிலே பாவை செய்து, சந்தனம் கரைத்துத் தெளித்து, மஞ்சள் சீலை சாத்தி, குங்குமப்பூ, அற(ர)ளிப்பூச்சூடி(ட்டி), வெண் சோறு, பொரி கரி(றி)யும், பொரி நீரும், புதுக் கலசத்திற்குப் புள்ளி குத்தி அதில் இட்டு, மாவிளக்கு வைத்து, தூபம் தீபம் கொடுத்து, மாலை நேர(த்தில்)ம் "சுடலை நாயகா" என்று மாத்திரம் (மந்திரம்) சொல்லி வைக்கவும்.[1]

1. நாற்சந்தியில் அல்லது சுடலையில் வைக்கவும் என்று கருத்து.

"ஓம் கேசவாய நமஃ" என்று சொல்லி விடவும்.

தலைமாயாப்(?)* புகை பிள்ளைக்குக் காட்டவும்.

யந்திரம்

"கஷ ஓ அ அ ஹ்ரு" என்று எழுதிக் கட்டவும்.

ஆரும் நாள், ஆரும் மாதம், ஆரும் வருஷம் கொடி என்னும் பேய் அணுகும்.

இதன் குணம்

உடல் குளு(ளி)ர்ந்திருக்கும். வய(யி)று தண்ணீர்போலக் கழியும். திடுக்கிடும். இளைப்பு வாங்கும்[1]. திக்கல்[2] எடுக்கும். சீறி குரல் விட்டு அழும். முலை யுண்ணாது. உடல் பிலிரில்(?) நாறும். (வேறு) விகாரம் பண்ணும்.

இதற்கு பலி

பச்சரிசி மாவிலே இளநீர் விட்டுப் பிசைந்து பாவை செய்து, பஞ்சவற்(ர்)ணச் சோறு, கொளி மாங்கிஷம் (கோழி மாமிசம் இவற்றில்) செஞ்சந்தணம் தெளித்து, சிவத்து (சிவந்தி)ப்பூச் சூடி(ட்டி), புதுக் கலசத்திற்கு புள்ளி குத்தி, (அவற்றை) அதிலிட்டுவைத்து, நெய் விளக்கு ஏற்றி வைத்து, தீபம் தூபம் கொடுத்து, புளகாதாய் (பிள்ளை தாய் இவர்களின்) தலையைச் சுற்றி, மாலை நேரம் முச்சந்தியில் "ஓம் ஓம் ஓம் நமஃ" என்று (சொல்லி) வைக்கவும். நொச்சி இலை, அகத்தி இலை, (இவற்றை) இடித்து, பிள்ளைக்குத் துவாலை இட்டு விடவும். மயிர் மாணிக்கமும் தவிடும் புகை பிடிக்கவும். "கோவிந்தா" என்று சொல்லிவிடவும்.

---

* தலைமயிர் என்று இருக்கலாம். (ஏழாம் நாள் தோஷத்தின் முடிவில் புகையிடுவதையும் பார்க்கவும். தலைமயிர்ப்புகை என்று அங்கும் குறிக்கப் படுகிறது.)

1. இளைப்பு வாங்கும் = உடலிளைப்பு அல்லது களைப்புத் தோன்றும்.
2. மூச்சுத்திணறல்; அல்லது விக்கல் என்று இருக்கக் கூடும்.

இதற்கு யந்திரம்

"ஓம் அ ங கி ஷ ங் ழ ழ ழ ழ ழ ழ ஷி ஓம் ஸ்ரீ" என்று எழுதிக் கட்டவும்.

ஏழாம் நாள், ஏழாம் மாதம், ஏழாம் வருஷம் எரிண்டி என்னும் பேய் அணுகும்.


இதன் குணம்

உடல் வெதும்பும். வய(யி)று மாவுபோலக் கழியும். தலை பெரட்டிக்(புரட்டி) கொள்ளும். கொட்டாவி கொள்ளும். பழச்சாறும்(?) கண்ணைப் பிசைந்து அழுகும் (அழும்). துணுக்கிடும். இளைப்புக் காணும். மற்றும் பல விகாரம் செய்யும்.

இதற்கு பலி

மாவால் பாவை செய்து, சாந்து சந்தனம், செவ்வரளிப்பூச் சூடி(ட்டி), வெண் சோறு—ஆச்சியம்[1]—பொரி நீர்[2]—எள்ளு—அப்பமும் வைத்து, புதுக் கலசத்திலிட்டு புள்ளி குத்தி, மாவிலை நெய் விளக்கு இட்டு, தீபம் தூபம் கொடுத்து, பிள்ளை தலையைச் சுத்தி(ற்றி), மாலை நேரம் பிரங்(புறங்)காடு[3] நோக்கி, "அரிஃ ஓம்" என்று தியானம் செய்து வைக்கவும். வில்லை (வில்வ) இலை, விளா இலை (இவற்றை) இடித்துப் பிள்ளைக்குத் துவாலை இட்டு, குளு(ளி)ப்பாட்டவும். பசு மாட்டுக் கொம்பும் தலை மயிரும் புகை பிடிக்கவும். "நாராயணாய நமஃ" என்று மந்திரம் சொல்லி, பிள்ளை உடம்பைத் தடவி விடவும்.

யந்திரம்



என்று எழுதிக் கட்டவும்.

எட்டாம் நாள், எட்டாம் மாதம், எட்டாம் வருஷம் பிரங்காள முனி என்னும் பேய் அணுகும்.

---

1. ஆச்சியம் = நெய்.
2. பொரி நீர் = நீரில் ஊறவைத்த நெற்பொரி.
3. புறங்காடு = மயானம்.


இதன் குணம்

பிள்ளை உடல் வெதும்பும்[1]. பெருமூச்செறியும். வய(யி)று கடுத்துக் கழியும். சீறி அழும். முலை உண்ணுது. எதிர் எடுக்கும்[2]. (மேலும்) பல விகாரம் செய்யும்.

இதற்கு பலி

மாவிணலே பாவை செய்து, கோத பொடி(?)[3] சாத்தி, வெள்ளற(ர)ளிப் பூச்சூடி(ட்டி), எளு.....சோறும் எட்டு அப்பம், பொரி கரி(றி) பொரி நீர் வைத்து, மாவிளக்கு ஏற்றி, புதுக் கலசத்தில் புள்ளி குத்தி, அதில் (அவற்றை) வைத்து, தூபம் தீபம் கொடுத்து, ஊருக்கு வடக்கே முற்சந்தியில் மாலை நேரம்(த்தில்) வைக்கவும். குன்றி இலை, விளா இலை (இவற்றை) இடித்து, துவாலை இட்டுக் குளிப்பாட்டவும். நண்டொ(டோ)டுந்தவிடும்[4] புகை காட்டவும். "விஷ்ணவே நமஃ" என்று பிள்ளை முதுகைத் தடவி விடவும்.

யந்திரம்



என்று எழுதிக் கட்டவும்.

ஒன்பதாம் நாள், ஒன்பதாம் மாதம், ஒன்பதாம் வருஷம் மாகாளி என்னும் பேய் அணுகும்.

இதன் குணம்

உடம்பு வெதுப்(ம்)பும். கால் கை அசந்து (அயர்ந்து) வரும்[5]. வேற்றுக் குரலாய் பூனைபோல் சீறி அழும். வய(யி)று


1. வெதும்பும் = வெப்பங்கொள்ளும்.
2. எதிர் எடுக்கும் = கக்கும்.
3. கந்தப் பொடி என்று இருத்தல் வேண்டும். ஒன்பதாம் நாள் தோஷத்திற்கான பலியைப் பார்க்க.
4. நண்டின் மேல் ஓடும் அரிசித்தவிடும்.
5. அசதி அடைதல் அல்லது அயர்ந்து போதல்.

சிதங் கழியும். கண் விழிக்க மாட்டாது. முலை உண்ணுது. (வேறு) பல விகாரம் செய்யும். கொட்டாவி கொள்ளும். உடம்பு வெளுக்கும்.

இதற்கு பலி

மாவினல் பாவை செய்து, புனுகு, கெந்தப் பொடி, மல்லி கைப் பூச்சூடி(ட்டி), ஏழு அப்பம், வாழைப்பழம், நறு நெய்[1] மாவிளக்கு ஏற்றி, புதுக்கலசத்தில் புள்ளி குத்தி, அதில் வைத்து, பிள்ளையைச் சுற்றி, ஊருக்குக் கிழக்கே காளி கோட்டம்[2] நோக்கி, "ஸ்ரீயு கிலியு அய்யு" மென்று மந்திரம் சொல்லி வைக்கவும். துளசி இலை, கற்பூரவள்ளி இலை (இவற்றை) இடித்து, துவாலை இட்டு, பிள்ளைக்குக் (பிள்ளையைக்) குளு(ளி)ப்பாட்டவும். "நாராயண" வென்று தியானம் செய்து, பிள்ளை நெஞ்சை தடவவும்.

இதற்கு யந்திரம்



இந்தப்படி எழுதிக் கட்டவும்.

1. நறு நெய் = மணமுள்ள புத்துருக்கு நெய்.
2. கோட்டம் = கோயில்.

பத்தாம் நாள், பத்தாம் மாதம், பத்தாம் வருஷம் அந்த நாரி என்னும் பேய் அணுகும்.

இதன் குணம்

உடல் வெதும்பும். வயிறு மாவுபோல் கழியும். சீறி அழும். மூலை உண்ணுது. பால் எதிர் எடுக்கும்[1]. இளைக்கும், இருமல் எடுக்கும். சோகை மயக்கமாம்.

இதற்கு பலி

மாவினால் பாவை செய்து, உளுந்த(து)ஞ் சோறும், இறைச்சிச் சாறும், எள்ளுப் பொரி, முட்டை பொரிச்சு துவைத்து, நெய் விளக்கு ஏற்றி, புது கலசத்திற்குப் புள்ளி குத்தி, அதில் (அவற்றை) வைத்து, தூப தீபம் கொடுத்து, மாலை நேரம் சுடலையில் "தெய்வ சிகாமணி" என்று சொல்லி வைக்கவும். மாவிலை, குளிதாமரை இலை (இவற்றைத்) துவைத்து, துவாலை இட்டு, குளிப்பாட்டவும். கரடி விட்டையும், காராம்பசு யீனுக் (ன்ற) கிடாரி பெறு(ருவுங்) கூட்டி, புகை பிடிக்கவும். ஜா(யா)ம நேரம்வரை வயிரவான்(?) என்று மந்திரம் சொல்லி, சிரஸிலிருந்து கீழ் நோக்கித் தடவி விடவும்.

இதற்கு யந்திரம்

ஓம் ஹ்ரு ஹ்ரூ ஓம் என்று எழுதிக் கட்டவும்.

பதினென்றும் நாள், பதினென்றும் மாதம், பதினென்றும் வருஷம் கண்டி என்னும் பேய் அணுகும்.

அதன் குணம்

உடம்பு வெதுப்(ம்)பும்: கண் பூளை காட்டும்[2]. வாய் குளரி(றி) அழும். பி(பு)றங் கையினால் கண்ணைப் பிசைந்து அழும். சீறி துணுக்கிடும். வயிறு மாவுபோலக் கழியும்.

1. எதிர் எடுக்கும்=கக்கும்.
2. கண்ணில் பீளை கட்டும் என்று இருத்தல் வேண்டும்.

குடித்தப்பால் எதிர் எடுக்கும். மூலை உண்ணுது. நரிக்குளிர்[1] வரும்.


இதற்கு பலி

மாவில் கரும்புபால்[2] விட்டுப் பிசைந்து பாவை செய்து, மஞ்சள் சீலை உடுத்தி, வில்வபத்திரியையும், சந்தனமும் சாத்தி, பஞ்சவர்ணச் சோறும் மா(ன்) கறியும் பளம்பமானம்(?) இது(?) புது கலசத்திற்குப் புள்ளி குத்தி அதில் வைத்து, மாலைநேரம் நாற்சந்தியில் "மகா கணபதயே நமஃ" என்று மந்திரம் சொல்லி வைக்கவும்.

இதற்கு யந்திரம்

ஓம் நமோ ஐவ ர பம ஓ ஓ ஓ பு பு பு

ஹ்ரு ஹ்ரூ வ நெ ஹ



இந்தப்படி எழுதிக் கட்டவும்.

பருத்தி இலையும் வெள்ளைக் காகா(க)ணத்தி இலையும் இடித்து, துவாலை இட்டு குளிப்பாட்டவும், நாயின் மயிர்(ரும்) கோரோசனையும் புகை பிடிக்கவும்.

"ஓம் அகோர பயி(பை)ரவா" என்று (சொல்லி) பிள்ளை முதுகைத் தடவி விடவும்.

1. நரிக்குளிர் = நளிர் குளிர், நடுக்கங்கூடிய குளிர்.
2. கரும்புபால் = கருப்பஞ்சாறு.

பன்னிரண்டாம் நாள், பன்னிரண்டாம் மாதம், பன்னிரண்டாம் வருஷம் அக்கினி என்னும் பேய் அணுகும்.


இதன் குணம்

உடல் வெதுப்(ம்)பும். எரி.....கைவிடாது அழும். நுரையாய் கழியும். கைகால் குத்தும். சிறுக விழித்துப் பார்க்கும்.

இதற்கு பலி

மாவில் வெல்லப்பாகு விட்டுப் பிசைந்து, பாவை செய்து, பஞ்சவர்ணச் சோறும், பாமானு(?) சுட்டப்பம்(மும்), செஞ் சந்தனம் கற்பூரம் தெளித்து, நெய் மாவிளக்கு இட்டு, கலசத் திற்குப் புள்ளி குத்தி, அதில் வைத்து விஞயகனுக்கு அவல், பொரி, தேங்காய், பழம், வெல்லம் (இவற்றை) நைவேத்தியம் செய்து, தூபம் தீபம் கொடுத்து, மாலை நேரம் நாற்சந்தியில் "ஓம் சிவதேவாய நமஃ" என்று தியானம் செய்து வைக்கவும். வேலிப்பருத்தி இலை துவைத்துத் துவாலை இட்டு குளிப் பாட்டவும்.

இதற்கு யந்திரம்



என்று எழுதிக் கட்டவும்.

"ஓம் அகோராம் பட்டு சுவாஹா"[1] என்று சொல்லி பிள்ளை முதுகைத் தடவி விடவும்.

1. ஓம் அகோர, ஓம் பட் ஸ்வாஹா என்றிருத்தல் மேல்.

பிள்ளை பிணிக்கு பாவை தோஷத்திற்கு (பரிகாரம்)

(இனி செய்யுட்கள்)

1. குடித்தபாலும் தங்காது குரி(றி)யும்
உடம்பும் மிக நொந்தும்
இடித்து நெஞ்சும் உகந்திருக்கும்
மிகவே கொக்குச் செடிநாறும்
படிக்கும் கைகால் அழுக்கேறிப்
பதைத்து வருத்தப் படுமாகில்
துடிக்கும் சமநேரிடையாளே
சொல்லும் பாவை தோஷமிதே.

2. பச்சப்பனையின் ஓலையில் பக்ஷிராஜன் என்று எ(றெ)ழுதி
கொச்சைக் கொளி பெ.....ட்டு(?) குடம்நீர்
[சொரிந்து தான்கட்ட
அச்சமில்லைக் குளிமீடான ஆனநிலத்தின் விளாஇலையும்
மெச்ச சுடவை(த்)து நீருடனே விரவிக்
[குளிப்பாட்டிட நன்றே.

(பக்ஷி தோஷங்களும் பரிகாரமும்)

1. வாய்ப்புள் தோஷத்தின் குணம்

3. வேப்பம் பூப்போல.....ன்றேடி
விடாதே வெப்பும் தலைவலியும்
பூப்போல மாந்திப் பிர(புற)ங்கையால்
பொருந்து மூக்கையே துடைத்து
கோப்பாய் நாவு வறண்டு தண்ணீர்
குடிக்கக் கண்டு பாதமிக்கும்
சேப்புங் கயமாமுகமா.....ச்செப்பும்
வா(ய்)ப்புள் தோஷமிதே.

4. செப்புத் தகடுதனில் சீரு(ரா)யமுரத பட்சியமுரத யென
தப்பாதுஎழுதி மந்திரித்த தண்ணீர் சொரிந்து
[தான்கட்டி
சுப்பக்கோழி பலிஇட்டு அதன் ரத்தம் திலகமிட்டு
துப்பாமேனியன் உமைச்சு சொன்ன ராஜர்
[சொன்னர்.

2. நீர்ப்புள் தோஷத்திற்கு

5. நெஞ்சு வறண்டு கண்குளிர்ந்து
நீடுமேல் மூச்சு(மு) உண்டாகி
பஞ்சுபோல கண் வெளிரி(றி)
பாலும் குடியாதே உள்ளறும்
துஞ்சாது இரவும் பகலுந்தான்
சுருங்க பண்டி மிகவேற்கிற
செஞ்சொற் கிள்ளை மொழிமாதே
செப்பும் நீர்ப்புள் தோஷமிதே.

6. பச்சை ஓலைதனில்வந்து நீங்காரம் வரைந்து
பாங்குபெற பஞ்சுநூலாலே சுற்றி
அச்சமாப் பிரமடைநீர்.....ஞதாஞ் சொரிந்து
அழகான செஞ்சேவல் பலிகொடுத்து
நிச்சயமா மெந்திரமும் தானேகட்டி நிகரில்லா
மருந்துதனை நிகழ்த்துங் காலே
வெச்சனவே விஷ்ணுக்கிரு(ரா)நதி குடியிநி நீர்
குடித்துவர வியாதி போமே.

3. தூங்கின புள்ளின் தோஷம்

7. வாங்கி உதகந்தனைக் குடித்து வயிறும்
கழிந்தே வாந்தியுமாய்ப்
பாங்கித்திரும்பி மிகப்பார்க்கும் பயமாய்
அழுகு(து)ம் வீசாணனும்
தாங்கித்துஞ்சம் புயலுமிசை சாய்ந்தால்
வீறிட்டு எழுந்திருக்கும்
தூங்கினப் புள்ளுத்தோஷமிது தோகா
உனக்குச் சொன்னேமே.

8. (வெள)வவ்வால் சிறகில் அருகம் வேர்
வைத்துச்சுகுட்டி(?) குளிசமிட்டு
செவ்வெயதாகும் பலிகோழி செய்தே
கொடுத்துப் பின்மருந்து
நவ்விளியாய் கூவளைவேர் நாரிமுலைப்
பால்தனில் கொடுக்கத்
துவ்வின பவி(வ)ழ நகையாளே தூங்கின
புள்ளின் தோஷம் போம்.

4. காணப்புள் தோஷத்திற்கு

9. உச்சியுடனே கண்குழியும் உண்ணும்
பாலும் தொ(த)ங்காது
பச்சைநிறமாய் வயிறு எடுக்கும் பறவைக்
குரலாய் சிறிஅழும்
வெச்சென்றிருக்கும் மேல்மாரும் எடுத்து
குடிக்கும் தண்ணீரை
கச்சை அடர்ந்த தனத்தாளே காணப்
புள்ளின் குணந்தானே.

இதற்கு (மருந்து)

10. ஆலவிழுது விடத்தலைவேர் ஆனகீழ்க்காய்
நெல்லியின் வேர்
கோலக்கன்னி அழியாப் பெண்ணாத்த(ற்ற)
நூலால் குளிசமிட்டு
சிலமஞ்சள் தான்தடவி சிர.....ன
கோழி பலிகொடுத்து
நீலவிழியாய் நீர்சொரிய நிற்குங்
காணப்புளத் தோஷமே.

குளிர் தோஷத்திற்கு

11. உச்சி குளிர்ந்து கண்குளிர்ந்து உயர்கழிச்சல் மிகவுண்டாய்
வெச்சென்றுடலும் மிக்ககாய்ஞ்சு வெளிரி(றி)க்
[குஞ்சி முடனுகும்
அச்சமுர(ற)வே மிகமாறி ஆபதாபப்பட்டு அலரி(றி)
நச்சைபோர் வேல்விழியாளே நவிலும் குளிர்
[தோஷமிதே.

இதற்கு (மருந்து)

12. ஈமந்தன்னில் காட்டாத்தி எழுந்த பருத்தி பயத்தன்வேர்
ஆமை குளிசமதுகட்டி அணிநீர் சொரிய பாமடைநீர்
பேகமெ(மே)கோழி பலிகொடுத்து பிரமாய்ச் சுத்தி[1]
[போட்டக்கால்
தாமெ(மே)குழவி பிழைக்குமென்று தையல்காரனர்
[சாத்தி(ற்றி)னரே.

---

1. புறமாய்ச் சுற்றி என்றிருத்தல் நலம்.

எச்சில் தோஷத்திற்கு

13. உதிரமுங் கழிவதன்றியும் வாந்தியும் மிகவுண்டாகி
இதமோடு தலை எடாமலிருவிளி பீளை காட்டி
விதவிதமாக மேனி வெதும்பியே வருமேயானல் நிச
மதுபே(எ)ச்சில் தோஷம்.....னவே செப்பலாமே.

14. வேலா(ல)மரத்தின் புழுகூட்டை விரைந்து எ(தெ)டுத்து
[நூல்சுத்தி(ற்றி)
சீலமஞ்சளது து(த)டவி சிறக்க தூபந்தான் கொடுத்து
சாலமூன்று பிரமடைநீர் தங்காது எடுத்து மந்திரித்துக்
கோலச்சிரசில் தான்சொரிந்து குளிசங்கட்டி
[பலியிடுமே.

15. பலிதான் கோழிதலை சுத்தி(ற்றி)ப்
பின்பு துவாலைந்து கேளீர்
நலியாதொடி பரிக்கும்இலை நாட்டும்
நிலத்தில் விளாவாதல்
சலியாவில்லை இலையாதல் தானே
நீரில்இட்டு அதனை
மெலியாக்குழந்தை நீராட்டில் மி(மீ)ளும்
எச்சில் தோஷமிதே.

தேரை தோஷம்

16. காலும் கரமும் மிகவளரி(வெளிறி) கட்டிப்
போட்டாப்போல் பின்னி
மேலும் வற்றி வெளுப்பாகி வேறுவிதமாய்
குரல் தொனியும்
சாலமுலையா(பா)ல் குடித்தாலும் சற்றும்
தேறாது இக்குழவி
நீலவட்ட விழிமாதே நிசமாந்
தேரைத் தோஷமிதே.

17. விகதாளி தலைசுருளி நல்ல
வேரைக் குளிசமிட்டு
தோகாய் குளத்தின் மடைநீரும்
தொகுத்த தேங்கனடி நீரும்

வாகாய்ச் சொரிந்து கோழிபலி வளமாய்
சுத்தி(ற்றி) வாழையடிப்
பாகாத்தேரை அய்ந்தனைப் பதமாய்
நெய்யி லெரித்துருட்டே. (?)

முட்டுத் தோஷத்திற்கு

18. தொட்ட உடனே துணுக்கென்னும்
துஞ்சா தழுது துடி-துடித்து
நட்டுவிழியும் பஞ்சுடஞ்சு நாவும்
வறண்டு நீர்தேடும்
தட்டுப்..... துட.....துங் குந்தருகா
வயிறு கழியுமெனில்
முட்டுத் தோஷமாகுமென முன்னோர்
உரைத்த முறையிதுவே.

19. வெற்றிலைப்பாகல் வேர் குளிசம் சேவல் பலியுந்தான் சுற்றி
வற்றுக்குளத்தின் பிரமடையிற்(ல்) வாரிநிறை
[மந்திரித்து
பெற்று(ற)தாயின் மடியில் மைந்தன் பேணிவைத்து
[நீர்சொரிந்து
முற்றுமுந் தானியினல் மூன்றுதரமும் மந்திரியே.

மாந்தமெட்டும்[1] வருமாறு

20. பெருகுமன்னை வய(யி)ற்று மந்தபெற்ற
பிள்ளை தனக்கு உண்டாய்
மருவும் வாலைமாந்தம் நீர்மாந்தம்
கணையால் வருமாந்தம்
வருமே அன்னஞ்சொ.....மல(?)
வாந்திசெய்யும் பொரமாந்தம்
தருமேகட்டு மாந்தமுடன்
தன்னையுண்ணும் பாலமாந்தம்.

1. எண்வகை மாந்தங்கள்—வால மாந்தம், நீர் மாந்தம், கணை மாந்தம், சொரியா மாந்தம், பொர மாந்தம், கட்டு மாந்தம், பால மாந்தம், உதிர மாந்தம் என்பனவாம். வால மாந்தம் என்பதற்குப் பதில் துட்டு மாந்தம் என்று பிறகு குறிப்பிடப்பட்டுள்ளது. வால மாந்தம் என்பதற்கே துட்டு மாந்தமென்று மற்றொரு பெயர் போலும்.

21. மாதவுதிர மந்தமதால் மருவி
முலைப்பால் உண்டதனல்
சூதஅற(ர)ம்பைச்சனி.....த்துவரை
அவரை கடலையுடன்
போத உண்ணுங் தென்னங்க(?)ப் பொருந்தாது
உளுந்து புசித்தக்காலாக
இதமாய் வருமே மாந்தமெட்டு மெனவே
முனியுந் தாமுரைத்தார்.

1. துட்டு மாந்தம்

22. பாலும் கழியும் பால் எடுக்கும்
பலித்திடும் வேறுவேரும்
சாலக்கணைக்கால் வெதும்பி இடுந்தலை
எடுத்திராமல் மாந்தும்
சிலந்தாயாரல.....(?)ணமாய்கிகள்(?)
பொடுதலையின் காயும்
கோலமார் வசம்பு சுட்டுக்கட்டி
அரைத்துக் கொடுத்திடுமே.

2. நீர் மாந்தம்

23. தலையது நோவாய் முகமதுமினுக்குந்
தருகியே மலஞ்சிறுத்திட்டு
முலையது முகவாது உடலெல்லாம் புண்போல
மூத்திரம் கடுகடுத்து இறங்கும்
மலமது தீரவுள்ளி கரிச்சாலை
வயங்குஞ் சாரு(று)ழக்கு
இலகுமாமணக் கெண்ணை(ணெய்) எரிக்கில்
நீர்மாந்த மேகும்.

3. கனை(ணை) மாந்தம்

24. இருமும் மூக்கால் நீர் வடியும் இடையு
மிடையும் சுரம்தோன்றும்
பொருமும் வய(யி)றும் இறைச்சல் உண்டாய்
போதக்கழியும் பலவீண(ன)ம்

செருமும்[1] உடலுமே மெலிந்து தலை
சோர்வே இருக்கவொட்டாது
தருமந் தனக்கு(க்) கண்மாந்தம் காணே
இதனை முத்தானரியே(?).

25. புங்குவெம்பு புளிநொச்சி பொடுதலை
வேலிப் பருத்தியுடன்
சங்கு கறுவேப்பிலை அவுரிச்சாறும்
பொன்னங்கணி வேர்
அங்கு நார்தை யிர்க்கிலையும் துகும(?)
வகைக்குப் படி கூட்டி
பொங்கும் சட்டிதன்னில்(லி)இட்டு போத்த
தண்ணீர் நாழிவிடே.

26. விடுமே கடுகுரோகணியும் விரு(வரா)கனிந்
துப்பது கூட்டி
தொடுமே சிலமுடிந்திட்டு துவளக்
கா(ய்)ச்சி எட்டொன்றும்
எடுமேசிலை மருந்தரைத்து இதமாய்க்
கரைத்துக் கொடுத்திடுகில்
ஓடுமே கணையின் மாந்தமும்தான்
ஒழிந்தே போகும் கண்டாயே.

4. சொரியா மாந்தம்

27. மிக்கவெதுப்பும் தலைவலியும் மிகவே
வய(று)தான் ஊதி
தக்க வலமும் மாப்போல சாலக்
கழிந்தே அரைக்கணிட்டு
துக்கப்படுத்தும் தலைசோர்ந்து துவளுங்
கிரைத்தண்டு அதுபோல
சிக்கென்றழ தங்களப் முலைதேனே
சொரியா மாந்தமிதே.

---

1. செருமும் = இருமும். (செருமல் = இருமல்).

28. வேலிப் பருத்திஇலை ஆட்டிப்பிழிந்து மிளகுவசம்பு சுட்டு
சாலஉள்ளி ஓர்சமனுய் தளர் வரைத்து நெய்யிலிடு
மேலும்எருமை வெண்ணை(ணெ)யினில் மிகவும் ஓமம்
[பெருந்தும்பை
சிலம்பிரவே எரித்து நக்கச்(?) செரியாமாந்தம்
[ஒழிந்திடுமே.

5. பொர மாந்தம்

29. ஏற்றே வ(யி)று மிக்க கழியும்
இடையிடையும் சுரம் தோன்றும்
தோற்றுதுடலும் மிகவற்றி தெரிந்தே
பலமும் குறைந்து வரும்
கூற்றே மலத்தோடுருள வீருகும் கொல்லும்
பொரமாந்தம் பொல்லாதே.[1]

இதற்கு[2] (மருந்து)

30. புளியாரை நொச்சித் தும்பை
போற்றாங் கருக்குவா இலையும்
ஒளிசேர வெள்ளெயு வாயிலம்(?)
ஓங்கும் பெரிய தும்பைஇலை
சளியப் பிடித்தசாறு உழக்குந்தானும்
சமனுய் அடுப்பேற்றி
எளிதாய்க் குழம்புபோலக் காய்ச்சி
எடுத்து இதனிடும் மருந்தே.

31. இடுமேகாயம் இந்துப்பும் இணங்கும்
சீரகம் இருவகையும்
தொடுமே ஓமம் திரிகடுகு தோற்று(மூ)ம்
ஊசிக் காந்தமுடன்
எடும் சமனுய்த்தான் கூட்டி நெகுளாது[3]
அரைத்து தூதுவிளங்காய்
கொடுமே உருண்டை முலையாலி(ளி)ன
கொண்டால் தீரும் பொரமாந்தம்.

---

1. இச்செய்யுளில் ஓர் அடி குறைவாயிருக்கிறது.
2. இதற்கு—என்முல் முற்கூறிய பிணிக்குப் பரிகாரம் எனக் கருத்து.
3. நெகுளாது = நெகிழாது, தளராது.

6. பால மாந்தம்

32. அகடது பெருக ஊதி அதிகமாய் சுரமும் தோன்றும்
முகடது தனையே பார்க்கும் மூரியே[1] கொட்டாவி
[உண்டாம்
விகடமாய் வலிப்புள(பெ)டுக்கும் பிரை விரைந்திருக்கும்(?)
வொகுமது கடிடை(?) மின்னேகேழா(ளா)ய்
[துலங்கும் பாலமாந்தமாமே.

இதற்கு (பரிகாரம்)

33. வெள்ளைக் காக்கணத்தின் வேரைவிரைந்து
மூலைப்பால்தனில் அரைத்து
கள்ளமான் வ(ய)யிறு கழியக்கண்டே
கொடுத்துப் பின்பிணிக்கேள்
விள்ளுமே எண்ணை(ணெய்) வேளை
வேருந் திரிகடுகுந்
துள்ளும் கிரு(ரா)ம்பும் திரிபலையும்
தோன்றும் கோல.....றையே.

[2].....ப்போட்டு சன்னி இலை நிலைவிளா இலை வகைக்கு சாறு உழக்கு, ஆமணக்கெண்ணை(ணெய்) உழக்கு விட்டு எரித்து காசிடை[3] உள்ளுக்குக் கொடுத்து, உச்சியிலும் தடவத் தீரும்.

மசரிப்புழுவிற்கு

1. சொருஞ் சீதமலந்தண்ணீர் துலையா
விடாமலே கழிந்து
செருமமலத்தில் புழுவிழுந்து
செய்ய அபானம் புண்ணுகும்

---

1. மூரியே = மிகுதியாக.
2. இங்கு மூலச்சுவடியான ஓலைப்புஸ்தகத்தில் ஓர் ஏடு (22-வது தாள்) காணவில்லை. ஆகவே 7-வது, 8-வது மாந்த நோய்கள் முதலியனவும் இங்கு தொடர்பாக இல்லை.
3. காசிடை = ஒரு தம்பிடியில் பாதி ஒரு காசு; அதாவது பழைய செப்புக்காலணவில் 6-இல் ஒரு பாகம் எடை.

காரிநிறம்போலக் கத்திரி(க்)காய்
சீங்குபோலக்[1] கழிந்திடினும்
ஆரமணியும் தனத்தாளே
(ம)அசரிப் புழுவின் குணமிதுவே.

இதற்கு (பரிகாரம்)

2. சிறுசெருப்படி (படை)யின் சாறு
சிறக்கும் ஆமணக்கெண்ணை (ணெய்)
குருகளவ சமனுய்க்கூட்டி
கொடுத்திட மசரிவிழும்
நறுநெய்யும் ஆடுதிண்டாப்
பாளையின்தனின் சாறும்
தருகு வெப்பாலைச்சாறும்
சமன்கலந்து ஈயநன்றே.

3. நன்றே செம்மணத்திஇலை நயர்ந்தே கஷாயமது விருகத்து[2]
குன்றுவசம்பு சுட்டு வெள்ளுள்ளிகூட்டி அரைத்துக்
[கொடுத்திடுகில்
அன்றே தீரும் சிறு புழுக்கள் அகன்று தீரும்
[மெய்யென்றும்
குன்றில் பெரியகுரு முனியுங் கேட்டார் பெரியோரே.

வாலகுமா கண்டன்(?)

4. கண்ணும்வாயும் மிகக்கோணிக்காலும்
கையும் ஒரு பக்கம்
துண்ணும்[3] வலிப்பு விட்டுவிட்டு
துடற்சியதுவே உண்டாகும்
நண்ணும் சுரமும் தலைநோவும்
நமனுல் கொட்டியது போல
பண்ணும் மூர்ச்சைப் படுத்திவி(வை)க்கும்
வாலகுமா கண்டனுக்கே.

---

1. கத்திரிக்காய் சீங்குபோல் = கத்திரிக்காயின் உள்ளிருக்கும் வித்துகள் போல்.
2. விருகத்து (ப்ருஹத்) = ஈசாமூலி அல்லது பெருமருந்து.
3. துண்ணும் = திடுக்கிடச் செய்யும்.

இதற்கு மாத்திரை

5. மலைதாங்கி வேருடன் வாளபற்பம் அதுகூட்டி
சிலைதாங்கி மிரசாகந்தி செருஞ்சமனுங்
[கூவ(வி)ளைச்சாறு
நிலையே தவருதுஅரைத்து உண்டை நிசமாமுள்குபோல
[உலர்த்தி
அலையா மிளகு தக்காளிச்சாற்றில் அருந்ததான்
நன்றே.

வாலகுமான் குணம்

6. தலையும்காலும் மிகநடுங்கும்தானே
கழுத்துச் சேர்ந்து விழும்
நிலையும் கண்கள் பெருவிழியாம்
நெருங்காது உறக்கம் வரு(ரா)து
முலையும் உண்ணுது இருமலுமா
தொப்புள்த்தான் நோகும்
மலமும் ஒருக்கால்தான் போகும்
வாலகுமான் குணமிதுவே.

இதற்கு (மருந்து)

7. தோகை மயிலுனிற் குள்ளிதொகுத்த வசம்பு கரும்சீரம்
பாகஞ்சமனுய் வேப்பெண்ணை(ணெய்) மிதமாய்
[இருத்து ஒரு கூற(கர)ண்டி
மோகத்துடன் தான்கொடுத்து மொழிகள்தோறும்
[பிடித்திட்டால்
வேகமிது லைத்தான் பயந்துவிடுகும் வாலகுமானுமே.

சகல வலிப்பிற்கும் மருந்து

(வசனம்)

விளா இலை, சின்னி இலை, கிளா வேர், மஞ்சள், உள்ளி, வசம்பு, மிளகு இது(வை) சமனுக்கி, மஞ்சள் சிலையில் வைத்து, கன்னி நூல் கொண்டு கட்டி, அந்தச்சாற்றை மூக்கிலும் வாயிலும் தடவி, வாய் பேசாமல் மார்(?)காலிலும் மார்(?)கையிலும் கட்ட, சகல வலிப்பும் தீரும் ; கை கண்டது.

(செய்யுள்)

காக்கை வலிப்பிற்கு மருந்து (குணம்)

8. நாக்கும் மூக்கும் நயன வாயும்
நாறும் புருவ மிதுவெல்லாம்
காக்கை வலிப்பாம் அப்போது
கடுக உடம்பை அலமலக்கும்
ஏக்கமது பேசாமல் இருக்கும்
கருத்துத்தான் மயங்கும்
காக்கை வலிப்பென்று எல்லோரும்
காணப்புவியில் அறிந்தாரே.

இதற்கு மாத்திரை

9. மூந்தும் வாளமுந்திரிகை மொசுக்கை
பொன் முசுட்டை சுரஞ்
சந்து பேரீச்சுக் கெந்தி(கருஞ்)சீரகம்
இலுப்பைப்பூப் ப(பு)டலும்
தந்தது எலுமிச்சஞ்சாற்றில் சமனுய்
அரைத்து(ப்) பயரு(று) அளவு
இந்தகாக்கை வலிப்பிற்கு இடுமே
இஞ்சிச்சாறு அதனில்.

வால காமாலைக்கு (மருந்து)

10. கண்ணும்வெளுத்து மஞ்சனித்துகாலும்
கரமுந்தான் தைக்கும்
உண்ணும் மருந்து திரிகடுகு ஒற்ற
நிலத்தின் வாகையின் வேர்
மண்ணிக் கருணைதிரிபலையும் வாங்கித்
தெச்சிச்சாறு[1] நனைத்து
பண்ணும் கொடிக்காய் வெண்ணை(ணெ)யினில்
பருகக் குழைத்துக் கொடுத்திடுமே.

1. தேசிச்சாறு = எலுமிச்சம் பழரசம்.

வால கிறுகை[1]

(வசனம்)

மாந்த வலிப்புக்குத் துவாகம்(?) நல்ல வசம்பு எடுத்து, கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டு அரைத்து, உச்சந் தலையில் பிசறு வாங்க முந்(?)துவாலை இடவும். மறுநாள்(?) ளு காட்டிப் போடவும். வலிப்பு தீரும்.

மூலை உண்ணுத பிள்ளைக்கு

அதிமதுரம் பசுவின் பாலில் அரைத்துக் கரைத்துப் பழஞ் சீலையில் துவைத்து, வாயில் பிழியவும். பின்பு பிள்ளை மூலை உண்ணும்.

பிள்ளை இருமலுக்கு

சிறு தேக்கும், கடுகுரோகணியும் சமன் பொடி செய்து, தேனில் அல்லது நெய்யிலாவது மூலைப்பாலிலாவது பொடி இட்டுத் தீச்சு புகட்டவும். இருமல் நிற்கும்.

பிள்ளை வய(யிற்)று(ப்) பொருமலுக்கு

அதிமதுரம் காடி வார்த்து அரைத்துக் கொடுக்க வயறு (யிற்றுப்) பொருமல் தீரும்.

பிள்ளை பலகாலமும் அழுகிறதற்கு (பரிகாரம்)

ஓமம், கடுகு, வெள்ளுள்ளி, இது(வை) கூட்டி(ச்) சமனுகக் குளிர்ந்த தண்ணீரில் அரைத்துப் போட்டவும். (அழுகை) தீரும்.

(செய்யுள்)

கணை எட்டின் வரலாறு

1. அய்யது குடித்தானுலும் அறிவை மனது அற்றதானுல்
செய்யமூவனல் தாட்டசெரி[2] ஜலதோஷமானுல்
பைய்யற அலகுவாளே பசிகள் நோவால் வந்த
துய்யதென குழவி எட்டு கணைகளும் தோன்றும்
[அ(ம)ன்றே.

1. பாலக்கிரஹ தோஷம் எனக் கருத்து.

2. மூவனல் தாட்ட செரி = மந்தாக்கினி, தீவ்ராக்கினி, விஷமாக்கினி என்னும் மூவகை ஜாடராக்னிக் கோளாருலான செரியாமை (அஜீர்ணம்) எனப்பொருள்.

எட்டிற்கும் பெயர்

2. இங்கிலத்தில் பரந்திடும் குழவிக்கெல்லாம் எட்டுவிதக்
கணையின் பெயர் இயம்பக்கேளாய்
துன்னரிய[1] நீர்கணமாம் மூலகணம்
சொல்லிய சீதகணம் பீதையகணம்[2]
வன்னி ஏழும் மலக்கணத்தின் மகாகணமாம்
வற்(ர்)ணக்கு(க)ணமும் கு(க)ணசாலியாம்
[கண்(ணங்)களெட்டும்[3]
பின்னுசடைக் கிரை(ற)யனரு[4]ரைத்தார் இந்தப்பெரு
நிலத்தில் விஷத்தானங்கள்(?) பேசினரே.

நீர் கணையின் குணம்

3. இருமும் மேல்மூச்சு உண்டாகும்
இரு கடக்கடையும் நீர் சொரியும்
பொருமும் முலையும் உண்ணுது
பொருந்துஞ் சுரமுந் தலைநோவும்
வருமேவிலாவில் குழந்தச் சது(தி)வாங்கும்[5]
நாயரு முள்ளென அபி(றி)ந்து(?)
செருமமும்[6] தொண்டைமால்[7] செலுத்திச்
செய்யுமிது நீர்க்கந் தானே.

---

1. துன்னரிய = மிக்க அபூர்வமான.

2. இதய கணம் என்றிருத்தல் வேண்டும்.

3. 'வறக்கணையும் குண்டலியாம்' என்று திருத்திப் படித்தல் நன்று. பிறகு இவ்விரு நோய்களின் பெயர்கள் வருவதைக் கவனிக்க. இவ்விதம் இல்லையேல் எண்வகை கணங்கள் குறிக்கப்பட்டதாகாது.

4. பின்னு சடைக்கிறையனர் = ஜடா சூடனை பரமசிவன்.

5. குழைந்தச்சுதி = கோழை மிகுந்த குழகுழப்புச் சத்தம்.

6. செருமும் = இருமும்.

7. தொண்டைமால் = தொண்டை அழற்சி.

இதற்கு மருந்து

4. நெய்யும் நாயுருவி அரிசியுடன் நெருஞ்சிக்காயும்
நல் சேரும் நேக(?)கோட்டான்(டம்) சருள்ளி
செயினுக்கு[1] மூலைப்பாலில் அரைத்துப் போட்ட
செல்கோனை(ழை)கட்டை...கும்(?) தீரும் பகரக் கேளும்
ஆதொரு பசுவின் நெய்தனிலிரண்டு அதனுடனே
தூதுவிளாங் கனியும் கூட்டி
தூய திரிபலை கண்டங்கத்திரி சேர்த்துத் தொகுத்
தெரித்து புகட்டுவது கூற(ர)ண்டிதானே.

[2]வறக் கணையின் குணம்

5. நெஞ்சுமுசர்ந்து புகைந்திருமும் நித்தம்விடாமல் சுரம்
[தோன்றும்
மஞ்சள் நிறமுமாணுகிற வெளுப்பும் நாக்கில்உண்டாம்
இஞ்சுங் காத்தில(ர)த்தின் ஓடுக்கும் மிகவும்
[(வ)வெலிது விரைவிரைக்கும்
நெஞ்சமிலாத மூர்ச்சைவரும் வறக்கணத்தின் குணமிதுவே.

இதற்கு(ப்பரிகாரம்)

6. முள்ளிவேரும் செம்முள்ளி
முசுக்கை தூதுவளைவேரும்
தெள்ளுந் தண்ணீர்(வி)மீட்டனிஞ்
செருங்கண்டங் கத்திரியும்
வெள்ளுள்ளி கருஞ்சீரகம்
வேண்டும் வசம்பு கம்(?)பிசினும்
வில்லுமிளகு தக்காளி வேண்டுங்
திருகுகள்ளியின் வேர்.

7. வேறு(ர்)வகைக்கு வரு(ரா)கனென்றும்,
விளக்கெண்ணை(ணெய்) படிதானென்றும்
சீறு(ரு)முலைப்பால் ஆவின்பால்
சேரும் வெள்ளாட்டின் பால்

---

1. செயினுக்கு = நோய் கொண்ட குழந்தைக்கு.

2. வறக்கணை என்பது எண்வகை கணை கூறிய செய்யுளில் இருக்க வேண்டும்; அவ்விதம் திருத்தியுள்ள பாடத்தைக் கவனிக்கவும்.

நேராய் வகை.....(?) அரையும்
நொந்தே காய்ச்சி
இருத்திணைவாரி, ஈருள்ளிக்கோர் கற(ர)ண்டி
வளமாய் உடம்பில் தடவியிடே.

மூல கணத்திற்கு

8. சீதமிரத்தம் மிகக் கழியும் தினம்
ஆசனத்திற்கடுத்து முக்கும்
ஈதுகாச்சல் வெகுபிறைச்சல்
விடாது தலைநோய் அதிகமதாய்
போதப்படவே முகம் வெளுக்கும்
பொருமும் மூலம் வெளியில் தள்ளும்
ஓதும் இந்த குணங்கண்டால்
உமையே மூலக்கணமாமே.

இதற்கு (ப் பரிகாரம்)

9. பழம்பாசி சமூலம் வெள்ளாட்டுப்பாலில் பாங்குடனே
போட்டு அ(ட)தனை துளாவிக் காய்ச்சி
குழைந்து ஒன்றுய் வெந்தபின்பு இர(ற)க்கி ஆற்றிக்
கொண்டு ஒரு(ஓர்) எலுமிச்சம் பழம் பிழிந்து
குழம்பான இளந்தயிரைக் கொள்ளும் போதுகுண
மாகுங் கோதாம் பின்னும்
வழங்குக்கு வேலம்பட்டை சிரரெமலம் வளாம்(?)
துரந்(?)தயிரி லரைத்ததுவுங் கொள்ளே.

10. கொள்ளே பெருமாபட்டை தனை[1]கூட்டும்
வெள்ளாட்டில்(ன்) தயிர்தனில்
விள்ளும் செம்பருத்திப்பிஞ்சு வேண்டு
மாப்போல அரைத்து அருந்த
எள்ளும் பச்சரிசி(டே)சாறுதனில் சீரகம்
அரைத்து நெய் கூட்டு(டி)
உள்ளமாதுளம் பிஞ்சினுடன் உதியம்
பட்டை தயிர் அருந்தே.

---

1. பெருமரப்பட்டைதனை என்றிருத்தல் பொருந்தும்.

குண்டலிய குணம்

11. உந்தியீரடிவும் புண்ணுய்
உயர்ந்திருக்கும் சுவாசகாசம்
வந்தே அஸ்திசுரம் காயும் வளரும்
மூச்சுத் திட்டு முட்டாய்
இந்த வகைப்பின்(ணி) குணம் மரி(றி)யா(தா)ரி
தனைக் குண்டலியா கணமென்பர்
சிந்தை தெளிந்தோர் இக்குணத்தைத்
திருந்தக் குண்டலிக்கண மென்பர்.

இதற்கு (ப் பரிகாரம்)

12. சுண்டைவேர் சிறுக்கீரை வெறு(ரு)ம் நல்லதுய்ய
பொன்னுங்கனி(ணி) அதின்வேர் தானும்
கண்டதோர் கரிசால(சிலா)ங் கண்ணிவேரும் கணிசமுடன்
அரைக்கழவு[1] தேசிக்காய்[2]போல
விண்டபடி தணித்தனியே ஆவின் வெண்ணை(ணெய்)விட்ட
விஷச்சாறு[3] அருந்தவே
குண்டுபோகுங் குண்டலியாங் கணைகள் அதுதானும்
இல்லைக் கொள்ளுவது பச்சரிசி பாலும்சோறும்.

இதய கணத்திற்கு

13. நெஞ்சும் விலாவும் மிகக்கொதிக்கும் நீரு(ரா)ய்க்
[குளிரும் ஒருபோது
வஞ்சகம்போலே ஒருவேளைவந்தே தேகமது வெறுப்பு
மிஞ்சும் இருமல்வய(யி)று இரைந்து மிகவும் பேதிதான்
[எடுக்கும்
பஞ்சில் மெல்லடிமடமானே பாலன் இதய கணமாமே.

---

1. அரைக் கழவு = அரைக் கழஞ்சு ; கழஞ்சு என்ற 12-பணவெடை கொண்ட நிறை.

2. தேசிக்காய் = எலுமிச்சங்காய்.

3. விஷச்சாறு = அதிவிடயச்சாறு அல்லது கஷாயம்.

இதற்கு (ப் பரிகாரம்)

எட்டுவகை கணத்திற்கும் எண்ணை(னெய்)

14. நாயுர்(ரு)வி கருசலா(சிலா)ங்கண்ணி நொச்சி நல்லதொரு
வல்லாரைக் கண்ட காரி
தூய்கவு(ம்) தும்பைஇலை வகைக்குச் சாறுத் துலங்கும்படி
காலாகத்தேள்[1] குத்து(தி)க் கூட்டி
நேயமுடனே பாண்டம் படி தான் ஒன்று நேர் வசம்பு
திரிகடுகு திரிபலையும் கூட்டி
தூயதணல்(ல)தனில் காய்ச்சி இருத்துக் கொண்டால்
[தோற்று
ஓடும் எட்டுவகை கணங்கள் தானே.

[2]அந்தக சிரத்தின் கணம்

15. உச்சிமூனை தனைபற்றி உடல்கள் எங்கும் வெதுப்பேரி(றி)
கச்சமாகத்தான் நாக்கு கருத்து கண்கள் சூடு உண்டாம்
பச்சைமஞ்சள் முறித்தாப்போலே பத்மமுகம் கண்அது
[விருக்கும்
அச்சமாகும் அந்தகன்தான் சிரத்தின் கு(க)ணமிதுவே.

இதற்கு (ப் பரிகாரம்)

16. பொன்னுங்கண்ணி சிறுகீரை
பூலாஅவுரி வேருடனே
மண்ணுங்[3] கடுக்காய் சீரகமுமாகும்
தேத்தா(ற்ரு)ங் கொட்டையுடன்
நுண்ணி அரைத்துஆவின் வெண்ணை(ணெ)
யுடனே முலைப்பால் சமனுக(ப்)
பின்னுங் குளச்சிச்[4] சிரசிலிட்டுப்
பிறகு உலர்ந்தால் தண்ணியிடே[5].

---

1. தேன் கொடுக்கிலை எனக் கருத்து.
2. இவ்விஷயம் ஸம்பந்தமின்றி சேர்க்கப்பட்டிருக்கிறது.
3. மண்ணும் = கத்தமான, சிறந்த.
4. குழைத்து என்றிருத்தல் வேண்டும.
5. தண்ணியிடே = குளிப்யாட்டுக.

கெந்ததாளியாளுல்[1] இதற்கு மருந்து.

17. கொடுமே பின்னும் தளமெட்டு
மிசைந்த பத்துநாள் தின்ன
கொடுமே மூன்றுநாள்தன்னில் குணமாய்த்
திரும்பும் ரோகமதில்
தொடுமெமதென்ன கறுப்பு வெல்லும்
தொடுக்கும் வெயின்கொ...ள(?)
விடுமே அந்தகச்சிரத்தின் கணம்
விரைந்து சொன்னர் பெரியோரே.

(வசனம்.)

கனை(ணை) முத்தி(ற்றி), நாபி கமலம் முதல் நாக்கு வரைக்கும் வெந்து புண்ணுய் (இருப்பது) கெந்த தாளியம். அதற்கு :—நெய் :—பசுவின் நெய் படி இ.[2] சாதிக்காய், சாதி பத்திரி, சீரகம், அதிமதுரம், ஏலம், கிரு(ரா)ம்பு, நெல்லிப் பருப்பு, திப்பிலி, எலுமிச்சம் வேர், தாளிவேர், பருத்திப் பிஞ்சு, ஆவாரைப் பூ மொட்டு, இவ்(வை) வகைக்கு விரு(ரா)கனிடை இ. (வீதம்) கூட்டி அரைத்துக் கரைத்துவிட்டு, நீர் வி(வ)ள ளிக் கிழங்கு சாறு படி ச. வல்லாரைச் சாறு படி ச. கூட விட்டு காய்ச்சி இறக்கி வைத்து, இதில் கோரை(ரோ)சனை மி[3]எடை உ. பொடித்துப போட்டுக் கிண்டி வைத்துக் கொண்டு, உதயத்தில் தினம் ஒரு கரண்டி நெய் கொண்டு வா(?) கொ(கெ)ந்ததாளி வாய்ப்புண்ணுக்கு நாக்கிலும் தடவி, தொண்டை நெஞ்சில்(லும) தடவி வரவும். பதினேரு நாள் தடவி வரவும். இச்சா பத்தியம்.

சீரக(மு)ம், சிறு பயரும், சமன் வெதுப்பிப் பொடித்து, ஈருள்ளியும் வெல்லமும் சேர்த்து நெய்யில் குழப்பி, நான்கைந்து நாள் தின்ன, வாய்ப்புண் ஆறும்.

---

1. "கெந்ததாளி" என்னும் நோயும் முன் செய்யுளில் குறிக்கப்பட வில்லை.

2. இ = இராண்டு, இ என்பது அரை என்பதைக் குறிக்க உபயோகிப்பது பழைய வழக்கம்.

3. மி = வராகனெடை.

சிறு கிளா வேர், எலுமிச்சங்காய் அளவு அரைத்து உதயத்தில் பாதியும், அந்தியில் பாதியும் பசுவின் பாலில் கரைத்துக் குடிக்க, வாய்ப்புண் தீறு(ரு)ம். இந்தப்படி மூன்று நாள் குடிக்கவும்.

நாக்குச் சிலந்தி-நாக்குப் புண்ணுக்கு

சீனக்காரம் நல்ல எண்ணெ(ணெ)யில் மற்றி(ர்த்தி)ச்சு நாக்கில் மூன்று நாள் தடவ புண்ணுறும்.

கெந்ததாளி வாய்ப் புண்ணுக்கு கிஷாயம்

(செய்யுள்)

1. பொன்னுங்க(ண்)னி சிறுகீரை போற்றுஞ்
சிற்றமுட்டி, வில்வம்,
பன்னுரதகரை, பழம்பாசி, பருகு,
மிளகு, தக்காளி,
நன்னரி, நெருஞ்சியின் வேரும், நாட்டிடன்
வளருங் குளி மீட்டான்[1]
சொன்னர், இந்தவேர்களுடன் சொல்லும்
வல்லாரை கலம் கொம்பே.

2. கொம்பே ஆவாரம்பூத்தானும்
ஔ(வே)காட்டஞ்சுக்கு சீர் மதுரம்
வம்பே வளக்கும்(?) காஞ்சிதன்னில்[2]
வார்க்கும் தண்ணீர்படி இரண்டு
முன்பே காய்ச்சிப் படிகால்
மூள விறு(ரு)த்து வாரியதில்
அம்பே லவங்கங் கள(ழ)ஞ் சரைக்கால்
அதையும் வெதுப்பிப் பொடியாக்கே

3. பொடியும்[3] ஆவின் கோரே(ரோ)சனையும்(யின்)
பொடியும் அந்த நிரை(றை) கூட்டி
கூடியே இந்தப் பிரகாரமாகக்
கூட்டி அருந்து நாள் மூன்றில்

1. குளி மீட்டான் = தண்ணீர் விட்டாங் கிழங்கு.
2. காஞ்சிதனில் = காடியில்.
3. பொடியும் = முன் கூறிய பொடியும் எனக் கருத்து.

ஓடியே போகும் கெந்ததாளி
ஓதும் வாயில் புண்ஆறும்
பாடியே சொன்னர் அகத்தியமுனி
பண்பாய் கணையும் தீர்ந்திடவே.

இதற்கு தளம்.

4. இடுமே நாவில் மஞ்சள்புண்
இதுவும் மாற்றத்தளம் கேளாய்
சுடுமே சந்தனச் சிறுயதனை
சுட்ட கரியுங் கொட்டை முத்து
தொடுமே கோவைஇலை சமனுய்
தொண(?) வரைத்து எண்ணெ(ணெ)யுடன்
பொடுமே[1] நெஞ்சு நாவி வரை
போட்ட கள(ண)த்தில்[2] புண்ணுறும்.

இதற்கு (ப் பரிகாரம்).

(வசனம்)

உள்ளே புண் இருந்தால் தளம்[3] போட்டவுடனே உலரும். புண் இல்லாவிடில் தளம் உலரு(ரா)து. இந்த தளத்தில் புண்ணும் மாறி கணையும் தீரும். கை கண்டது.

இந்தக் கணைக்கு வல்லாரை நெய், பசுவின் நெய் படி உ. பசுவின் பால் படி வ.[4] வல்லாரைச் சாறு படி வ. கூட்டிச் சட்டியில் விட்டு சாதிக்காய், கிரு(ரா)ம்பு, சாதிபத்திரி, வால் மிளகு, தாளிசபத்திரி, ஏலம், அதிமதுரம், கூகைநீர் கோரே(ரா)சனை, கோட்டம், குரு(ரா)சாணி ஓமம், கருட(ப்) பச்சை, இலவங்கப்பட்டை, நன்னரி, கடுக்காய், சிற்றரத்தை, கொத்தமல்லி, சிறுநாகப்பூ, சீரகம்: இது(வை) வகைக்கு கால் கள(ழ)ஞ்சி கூட்டி, அரைத்துக் கரைத்து காய்ச்சி, பதத்தில் சீனி பலம் இ. போட்டு கலந்து வைத்துக்கொண்டு, தினம் ஒரு கரண்டி கொண்டு வர[5] பித்த கணை வறக்கணை தீரும்.

1. பொடுமே = தூளிதமாய்.
2. போட்ட கணத்தில் = போட்ட நிமிஷத்தில்.
3. தளம் = லேபம் ; பூச்சு.
4. வ = கால் (நான்கிலொரு பங்கு) என்பதைக் குறிக்கும் எண்.
5. கொண்டு வர = உட்கொண்டு வந்தால்.

எட்டுவகை கணைக்கும் கோரோசனை எண்ணை(நெய்)

(செய்யுள்)

1. தென்னங் குரும்பு பழம்பாசி சீராந்தகரை கத்தா(ற்ரு)ழை
துன்னு மிளகு தக்காளி துளசி கொடுப்பை[1] சுருள்ளி
இ(எ)ன்னு மிவைச்சாறு ஒன்றுஉழக்கு அதனில் ஏலம்
[மதுரம் இலவங்கம்
[2]மின்னே குரும்பு[3]சீரகமும் மிக்கவரு(று)த்துக்
[கோரே(ரோ)சனை கள(ழ)ஞ்சி.

2 கள(ழ)ஞ்சே கோட்டஞ் சந்தனமும்
கருதி அரைத்து விளக்கெண்ணை(ணெய்)
வளம் சேருரி(றி)யிற்ருள் கட்டி
மதித்தித காய்ச்சி வடித்திதனை
இளைஞோர் தனக்கும் முதியோர்க்கு
மெழுந்த கணநோய் எட்டி நிற்கும்
வளஞ்சே கொடுக்கத் தீருமென்று
வருந்தி உரைத்தார் முன்னோரே.

சரீரம் வற்றி உலர்ந்து போகிற(கும்) பிள்ளைகளுக்கு திரவ்விய நெய்[4]

3. ஆலவிழுது இளந்துளிரும்
அரிய தென்னம்பூ மதுரம்
கோல[5] மிளகு சீரகம்.....(கூ)ட்டி(?)
அரைப்பா யில்(ல)தனில்

---

1. கொடுப்பை = பொன்னங்கண்ணி.

2. மின்னே = (விளிவேற்றுமை). மின்கொடி போன்ற பார்வதியே.

3. கிராம்பு என்றிருத்தல் வேண்டும்.

4. திரவ்விய நெய் என்னும் பெயர் வைத்ததேன் என்று தெரிய வில்லை. அதிமதுரம், ஏலம், கோஷ்டம், செண்பகம், லவங்கம் இவ்வைந் துக்கும் சேர்ந்து பஞ்சத்திரவ்யம் எனச் சில தமிழ் வைத்திய நூலில் பெயர் வழங்கப்படுகிறது. ஆனல் அந்தத் திரவ்யங்களையும் இங்கு காணக்கூட வில்லை. (ஆலவிழுது நெய் யென்று கூறுவது பொருந்தும்.)

5. கோலம் = தக்கோலம்.

சிலமுடனே நெய்யில் வெந்து
திர(ற)மாய் வடித்து தினம் கொடுக்கில்
பாலனுடம்பு மிகவே தான்
பருக்கும் சொன்னேம் பயந்தோடியே.

பிரளிக்குத் தேங்காய் எண்ணை(ணெய்).

(வசனம்)

நெத்து(ற்று)த் தேங்காய் ஐந்தாறு உடைத்துத் துருவி, வெண்ணீர் (வெந்நீர்) விட்டு(ப்) பிசைந்து பிழிந்து வடிக்கட்டி இறுத்து, இதில் முருக்கிலைச்சாறு, தும்ப இலைச் சாறு, சின்னி இலைச்சாறு, பொடிதழை(டுதலை)ச்சாறு, வேலிப் பருத்திச்சாறு, இலவங்கக்காய்ச்சாறு, இது(வை) வகைக்குப் படி க. கூட்டி விட்டு, இதில் ஊசிக் காந்தம், இந்துப்பூ(பு) வெள்ளுள்ளி, பெருங்காயம், சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, கடுகுரோ(ரோ)கணி, இது(வை) வகைக்கு வரு(ரா)கனிடை க. கூட்டி பொடி செய்து போட்டு, காய்ச்சி பதத்தில் எண்ணை(ணெ)யை வடித் துக் கொண்டு, இரண்டு காசிடை நக்கவும். புளித் தவிரவும்.[1] அகத்தி இலைச்சாறு கூட்டவும்.[2] பிற(ர)ளி நோய் தீரும். கை கண்டது.

எளு நாயறு படு நாயறு[3].

எட்டிப் பழம், நெய்க் கோட்டான் பழம், குமிழம் பழம், தேற்றும் பழம் இந்த(ப்) பழங்களில்(ளைத்) தனித் தனியே வெவ்வேறு சீலையில் ஊட்டி வைத்து உலர்த்தி, எளு நாயறு வந்து தொண்டையில் கட்டின உடனே சற்றுச் சீலை கிழித்து இள வெண்ணீ(ந்நீ)ரில் போட்டுப் பிசைந்து, இரண்டு சங்கு கொடுக்கத் தீரும்.

---

1. புளியை பத்தியத்தில் விலக்கவும். (இவ்விஷயம் ஔஷத முறை யின் இறுதியில் இருக்கவேண்டும்.)

2. அகத்தியிலைச்சாறு எண்ணெயில் எப்பொழுது கூட்ட வேணு மென்பது அறியக்கூடாதவாறு இவ்வாக்கியம் இங்கு குறிக்கப்பட்டுள்ளது.

3. நாயறு என்பது ஒரு தொண்டை நோய் எனத் தெரிகிறது. முக்கிய தமிழ் வைத்திய நூல்களில் இதைக் காணவில்லை.

இதற்கு(க்) கஷாயம்.

வெற்(ட்)பாலரிசி, கொத்தமல்லி, முத்தக்காசு, நன்னாரி வேர், கோட்டம், அதிவிடயம், வீளாவரிசி, வில்வவேர், முந்திரிகை(ப்) பழம், பேரீச்சம் பழம், அமு(ழி)ஞ்சில் வேர், துளசிவேர், நவ்(ா)வல்பட்டை, கண்டங்கத்திரி இவை வகைக்கு வி[1]. எடை தட்டிப்போட்டு, ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காய் காய்ச்சி இரு(று)த்து, இரண்டு உழக்கு[2] குடிக்கவும். எளுநாயறு[3] தீரும்.

எளுநாயறு தொண்டையில் கட்டிய உடனே, குப்பமேனி இலை கசக்கிப் பிழிந்து, இதில் இரண்டு காசிடை அளவு இலுப்பைப் பு(பி)ண்ணுக்கும், ஒரு நெய்க்கோட்டான் பழமும் அரைத்துக் குழப்பி(க்) கொடுக்க, அரைநாழிகையில் எளுநாயறு தீரும். குணமாம் கண்டது.

மா(வா)லை செங்கிரந்தி
பிள்ளை மிடறுகட்டு[4]கிறதற்கும்

(செய்யுள்)

1. பிள்ளை பிறந்தவுடன் அழுது பின்னே மிடறுதனைக் கட்டி
மெள்ளப் பூனைக் குரல்போன்று மிக்க மலமும்
[வய(யி)று ஊதித்
துள்ளிக்காலும் அசைவற்று சும்மா கிடக்குமேயாகில்
கள்ளமான செங்கிரந்தி காணுமெனவே கண்டு
[கொள்ளே.

---

1. வி = இது வராகனெடையைக் குறிக்கும் எழுத்து.

2. உழக்கு என்பது இக்காலத்துப் பட்டணம் படியில் கால் படி. (உழக்காய் இறுத்து இரண்டு உழக்குக் குடிப்பது முடியாது. மேலும் இளம் பிள்ளை நோயில், அக்குழந்தைக்கு இரண்டு உழக்குக் கஷாயம் புகட்டுவதும் முடியாது. ஆகவே இங்கு அளவு பிழைபடக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.)

3. எளுநாயறு = இது இவ்வித நோயென்று விளக்கப்படவில்லை.

4. மிடறுகட்டு = நெஞ்சுக்கட்டு.

இதற்கு (மருந்து).

2. கோரோசனையும் சந்தனமும் கூட்டி
மூலைப்பா லருந்திய பின்
சேரகுண மேனி[1] இலைச்சாறு சேர்ந்த
முருங்கை இலைச்சாறும்
வாரே கற்பூரவள்ளிச்சாறும் வகையாய்
தனித்தனி சாறுஅருதி
நேரே நீரில் செம்முள்ளிகொந்தை(?)
போட்டு நீரோட்டே.

வாலை கருங்கிரந்தியின் குணம்.

3. முள(ழ)ங்க அமுது முலை உண்ணு மூரி[2]
நிமிர்ந்திட்டு உடல் வெதுப்பும்
கொளு(ழு)ங் கண[3]யர்ந்து தளர்ச்சி
உ(யு)ண்டாய் குணம்போல
விழித்து முலைஉண்ணும் அழுகு(து)ம்
வய(யி)று மிகவூதி அதிக மலமும் மிகக்(?)
கழியும் சேருங்கண்ணுடைய(?) மதிமுகத்தாய்
சிரக்கும்[4] காியகிரந்தி இதே.

இதற்கு எண்ணை(ணெய்).

4. ஆவின்நெய்யும் வீளக்கெண்ணை(ணெய்) ஆகும்
நல்ல எண்ணை(ணெய்) சமன்
மேவுஞ் சங்கிலைச்சாறு விட்டு மிக்க
பதமாய்த் தானெரித்து
தாவுங் காசிடைதான் புகட்டித்தாலே
உடம்பில் மிகத்தடவி
காவின்(?)கிரந்தி நாயகமும் கடிய
செம்முள்ளி நீராட்டே.

---

1. மேனி = குப்பைமேனி.
2. மூரி = புறங்கழுத்து.
3. கொழுங்கண் = கடைக்கண்.
4. சிரக்கும் = கேடு விளைவிக்கும்.

வாலைக்காப்பன் (கரப்பான்)[1] குணம்.

5. கால்கரம் இடுப்பு சந்து கண்டமும் வெடிக்கும் புண்ணும்
மேல் ஏவிசம்(?)போலக் கட்டி விரிந்து பன்னீரே
[பாயும்
கோலமே வெதும்பி நாலும் குழவியுமோடுங் குமரவே
மாலேனுங்குழலாய் கேளாய் வாலையாங்
[கரப்ப(ர)னமே.

இதற்கு எண்ணை(ணெய்).

6. நன்று நிம்பப்பட்டையுடன் நாடும்
வெம்பாடல் செம்முள்ளி
குன்றுக்கோடக சா(சபா)லையுடன் குருஞ்
சாமூ.....சீலை மின்னியதாம்
இன்றே சிற்றாமணக்கெண்ணை(ணெய்)
யெரித்தே தடவப்புண் ஆறும்
என்றே சொன்னர் அகத்தியரும் இயல்பாய்க்
கேட்பார் பெரியோரே.

பிள்ளைக் காட்டு வாதம்.

7. கண்ணைக் காக்கைப்(?) புருவத்தை காலை
கையை நெறித்து விழி
விண்ணைப் பார்க்கும் மூ(ர்)ச்சை யுரு(று)ம்
விட்டுவிட்டே வலிப்பெடுக்கும்
உண்ணுமுலையும் முகவாது உறங்காது
உடலும் மார்சளிக்கும்
நண்ணுங்காட்டு வாதமிது கா(நா)டிக்
காண்பார் பெரியோரே.

இதற்கு எண்ணை(ணெய்).

8. மூக்காச்சாரணை முடக்கொடுத்தான் (கற்றன்)
மூத்திருக்கஞ் செவி(டி) ருள்ளி
ஆக்கமோர் இதழ்த்தாமரையும் ஆமணக்
கெண்ணை(ணெய்) தனிலெரித்து

1. வாலைக்கரப்பான் = பாலக்காப்பான்.

சீக்கா[1] யெண்ணை(ணெய்)தான் கொடுத்து
சேறுமுடம்பில்தான் தடவில்(ன்)
தாக்கும் வலிப்புந் தீர்த்திடுமே தாயார்
பத்தியமாய் கொள்ளே.

(வசனம்)

நாகப்பூச்[2]சிலின்(?) ஒரு பிடி சுண்டை கருணையும் உழக்குக் காணமு[3]ம் முல(ம)டுப்பில் வேகவைத்து உதயத்திற்கு முன்னே காணங்கின்று தண்ணீர் படியில் அதில் ஒரு கரண்டி ஆமணக் கெண்ணை(ணெய்) வெதுப்பி விட்டு குடிக்கவும்[4].

இந்தப்படி மூன்றுநாள் குடிக்க, வய(யி)ற்றிலுள்ள புழுக் களெல்லாம் கூட்டுடனே.....ப்போம்.

மலிவேப்பம்பட்டையை மோர்விட்டு அரைத்து எழுகிள .....(?) அளவு உருட்டி விழுங்க, வய(யி)ற்றுப் புழுக்கள் எல்லாம் பந்து பந்தாய் கூட்டோடே விழுந்துபோம். மோருஞ் சோறும் கொடுக்கவும்.

குழந்தைகள் குடல் ஏற்றதற்கு (ஏற்றத்திற்கு).

(செய்யுள்)

1. நத்த(தை)ச் சூரிவு(உ)தும்பை[5] நல்ல
கீள(ழ்க்கா)வாய் நெல்லி இவை
ஒத்ததே தான்றின்வோர் ஓங்கிஉயர்ந்த
வரைகை யகாதிநொறிற்றுற்றி(?)
கற்ற குடலோர(லேற்ற)ந் துலையு
மெண்ணை(ணெய்) தாமிலை(?)
இத்தஞ் சீறுகால் கொடுக்க வகைசெய்வீர்
நல்லவகை இதுவே.

1. சீக்காய் = சீக்காச்சா ; நாய்ப்புடோல் என்னும் மூலிகை.
2. நாகப்பூஇலை என்றிருக்கலாம்,
3. காணம் = கொள்.
4. இச்செய்யுளில் ஓரடி குறைவாயுள்ளது. இச்செய்யுளின் விஷயத் தொடர்பு வசனத்தில் முடிகிறது ; என் இவ்விதமெனத் தெரியவில்லை.
5. உதும்பை = அத்தி.

கணத்திற்கு எண்ணை(ணெய்).

(வசனம்)

விளக்கெண்ணை(ணெய்) படி இ; குண்டங்கொழுந்து[1], கரு வேலங்கொழுந்து, கிரந்திநாயகம், தகரைஇலை, கையாந்தகரை, பழம்பாசி இது(வை) வகைக்கு ஒரு பிடி கொழுந்து கூட்டி இடித்துப் போட்டு, உள்ளி, வசம்பு, கடுக்காய் இது(வை) வகைக்கு வராகனெடை இரண்டு, பொடித்துப் போட்டு, ஒருநாள் சூரியபுடம் வைத்து, மறு நாள் கால்படி ஈரவெங்காயம் நறுக்கிப் போட்டு கிண்டி(க்) காய்ச்சி, ஈரவெங்காயம் நீர் வற்றி, பொன் நிறமாஞல் இறக்கி வடித்து, ஒரு கரண்டி எண்ணை(ணெய்) புகட்டவும். மூன்று நாள் புகட்டவும். நன்றாய் வய(யி)று கழிந்தே.....கஞ்சி கொடுக்கவும். கணசுரும்(ர)பு தீரும்.

நசி மிதைக்கு[2] நெய்.

.....கிழங்கு.....கோவைக்கிழங்கு, சிறுகுறட்டைக்கிழங்கு, சித்த(ற்ற)வரைக் கிழங்கு, தூதுவளை வேர், சங்கிலை, கிளாச்சி இலை, வற்பூலாவிலை(?), நரிப்பயற்றிலை, சாதிக்காய், சாதிபத்திரி, திப்பிலி மூலம், கடுக்காய் இது(வை) வகைக்கு வராகனெடை இரண்டு, பச்சிலைச்சாறு படி வகைக்கு ந கூடவிட்டு, பசுவின் நெய் படி க-விட்டுக் கிண்டி எரித்துவைத்துக் கொண்டு, மூன்று நாள் கொடுக்க சுழிகணை தீரும்.

மேல்மூச்சு சுழிகணைக்கு எண்ணை(ணெய்).

வேப்பெண்ணை(ணெய்) படி வ-திப்பிலி, கடுகுரோகணி, துருசு, (மி)முளகு, தலை(ச்)சுருளிவேர், கோழிக்காரம், சீந்தித(ல்)தண்டு வகைக்கு விராகன் க-கூட்டி எரித்து ஒரு கரண்டி கொடுக்கவும் : நோய் தீரும்.

---

1. குண்டங்கொழுந்து = பெருமருந்துத்தளிர் ; ஈச்வரமூலி.

2. நசி மிகுதை என்கிற நோய் விளக்கப்படவில்லை. ஆனல் கீழே விவரித்துள்ள நெய்முறை சுழிகணை என்பதற்கென்று குறிக்கப் பட்டிருக்கிறது.

சிந்திச்(ற்)சாறு உழக்கு, கடுக்காய் ந-உள்ளிப்பூ(ண்)டு உ-கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், தூதுவளை, சீதர(சிற்ரு)முட்டி, முருங்கைப்பட்டை, சுக்கு, ஆடாதொடைவேர், இண்டம்வேர்[1], சமன் கூட்டி, கிஞ்சாயம் போட்டு வைத்து, எட்டொன்ருய் இறுத்து, திப்பிலி வெதுப்பு மெக்க(?)பொடி போட்டு, தேனும் கூட்டிக் கொடுக்கவும். மூச்சுக்கணை தீரும்.

சகல தோஷத்திற்கும்

பசுவின் நெய்யில் நாங்குளுப்புழு[2]போட்டுக் காய்ச்சி, புழுவெடித்த உடனே இறு(று)த்து, ஒரு சங்கு புகட்டவும். சகல தோஷஞ்சாத்தி(?) சைத்தியமும், கழிச்சலும் தீரும்.

பிள்ளை புதைத்த குழியில் இருக்கிற வேர் பிடுங்கி, குளிச மாடி கட்டத் தீரும். கைகண்டது.

பிள்ளைகள்(ளின்) சகல கழிச்சலுக்கு

சுக்குயீற்கு(?), மாவீற்கு, அகத்தியீற்கு, உதி தியனீற்கு, வெதுப்படைக்கித்தண்டு[3], வேலிப்பருத்தி, ஒட்டாங்கிச்சி, இது(வை) சமன் கருக்கி, ஒரு படி நீர் விட்டு இரவில் வற்றக் காய்ச்சி, இரு(று)த்து, இதில் ஒரு சங்கு புகட்டவும். வசம்பு தணல் பார்க்க (பரக்க)[4] சுட்டு, மேல் பொடிபோட்டு[5] மூன்று நேரங்கொடுக்கவும்.

நவ்வல்[6]கொழுந்து, உதியங்கொழுந்து, பேயப்பச்சோந்தி பொடிதழையும்[7], ஓமம், இது(வை) சமன் கருக்கி, ஒரு படி

---

1. இண்டம்வேர் = ஈகைச்செடிவேர் ; அல்லது முல்லைவேர்.

2. நாங்குளுப்புழு = நாக்குப்பூச்சி.

3 வெதுப்படக்கித்தண்டு = பனங்கிழங்கு.

4. தணல் பரக்க = தழல்போல் ஆகுமளவும்.

5. மேல் பொடிபோட்டு = தழலைப்போல் சுட்டெடுத்த வசம்பைப் பொடிசெய்து முற்கூறிய கஷாயத்தில் தூவி, மூன்றுமுறை உட்கொள்ளக் கொடுக்க வேண்டுமெனக் கருத்து.

6. நவ்வல் = நாவல்.

7. பசுமையான ஓணங்கொடித்தழையும் எனப் பொருள்.

நீர்விட்டு உழக்காய்(க்) காய்ச்சி, மூன்று நேரம் ஒவ்வொரு சங்கு புகட்டவும். இதற்கு(தனுல்) முதல்(?) கழிச்சலும் தீரும்.

பலவிதமாகக் கழிகிறதற்கு (பரிகாரம்)

வேலிப்பருத்திஇலை, அவரைஇலை, ஈரவெங்காயம் சமன் கூட்டி., எருமை வெண்ணை(ணெ)யில் எரித்து, முலைப்பால் சற்றே[1] ஊற்றி, ஒரு சங்கு புகட்டவும். தீரும்[2].

ஊது மாந்தந்திற்கு[3] (பரிகாரம்)

பேய்ப்பீற்(ர்க்)கு, பொடிதழை[4], புளியீற்கு, ஓவ்வாயீற்கு(?), மாவீற்கு, வேலிப்பருத்தி, மிளகு, வசம்பு, ஓமம் சமன் கருக்கி, ஒரு சுக்கு தட்டிப்போட்டு, ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காய்(க்) காய்ச்சி, நேரத்திற்கு ஒரு சங்கு புகட்டவும்.

மிளகு, வசம்பு, ஓமம், இது(வை) சமன் கருக்கி, ஒரு படி தண்ணீர் விட்டு, இதில் ஒரு உள்ளிப்பூ(ண்)டும், அவுரிவேர், வேலிப்பருத்தி, ஒரு சுக்கு(ம்) தட்டிப்போட்டு, உழக்காய்(க்) காய்ச்சி, மூன்று நேரம் ஒவ்வொரு சங்கு புகட்டவும். ஊது மாந்தம் தீரும்.

எட்டுவகை மாந்தத்திற்கும் (பரிகாரம்)

வேலிப்பருத்திவேர், பருத்திப்பிஞ்சி(சு), ஓமம், கடுகு, சாதிக்காய், வசுவாசி[5], சமன் கூட்டி, காயவைத்துக் கருசு(?) பண்ணிக் கொடுக்கத் தீரும்.

---

1. சற்றே என்றுல் சிறிது எனக் கருத்து போலும்.
2. பலவித கழிச்சலும் தீருமென்றபடி.
3. ஊதுமாந்தம் ஊதுகணை என்றும் வழங்கப்படும், ஆனல் இங்கு இந்நோய்க்குக் குணங்கள் கூறப்படக் காணேம்.
4. பொடுதலை,
5. வசுவாசி = சாதிபத்திரி.

மாந்த வலிப்பிற்கு

வேலிப்பருத்திஇலை, முடக்கொத்தானிலை, வெதுப்படக்கி[1], சாணுகு(க்கி)ப்பூண்(டு)[2], இது சமன் எடுத்துப் பிழிந்து, உள்ளி, வசம்பு, காயம் கூட்டி அரைத்துக் குழப்பி(க்) கொதிப்பித்து, இடது காதிலும் கையிலும் தடவி, உள்ளுக்கும் கொடுக்கவும்.

இதற்கு(னுல்) மாந்தவலிப்பு(ம்), வெள்ளுடைப்பதும்[3], சோர்ந்துடைப்பதும்[4] தீரும்.

மாந்தக் குளிகை

வசம்பு, தேவதாரம், விளாவரிசி, வேலிப்பருத்திவேர், சக்கு, ஓமம், கிரு(ரா)ம்பு, திப்பிலி, நருக்குமூலம்[5], முத்தக்காசு, (அ)ரேணுகம், கடுக்காய்த்தோல், பூணு(நா)கம், ஆமைஓடு (இவற்றைச்) சுட்டு, அது சமன் கூட்டி, ஆடாதோடை, வில்லை(வ)வேர், சமன் காயம் வைத்து, இரு(று)த்து, மருந்து அரைத்து வரு(று)த்து குண்டுமணி அளவு உண்டைசெய்து, நிழல் உலர்த்தி, ஆடாதொடை கிஷாயத்தில் ஒரு உண்டையிட, சகல தோஷமும், நெஞ்சுகட்டும், சகல கழிச்சலும் தீரும்.

[6]தேவி சகாயம்.]

[குருசாமி துணை.]

அக்கா ஏழு வகைக்குப் பெற (பெயர்)

அக்கா சூ(ஆ)ரி, அக்கா காந்தி, அக்கா சோதி, அக்கா விம்மி, அக்கா குண்டுடி., அக்கா பாலி, அக்கா குயிலி. இப்படி

---

1. வேதுப்படக்கி—பனங்கிழங்கு.
2. சாணுக்கிப்பூண்டு = மயிர்மாணிக்கம்; சிதேவிப்பூண்டென்றும் கூறுவர்.
3. வெள்ளுடைப்பது = வெள்ளோக்காளம்; கக்குதல்.
4. சோர்ந்துடைப்பது = மயங்கி வீழ்தல்.
5. நருக்குமூலம் = தேசாவாரம் என்கிற சரக்கு.
6. "தேவி சகாயம்" "குருசாமி துணை" என்பது நூலுக்குச் சம்பந்தப்பட்டதன்று; எனினும் ஒருவித விஷயம் இங்கு முடிவு பெற்று, மற்றொருவித விஷயம் துவக்கமாகிறதென்பதைக் குறிப்பதற்கே இச் சொற்கள் இங்கே போடப்பட்டுள்ளன என்று தோன்றுகிறது.

ஏழு பெயர்கள் உண்டு. இவர்களுக்குப்[1] பிறப்பு அக்கி..... லென்பது. இவர்கள் குணம் அறியும்படி[2].

1. அக்கா (ஆ)சூரியின் குணம்

இடுப்பு கடுக்கும், தலை நோகும். உதிரம் தோன்றும்[3]. வாய் வெள்ளாவி நாறும். நாக்கு வெளுத்து இருக்கும். தொண்டை தித்திக்கும். வாந்தியாம். வெள்ளோக்காளம் எடுக்கும். உடும்பு கருக்கும்.

இதற்கு மருந்து

கோரைக்கொழுந்தும்[4], பசுவின் நெய்யும் கூட்டி அரைத்துக் கொடுக்கத் தீரும்.

2. அக்கா காந்தியின் குணம்

தலை கனக்கும். உடம்பு குளிரும். சுரம் தோன்றும். வாய் கசக்கும். நாக்கில் வெள்ளையும் சிவப்புமாகத் தூவினைப் போல் இருக்கும். நெஞ்சு எரியும். நாவு வறண்டு தாக்கிடும்[5].

இதற்கு மருந்து

கோவைஇலைச்சாறும், சந்தண(ன)மும், நீர்ப்பு(பூ)லாங் கொழுந்தும், ஒரே தளர்த்தாமரையும்[6], செண்பகப்பூவும், சீரக(மு)ம், ஏல(மு)ம், இது(வை) வகைக்கு ஷை (வராக

1. 'இவர்களுக்கு' என்கிற குறிப்பிலிருந்து, இவ்வேழு பிணிகளுக்கும் தைவாம்சத்தைக் கற்பிப்பதாய் அறிய வேண்டும். அம்மைகள் என்பவை போல் "அக்கா" என்கிற சில க்ஷுத்ர தேவதைகளும் உண்டென்று கருதினர் போலும்.

2. இங்கே வாக்கியம் முற்று பெறவில்லையெனத் தெரிகிறது.

3. உதிரம் எங்கிருந்து தோன்றும் என்பது ஊகிக்க வேண்டிய விஷயம்.

4. கோரைக்கிழங்கு என்று இருத்தல் மேல்.

5. தாக்கிடும் = பேசத்தடுமாறும்.

6. ஒரே தளர்த்தாமரை = ஓரிலைத்தாமரை.

னெடை) இ-கூட்டி, எலுமிச்சம்பழத்தில்[1] அரைத்து, பசுவின் வெண்ணை(ணை)யில் குழப்பி, விழுங்க (நோய்) தீருமாம்.

3. அக்கா சோதியின் குணம்

இடுப்பும், தலையும், கண்ணும், காலும் நொந்து, சுரம் தோன்றும். நாக்குப் புல்லமுக்காக[2] இருக்கும். நடுவே[3] விரல் நீளத்திற்கு வெந்து தாகம் எடுக்கும். வய(யி)று எரியும்.

இதற்கு மருந்து

அதிமதுரம், இலவங்கப்பட்டை, ஏலம், வில்லிவேர்[4], சிறுக்கீரைவேர், செண்பகப்பூ, கோஷ்டம் இவை சமன்கூட்டி, காடிவார்த்து அரைத்து நெய்யில் குழப்பி விழுங்கவும். (அக்கா சோதி) தீரும்.

4. அக்கா விம்மியின் குணம்

தலை நொந்து, உடல் குளு(ளிர்)ந்து, கூசி தாகம் தோன்றும். நீர் குடிக்கலும் தாளங்குகுத்தும்(?), தின்றுப்போல இருக்கும். உதடு கரு(று)த்திருக்கும். தொண்டை ஈரல்[5], நெஞ்சு (இவை) கரு(று)த்து நோகும்.

இதற்கு மருந்து

பொன்னுங்கணிவேர், சிறுகீரைவேர், தக்காளிச்சாறு, கோவைஇலைச்சாறு, நற்சந்தண(ன)ம், அதிமதுரம், கூகைநீர்,

1. எலுமிச்சம்பழச்சாற்றுல் என்பது கருத்து போலும்.

2. புல்லழுக்கு = சொற்பம் அழுக்குப் படிந்து.

3. நடுவே = நாக்கின் மத்தியில்.

4. வில்லிவேர் = கூவிளைவேர் ; வில்வவேர்.

5. ஈரல் என்று எந்த அவயவம் இங்கு குறிக்கப்படுகிறதென்று நாம் குறிப்பாய் அறியவியலவில்லை. (கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் என்பவற்றில் எது என்று பகுத்தறிய வேண்டியிருக்கிறது. இதன் பிறகுகூட சில விடங்களில் இச்சொல் வழங்கப்படுகிறது. அவ்விடங்களிலும் இச் சந்தேகமே).

ஏலம், நற்சீரகம், கோரை(ரா)சீனை, இவைகள் கூட்டி முலைப் பால் விட்டு அரைத்துப் பனைவெல்லங்கூட்டி குழப்பி விழுங்கத் தீரும்.

5. அக்கா குண்(டு)டியின் குணம்

உடம்பு கடுக்கும். நாக்குச் சிவந்து இருக்கும். தாகிக்கும். வய(யி)றும் நெஞ்சும் எரியும். ஈரல் வலிக்கும்.

இதற்கு மருந்து

பி(பு)ளிஇலைச்சாறு(ம்), பனைவெல்ல(மு)ம், நெய்யும் கூட்டி(க்) குழப்பிக் கொடுக்கத் தீரும்.

6. அக்கா பாலியின் குணம்

உடம்பு கனக்கும். நெஞ்சு ஒடிஞ்சாப்போல் இருக்கும். கண்ணில் அமாஞ்சுரமாகத் தோன்றும்(?). தலை விண்ணேற்றி[1] இருக்கும். சுரம் அதிகமாகத் தோன்றும். நாக்கு வெளுக்கும். நடுவே கட்டியாக ஈரல் சுருண்டு இருக்கும்[2].

இதற்கு மருந்து

புளிஇலைச்சாறும், முந்திரிப்பழமும், ஏலமும் கூட்டி அரைத்து, எலுமிச்சம்புழச்சாறுவது காடியாவது கூட்டி மதிச்சுக்[3] கொடுக்கத் தீரும். இதில் வயிற்றில் (வயிறு) கழிச்சலானால் பருத்திக்காயும், அத்திப்பிஞ்சும், அகில்கட்டையும் துவைத்து, காடி வார்த்துப் பிசைந்து பிழிந்து வடித்துக் கொண்டு, நற்சீரக(மு)ம், நெல்லிமுள்ளி(யும்), ஏலமும் கூட்டி வெதுப்பிப் பொடிசெய்து, போட்டுக் கொடுக்கத் தீரும்.

---

1. தலை விண்ணேறுதல் = தலையிடித்தல்; கடுமையான தலைவலி எனப் பொருள்.

2. நாக்கின் மத்திய பாகம் தடித்துக் கெட்டியாகவும், ஈரல் சுருண்டும் இருக்கும் என்று கருத்து. இங்கேயும் ஈரல் என்பது இன்னதென்று அறியக்கூடாததாயிருக்கிறது; வாயில் ஈரல் இருப்பதென்பது பொருந்தாது.

3. மதிச்சு = மசித்து; மர்தனம் செய்து.

7. அக்கா குயிலின் குணம்

சரீரம் பிணம்போல நொந்து, தடி கொண்டு அடித்தாப் போல் இருக்கும். கண(ன்ன)ங்கள் நொந்து, சுரம் அதிகமாகத் தோன்றும். வாய் கசந்து வாந்தி எடுக்கும். நாக்கும் பல்லிகறுங்கிறும்,[1] கண்ணும், பச்சாகிளாச்சிபோல (?) இருக்கும். மூக்கால் ரத்தம் விழும். இது கபாலம் வெடித்து ஒரு நாளொன்றுக்கு அறுபது நாழிகைக்குள்ளாகத் தம் விழுந்து (?) குளி என்று சொல்லப்படும். இப்படி மூன்று நாள் விழுந்தால் ஐந்தாம் நாள் (அல்லது) ஆறும் நாள் கொல்லும்.

அக்கா ஏழு வகைப் பெயர் குணம் முற்றும்.

அக்கரத்திற்கு நெய்[2]

அதிமதுரம், சீரகம், ஏலம், சாத்திரபேதி,[3] கல்நாறு(ர்) செஞ்சந்தண(ன)ம், பூதக்காயன்(?) கிரு(ர)ம்பு, திப்பிலி, வெள்ளைச்சாரணை வேர் விலா(ள).....சதை, இவை சமன் கொண்டு அரைத்துப் பசுவின் நெய்யில் குழப்பிக்கொண்டு, ஒரு கரண்டி நெய் கொடுக்க அக்கரம் தீரும்.

கணைக்கு கிஷாயம்

செஞ்சந்தண(னமு)ம், பூலாவீற்கும்,[4] சமன் கூட்டிப் பசுவின் வெண்ணை(ணெ)யில் மத்திச்சுக் கொடுக்க ஈரல் வலி, நெஞ்செரிப்பு, சோத்தியம்,[5] இவை எல்லாம் தீரும்.

---

1. பல்லீறுகளும் என்றிருத்தல் சரியாகும்.

2. அக்கரம் என்னும் நோய் தமிழ் வைத்திய நூல்களில் வெகு தாராளமாய் வழங்கப்படுவது. அக்கா என்று முற்கூறிய எழுவகை நோய்களும் 'அக்கரம்' என்பதற்குப்பதிலாய் தவறுதலாய் எழுதப்பட்டிருக்கலாமென்றும் இத்தொடர்பிலிருந்து ஊகிக்கவேண்டியிருக்கிறது. இந்நூலில் அநேக இடங்களில் விஷயங்கள் இவ்விதமே குழப்பமாகத்தான் காணப்படுகின்றன.

3. சதத்திரபதி = தண்ணீர் விட்டான்.

4. பூலாவீற்கு = புல்லாந்தி ஈர்க்கு.

5. சோத்தியம் = எதிர்பாராத ஏவல் முதலியதாலான தீங்கு.

பிணிக்கு[1] மந்திரிக்கு(ம்) மந்திரம்

ஓராங்கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
தலைய(த்)து வீள் வதனையும்
இரண்டாம் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
மூன்றும் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
நான்காம் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
ஐந்தாம் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
ஆறும் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
ஏழாம் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
எட்டாங் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
ஒன்பதாம் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்
பத்தாங் கடல் மேய்ந்து வார்பிள்ளைச் சிறகத்து
வீள் தலையத்து வீள் வதனையும்.

(வசனம்)

பத்தாம் கடலும் வற்றி, பால் கடலும் வற்றி, தீய்க் கடலும் வற்றித், திருப்பாற்கடலும் வற்றி, பால மாந்தம், பசு மாந்தம், ஓடு மாந்தம், ஊது மாந்தம், நடை மாந்தம், கொக் குப் பாவை, குருவிப் பாவை, நாட்டுப் பாவை, நகரிப் பாவை எல்லாம்; ஓம் காளி, பரமேச்வரி, நின் ஆணை நில்லாதேப் போகச் சிவா.

---

1. பிணிக்கு = பேய், ஏவல், சூன்யம் முதலியவற்றால் தோன்றும் உடற் கோளாறுகள் உள்ளக் கோளாறுகளுக்கு.

ந கா	ம யா	தி யகா	வ ய	ய ஏ
ம யா	தி யகா	வ ய	ய ஏ	ந கா
தி யகா	வ ய	ய ஏ	ந கா	ம யா
வ ய	ய ஏ	ந கா	ம யா	தி யகா
ய ஏ	ந கா	ம யா	தி யகா	வ ய

நகாரமென்ற அக்ஷரத்தில் ஆறே ஆகும்,
நலமான மகாரத்தில் ஈரு(ரா)ருகும்
சிகார மென்ற அக்ஷரத்தில் ஈரெட்டாகும்!
சிறந்த நின்ற வகாரத்தில் பத்தெட்டாகும்
சிகார மென்ற சொல்லுக்குள் ஏழேயாகும்.
ஆதியானந்த குரு அருள் செய்தாரே.
ஓம், ரீம், வம், சிம். சிவாய நமஃ.

ந ய	ம யஅ	தி சா	வ யாஉ	ய சா
தி து	வ யாஉ	ய சா	ந ய	ம யஅ
ய சா	ந ய	ம யஅ	தி து	வ யாஉ
ம யஅ	தி து	வ யாஉ	ய சா	ந ய
வ யாஉ	ய சா	ந ய	ம யஅ	தி து

ந யக	ம ய	தி அ	வ யகா	ய ஈ
வ யகா	ய ஈ	ந யக	ம ய	தி அ
ம ய	தி அ	வ யகா	ய ஈ	ந யக
ய ஈ	ந யக	ம ய	தி அ	வ யகா
தி அ	வ யகா	ய ஈ	ந யக	ம ய

பே(ய்) நாய்க் கடிக்கு

(வசனம்)

கோளிச்சாறு[1] கொடுக்கவும்.

எலிக் கடிக்கு

மோரில் அரைத்துக் கொடுக்கவும்.[2]

இதற்குப் பத்தியம்[3].

மருத்(ந்) தீட்டுக்கு

அந்த மருந்தின்[4] வேர்(ப்) பட்டை எடுத்து ஆட்டுப் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

இதற்கு(ப்) பத்தியம் கோழிச்சாறு.

அதற்கெல்லாம் மருந்து முக்காரது இலையின்[5] வேர்.

பார்வைக்கு மருந்து[6]

குண்டு முத்துத் தழை,[7] மு(மி)ளகாய்த் தழை, சின்ன கெப்பித்தழை (?), சடை மூங்கில் தழை. வேலிப்பருத்தித்

1. கோளி என்பது அத்தி, அரசு, ஆல், கொழிஞ்சி ஆகிய பூவாது காய்க்கும் மரங்களைக் குறிக்கும் சொல்.

2. முன் கூறிய கோளியை (இலையை) மோரில் அரைத்துக் கொடுக்க வேணுமென்பது கருத்துபோலும்.

3. இன்னது பத்தியமென்று விவரிக்காமல் விடப்பட்டிருக்கிறது.

4. எந்த நஞ்சு குணமுள்ள மருந்தீட்டால் பிணியுண்டாயிருக்கிறதோ அதே மூலிகை என்று பொருளாகிறது; இதுவும் தெளிவுபடாத விஷயமாயுள்ளது.

5. முக்காரது என்பது ஒரு மூலிகையின் பெயர் போலும்; ஒருக்கால் முக்கா வேளையா இருக்கலாம்.

6. பார்வைக்கு என்றால் பார்க்கும் சக்தி விருத்தியாவதற்கென்று பொருள் படுகிறது. இங்கு "பிள்ளைப் பிணி" என்னும் விஷயத்திலிருந்து திடீரென்று மாட்டின் கண்ணோய் விஷயத்திற்கு மாறியதற்குக் காரணம் தெரிய வில்லை.

7. குண்டு முதத்தழை என்பது குன்றித்தழையாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

தழை, குழலாதண்டை, நெல்லீற்கு, சோப்(ம்)புத் தழை, கணு மூங்கில்.

மூசல் முட்டு[1] வந்த மாட்டிற்கும் கண்ணில் வெள்ளை விழுந்த மாட்டிற்கும் மருந்து[2]

சுள்ளி முள்ளி[3]த் தழையும், ஏழு மு(மி)ளகும் அரைத்துப் பிழியவும்.

(செய்யுள்)

1. பத்துப் பெரும்புலி, ஆனை பதினெட்டு,
   வித்தகர் நால்வர், விளையகர் ஐவர்,
   அத்துடன் மூவர், அரு(று)வரை கூட்டி ஏழு
   இதை அறிந்தவர் என் குரு ஆவார்.

2. உண்ணி ஒருவன் உரைத்த முதலெழுத்தைப்
   பண்ணிப் பாவையாய் பாவித்து மின்னே கேள்
   சி(ச)கத்தினில் பார்த்து மிகுத்துரைக்க நன்றும் நாளும்
   ஒருவனை ஒருவன்வெல்ல உபாயங்கள் அறியவேண்டி
   இருவர்போனை தெ(ர)ழுத்தை உயிரெழுத் ததுவேவாங்கிப்
   பெருக்கிய பத்தில் தாக்கி(ப்) பெருங்கடல் ஏழுக்கு
   [ஈய்ந்தால்த்
   தெருவினில் உயர்ந்தோன் வேலனுவோன்
   சிறுத்தவன் தோர்வை தானே(?).
   எட்டுக்குத் துளை போடவும். தவுருகும்பை போடவும்(?).
   மாலுக்கும் மயனுக்கும் மதி பூணரனுக்கும்;
   நூலுக்கும் கயறு(ரு)க்கும் நுண்ணூளங் கண்டு

1. மூசல் முட்டு என்பது ஒருவகை மாட்டு நோய் போலும்.

2. குண்டு முத்துத்தழை முதலியவற்றை இவ்வித மருந்தாகச் செய்து உபயோகிக்க வேண்டுமென்று கூறியிருத்தல் நலம்.

3. சுள்ளி முள்ளி = மயிர்க் கொன்றை.

நாலுக்கும் மூணு(ணு)க்கும் நடுவீற்கும் நடுவே
காலுக்கும் கதவிற்கும் கம்பைக்கு மிதுவே(?)
.....நெதகோ.....மானே.....பெண்.....ணு.(?)
கார்குழல் கன்னிகோலம் கருத்தினுல் அறியவேண்டில்
போர்தனைச் சொல்லச்சொல்லி பேரெழுத்ததனை எண்ணி
ஓர் எழுத்தொறு(ரு) மூன்றுக்கி உற்றதோர் பக்கம்கூட்டி[1]
ஈர்ள(ரெ)ழுத்ததனை ஈயரெ(இர)ட்டைப் பெண்
[ஒத்தை(ற்றை) ஆணே.(?)

---

1. "ஓராங்கடல் மேய்ந்து" என்கிற பாட்டு முதல் "தெருவினில்" என்று இறுதியிலுள்ள பாட்டு ஈறாக, இடையே யுள்ள புதிர்போன்ற விஷயங்களும், மந்திரம் முதலியனவும் பிள்ளைப்பிணி விஷயத்துக்கு எங்ஙனம் பொருந்துமென்று உற்றுப் பரிசிலனை செய்யப்பட வேண்டிய விஷயங்கள்.

பிள்ளைப் பிணி வாகடம்

இரண்டாம் பாகம்

பிள்ளைப் பிணி வாகடம்

(இரண்டாம் பாகம்)

கட்டு மாந்தத்திற்கு[1]

வயறூதியே இருக்கும் இதற்கு கிஷாயம்

(வசனம்.)

நுணைமரத்து இலை, ஓமம், நற்சீரகம் இவை மூன்றும் வருத்துப் பாதி கருகிப் பாதி கருகாமல் இருக்கும்போது தண்ணீர் விட்டுக் கிஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

மாந்தத்தின்மேல் ரத்தம் சீதம் விழுந்தால்

ஆவாளைப்பூ[2] அரும்பும், சாதிக்காயும் அறை(ரை)த்துக் கொடுக்கவும். மாதளங்காயும், கிரு(ரா)ம்பும் அறை(ரை)துக் கொடுக்கவும்.

குழந்தைகளுக்கு இருமல் ஜல தோஷத்து(ங்களு)க்கு

கண்டங்கத்திரி, தூதுவளை இலை, துளசி இலை, ஆடா தொடை இலை, முருக்கிலை, இது வெ(இவை எ)ல்லாம் சமனு கப் பிடுங்கி (இடித்து)ப் பிட்டு வைத்துப் பிழிஞ்சு கொடுக்க வும். கணைசுரம், சீத சுரம், இருமல், (இவை) தீரும்.

பருசாய்(?) வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு, சிறு குழந்தைகளுக்கு முலைப்பாலிலும், பெரியவர்களுக்கு சும்மா(வும்) தின்னவும். (இது) எந்த மாந்தத்துக்குமாகும்.

---

1. கட்டு மாந்தம் என்பது குழந்தைகளின் குடற்கோளாறு என்று இங்கு பொருள் கொள்ள வேண்டும். தொண்டைக்குள் கோழைக் கட்டு இருமல் இவற்றுலான கோளாறும் கட்டு மாந்தம் என்று சிலர்.

2. ஆவாரம்பூ என்று இருப்பது தகும்.

பொ(போ)ர மாந்தம்[1]

துடுப்புப் பாலைக்(?) கொண்டு வந்து, கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். [2]கள்ள பிணிக்குக(?) கண் சொருகும். வட்ட மிடும்[3]. மயிர் நாட்டமாய்[4] நிற்கும். வாந்திப் பிரு(ரா)ந்தி[5] காறு(ணு)ம்.

(இதற்கு)துக்கு(த்) துவளை

சின்னி இலை, களிச்சி இலை,[6] பெரும் பட்டை,[7] பீனரி குட்டி, விளா, குளி மு(மி)ட்டான்[8], கஞ்சாங் கோரை, உளரு சுத்தி,(?), மஞ்சள், வெள்ளைப் பூண்டு, வேப்பிலை, இவை [9]யெல்லாம் நறுக்கி துவளை[10] (செய்து), மூன்று வேளை போடவும். தாய்க்கு மார்பில் தடவி அலம்பிப் போடவும[11].

---

1. போர் மாந்தக் குறிகள் :—"பொருமுங் கழியும் புரண்டு வலியுண்டாம் மருவி முலையுண்ணு மயங்கும்—வெருவி மிகச் சுத்தி செய்யுங் கட்குழிந் தாகமிக வெதும்பும் வற்றி யிடும் போர் மாந்தமாகும்." (பாலவாகடம்.)

(இதைப்பற்றி 72-74 செய்யுட்களையும் பின்னல் காண்க.)

2. துடுப்புப்பால்(?) என்று மருந்து ஒன்று குறித்துவிட்டு, அதன்பின் சிறிது நோய்க்குறிகளைக் கூறுவது ஒழுங்கா என்று கேள்வி யுண்டாம்.

3. வட்ட மிடும் = கண்கள் வட்ட மிடும். (கண்கள் சுழலமிடும்.)

4. நீட்டமாய் அல்லது நெட்டையாய் என்று இருத்தல் பொருந்தும்.

5. பிராந்தி = மயக்கம்.

6. களிச்சி யிலை = கழற்சி (கெச்சக்காய்) இலை.

7. பெரும் பட்டை = பெருமரப்பட்டை.

8. குளிமிட்டான் = நத்தைச் சூரிப்பூண்டு. (அல்லது தண்ணீர் முட்டான்.)

9. யிதுவை = இவற்றை என்றிருத்தல் வேண்டும்.

10. துவளை = பற்றுப்போடும் கூழ்போன்ற மருந்து.

11. தாயின் மார்பை முதலில் அலம்பிவிட்டு, பிறகு மார்பின்மேல் இத் துவளையைத் தடவவும் எனப் பொருள்.

சகல மாந்தத்துக்குக் குளிகை

ஏலம், லவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, திப்பிலி, ஓமம், மு(மி)ளகு, வெள் வெங்காயம், பெருங்காயம், அதிமதுரம், சித்த(ற்ற)ரத்தை, கல்லுப்பு, கடுக்காய், கோரை(ரோ)சனை, யிந்த வகை (இவை)[1] வகைக்கு ஷை க[2]. வெள்ளாட்டு இறைச்சியில் சரக்கும செத்தி வெண்ணீரில்(?) அரைத்து, பருத்திக் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி, நிழ(லி)லுலர்த்தி அனுபானம் அறிந்து கொடுக்கவும்.

மாந்த குளிகை

கட்டு மாந்தத்துக்கு

1. சுக்கு, மு(மி)ளகு, ஓமம், நற்சீரகம், வெள்ளுள்ளி, சிலந்திக் கொடி வேர், இது வெ(இவற்றை எ)ல்லாம் ஒரு நிறையாயெடுத்து, வெண்ணீ(ன்னீர்)ரில் விட்டரைத்து, துரதுவிளங்காய்ப் பிரமாணம் குளிகை செய்து கொண்டு வெண்ணீ(ன்னீ)ரில் கொடுக்கவும். வருஷமான குழந்தைகளுக்கு(க்) குழந்தைகள் நிதானங் கண்டு[3] கொஞ்சமாய் உரைத்துக் கொடுக்கவும்.[4]

2. கோரோசனை, வெங்காயம், கடுகு ரோ(ரா)கணி, யிது (இவை) மூன்றும் சரி நிறையாய் வைத்து, வெத்தி(ற்றி)லைச் சாருகிலும், அகத்தி யிலைச்சாருகிலும் விட்டரைத்து சிறு குளிகை செய்து, வெத்தி(ற்றி)லைச் சாற்றில், அல்லது அகத்தி யிலை(ச்) சாற்றில் கொடுக்கவும். உள் மாந்தம் கட்டு மாந்தம் இதுகள் (இவை) தீரும்[5].

---

1. இவை என்பதற்குப்பதில் யிந்த வகை என்று எழுதப்பட்டிருக்கிறது.

2. ஷை க = வராகனெடை ஒன்று.

3. நிதானங்கண்டு = உடலின் பலாபலம், வியாதியின் நிலைமைகள் முதலியவற்றை உற்று நோக்கி.

4. கட்டு மாந்தத்திற்கு இது இரண்டாவது மருந்து. (பக்கம் 55-பார்க்கவும்.)

5. கட்டு மாந்தத்திற்கு இது மூன்றாவது மருந்து.

குழந்தை மூலம் புறப்பட்டதற்கு

ஒரு வாழைக்காய் [1]முகிளறுந்(த்)து, அதற்குள்ளே ஒரு குன்றி பிரமாணம் அவ(பி)னி வைத்து, எருமை(ச்) சாணியில் பொதிந்து, தீயால் சுட்டு வெந்ததின் பிறகு, அந்த வாழைக்காயை எடுத்து அரைத்து, பி(பு)ளியங் கொட்டை மாதிரி[2] வெண்ணீ(ன்னீ)ரில் கொடுக்கவும்.

எங்கல முட்டடை யானுக்கு[3]

1. வெசுபி யணஞ்சானிலை (?) கொண்டு வந்து, வசம்பு, வெள்ளைப்பூண்டு, மூன்றுந் தட்டி சாறு பிழிஞ்சு, வெள்ளைப் பூண்டு மூன்று தட்டி, முலைப்பாலில் லெகித்து(?) குழந்தைக்குக் கொரு சம(?) வார்க்கவும்.[4] அ(ஆ)தண்டை இலை பறித்து, பெருங்காயமும் ஒன்றில்[5] வைத்து, அதிலே இந்த(ச்)சாறு[6] பிழிஞ்சு, பெருங்காயமும், முலைப்பாலுமச சேர்த்து[7] வார்க்கவும்.

---

1. முகிள் = முகிழ், முகுளம் (வடமொழி), முதிராத வாழைக்காய் எனப் பொருள்.

2. புளியங்கொட்டை மாதிரி (அந்த அளவில் மாத்திரை) செய்து என்று கருத்துப்போலும்.

3. முட்டடைப்பான் என்று குழந்தை நோய் ஒன்று வழங்கப்படுகிறது. ஆனல் எங்கல முட்டையான் யாதோ ?

4. குழந்தைக்குக் கொடுக்கவும் என்பது பொருள். (இங்கு வாக்கியத்தில் பிழை இருக்கிறது.)

5. ஒன்றில் = ஒரு எனத்தில்.

6. இந்தச்சாறு = ஆதண்டை இலைச்சாறு என்று பொருள்.

7. ஆதண்டை இலைச்சாற்றில் கலந்த பெருங்காயத்துடன் முலைப் பாலையுங் கூட்டி என்பது பொருள்.

குழந்தைகளுக்குக் குளிசங் கட்டுலக்கி தோஷத்திற்கு(?) குளிசங் கட்டவும் (கட்டல்)

1. ஆவாரை நிழலடி கெ(ய)ண்டை ஞாய்(யி)ற்றுக் கிழமை நாள் காப்புக் கட்டி, பலி கொடுத்து, நுணி வேர் அரும்ல குளிசமாடி[1] கட்டவும்.

2. கீழாநெல்லிக்கு ஞாய்(யி)ற்றுக்கிழமை காலமே (ஆயில்) காப்புக் கட்டி தூபம் பலி கொடுத்து, நுணி வேர் அரும்ல பிடிங்கி வந்து (குளிசம்) கட்டவும். அந்த வேரு (ரையு)ம் வசம்பு(பையு)ம் நெய்யில் கொதிக்க வைத்து, காசிடை உள்ளுக்கு(ப்) புகட்டி, மேலு(க்கு)ங் தலையிலும் துவள யிடவும்.

பிணிக்கும், பிசாசுக்கும், விஷதோஷத்திற்கும் மந்திரம்

" அங்குரங்கு இங்குரங்கு உங்குரங்கு எங்குரங்கு ". " ஓம் சிவாய நமஃ " குருவே துணை செய்யவும்.

குழந்தைகளுக்கு தாகத்திற்கு—பிணிக்கு—பிசாசுக்கு மந்திரம்[2]

குழந்தைகளுக்கு தாகத்திற்கு கட்டு மாந்த குளிகை[3]

1. அரசம்பட்டை, அதனுடைய கொழுந்து, ஈரமணலை வறுத்து தீ பறக்கவிட்டு, இதை வறுத்து கொட்டிப் போட்டு வறுத்து[4] கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

---

1. ஆவாரஞ் செடியை நுணி வேர் அறுந்துவிடாமற் பெயர்த்தெடுத்து, அதன் ஒரு பாகத்தைக் குளிசமாகக் கட்டவேண்டும் எனக் கருத்து,

2. மந்திரம் என்று குறிப்பிட்டிருந்தும் இங்கு மந்திரமேதும் காணப்படவில்லை. ஆனல் மேலேயுள்ள " அங்குரங்கு " என்னும் மந்திரமாயிருக்கலாம்.

3. கட்டு மாந்தத்திற்கு இது 4-ம் மருந்து. (57-ம் பக்கம் பார்க்க).

4. அரசம்பட்டை முதலியதை இடித்து வெந்த மணலுடன் போட்டு கஷாயமிடவும் எனக் கருத்து.

2. சட்டியை(க்) காயவைத்து, கல்லப்பற்ப வறுத்து(?) பர(ற்)ப்பமாக்கிக் கொட்டிப் போட்டு கோணி பட்டு(டை)ப் போட்டு, கருகி வருகிற பக்குவத்தில் பழையருய்(?) தீட்டிப் புடைத்துப் போட்டு, கோணி(ப)பட்டு(டை)மேல் போட வும்(?). ஓமம் இரண்டு(?) போடவும். கிஷாயம் வைத்துக் கொடுக்கவும். வாந்தி, பிரு(ரா)ந்தி, சலக்கழிச்சல், குடுகுடுப் பான தாகம் இது (இவையே) வெல்லாம் திரும்.

கட்டு மாந்த குளிகை[1]

சுக்கு, மு(மி)ளகு, ஓமம், நற்சீரகம், வெள்ளைப் பூண்டு, தலை சுருளி வேர், இதுவெ(இவற்றையெ)ல்லாம் சமன்நிறைபோட்டு வெண்ணீ(ன்னீ)ர் விட்டு அரைத்து, கடலைப் பிரமாணம் குளிகை செய்து வைத்துக்கொண்டு, வய(யி)று ஊதினால் வெண்ணீ(ன்னீ)ரில் கொடுக்கவும். குழந்தை மூன்று வருஷ மானாலும் கொடுக்கலாம். வயிறு ஓட்டமானால் பொடுதலையும் ஓமமும் போட்டுக் கரு(க்)கி கிஷாயம் கொடுக்கவும்.

பால மாந்தத்திற்கு (குளிகை)

கோரோசனை, வெங்காரம் இவை (இவற்றை) பொரித்து, அகத்தி இலைச்சாறு விட்டு அரைத்து, சிறு பயறு மருவாதி[2] உருண்டை செய்து வைத்துக்கொண்டு, ஒரு குளிகை முலைப் பாலில் கொடுக்கவும். இது பலவகை மாந்தமும் நீக்கும்.

குழந்தைகளுக்கு மந்திரம்

"அம்மதின் கருணை பொங்கி அலையெரிதயன் வேலைக்கும்ம மல்லிக்கொரு மன்னதோரை மு ம ம மலங்காய முளகச்;"

"செம்மனின் சோகாயாறுதொரேவகை வகையமுணை மூன்று தன் வயற்றேம் வந்துற்ற தன்மை இதெனபர மிசகோர்."

---

1. கட்டு மாந்தத்திற்கு இது ஐந்தாம் மருந்து. (59-ம் பக்கம் பார்க்க.) இது பெரும்பாலும் இரண்டாம் மருந்து போன்றது.

2. சிறுபயறு மருவாதி = சிறுபயறளவு என்று பொருள் போலும்.

இதுக்குத் துவளல்

ஆவ(க்) கொழுந்து[1], அப்பைக் கொழுந்து[2] குளிமுட் டான்[3], கல்லுப்பு, நரி விட்டை, வேப்பிலை, சின்னி இலை, உளறி சுத்தி(?), மஞ்சள், வசம்பு, ஒரு கட்டைப்பூடு[4], வெள் வெங் காயம், இதுவெல்லாம் (இவற்றை) இடித்து, குழந்தைக்குத் துவளைத் தாயி(ய்)க்கு(ம்) மார்பில் துவளை யிடவும். பிணி நிற்கும்.

வாந்தி பிரு(ர)ந்திக்கு(ம்), குளிர் சுரம் மாந்தத்திற்கு(ம்)

சின்னி இலை, புங்கங் கொழுந்து, நாயுர்(ரு)விச் ச(க)லமும் கருக்கி, கிஷாயமிட்டு(க்) கொடுக்கவும். வாந்திக்கு குளிமிட் டானும், கோரைக் கிழங்கும் அரைத்து முலைப்பாலில் கொடுக்கவும்.

விக்கலுக்கு

தாளிசபத்திரி அரைத்து பாலில் கொடுக்கவும்.

அரோசிய(சக)த்திற்கு

ஏலம் ஷி க. சிறு பலகரை(றை) உ, மயிலிறகு(த்) தண்டு உ[5], திரி பண்ணி, அக்னி பர்ப்பம் செய்து[6]. பொடித்து கடுத்தத்திலிட்டு(?), தேனில் முலைப்பாலில் நாவில் தள மிடவும்[7].

---

1. ஆவக்கொழுந்து என்பது ஆவட்டங் கொழுந்து என்று திருத்தப் பட வேண்டும்.

2. அப்பைக் கொழுந்து = கொன்றைக் கொழுந்து.

3. குளிமிட்டான் = தண்ணீர்முட்டான்.

4. உள்ளிப்பூண்டு ஒன்று என்று பொருள்.

5. பலகறை, மயிலிறகு ஒவ்வொன்றும் இரண்டு வாராகனெடை எனக் கருத்து.

6. திரிபோல் அரைத்து உருட்டி நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கு என்று பொருள்.

7. தேனில் அல்லது முலைப்பாலில் குழைத்து நாக்கில் தடவவும் என்று கருத்துபோலும்.

வாந்திக்கு

கோரைக் கிழங்கு, குதியிரகும்(?) அரைத்து, முலைப்பாலில் அல்லது வெண்ணீ(ன்னீ)ரில் கொள்ளவும்.

வால்கிரிக்கு[1] குளிசம் கட்ட(ல்)

ஞாயிற்றுக்கிழமைக்கு(மையன்று), சென்னுயுர்(ரு)விக்கு காப்பு கட்டி, தூபம் கொடுத்து, பலி கொடுத்து (அதைப்) பிடுங்கி வந்து விக்னேச்வரனுக்கு பூசை செயது குளிசமாட்டி கட்டவும்.

கள்ள(ப்) பிணிக்கு (மருந்து)

விடத்திலாணரை(?) ஞாயிற்றுக்கிழமைக்கு(மையன்று) இடம்புரி வலம்புரி சுற்றி சூர்ய நமஸ்காரம் செய்து, வாயாலே ஞரு[2] உரித்து வந்து, அதனுடன் கடுகு, வெள்ளை வெங்காயம், வசம்பு, (இவற்றுல்) குளிசமாடி கணபதி பூசை செய்து பலி கொடுத்து கட்டவும்.

மாந்த மெடுத்து உலைத்தியும்[3] தாகமும் சரமுமாலல் மருந்து குளிசம்

1. (கஷாயம்) சட்டி(யைக்) காயவைத்து, சட்டி(யில்) தீ பறந்த பின்பு, கல்லுப்பு போட்டு வறுத்து கொட்டிப் போடவும். பிறண்டை வறுத்து கொட்டிப் போடவும். மூன்றுவது ஓமம் வறுத்து கொட்டிப் போடவும். கோணி பட்டுப்(ப்பட்டை)ப் போட்டு வெந்ததின்மேல், ருயி(?) போட்டு, ஒருபடி தண்ணீர் விட்டு கிஷாயம் வைத்து, ஒரு சங்கு கொடுக்கவும். கொடை வேலாணரை(?) ஞாயிற்றுக்கிழமை கொண்டு வந்து கணபதி பூசை செய்து பலி கொடுத்து, குளிசமாடி கட்டவும்.

---

1. பால கிரஹம் என்பது வால்கிரி என்று திரிபடைந்திருக்கலாம்.

2. வாயாலே ஞரு = இது வாழிலை நார் அல்லது வாழை நார் என் றிருத்தல் தகும்.

3. உலைத்தி = உலைத்தல், 'உள்ளக்கலக்கம்' ஸந்நிபாதாதி தோஷங் களில் ஏற்படும் மனோவிகாரம்.

குளிச,கட்டு (குளிசங் கட்டுதல்)

ஞாயிற்றுக்கிழமை நாள், ஆவரையடி இலை சிறுகன்று முனைத்த தாய்ப் பார்த்து(?) நுனி வேர் அரும்மல் பிடுங்கி, பலி கொடுத்து குளிசமாடி கணபதி பூசை செய்து கட்டவும்.

ஆவாரைமேல் குளிசம்போலே தொங்காமல்(?) பூச்சிக் கூடு உயிரிருக்கிறதாய் பிடித்துக் கொண்டு வந்து(?) ஐந்து வகை நூல் சுத்தி(ற்றி), கணபதி பூசை செய்து பலி கொடுத்துக் கட்டவும்.

பெரிய வாலைக்கு[1] (மருந்து)

துளி(ள)சி, ஞு(நா)ய்த் துளசி, நொச்சி இலை, நாயுருவி இலை, வேப்பிலை, கழுதைத்தும்பை இலை[2], பீமரத்து இலை(?), உத்தாமணி இலை, பிள்ளை(த்) தக்காளி இலை, கோழி ஆ(அ)வாரை இலை, அவரை இலை, அப்பை(க்) கோவை இலை, பி(பு)ளி இலை, பெருமூ(மி)ட்டை[3], பீஞரி இலை, விபூதி(ப்) பச்சை இலை, சின்னி இலை, குட்டி விளா இலை, எருக்கிலம்(லைப்) பழுப்பு, களச்சி இலை, உளரு சுத்தி(?), மஞ்சள், வசம்பு, வலம் புரிக்காய், வெள்ளைப் பூண்டு இவை யெல்லாம் தீட்டி[4] தாய்க்கு மார்பிலும், பிள்ளைக்கு(ச்) சரீரமெல்லா(மு)ம் துவள யிடவும். சகல தோஷமும் தீரும.

வாந்திக்கு மந்திரம்

" ஆரை யடைக்கயங்க மடைக்க மரகத்தின் பங்கு மடைக்க எங்கு மடைக்க சுவாகா, ஓம் ".

---

1. வாலை என்பது வால(பால) கரப்பான் என்னும் நோய்.

வாலகரப்பான் குணம் :—

" காலது கடுக்குஞ்சந்து கண்டமும் வெடித்துப் புண்ணாய்
எலவே கடிவிடம்போல் இருந்து பன்னீர்போல் பாய்ந்து
கோலமாய் வற்றி நாறும் குழவியு மொடுங்குமாகில்
மாலருங் குழலாய் வாலகரப்பான் செய்வாறுதானே. "

(பாலவாகடம்.)

2. கழுதைத் தும்பை என்பது நேர்.

3. பெருமிட்டை என்பதும் பீஞரி என்பதும் ஒன்றே யாதலால் பெரு முசுட்டை என்றிருத்தல் பொருந்தும்.

4. தீட்டி = அரைத்து.

பிள்ளை(ப்) பிணிக்கு[1] மந்திரம்

1. "ஓம் குரு வாழ—குருநாதன் வாழ—எந்தன் ஆசாரி வாழ—எவ்வாணை மறக்கிலும் குருவாணை மறவேன். குரு இருந்த இடத்தில் கூட்டிய காலும் நீட்டறியேன். அரிறுகு (அவரருகு) இருந்து ஆசாரம் செய்வேன்[2]. குரு தொட்ட மிதி அடியும், பள்ளிக் குடையும், பாவாடையும், குரு கொடுத்த பிறம்பு மடியேன்; உச்சிமேல் கொண்டேன் சிவா"[3].

2. "ஓம் அதுவும் ஸ்ரீரியும் ரகிலீயுங் கணபதயே நமஃ. ஓம் குரு வாழ நம(ச்)சிவாய. கடலிலே விழுந்து புள்ளு ஒண்ணுங் கல்லைப் புல்லைத் தார்ந்து வீழ்ந்து புள்ளுப் புததால் கடலிலே பாற்கடல் தோன்றி, பளிங்குமா மண்டபத்தில் செம்பிருந்து முட்டை இட்டு குஞ்சு பொறித்த தகமைபோலும். நூற்றெட்டு தோஷமும் பறந்துபோகச் சிவா."

3. "ஓம் காளி, ஓம் பிடாரி, ஓம் சிவாய".

வால்கிரி தோஷத்திற்கு மந்திரம்

"ஓம் காளி, ஓம் பிடாரி, ஓம் சிவாய நமஃ வால்கிரி தோஷ முச்சாடய, குளி தோஷ முச்சாடய, பட்சி தோஷ முச்சாடய.[4] தோஷ மாத்த மாவகிம்பச்சினிச் சுவாகா, சிவாய நமஃ"[5].

---

1. இந்நூலில் கூறப்படுவதெல்லாம் பிள்ளைப் பிணியே. இங்கு எவ்வித பிள்ளைப் பிணி யென்பது குறிக்கப்பட்டிருத்தல் நலம்.

2. ஆசாரம் செய்வேன் = உபசாரம் செய்வேன்.

3. குரு பக்தியை விளக்கும் இம்மந்திர வாக்கியங்கள் பிள்ளைப் பிணிகள் அகற்ற எங்ஙனம் உதவுமென்பது ஆராய்ந்தறிய வேண்டிய விஷயம். (குழந்தைகளுக்கு மந்திரம் என்பது 59-ம் பக்கமும் இவ்விஷயத்தைப் பற்றியதே.)

4. "ஓம் சிவாய நம:, தோஷம் உச்சாடய" ஆகிய மந்திரங்கள் வடமொழிச் சொற்கள்; தோஷத்தை அகற்று என்று அதன் பொருள்.

5. ஸ்வாஹா சிவாய நம: என்பது மந்திரத்தின் முடிவு.

மாந்த குளிகை[1]

சுக்கு, மு(மி)ளகு, திப்பிலி, வெள்ளை வெங்காயம், கடுகு, வசம்பு, கடுக்காய், தேசாவாரம், கருவேப்பிலை, பெருங்காயம், கடுகுரோகிணி, சீனிக்காய், ஓமம், திருகடுகு, தாணி(ன்றி)க்காய், ஏலம், லவங்கம், லவங்கப்பட்டை, மஞ்சள், கோரோசனை, கொத்தமல்லி, சீரகம், மெ(வெ)ந்தியம், கார்போக அரிசி, வகைக்கு ஷி 1. வனமூலிகை, ஷி; வேப்பங்கொழுந்து, னை(நொ)ச்சிக் கொழுந்து, சின்னி இலை, முள்ளி வேர், பெருத்தலாம் வேர்(?), பொருப்பி வேர்,[2] வகைக்கு ஷி 2. கல்லுப்பு ஷி 2. வெத்தி(ற்றி)லைச் சாறு படி த[3]. காட்டு மொச்சைச் சாறு படி த. தழையை வெதுப்பிச் சாறு வாங்கவும். இவையெல்லாம் இந்தச் சாற்றில் அரைத்து[4] ரொட்டி செய்து, கல்லுப்பு பொடிமேல் பொடி தூவி, அருசுதிரம்(?) புடம் செய்து, ஐந்தும் அரைத்து(?), மெழுகு பதமானால், பின்பு சிறு கடலை(ப்) பிரமாணம் உருண்டை செய்து, நிழ(லி)ல் உலர்த்தி வைத்துக் கொண்டு, ஸகல வியாதிகளுக்கும் அனுபானம் அறிந்து கொடுக்கவும். ஒவ்வொரு மூலிகை யிடவும்(?).

பிள்ளைப் பிணி மாந்த கணை செய்யுங் குணம்[5]
லக்ஷணக்குறி[6]

வய(யி)று ஊதி இருக்கும், சோறு போல வயிறு கழியும். உச்சி தாழும். மயில் போல கண் துயிலும் மயக்க மாகும். வய(யி)றும் நெஞ்சும் புண்போலே வெந்திருக்கும்.

---

1. மாந்தத்திற்கு குளிகை; (இது பால மாந்தத்திற்கு 2-வது மருந்து 60-ம் பக்கம்.)

2. பொரும்பி வேர் = சுழலாவாரை வேர்.

3. த = இது முக்காலே குறிக்கும் கீழ்வாய் எண்.

4. சுக்கு முதலிய முற்கூறிய சரக்குகளை வெற்றிலைச்சாறு முதலியவற்றில் அரைத்து எனப் பொருள்.

5. மாந்த-கணை செய்யுங் குணம் = மாந்த-கணைகளுக்கு ஏற்படும் குறிகள்.

6. குணம், லக்ஷணம், குறி மூன்றுக்கும் ஒரே பொருள்; இவற்றுள் எதேனும் ஒன்று குறிப்பிட்டால் போதுமானது. ஆனால் இங்கு எல்லாச் சொற்களும் குறிக்கப்பட்டுள்ளன; ஏனென்று தெரியவில்லை.

மந்திரம்

"உய்வாக கருணை தென்கோதை மாதேபோலே கறக்கும். நிசூரியன் பரீக்ஷை பார்த்து, அயவாய் மாந்தக்கரையோன் கண்டறிந்து அகட்டீரே".

இதற்கு[1] மருந்து

லவங்கம் 2. திப்பிலி 2. சீலையில் முடிஞ்(ச்)சு(ப்) போட்டு, அரை(ப்)படி தண்ணீரில் வேகவைத்து, ஒரு சேர் தண்ணீராக(க்) காயச்சி, அந்த (அதிலிருந்து) திப்பிலியை எடுத்துப் போட்டு, கிரு(ரா)ம்பு மாத்திரம் அரைத்து, கிஷாயத்தில் (கலந்து) வார்க்கவும்.

பத்தியம்[2]

ஓமம் ரெ(இர)ண்டி(ட)ரை கொண்டது, நற்சீரகம் மூன்று நிறை. கொண்டது, கருஞ்சீரகம் ஐந்தரை, கருங்குங்கிலியம் ஐந்து நிறை, சுக்கு மை(ஐ)ந்தரை, வசம்பும் ஐந்தரை, கடுக்காய், ஒரு உள்ளி(ப்)பூடு, சீய்க்காய்; இந்த மருந்தெல்லாம், ஐந்து ஆவாரை இலைகளில் வைத்து, வாழை நாறு(ர்) சுற்றிக் கட்டி, தீயில் போட்டு, தழை கருக வெந்ததின் பின்பு எடுத்து, அந்த மருந்தை அரைத்து, இரவில் வெண்ணீ(ன்னீ)ரில் கலக்கி உள்ளுக்கு வார்க்கவும். அதன் பின்பு கம்பரிசியை கோ(?) அரைத்து, தண்ணீயில் கலக்கி, சுக்கு தட்டிப்போட்டு, சிவக்க(க்) காய்ச்சி ஆறவிட்டு, இரண்டு சங்கு போ(ட்)டவும். மறு நாள் நற்சீரகம் ஒரு உன்னிப்பூடு வசம்பு அரைத்து, இள வெண்ணீ(ன்னீ)ரில் கொடுக்கவும். இந்த மருந்து மாந்தத்திற்கு மாகும்.[3]

---

1. இதற்கு = மாந்த-கணைக்கு.

2. பத்தியம் என்று தலையங்கம் இருப்பினும் இதன் கீழ் கூறப்படுவது மாந்தத்திற்கான மருந்தே; பத்தியம் என்று என் குறிக்கப்பட்டதென்று விளங்கவில்லை.

3. மாந்தத்திற்குமாகும் என்னும் இம்மருந்தின் உபயோகம் வேறு எதற்கென்று கூறப்படவில்லை.

குழந்தை தெளிவிற்கு மருந்து

ஊஞ்ச மரத்துப்(?) பட்டையை நேக(?) தட்டி, பசுவின் நெய் ஒருபி(ப)டி சட்டியில் வார்த்து, அதிலே வசம்பு(ம்), வெள் வெங்காயப்பூடு ஒன்று(ம்) தட்டிப் போட்டு, நெய்யை(க்) காய வைத்து இறக்கி, ஆற விட்டு இரண்டு வேளையும முலைப் பாலில் கலக்கி உள்ளுக்கு வார்க்கவும்[1]. இது கர்ப்பிணிக்கெல்லாம் நல்லது[2]. இண்டங் கொழுந்து கூட போட்டுக் கொள்ளவும்.

ஊது மாந்தத்தின் குணம்

மாவிற்கு அரைத்தாப்[3]போலே வய(யி)று போம். நாற்றக் கொள்ள[4] பானு முன்பனியெனப் போமே.

மாந்த கணத்திற்கு (மருந்து)

செத்தெரிக்கணமாந்தம்

(செய்யுள்)

1. புள்ளடி பொடுதலைச்சாறும் பொசிப்பதோர் தகரைச்சாறு
மெள்ளவே மு(மி)ளகு தாளி மிகு கருநொச்சி பாச்சி[5]
வெள்ளுள்ளி வசம்போடீர் வெங்காயச்சாறு தானுதோ
ரளிதான் சமன்கொண் டெண்ணெ(ணெய்).

[செத்தெரிக் கணமாந்தத்திற்கே. (271)

---

1. வார்க்கவும் = குழந்தைகளுக்குப் புகட்டவும்.

2. குழந்தைகள் மயக்கம் முதலியதிலிருந்து தெளிவு பெற இது உபயோகமாவதோடு கர்ப்பிணிகளுக்கும் நல்லது என்று பொருள் கொள்ள வேணும்.

3. மாவை அரைத்தாப்போல் என்றிருத்தல் தகும்.

4. ஊது மாந்த குணம் இங்கே முற்றிலும் காணவில்லை; நாற்றக் கொள்ள என்பது ஒரு செய்யுளின் பகுதி எனத் தெரிகிறது. இங்கு சில விஷயம் விட்டுப்போனதாகவும் தெரிகிறது.

5. கருநொச்சிபாச்சி = கருநொச்சியிலைச்சாறு.

கி(க)ஷாயம்

2. கால்மேலுத்த எண்ணை(ணெய்) கடுகிய சாயங்காலஞ்
சீலமாஞ்சுக் கோடோமம் சேர்ந்துபோன
[முசுட்டைவேளை
ஓலமாந்தாட்டு மூலமுகந் திப்பிலியுங் கூட்டி
கோலநீர் காய்ச்சிக்கொள்ள கடுங்கணமாந்தம்
[போமே. (272)

தாதொட்டிவேர் கொம்[1].....வேரும் ஆலந்தாரில் குளிசங்கட்ட மாந்தந் தீரும்.

3. மாந்த.....
வெந்தயந்தான் கூட்டி மிகுந்த நிம்பச்சாறு விட்டு
சாந்தய மில.....யெறித்து
இந்தாகு மெய்யாங் கிரு(ரா)ணி மிடுங் கடுப்புமேக
[முதல் பெ.....ணே புகில். (273)

4. நன்னரி சிறுகிளா காட்டுமல்லிகை நாவல் இரண்டும்
பொன்னுரு சங்குடனே பாவட்டை நீலி பொருந்து
[கொஞ்சி
எந்நாளும் காய்கின்ற வட்டத்திருப்பி இவை இத்தினைவேர்
மின்னர்தன் பு(பி)ள்ளைகள் மாந்தந்தனக்கு மிகவும்.
[நன்றே. (274)

மாந்தத்திற்கு(க்) குடிநீர்[2]

(வசனம்)

வேலிப்பருத்திவேர், கொன்றைவேர், கிளுவை, பொடுதலை யும், பாலில் பொரிய சிவதைக்கள்ளி பச்சை வெளிச்சையோடு மச்சசீலக்காய் கடுகுரோகிணி சிறந்த பால் விட்டுக் கொள்ள வும்(?)

---

1. இங்கிருந்து எட்டுப்பிரதியில் சில பாகம் சிதைந்து விஷயம் சிதறிப் போயிருக்கிறது.

2. மாந்தத்திற்கு இது 5-வது மருந்து.

பலவகை மாந்தத்திற்கு மருந்து

சொ(சு)ரைத்தழை 1, பொடிதழை (பொடுதலை) பிடி 1, அவரைத்தழை ஐந்து[1]. இவை மூன்றையும் வாட்டி(ப்) பிழிஞ்சு கொள்ளவும். அதன் பின்பு வசம்பு கொஞ்சம், உள்ளு(ளி)ப் பூ(ண்)டு க, ஆமையோடு கொஞ்சம், இவை மூன்றும்(றையும்) வெதுப்பிப் பிழிஞ்சு(ச) சாத்தை(ற்றை) விட்டு அரைத்து[2](க்) கலக்கி உள்ளுக்கு வார்க்கவும்.

இந்த மூன்று நாளைக்கு[3] துவளை மருந்து

சின்னித்தழை, நிலவிளாந்தழை, கஞ்சாங்கொற்றை[4] மூட்டை(?) நாறி(?) அறுகு, ஒரு உள்ளி, வசம்பு, ஊருசுத்தி, சிறுநீரு(ர்) இவை எல்லாம் கொண்டு வந்து வாசல்படி நடை யில் அம்மியை வைத்து, அதிலே இதுவெல்லாம் (இவற்றை யெல்லாம்) வைத்து அரைத்து, துவளை போடவும். துவளை யிடும் வகை உச்சி(யிலும்), நெற்றி(யிலும்), முகத்திலும், முதுகிலும், கீழ்நோக்கி முதுகு(த்)தண்டிலும், (மேலும்) கீழ் நோக்கிக் கொண்டு வந்து உள்ளங்காலிலே(யும்) தேய்த்து(த்) துவளை போட்டு, மடியில் பிள்ளையை வைத்துக்கொண்டு, துவளையிட்டத் தழையை பிள்ளை தலையை(ச்) சுத்தி(ற்றி) முச்சந்தியில் போட்டு திரும்பிப் பாராமல் வரவும்.

முயல் கண்ணுக்கு[5] மருந்து(?)

(அடியில் வரும் மருந்தால்) நசியம் செய்யவும்

எருக்கிலம்(லப்)பழுப்பு, ஒரு உள்ளி(ப்)பூண்டு, வசம்பு, இவை மூன்றும் ந(நெ)ய்ய(த்)தட்டி, சிறுநீரில் (அரைத்துப்)

---

1. சுரைத்தழை 1-பங்கு, பொடுதலைத்தழை 1-பங்கு, அவரைத்தழை 5-பங்கு என்று கருத்து.

2. வசம்பு முதலிய மூன்றையும் சுரைத்தழை முதலியவற்றின் சாற்றை விட்டு அரைக்க வேணுமென்பது கருத்து.

3. "இந்த மூன்று நாட்களுக்கு" என்பதிலிருந்து முற்கூறிய மருந்தை மூன்று நாட்கள் கொடுக்க வேணுமென்று அறியவும்.

4. கஞ்சாங்கோரை என்றிருத்தல் பொருந்தும்.

5. முயல் கண் என்பது இன்னதென்று வைத்திய சாஸ்திரப்படி விளங்கவில்லை; அப்பெயருள்ள நோயும் எந்நூலிலும் காணப்படவில்லை.

பிழிஞ்சு(?), சீலையில் பொட்டணங்கட்டி, நாசியில் பிழியவும். துளசிஇலை கொண்டு வந்து ந(நெ)ய்ய(த்)தட்டி, இந்தப்படி பொட்டணஞ் செய்து நாசியில் பிழியவும்.

மோர மாந்தத்திற்கு[1](க் குறிகள்)

மாவிற்கு அரைத்தாப் போலேயும்[2], சுண்டைக்காய் தண்ணீர் போலேயும் வய(யி)று போம்[3]. கடகடவென்று வய(யி)று இரையும். புழு கட்டியுமாம் வய(யி)று போம்[4]. பசேலென்று (வாந்தி) எடுக்கும். கண்ணீர் விழும். கவட்டம் போன்றியறுக்கும்(?). மயங்கி வேற்(ர்க்)கும். தாகமெடுக்கும். ஓவ்வொரு நேரம் உடம்பு காயும். பலவிதமாகச் செய்யும்[5].

இதற்கு மருந்து

கஞ்சாங்கோரை, மூட்டைநாறி, குழிமுட்டான்தழை, வசம்பு, ஒருபு(உ)ள்ளி(ப்)பூ(ண்)டு இவை எல்லாம் சாலடி தண்ணீரில் ந(நெ)ய்ய(த்)தட்டி, இரண்டு காசிடை[6] பிழிஞ்சு, உள்ளுக்கு வார்க்கவும். மேலுக்கு திமிரிடவும்[7]. குறைச்சல் ஒரு உள்ளி வசம்பு கூட்டிக் கொள்ளவும்[8]. இப்படி மூன்று நேரம் வார்க்கவும்.

---

1. போர் மாந்தத்திற்கு என்றிருத்தல் தகும்; இவ்விஷயம் இங்கு இரண்டாமுறை கூறப்படுகிறது. (56-ம் பக்கம்).

2. மா அரைத்தாற்போல் என்றிருக்க வேண்டும்.

3. வயிறு போம் = பேதியாகும்.

4. புழுக்கை புழுக்கையாய் கட்டிக்கட்டியாயும் மலம் தள்ளும் என்பது கருத்து.

5. இந்நோய் இன்னும் பலவகை விகாரங்களைச் செய்யும் என்று கருத்து போலும்.

6. காசு = அரைத்தம்பிடி எடை.

7. திமிரிடவும் = பூச்சிடவும். அதே மருந்தை மேலுக்கும் பூசவும் என்று கருத்து.

8. முற்கூறிய மருந்தில் குறைந்தது ஓர் உள்ளியையும் ஒரு வசம்புத் துண்டையும் கூட்டியரைத்து மூன்றுவேளை கொடுக்கவும் என்று கருத்து போலும்.

பாவை தோஷத்தின்[1] குணம்

குடித்தபா லெதிர் எடுக்கும்[2] தலையும் கண்ணும் குழியும்
அடிக்கடி சிறி ஆவி அறமேவி தணகு குன்றும்
எடுக்கிலும் கையிற் தொங்கலாக எதிரினைப் பிழைக்குப்
[பிள்ளைக்குத்
திட வயிறு போகுமாலல் கறுத்தபாவை தோஷத்தின்
[குணம் இதுவே.

இதற்கு மருந்து

(வசனம்)

கிழாநெல்லிவேர் வடக்கே போனதை[3] பலிஇட்டுப் பிடுங்கி வந்து, குளிசமாடி, விநாயகன் பூசைசெய்து, செவ்வாய்க் கிழமைக்குக்(மையன்று) கி(க)ட்டவும். அந்த வேர் கொஞ்சம் அரைத்து உள்ளுக்கு(ம்) வார்க்கவும். இதற்கு விநாயக பூசை (செய்து) பிராணப் பிரதிஷ்டை பண்ணவும்[4].

குளி தோஷத்தின் குணம்

(செய்யுள்)

தலையின் மேனிவாடி வயிற்றினில்
பால் தங்காது
தலையினில் குளி(ழியு)வுண்டாகும்
சத்தியாய் திருகுந்தானும்

---

1. பாவைதோஷம் என்பது ஒருவகை பூததோஷம் என்று தோன்றுகிறது. இதற்குப் பிரமாணம் வேறு நூல்களில் தேடிப்பார்க்க வேணும்.

2. எதிர் எடுக்கும் = கக்கப்படும்.

3. வடக்கு நோக்கிப் படர்ந்துள்ள கீழாநெல்லிவேரை என்று பொருள்.

4. விநாயகர்போல் பதுமைசெய்து அதற்குப் பிராணப்பிரதிஷ்டை செய்யவும்.

இத்தழுடனிற சித்தையறிய நோக்கி
அரிவறு(அருவரு)த் தழகு தலைவாய்
கறுத்து தோன்றும் குளி தோஷத்தின்
குணம் இதுவே[1].

இதற்கு மருந்து

(வசனம்)

1. முருக்கி(க்கஇ)லையும், சிவந்த பூக்கோழியும்[2], அவரைத் தலை(ழை)யும், உள்ளி, வசம்பு கூட்டி எண்ணை(ணை)யில் வேகவைத்து கொடுக்கவும். மேலுக்கும் துவளை இடவும். பின்னும் கஞ்சாவேர்(ரை) வெள்ளிக்கிழமை நாள் பலி இட்டு(ப்) பிடுங்கி, குளிசமாடி, விநாயக பூசைசெய்து, தூபங் கொடுத்து கையில் கட்டவும்.

வேறு:—2, வேலிப்பருத்தி இலையும், குப்புமேனி இலையும் (ஆக) இவை இரண்டும் தண்ணியி(ணீரி)ல் பிசைந்து தேய்க்கத் தீரும்; (அதாவது) குளிதோஷம் தீரும்.

ராடி கட்டு[3] வகை

பத்திரகாளி கோவிலிலே போய், கோவிலுக்குள்ளே தலை கீழாக இருக்கிற பல்லியை அடித்துக் கொண்டு வந்து, தூப தீபம் கொடுத்து, அந்த(ப்)பிள்ளைக் கழுத்தில்[4] கட்டவும்.

---

1. குளிதோஷமே குளிசதோஷமென்றும வழங்கப்படுவதாய் தெரி கிறது. குளிசதோஷத்தைப்பற்றிய இலக்ஷணம் பின் வருமாறு :—

"உச்சியுங் குழிந்திருக்கும் உயர்விழி வீளையமாகும்
மிச்சமாய் வாந்தி செய்யும் வேர்வையு மிகவே காணும்
பச்சுப்பச்சென்று தானும் பற்பல வண்ணமாக
எச்சமாய்க் கழிச்சலுண்டாம் இது குளிச தோஷந்தானே."

2. கோழி=கோழியவரை; அல்லது பன்றிக்கிழங்கு.

3. பல வேறு தோஷங்களால் வருந்தும் இளம்பிள்ளைகளுக்கு உயிர் நீக்கிய ஜந்துக்களைக் குளிசம்போல் கட்டும் முறை ராடிகட்டுதல் என்று வழங்கப்படுகிறது.

4. அந்தப்பிள்ளை கழுத்தில்=தோஷக்கோளாரால் வருந்தும் அக் குழந்தையின் கழுத்தில்.

குதிரை சிரசும்[1], ஆமைஓடும் அரைத்து, பாலில் கொடுக்கவும். பிள்ளைகளுக்கு பகுதிதோஷம் போம். பின்னும் நாயுர்(ரு)வி வேர், ஆயவேர்[2] (இவற்றால்) குளிசமாடி, தூபதீபம் கொடுத்து கையில் கட்டவும். பின்னும் குப்பை(மேனி)இலை, துத்திவேர், நாயுர்(ரு)விவேர் (இவற்றை) குளிசமாடி கட்டவும்.

செவ்வாப்புக்கு மருந்து[3]

மலைதாங்கிவேர் கொண்டு (வந்து) நெய்ய(த்)தட்டி, புழுக்கின ஆமணக்கெண்ணை(ணை)யில் போட்டு, சூரியபுடம் வைத்து, பிள்ளைக்கு தலைக்கும், நெத்தி(ற்றி), புருவம், கால் இவைகளுக்கிடாமல், மற்ற விடத்திற்கு மேலுக்கெல்லாம் துவளை இடவும். இண்டங்[4]கொழுந்து கொண்டு வந்து, பசுவின் நெய்யில் வேகவைத்து ஒரு சங்கிடை உள்ளுக்கு வார்க்கவும்.

ஊது மாந்தம்[5]

சுரைத்தழை 1. பீர்க்கிலை 1, அவரைஇலை 2, இவை மூன்றும்(றையும்) வாய் பேசாமல் கொண்டு வந்து வாட்டி(ப்) பிழிஞ்சு, ஒருஉள்ளி, வசம்பு, இவை இரண்டும்(டையும்) சற்றே வெதுப்பிக்கொண்டு, அரைத்து, அந்தச்சாற்றில் கலக்கி, இரண்டு

---

1. குதிரை சிரசு=குதிரையின் கபாலத்துக்குள் உள்ள மூளை.

2. ஆயவேர்=ஆயப்பாலை என்னும் (நாலுவகைப் பாலைகளுள்) ஒரு செடியின் வேர்.

3. செவ்வாப்பு என்பது ஒருவகை கரப்பான். இது செங்கரப்பான் என்றும் கூறப்படும்; குழந்தைகளின் தலையை முக்கியமாக பாதிக்கும் தோலைப்பற்றிய நோய். இதில் அநேக வகையுண்டு:—

"முத்தோடமரியூது சூலமுன்னு வெடிமண்டை பொரிசட்டை
சற்றோடு கருமையொடு செம்மை தனிக்கொள்ளி தோடமொடுவாலை
முற்றோல் வாட்சியொடு வீங்கல் மூரிவரும் பதினெட்டுவகையாம்
கொத்தான் கரப்பான்களென்று கூறினர் பண்டையோராமால்."

4. இண்டஞ்செடியை ஈகைச்செடி யென்றும் கூறுவர்; இதில் செவ்விண்டை, வெள்இண்டை என்று இருவகையுண்டு.

5. ஊது மாந்தத்திற்கு இது 3-வது மருந்து. (67-ம் பக்கத்தில் 2 மருந்துகளைக் காண்க).

காசிடை வார்க்கவும். மருந்து குடித்தால் மயங்கும். பின்பு தெளியும். நாய்(க்)கடுகு வாய் பேசாமல் கொண்டு வந்து, ஒரு உள்ளி, வசம்பு கூட்டி சாலடி(?) தண்ணீரில் வார்க்கவும்.

கடகரைக்கு(?) எண்ணை(ணெய்)

கழுதை(க்)குளம்பு[1] கொண்டு வந்து, ஒரு உள்ளி, வசம்பு கூட்டி சிறுநீர் விட்டு அரைத்து வார்க்கவும். மேலுக்குத் துவளை இடவும். குதிரைக்கால் சிக்கம், ஒருஉள்ளி, வசம்பு, சாலடி தண்ணீரில் வாய் பேசாமல் அரைத்து(க்) கலக்கி, மூன்று நாள் வார்க்கவும். நிலவிளாவி(இ)லை, பின்னித்தழை, ஒரு உள்ளி, வசம்பு கூட்டி மேலுக்குத் திமிரிடவும்[2]. இதன் குணம் பிள்ளை வறண்டு உணர்(ந்)து போம்[3]. இதற்கு இந்த மருந்து செய்ய[4] குணமாம்.

வறப்பிணிக்கு[5]

வயிறு போம் ; மேலே வெதும்பும் உடம்பு[6] ; மயங்கும். கண் குழிஞ்சு போம். உடம்பு நாற்றம் நாறும், பலவிதமும் செய்யும்[7].

---

1. கழுதைக்குளம்பு எந்த அளவுக்கென்று குறிப்பிட்டிருத்தல் நன்று.

2. திமிரிடவும் = பூசவும்.

3. பிள்ளை வரட்சியடைந்து உலர்ந்து (இளைத்துப்) போதல் அவ்வியாதியின் குணம் என்று கருத்து.

4. இந்த மருந்து செய்ய = இந்த மருந்தை உபயோகிக்க.

5. வரட்பிணி என்றிருத்தல் தகும். இதுவே வரட்புள் தோஷம் என்றும் கூறப்படும் ; அதன் குணம் வேறு நூலில் பின் வருமாறு கூறப் பட்டுள்ளது :—

> "வேப்பம்பூலே வயிறெழுகும் விடாதகண்ணீர் தலைவலியும்
> பூப்புனல் மாந்திப்புறங்கையால் பொருந்த மூக்கையேதுடைக்கும்
> கோப்பாய்த் தனக்கெதிரில் சலங்குடிக்கக் கண்டுபரிதவிக்கும்
> கோப்பான குரலாம் விலாகுளிரும் கேளாய் வரட்புள்தோஷமிதை."

6. உடலின் மேற்புறம் சூடாயிருக்கும் எனப் பொருள்.

7. பலவித கோளாறுகளுண்டுபண்ணும்.

இதற்கு மருந்து

பிள்ளை புதைத்த[1] குழியில்(லிருந்து) ஓடாகிலும்[2], பல்லாகிலும், வாய் பேசாமல் கொண்டு வந்து, சின்னித்தழை, சிறு விளாத்தழை, கஞ்சாங்கோரை, கது(மு)தைலத்தி(?) இவை எல்லாம் சாலடி தண்ணீரில் தட்டி(ப்)பிழிஞ்ச வார்க்கவும். மேலுக்கும் துவளை யிடவும். தீரும்[3].

[4]சுத்தி(?) நோகும். சோறு உண்ணுது. மூலை குடியாது.

இதற்கு மருந்து

1. ஆவாரங்கொழுந்து ஒருபிடி கொண்டு வந்து, பிட்டாவியாய் வேகவைத்து(ப்) பிழிஞ்சு வார்க்கவும்.

2. ஆவாரம்விழுது கொண்டு வந்து தட்டி(ப்) பிழிஞ்சு, ஆவாரன்பருப்பு நேக(?) அரைத்து வார்க்கவும்.

3. விடத்தோன்[5]கொழுந்து கொண்டு வந்து (அத்துடன்) சீரகமும் அரைத்து, சாலடி தண்ணீரில் வார்க்கவும்.

சாமுட்டிக்கு மருந்து(?)

முட்டைப்பாலுக்கு(?)

சுண்டை(த்)தழை[6] ஒரு பிடி கொண்டு வந்து, நான்கு ஈர வெங்காயம் வைத்து(க்)கூட்டி, சாலடியில்(?) தண்ணீரில் அரைத்து(க்)கலக்கி வார்க்கவும். சுண்டை(த்)தழையை வாட்டி சட்டியிலே பிழிஞ்சு, நற்சீரகம் அரைத்து (அந்தச்) சாற்றில் கலக்கி(க்) கொடுக்கவும்.

---

1. வேறு குழந்தைச்சடலம் புதைத்த என்று பொருள்.

2. சவத்தின் மண்டையோடாகிலும்.

3. தீரும் = வரட்பிணி போம்.

4. இங்கே ஒரு வியாதியின் தலையங்கமும், அதைப்பற்றி விளக்கும் சில வரியும் விடுபட்டுப் போயிருப்பதாகத் தெரிகிறது.

5. விடத்தேர் என்னும் மூலிகை இங்கு விடத்தோன் என்று பிசகாக எழுதப்பட்டிருக்கலாம்.

6. சுண்டைக்காய்ச் செடியின் தழை.

பிள்ளை(ப்)பிணி ஆண்தோஷவகை அறிய

கடக்க நின்று எடுத்த தோஷத்திற்கும்(?), விலக்கச்(கிய) சீலை வண்ணனுக்குப் போட்டாகும் தோஷத்திற்கும்(?); வைத்து உடுத்தின சீலை முந்தாணி அடிபட்ட தோஷம் (த்திற்கும்), இந்த மூன்று தோஷத்திற்கும்(ங்களுக்கும்) செய்யுங் குணம்[1]. பல காலம் மேனி வாடும். வயிற்றில் பாலத் தோர்[2] காது உச்சி குழியும. கொஞ்சம் நீராய் வயிறு கழியும். கண்ணிடி[3] விழும். கண் சிவந்திருக்கும். உடம்பு வெடி நாற்றமாய் நாறும். பசேலென்று வயிறு போம். முலை குடித்தால் பால் எதிர் எடுக்கும். உடம்பு வற்றி இருக்கும். தலையைப் பிற(புர)ட்டும். வயிறு மூட்டைபோலே நாறி கழியும். நாவும் பல்லும் உணரும். தாகமெடுக்கும். பலவிதமாக வயிறு கழியும். பல விகாரமும் செய்யும். இதன் குணம் அறிந்து பார்க்கும்படி[4].

இதற்குப் பரிகாரம்

பலிசெய்யும்படி[5] தண்ணீர் வார்க்க அஞ்சுக்கு[6] விபரம்:— ஆயத்து(த்)தண்ணீர்[7], வண்ணந்துறை(த்) தண்ணீர், வாய்க்கால் தண்ணீர், கிணற்றுத்தண்ணீர், குளத்துத்தண்ணீர் இந்த

1. இத்தோஷங்களால் உண்டாகும் குறிகள் என்று கருத்து.
2. வயிற்றில் பால் தங்காது (வாந்தியாய் விடும்) என்றிருத்தல் தகும்.
3. கண்ணில் இடி (குழி) விழும்.
4. பார்க்கும்படி = பார்க்க வேண்டும். (இங்கு சில குணங்கள் புனருக்தியாகத் தோற்றுகின்றன. ஆகிலும் மேனிவாடும் என்பதற்கு உடல் தூவளும் என்றும், உடம்பு வற்றும் என்பதற்கு உடல் இளைக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்).

ஆண்தோஷ லக்ஷணம் வேறிடத்தில் இவ்வாறு கூறப்படுகிறது:—

"போமே உச்சி கண்குழியும் பொருந்துண்பாலுந் தங்காது
போமே வயிறு பச்சென்று பொழுமியழுமே பறவைக்குரல்
தாமே குறுகும்ஒருவேலை தனியேதனியே சீறியழும்
காமே கறுத்தகுயிலாளே கலந்த புருஷதோஷமிதே."

5. பலி செய்யும்படி = பூஜை செய்வதற்கேற்ற.
6. அஞ்சுக்கு = ஐந்துவகை நீருக்கு.
7. ஆயத்துத் தண்ணீர் = இடைச்சேரியில் கிடைக்கும் ஜலம்.

ஐந்து வகை(த்) தண்ணீரும் கொண்டு வந்து, புது(க்) கலசத்தில் வார்த்து, ஈசுவரன் கோவில் தீர்த்தமும் குழிமண்ணும், அய்யனார் மடத்து மண்ணும், நற்சந்தி மண்ணும் (ஆக) இந்த ஐந்துவகை மண்ணும் கொண்டு வந்து, கும்பத்தின் கீழே பற(ர)ப்பி, அயி(ஐ)ங் கோணமாக எழுதி, அந்த சக்கரத்தின் மேலே கும்பத்தை வைத்து, தூபதீபங்கொடுத்து செபிக்க[1]:—

மந்திரம்

"அந்திக் கூத்தா, அந்திக்கூத்தா, அந்திக்கூத்தா" என்று மூக்கால் செபித்து[2], கும்பத்தை எடுத்து, தாய் தலையும், பிள்ளை தலையும் மூன்றுதரம் சுற்றி திருவாக்கிய காவலை செபித்து, கும்பத்து(த்) தண்ணீரை பிள்ளைமுகத்தில் எறிந்து, பின்பு அந்தத் தண்ணீரை(க்கொண்டு) பிள்ளை தலையை(க்) குளு(ளி)ப்பாட்டவும்.

பிள்ளைக்கு(த்) துவலை மருந்து


குட்டிவிளா வி(இ)லை, வேலிப்பருத்தி இலை, முடக்கொற்றுனிலை, ஆமணக்கிலை, உள்ளி, வசம்பு இவை எல்லாம் நைய(த்) தட்டிக்கொண்டு, உச்சியிலிருந்து உள்ளங்கால் மட்டும் துவலை இடவும். பின்பு நல்ல தண்ணீர் விட்டு (மீண்டும்) குளு(ளி)ப்பாட்டவும்.

இதற்கு பலி

அரிசி பொங்கி[3], ஒரு பிண்டமாக(ப்) பிடித்து, சட்டியிலிட்டு, சுண்ணும்பும் மஞ்சளுந்தடவி, மூன்று கோலத்திரியும் வைத்து[4] பிள்ளையை தாயின்மடியில் வைத்து, இந்த பலியை தாயின் தலையையும் பிள்ளையின் தலையையும் மூன்று தரம் சுத்தி(ற்றி) அப்பால் செய்யவும்[5]. இதற்கு யந்திரம் எழுதி(க்) கட்டவும்.

1. செபிக்க = பின்வரும் மந்திரமோதி ஜபிக்க வேண்டுமெனக் கருத்து.
2. மும்முறை மௌனமாய் ஜபித்து என்று பொருள்.
3. அரிசி பொங்கி = அன்னம் சமைத்து.
4. அந்த அன்னபிண்டத்தில் பள்ளம் செய்து மூன்று மூலைகளில் திரியிட்டு தீபமேற்றி எனக் கருத்து.
5. அப்பால் செய்யவும் = தூரக்கொண்டு போய் போடவும்.

வால்கிரி எல்லாவற்றிற்கும் யந்திரம்[1].



ஹரி	ஹரி	ஹரி
ஹரி	ஹரி	ஹரி
ஹரி	ஹரி	ஹரி
ஹரி	ஹரி	
ஹரி		

.....பத்தியம் காத்துக்கொள்ளவும். உப்பு புளி தவிர (ர்க்க)வும்[2].

கட்டு மாந்தத்திற்கு (குணம்)[3]

உடம்பு காயும், கண்கள் இரண்டிலும் பு(பீ)ளை சாறும் மயக்கம் எடுக்கும்.

---

1. வால்கிரி தோஷத்திற்கு இது இரண்டாவது மந்திரம். (64-ம் பக்கம் பார்க்க).

2. உப்பு புளி இரண்டையும் விலக்கி பத்தியமாயிருக்க வேண்டும் என்பது கருத்து.

3. கட்டுமாந்த குணத்தைப்பற்றி இது ஐந்தாம் முறை. (55-ம் பக்கம் பார்க்க).

இதற்கு மருந்து[1]

ஒரு சேர் கோழிக்காரம் (?) கொண்டு வந்து, ஓடு[2] காய வைத்து, அந்த ஓட்டில் இட்டு தீயக்காய்ச்சி, காரத்தை(க்) கொட்டிப் போட்டு, அந்த ஓட்டிலே வேலி(ப்)பருத்தி இலைச் சாறு, ஒரு படி அவரைத்தழை, ஐந்து சுரைத்தழை (இவற்றைப்) பிழிஞ்சு, ஒரு காசிடை புகட்டவும். இந்தப்படி மூன்று வேளை வார்க்கவும். பத்தியம் காரம் புளி தவிர்(க்க)வும்.

பசுங்குளி முட்டின குணம்[3]

இதற்கு மருந்து

நல்ல பிற(ர)ண்டையைக் கொண்டு வந்து, சிறுகச் சிறுக நறுக்கி, ஒரு சட்டியில் போட்டு, பொன்நிறமாய் வறுத்து, அதிலே ஒரு படி மோர்விட்டு, திப்பிலி க, திப்பிலி மூலம் கொஞ்சம், கடுக்காய் கொஞ்சம், களிப்பாக்கு பாதி, மு(மி)ளகு ஐந்து, ஓமம் கொஞ்சம், வசம்பு கொஞ்சம், ஒரு உள்ளிப்பூண்டு, பெருங்காயம் கொஞ்சம், ஆமைஓடு கொஞ்சம் இவை(வற்றை) எல்லாம் சீலையில் முடிஞ்சி போட்டு, அந்த மோரை ஒரு சேராகக் காய்ச்சி இறக்கிவைத்துக் கொண்டு, (முற்கூறிய) மோர் வார்த்து அரைத்து, குன்றுமணி பிரமாணம் குளி(கை) செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, மூலைப்பாலில் ஒரு குளிகை (உரைத்து) வார்க்கவும். (இவ்விதம்) மூன்று நாள் வார்க்கவும்.

---

1. கட்டுமாந்தத்திற்கு இது 6-ம் மருந்து. (60-ம் பக்கம் பார்க்க).

2. ஓடு = வறுக்கும் வாணலி அல்லது வாணலி.

3. பசுங்குளி என்பது குளிதோஷம் எனப்படும் பிள்ளைநோயில் ஒரு வகை எனத் தெரிகிறது; மாதவிடாய் குளித்தப்பெண் எடுப்பதால் (முட்டுவதால்) ஏற்படும் கோளாறு குளிமுட்டுதோஷம் எனப்படுகிறது. அந்நோயின் குணம் என்று இங்கு குறிப்பிட்டிருந்தும் அக்குணத்தைப்பற்றி ஒன்றும் இங்கு குறிப்பிடப்படவில்லை. அக்குணங்களை வேறொரு நூலிலிருந்து இங்கு எழுதுகிறோம்:—

> "மதலையின் மேனி வாடி வயிற்றினில் பாலுந்தங்கா
> சதலையிற் குழியுண்டாகிச் சர்த்தியுமெடுக்கு நீராய்
> நுதலினிற் சலமுறண்ணி நோக்கிய விழியுந்தாழ்ந்து
> குதலைவாய் கருகித்தான்றுங் குளித்தவ ளெடுத்தக்காலே."

...ப்பட்டை வராகனெடை, வாய்விளங்கம் விராகன் னெடை, சாதிக்காய் விராகனெடை, லவங்கம் விராகனெடை, (லவங்கப்)பத்திரி விராகனெடை, பெருங்காயம் விராகனெடை இந்தச்சரக்கு வகை எல்லாம் இடித்துப் பொடிசெய்து கொள் ளவும். பொடுதலை, சொ(சு)ரைத் தழை, அவரைத்தழை, ஊறவரை இலை(?), சின்னி இலை, அப்பக்கோவை இலை, சங்கங் கொழுந்து, நிலவிளாவி(இ)லை, பருத்தலாந்தழை(?), ஆவாரங் கொழுந்து, புங்கங்கொழுந்து, குழிமுட்டாந்தழை இந்தத் தழைகள் (ளிலிருந்து) சாறு வாங்கிக்கொண்டு, தகரை(த்) தழை, பச்சைத்தழையாய் (கொண்டுவந்து), சாறு வாங்கிக் கொண்டு, கடைச்சரக்கு(களை)ப் பொடிசெய்து போட்டுக் காய்வைத்து, மெழுகுபோல் திரண்ட பின்பு, கடலைப் பிரமாணம் குளிகைபண்ணி வைத்துக்கொண்டு, முலைப்பாலில் (லாவது), சுக்குத் தண்ணீரில்(லாவது) சாலடி நீரில்(லாவது) கொடுக்கவும்.

ஒடு மாந்தத்திற்கு

பொடுதழை (லையும்) ஓமமும் கிஷாயமிட்டுக் கொடுக் கவும். ஒடு மாந்தம் கட்டும். நுணை இலையும் ஓமமும் கிஷாய மிட்டுக் கொடுக்கவும்.

பிள்ளைப்பிணிக்கு மருந்து[2]

விடத்தேறை இருக்கிற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை அன் றைக்கு இடம்புரி வலம்புரியாம் சுத்தி(ற்றி) வந்து, வாயினுலே நார் உருவிக்கொண்டு வந்து, சூரிய நமஸ்காரம் பண்ணிக் கொண்டு, ஒருகட்டைப் பூண்டு, கடுகு, மு(மி)ளகு, மஞ்சள், இவை எல்லாம் வைத்துக் குளிசமாடி, கணபதிக்கு பூசைசெய்து கட்டவும்.

---

1. மாந்தத்திற்கு இது 6-வது மருந்து. (68 ம் பக்கம் பார்க்கவும்).

2. பிள்ளைப்பிணிக்கு இது 2-வது பரிகாரமுறை. (64-ம் பக்கம் பார்க்க).

கட்டு மாந்தத்திற்கு[1]

சுக்கு கழஞ்சு[2] க, நற்சீரகம் கழஞ்சு க, திப்பிலி கழஞ்சு-க வேர்ப்பட்டை கழஞ்சு க; இவை எல்லாம் ஒன்றுய் சேர்த்து, இடித்துக் கொண்டு, மாந்தத்திற்கு வென்னீரிலாவது ஓமக்கிஷா யத்திலாவது, நற்சீரகம், சுக்கு (இவற்றின்) கிஷாயத்திலாவது கொடுக்கவும்.

மாந்தத்திற்கு குளிகை[3]

திப்பிலி விராகன் ங, சுக்கு விராகன் ங, வசம்பு விராகன் ங, கட்டை பூண்டு, விராகன் எ, பெருங்காயம் விராகன் ங, வேலிப் பருத்திப்பட்டை துட்டிடை[4] க, நல்லவேளைப்பட்டை துட்டிடை க, ஆயப்பட்டை, பெருமரத்துப்பட்டை[5], யூரு(?) முருங்கப்பட்டை வகைக்கு துட்டிடை க, கருப்பட்டி[6] சுண்டைக்காய்ப் பிரமாணம் சேர்த்து அரைத்து, கடலை பிர மாணம் சேர்த்து அரைத்து, கடலை பிரமாணம் குளிகை செய்து வைத்துக் கொள்ளவும். சோறு தின்கிற குருந்தையாலுல் வென் னீரில் கொடுக்கவும். சிறு குழந்தைகளுக்கு முலைப்பாலில் கொடுக்கவும்.

இந்த மந்திரத்திற்கு[7] சக்கரம்

சுத்தமான இடத்திலே நாலு சத்திரமாய்[8] வளைத்து, இந்தச்சக்கரத்தை நடுவே எழுதி, அதன் பேரிலே சாணி(ப்) பிள்ளையார் வைத்து, தூபதீபங்கொடுத்து, பச்சரிசி, வெல்லம், பொரி, (இவற்றுள்) எதுவாகிலும் நைவேத்யம் பண்ணி, பின்பு

---

1. கட்டு மாந்தத்திற்கு இது ஏழாவது பரிகாரமுறை. (27-ம் பக்கம் பார்க்கவும்).

2. கழஞ்சு = பன்னிரண்டு பணவிடை. (ஒரு பணம் என்பது ஒரு வராகனிடையில் ஒன்பதில் ஒரு பங்கு).

3. மாந்தத்திற்கு இது 6-வது மருந்து. (28-ம் பக்கம் பார்க்க).

4. துட்டிடை = ஒரு பண இடையில் நாலிலொரு பங்கு.


5. ஆயப்பட்டை = நால்வகை பால்மரங்களில் ஒன்றின் மேற்பட்டை.

6. கருப்பட்டி = பனைவெல்லக்கட்டி.


7. 'இந்த மந்திரத்திற்கு சக்கரம்' என்பதிலிருந்து, பின்வரும் சக்கரத்திற்கு ஆதாரமான மந்திரமொன்று இங்கே விடுபட்டுப் போயிருப்ப தாய் தோன்றுகிறது.

8. நாலு சதுரமாய் என்று இருப்பது பொருத்தமாகும்.

இந்த உயிர் மந்திரம் சொல்லி, செவ்வற(ர)ருளிப்பூ சாத்தவும். இப்படி நூற்றெட்டு தரம் சொல்லி[1] சாத்தவும். அதன்பேரிலே யந்திரம் கட்டவும். மந்திரிக்கிற போது யந்திரத்தை கையில் வைத்துக்கொண்டு மந்திரத்து கட்டவும்.



பிராணப் பிரதிஷ்டை




1. இங்கு குறிக்கப்படுமாறு மந்திரமெதுவும் காணவில்லை.

மந்திரப் பிராணைய, யந்திரப் பிராணைய, சிவப்பிரா ணைய, பரமசிவப் பிராணைய, ஸர்வமந்திரப் பிராணைய, பிரதிஷ்டை பிராணைய, நம்பிரான் பிராணலிங்கப் பிரதிஷ்டை சிவன்ஆயுள் பிராணமும் பெருவாளமும்(?) உயிரும் அதிலே நிற்கச் சுவாஹா. ஹரிஃ ஓம் சிவலிங்கப் பிரதிஷ்டை, யந்திரப் பிரதிஷ்டை, ஓம், ஓம்.....அர சுப்பிரம் மண்யாய நம :

ஒரு வருஷத்திற்கு[1]

பிள்ளை பிறந்து ஒரு மாதத்தில் சனி என்று(னு)ம் தேவதை யின்[2] குண்ம் குடித்தபால் செரியாது. சிறுநீர் சிவந்து இறங்கும். இதற்கு பலி மூன்று வண்ணச்சோறும், பாக்கும், வெற்றிலையும் மண்கலத்தி(லி)ட்டு, ஊருக்கு கிழக்கே மூன்று சந்தியில் வைக்கவும்.

இதற்கு யந்திரம்—அஷ்டகோண சக்கரம்



1. "பிள்ளை பிறந்த ஒரு மாதத்திற்கு" என்றிருப்பது பொருந்தும். அடுத்து வரும் வாக்கியத்தைப் பார்க்கவும்).

2. சனி என்னும் தேவதை தாக்கும் என்று கருத்து.

பிள்ளை பிறந்த ஒரு வருஷத்திற்கு

பிள்ளை பிறந்த ஒரு நாள், ஒரு மாதம், ஒரு வருஷத்தில் பரமசத்தி என்னும் தேவதை[1]. அதின் குணம், மேல்நோக்கி அழும். மு(வி)ழிக்கும். உடம்பு மருந்து(போல்) நாறும், சிறுநீர் சிவந்திருக்கும். கண்மூடி இருக்கும். வெதும்புமும்,[2] வயிறு கழியும் பால் தரிக்காது.

இதற்கு பலி

மாவாலே பாவை செய்து, கறுப்பு சிக(வ)ப்பு வெள்ளை புள்ளி(கள்) குத்தி, சந்தனம் பூச்சூடிவைத்து, ஊருக்குக் கிழக்கே நடுவழியில் விளக்குஏற்றி வைக்கவும்.

இதற்கு யந்திரம்

ஹ்ரு ஹ்ரூ ஹ்ரு ஐ ஓ உ உ ந ஓ உ உ ா ஓ உ ஸ்ரீ ஐ விலை உ ரு ம் ஹ்ரு எ ஹ்ரும்ஹ்ரு ஸ ஸ ஸ ஸ ற ஹ்ரூ வ ஹ்ரூ ஹெலா ந உ :''.

பிள்ளை பிறந்த இரண்டு வருஷத்திற்கு

பிள்ளை பிறந்த இரண்டு நாள், இரண்டு மாதம், இரண்டு வருஷத்திற்கு குணபதிஎன்னும் தேவதை, இதின் குணம். வெதும்பும், வாந்தி(எடு)க்கும். சீறும். நெஞ்சி இறுகும். நடுங்கும்.

இதற்கு பலி

சாரசோறும்(?) மாவானுலே பாவைசெய்து.....டுது அகலிலே நெய் வார்த்து, சந்தனம் பூவும் எருக்கிலையிலிட்டு மயானத்திலே வைக்கவும். "ஓம் தாநாதிபதி உந்தியதில் பணிந்தேன்." (என்று உச்சரிக்கவும்.)

---

1. முதல் வருஷத்தில் பரமசச்தி என்னும் தேவதை குழந்தையைத் தாக்கும். இவ்விதமே இனி குறிக்கப்படும் தேவதைகள் விஷயத்திலும் அறிக.

2. வெதும்பும் = உடலில் வெப்பம் அதிகரிக்கும்.

இதற்கு யந்திரம்[1]

ஹ்ரு ஓ உ ஓ உ ஹ்ரு ஹ்ரு ஸைத உசு.

(பிள்ளை பிறந்த) ஐந்து வருஷத்திற்கு

குழந்தை பிறந்த ஐந்து நாள் ஐந்து மாதம், ஐந்து வருஷத்திற்கு குணம். காடுமதி மாமுனி என்னும் தேவதை. இதின் குணம். (அதிகமாகத்) தூங்கும். மேல்நோக்கி விழிக்கும். மூலை உண்ணுது. மேனி அழகும்[2] விருங்கிடும்; வெதுப்பு விடாது. வயிறு பேதிக்கும்[3].....டிக்கும்.

இதற்கு பலி

உளுந்துமாச்சோறும், தயிரும், பஞ்சவர்ணச் சோறும், அப்பம், பச்சை அரிசி (இவற்றையும்) ஆமணக்கிலையில் இட்டு, உச்சிப்போது[4] சுடலையில் வைக்கவும்.

இதற்கு யந்திரம்

"ஓற்ற ஓ உ வீற ஹ்ரு ஐ ஐ வ பெரிஞிறப்படி உ ஹ்ரு ஓம் பட்.....அங்கிசம ஷந".

(பிள்ளை பிறந்த) ஆறு வருஷத்திற்கு

குழந்தை பிறந்த ஆறும் (பிள்ளைபிறந்த) நாள், ஆறும் மாதம், ஆறும் வருஷத்திற்கு மிண்டிமாமுனி என்னுந் தேவதை. இதற்கு குணம். உடம்பு சிறுத்திருக்கும்[5]. மெலியும். மற்றும்

---

1. இந்நூலுக்கு ஆதாரமான ஓலைச்சுவடியில் ஓர் ஏடு தவறியிருப்பதால் மூன்றுவது நான்காவது வருஷங்களில் தாக்கும் தேவதைகளாலான கோளாறு விஷயம் விடுபட்டுப் போயிருக்கிறது. அவ்விதம் தவறியுள்ளது ஓலைப்புஸ்தகத்தில் 26-ம் ஏடு என்று தெரிகிறது.

2. குழந்தையின் உடல் அழுகிப் பதன்கெடுவதுபோல் அதிக விகாரமடையும் எனக் கருத்து.

3. வயிறு பேதிக்கும் = வயிறு கழியும்.

4. உச்சிப்போது = நடுப்பகலில்.

5. குழந்தையின் தேகம் வயதுக்கேற்றவண்ணம் வளராது எனக் கருத்து.

விக்கல் எடுக்கும். மு(வி)ழி நிமிரும்[1], அழும், நித்திரை இல்லாமல் வந்திருக்கும் கண்.....கும். வெதும்பும், மூலை உண்ணுது.

இதற்கு பலி

உளுத்தஞ்சோறும், பு(பி)ண்ணுக்கும், லெக்கிரி(?)எண்ணை (ணெய்) பொரி, அவல், இளநீர், (இவற்றை) கல்லிலையில்[2] இட்டு, சந்தியா காலத்தில் காளிகோட்டத்தில் வைக்கவும்.

யந்திரம்

"ஸ ஸ ஸ ஹ பி ப ஸ பட சபு ஹ்ரூ ஸ ஸ தீ
அ அ அ மெத மெ".

(பிள்ளை பிறந்த)[3] ஒன்பதாம் வருஷத்திற்கு

ஒன்பதுநாள், ஒன்பதுமாதம், ஒன்பது வருஷத்திற்கு காளியடா மென்னுந் தேவதை : இதின் குணம், பிள்ளை (பால்) உண்ணுது. அழும். விக்கல் எடுக்கும். வாய்வேற்(ர்க்)கும்[4]. மலங் கழியாது. கண்மூடி இருக்கும். கண் மாறி மு(வி)ழிக்கும்.[5]

இதற்கு பலி

உள்ளும், அவலும், அவரையும், வெல்லமும், பஞ்சவர்ணச் சோறும், பீர்க்கங்காய் கறியும், பொரியும், காலத்திலே[6] பிடாரி கோவில் நடுச்சந்தியில் வைக்கவும்.

---

1. எப்பொழுதும் மேல்நோக்கிப் பார்க்கும் என்று பொருள்.

2. கல்லிலை = கல்லாலையிலை.

3. இங்கே இந்நூலுக்கு ஆதாரமான ஓலைச்சுவடியில் ஓர் ஏடு காணப்படவில்லை; ஆகவே ஏழாம்—எட்டாம் வருஷங்களில் தாக்கும் தைவங்களாலான கோளாறுகள் விடுபட்டுள்ளன. (அது ஓலைப்புஸ்தகத்தில் 28-ம் ஏடு என்று தெரிகிறது).

4. வாயிலிருந்து சொள்ளுநீர் ஒழுகும் என்பது கருத்து போலும்.

5. பிள்ளை வெவ்வேறு வகையில் விழித்துப் பார்க்கும் என்று பொருள்.

6. சந்திநேரத்தில் என்று பொருள்.

யந்திரம்

ஓ உ ஹ்ரூ ஹ்ரு ஹ்ரு ஹ்ரு ரொம் உ ஊ மு ஐ
ஷை ற ண ற ற லி ள ச
ஒ ஒ ஒ

(பிள்ளை பிறந்த) பத்தாம் வருஷத்திற்கு

குழந்தை பிறந்து பத்து நாள், பத்து மாதம், பத்து வருஷத்திற்கு மாசகுனியிஞ்சி என்னுந் தேவதை. இதின் குணம். நலநாளும் சிறுநீர் சிவந்திருக்கும். (உடல்) வெதும்பும். தலை நோகும். வயிறு வலிக்கும். கண்சொருகும். பல விகாரம் பண்ணும். மூலை குடியாது, உம்புநீர் மெத்தி விசகும்(?).

இதற்கு பலி

பாலும், சோறும், பருப்பும், பச்சை அரிசியும், உளுந்தும், பொரியும், பஞ்சவர்ணச்சோறும் மூன்றுஞ்சாமத்தில் ஊருக்கு மேற்கே வைக்கவும்.

யந்திரம்

ஹ்ரூ வ ச ம ம ற ண ரு வென்கிற வசந்தே நடலே
ந ம பு கண ற ற ஹ்ரு ஹ்ரு உ று று று ந று ற ந.

பொருமல் குணம்

கருக்கிமே வெகுவீச் சென்னும்
சேர்ந்ததோர் பச்சைவெள்ளை சிறந்துமேல் மலமும்.
நீரும் வாந்தியே பண்ணும் கண்டூர்வலி
.....யுடன் சன்னிதானே[1]. (89)

---

1. இச்செய்யுளில் சிலபாகம் விடுபட்டுப்போயுள்ளது. பொருமல் என்பது வயிற்றில் விம்மல் முதலிய கோளாறுகளுண்டுபண்ணும் ஒரு கோளாறு.

பொராமம்[1] குணம்கேளீர் பொருமிடும் வயிறுதள்ளும்
நேராக வயிறுபோகும் நெற்றியில் வலியுத்தோன்றும்
சீராக முலையுண்ணது சீறியே வெருவி(ப்)பார்க்குமங்[2]
கார்குழல் முலையினளே இதின் குணந்தானு
[மென்றே. (90)

பொராமத்தின் குணம்கேளீர்
பொருமிப்பொருமி வயிறு கழியும்
மாரைஇடிக்கும் தலை நோகும்
வயிறே வலிக்குமிகச்
சோரும்[3] நேரேசர்த்தி[4] உண்டாகும்
நேத்திரம் பூதான் புடைக்கும்[5]
பாரோ ரறியபால் கறக்கும்(?)
பரிந்தே இதனை(ப்) பாரீரே. (91)

நீராமக் குணம்

நீரும் சீத்ததேடேதான் பச்சை மஞ்சளாகிகண்
நீரும் பூவிற்பாய்ந்து கடுப்புடன் வலித்தேசொருகும்
உண்ணீரு முத்துப்போலே ஓடவே களிந்துதாகில்
எண்ணீரோ நீராமத்தை எவரும்தீர்க்க வல்லார்[6]. (92)

---

1. பொராமம் = பொருமலுடன் கூடிய ஆமமென்னும் அஜீர்ணக் கோளாறு.

2. வெருவிப்பார்த்தல் = பயந்து பார்த்தல்.

3. மிகச்சோறும் = அதிகமாகக் களைத்துத் துவண்டுபோம்.

4. சர்த்தி = வாந்தி.

5. நேத்திரம் பூ புடைக்கும் = கண்களுக்கு எதிரில் பூக்கள் போன்று மினுமினுப்புக் காணும்.

6. நீராமம் என்பது ஒருவித கணரோகம். இச்செய்யுளை வேறொரு நூலில் பின்வருமாறு காணப்படுகிறது :—

" தண்ணீருஞ் சீதத்தேடேதான் பச்சை மஞ்சளாகும்
கண்ணீரும் பீளைபாய்ந்து கடுப்புடன் வரித்துச்சோரும்
உண்ணீரு முத்துப்போல் ஓடவே கழிந்ததாகில்
தெண்ணீராம் நீராமத்தை எவருளார் தீர்க்கவல்லோர்."
(பால வாகடம்)

ஆம சன்னி

முலை[1] உண்ணது அழுது பார்க்கும் முகமது வேறதாகும்
பலபல வலிப்புண்டாகும் பாலகன் குரலும் கம்மும்
மலமது கட்டுமெய்யில் வந்திடும் சுரமுமீதே
மலமது வல்ல மின்னே ஆமத்தின் சன்னிதானே. (93)

தாகமே மிகவுண்டாகும் சரீரத்தில் சுரமுண்டாகும்
வாகிய[2] மலமும் தீஞ்சு மலமுமே கறுப்புண்டாகும்
நோகுமே வயிறு ஊதும் நோக்கா நேத்திரமுந்தான்
சுழலுமாம் இருமை போலிருக்குமாம்[3] சன்னிக்
குணம்[4] இதுவே. (94)

உய்யாதபடி குடிதன்னில் குறவமனத்துயரந் தன்னைச்
செழுன் புனல் தட்ட[5].

பதின்மூன்று வருஷத்திற்கு[6]

(வசனம்)

குழந்தை பிறந்து, பதின்மூன்று நாள், பதின்மூன்று மாதம், பதின்மூன்று வருஷத்தில் மெய்யசின்னி என்னுந் தேவதை.

---

1. இதே செய்யுளை பாலவாகடத்திலும் காணலாம்.

2. வாகிய மலமும் = வழக்கமாய் வெளியாகும் மலமும்.

3. இருமைபோலிருக்கும் = பார்க்கப்படுவதெல்லாம் (ஓர்உருவம்) ஈருருவம் போல் தோற்றும்.

4. சன்னிக்குணம் = ஆமசன்னி என்னும் நோயின் குறி.

5. "உய்யாதபடி".....என்னும் செய்யுள் இங்கே அரை குறையாய்விட்டுப் போயிருக்கிறது.

6. இதற்குமுன் பிள்ளை பிறந்த பத்தாம் வருஷம் வரையில் ஏற்படும் தைவக்கோளாறுகள் கூறப்பட்டன. (10-ம், 87-ம் பக்கங்கள் பார்க்க.) பிறகு ஆமதோஷம், சன்னி முதலிய வேறு விஷயங்கள் கூறப்பட்டன. மறுபடி இங்கே பதின்மூன்றும் வருஷத்திலேற்படும் கோளாறு குறிக்கப்படுகிறது. அதிலும் பதினொன்று பன்னிரண்டாம் வருஷங்களின் தோஷக்கோளாறுகள் காணப்படவில்லை. இதனால் விஷயங்கள் ஒழுங்குக்குறைவாக அமைந்திருப்பதுடன் ஓலைச்சுவடியில் இடையில் சில ஏடுகளும் தவறியிருக்குமென்று தோன்றுகிறது.

இதின் குணம்

மெய்யலர்ந் திருக்கும்[1] ; வயிறு பேதிக்கும் ; அழும் ; மேல் நோக்கி மு(வி)ழிக்கும் ; உடம்பு இளைக்கும்.

இதற்கு பலி

பருப்புச்சோறும், பணியாரமும், தயிர், வெண்ணை(ணெய்) வார்த்துக் குழைத்து, மண்கலத்தில் இட்டு, சந்தியா காலத்தில் பிடாரிகோவிலில் வைக்கவும்.

இதற்கு யந்திரம்

ஹ்ரு ஹ்ரு ஹ்ரு ஸீ ஹ்ரை லெ ஒ.

.....[2]பலகாலுங் கக்கயிடு சிறுமிடுக்காகுங் கண்
[சிவக்கும். (11)

ஆரு மாதம்[3]

பாலசொரு பகலிலை பணை கோழி மண்
கலத்தில் சோற்றைப் பிசைந்து தொகுப்பாவை
மேல்த்திசையில் வெள்ளைப் பூச்சூடி (கதிரோன்) விழும்
பொழுதில் வைப்பிக்க தெள்ளுதமிழ் மிடவிதிரும்.(12)

கர்மா பருமாத கருதி முருகி என்றும்
பிறந்தாரு மாசம்வெப்புச் சிறங்காகும்
அறமுள்ள பால்எடுக்கும் மெய்கருக்கும்
பறந்தவீழி கொட்டாவியால் இரண்டு தீர்த்தாக
[மாம். (13)

---

1. மெய்யயர்ந்திருக்கும் = உடல் சோர்ந்திருக்கும்.

2. மூலச்சுவடியில் சில (2) ஏடுகள் தவறியிருப்பதால் சில விஷயங்கள் மத்தியில் விடப்பட்டிருக்கின்றன. செய்யுளிலும் கடைசிவரி தவிர்த்து மற்றவை காணப்படவில்லை.

3. ஏடுகள் தவறிப்போன காரணத்தால் குழந்தை பிறந்து ஐந்து மாதங்களளவும் காணக்கூடிய கோளாறு சம்பந்தமான விஷயமும் விடுபட்டுப் போயிருக்கிறது ; ஆகவே இங்கு ஆறுமாதம் ஆரம்பிக்கிறது. இங்கிருந்து 28-ஆம்செய்யுள் முடியும் வரையிலுள்ள விஷயங்கள் ஆண்பிள்ளைகள் சம்பந்தமானவை,

அறியு மறுத்துஞ்சேர பறுக்கி மண்ணிற்பாவை
குறிமண் கலத்திலிட்டு கோழிபலி
சிறிய மூள்றும் பைப் பூச்சீடி சொல்லுத்தொழு(?)
சந்தியிலே அம்புவியில் வைக்கலாம். (14)

ஏழாம் மாதம்

உற்றதோர் திங்களுத்தாரபதி என்னும் பேய்
பற்றிமூலை யுண்ணப்பகுணமும் நித்திய
நித்தியம் சிறிஅழும் குணங்கள் செய்யில் பலி
கேளாய் கூறுந்தவிடு புழுக்கிக்கொள். (15)

தூதுவிளங் காயுடனே சோறு முப்பாலிலே கறியும்
மாதுரை மண்கலத்தில் மரப்பாவை
போது புண்ணிய ஆல்குத்தி மூன்றும் நாள்
ஆவாரம் பூச்சூட்டி மாலையில் தாரசாந்தி
[தனில் வை. (16)

எட்டாம் மாதம்

ஏல மழகி என்றும் பேயிணையு மெட்டதனில்
ஏலமுடன் முட்டை உடைத்தாப்போல
சிலமுடன் வெம்புழுச்சி தாமும் வேழ்க்கும்
மிக நாவறளும் நம்பியிடுக்குளமே நன்று. (17)

கூழாக்கிப் பாலில் கறி சோறுங்கொண்டு வெண்ணெய்
பாழாக்கும் பெயிலது படிஇலை
கீழாக்கில் தவிட்டில் ஒருபாவை பண்ணி
தாழ மண்கலத்தி லிடுகுவட் டெருக்கம்பாவை
[இடங்கொள். (18)

ஒன்பதாம் மாதம்

திங்களாம் ஒன்பதினில் சொசங்கபாலியது
பங்கபட்ச செட்டை பண்ணிவைக்கும்
தங்க இகத்துடுதுழலை செப்புஞ்
சொல்லுங்கேளாய் நீர்இதனை செய்ய நினை. (19)

வெள்ளாட்டுப் பாலில்அன்னம் வேண்டும் ஒப்புடன்
நள்ளிஇடு மண்கலத்தில் ஆண்பாவை
குள்ளிகுத்தி ஏழ்ச்சாந்தி வைக்க ஏகிவிடும்
பேய்கள் நீள் புவியோடு செய்ய நினை. (20)

பத்தாம் மாதம்

திங்களொரு பத்தில்அதிக நாறங்கியது
அங்க மஞ்சளி சன்னியாக்கி வீடும்
அங்கம் கழியும் அழுவிக்கும் கண்மேல் மூடும்
வழியுடனே தான்பலி செய் வாங்கு. (21)

பஞ்சவர்ணச் சோறும் பழம் பாகல் காய்கறியும்
விஞ்சு பூ விட்சுப் பூ வென்பும்
மஞ்சுதினிசி மேற்கைதனில் வைப்பிக்க மின்பேய்
பேர்ச்சொல்லி அரக்குமிது செய்வீரரி. (22)

பதினென்றும் மாதம்

ஒன்றுகும் பத்திலே உத்திர மாகாளியது
நன்றுகத் தங்கம் நரம்புக்கு
குன்றுகச் செங்கலாகவே சீதம்
சிவப்பிக்கும் தங்கம் பலவிதந்தான். (23)

பச்சரிசி அன்னம் பசுவின் தயிருடனே
உச்சமொரு சுளியாய் அண்டபாவை
நிச்சயமாய் கார்த்திகைப் பூச்சூட்டி கார்மாலையம்
பொழிதில் நாடிச்சுடலை வைக்க நன்று. (24)

பன்னிரண்டாம் மாதம்

திங்களு மிரண்டுபத்தில் சோழுடு மென்றும்
பேயாங் கண்விழிசொருகும் சுழன்று உறங்கும்
அங்குஞ் சிறங்கதான் எங்குஞ்சீறும் பலகுண பார்வை
[தெரிந்தும்
கொள்ளைப்பூ முன்னுள் கோழிபலி உச்சியிலே
[இன்னுபிடாரி யிடமேத்து. (25)

சாமுண்டி யென்னும் பேய்தான் தாக்கும் வயிறு கழியும்
உண்டபாலும் எதிர்எடுக்கும் தான்
முன்றிஉச்சி குழிந்தே யரைக்கண் விட்டதலை
உருண்டு நிச்சயமாய் முன்னிருத்தி னேன். (26)

சாரூயங் கோழியுடன் சாதம் புண்ணைக்குடனே
ஆரூமீன் கத்தரிக்காய் கறியு மரிஇலை
பாராதோ மாவாலே பாவைபண்ணி மண்
கலசததில் வைத்துப் பூவானது சூடியோற்று. (27)

இடைக்கிய மஞ்சுகோலமுடன் சூழ நட்டு
அடை வாடையுந்தான் பொரியுமஞ்சு வைத்துகடை
வெண்ணை(னெய்) கூட்டிப்
படைத்துக் குழந்தைதனைச்சுற்றி ஓட்டைச்சுடலை
[வைக்க ஓடும். (28)

இதற்கு யந்திரத்துடனே வைக்க மந்திரத்துடனே பண்ணி
வைக்கவும்.

ஆண் பிள்ளைக்கு முற்றும்[1].

பெண் பிள்ளைக்கு

ஓராந்திங்கள்[2] பெண்ணுக்கு

ஓராந்திங்கள் ஆறணியே ஓடக்கழிந்து
சுரமுண்டா மென்றுலிது பலிகேளி இனியச்சந்தனம்
மரப்பாவை குன்றுக்குடைகள் சிவந்த நற்பூவும் கூறும்
[உளுத்தஞ் சோறுடனே
நன்றுயஞ்சு திரிகொளுத்தி நாற்சந்தியில்
[வைப்பீரே. (30)

---

1. ஆண்பிள்ளைக்குச் சேர்ந்த நோய்கள் மருந்துகள் விஷயம் முடிவு பெற்றது என்று குறிக்கப்படுகிறது.

2. ஓராந் திங்கள் = ஒரு மாதம்.

இரண்டாம் மாதம்

மாதமுமிரண்டு பேய் கொத்தி மதனை சிரசும்
சீதம்போக்கும் சர்த்திஎடுக்கும் சிரங்குண்டாம்
அதன்பலிதான் உளுத்தஞ்சொறையும் பூதிய அகலில்
[மேல்பாவை
நாதமஞ்சிந்த எடுக்கிலையில் நாற்சந்தியிலே
[வைப்பீரே. (31)

மூன்றும் மாதம்

மூன்றுந்திங்கள் பேய்காளி முறுக்குங் காயும் வயிறுகழியும்
கண்டாய் இதற்குபலி கேளாய் கருத்தகுக் குடம்
[சோறு
குன்றுசல வெங்கமலமாப்பாவை கொன்னைதும்பைச் சூடி
உன்றுல் காளிபேர்சொல்லி ஓடி மேற்சந்தியில்
[வைப்பீரே. (32)

நான்காம் மாதம்

நாலாந்திங்கள் பேயின்போர்ணும்
நாலையிம் மூர்ச்சிக்கும்
பாலும்எடுக்கும் சிரங்குழியும் பார்க்கும்
வெறிக்க அதன்பலி தான்
சாலா உளுத்தஞ் சோற்பஞ்
சாத்தை எள்ளும்பொரி யிறைச்சி
வேலார் விழியுடனே மசானக்
கரையில் வைப்பீரே. (33)

ஐந்தாம் மாதம்

அஞ்சாந்திங்கள் மாமுனிவனதுதான்
வெதுப்பிதான் கழியும்
நெஞ்சும் வற்றி சிரங்குழியும்
நெகிழாதிருக்கும் அதன்பலி தான்
அஞ்சா உளுத்தஞ்சோறு பஞ்ச
வர்ணச் சோறுடனே
நெஞ்சாவிழியாள் நாட்டில் வைத்து
நாற்சந்தியில் வைப்பீரே. (34)

ஆரும் மாதம்

ஆருந்திங்கள் சாமுண்டிஎன்னும் பேய்
வந்தால் தினம் குணம்தான்
மாருதெடுக்கும் கண்சொருகும் வயிறு
பொருமும் அதன்பலி தான்
நீருமாவும் இளநீரும் நிறம்பக்
குறைத்தச் சந்தனமும்
போருய்ச்செய்து ஓட்டில் வைத்து பிடாரி
கோட்டம் வைப்பீரே. (35)

ஏழாம் மாதம்

ஏழாந்திங்கள் பெயிருன்ன வெதுப்பும் முலையுண்ணு
தாழாகலத்து மூர்ச்சிக்கும் தாக்கும் வெகுவாயிதன்
[பலிதானே.[1] (36)

எட்டாம் மாதம்

எட்டாந்திங்கள் நாற்சிங்கனென்று
பேய் மிகவே தான்
மட்டாய் கழிஞ்சு மூர்ச்சிக்கும்
வயிறு பொருமு தன் பலிதான்
துட்டா ஓட்டில் தானெருமை
மாவாலே நியாதை நிறுத்தி
பூட்டாய் சந்தனம் பூவிட்டு போற்றிச்
சுடலையில் வைப்பீரே. (37)

ஒன்பதாம் மாதம்

மாதமொன்பதில் மாமுனிவனென்னும்
(பேய்)பிடித்து தான் வயிறும்
பாதங்குளிரும் வயிறுகழியும்
பலவிதமாகு மிதன் பலிதான்

---

1. இங்கு செய்யுளில் இரண்டு அடிகள் விட்டுப் போயிருக்கின்றன.

போதருறுசு வண்ணப்பூ புதிய அகலில்
அவை யமர்த்தி
பேதாயிச்சந்தனந்தான் தெளித்து
பெரியசந்தியில் வைப்பீரே. (38)

பத்தாம் மாதம்

பத்தாந்திங்கள் அதிபாலாபத்தி
வயிறுதான் கழியும்
மெற்றச் சிரசுவலி யுண்டாம் மிகவும்
பலசுரந்தான் பலிதான்
வற்ற உவஞ்சுவர்க்கு சோற்றிலே
பூவும் சந்தனமும்[1]. (39)

தூங்கு புள் குணம்[2]

சுருண்டு எழுந்திருக்கச் சோறும்
அருந்தியதெல்லாம் கக்கும்
இருண்டிடும் கண்கள்தானு மிமையின்
மேல் சொருகிக்கொள்ளும்
பிறண்டு வீறிட்டழும்
பேயுறக்கமாய் பல்கடிக்கும்
சுருண்டுதான் கீழேநோக்கும்
தூங்கும்புள் தோஷந்தானே. (44)

மாங்கியுக்க கந்தனே குடித்து
வயிறு கழிந்தே வாந்தியுமாய்
பாங்காய்த்திரும்பி மிகப் பார்க்கும்
பயமாயழுது வயிறென்றும்

1. இங்கு மூலச்சுவடியில் ஓர் ஏடு (39-ம் ஏடு) தவறியிருப்பதால் அநேக வரிகள் விட்டுப் போயிருக்கின்றன. ஆகவே 39-ம் செய்யுளில் ஒரு பாகமும் 40, 41, 42, 43-ம் செய்யுட்களும் இங்கு காணவில்லை.

2. தூங்குபுள்குணம் = தூங்குபுள் தோஷமென்னும் கோளாறு சம்பந்தமான குறி.

தூங்கித் துருசிப்பாயு மிசை சார்ந்தே
வீறிட்டெழுந்திருக்கும்
தூங்கும் புள்ளின் தோஷமிது
தொங்கர் என்ன சொன்னரே[1]. (45)

விளக்கொளிக் கண்ணன்[2]

குடித்தபால் எடுக்கும் மெய்யும்
கூர்மையாய்க் காயுமோயும்
அடிக்கடி காயும்அன்றி அரியதாய்
சிந்தை நோக்கும்
பிடித்த நன்முலை யுண்ணாது பெருவிடாய்க்
கொண்டு சோரும்
இடுத்திடு மிந்தநோய்தான் விளக்
கொளி கண்ணன்தானே[3]. (46)

1. தூங்குபுள் தோஷம்பற்றி பாலவாகடம் இவ்வாறு கூறுகிறது :—
" தூங்குபுட்டோஷமது தோன்று குறிதன்மை
செயல் தொகுதியா யுரைசெய்திடின்
தூங்கவரை விழியில் புட்பார்ப்ப
தென்னவத் துக்கம்விட்டலறி யெழுதல்
தாங்குகண்ணீரண்டு மேலிமையினுள்ளே
சொருகல் தாங்கி காணுக்கழிதல் வாந்தி
திருமுகம் பலமுறைத்திரிமியே பார்த்திடல்
சார்பயத் தழுதல் மிகவாய்."
" ஆங்கிருப்பதி லிருந்தொழல் முரடதாகவே
யருந்தீர் பற்கடித்தல்
அடிப்பார்வை பார்த்தல் சோர்வுடன்
மயக்கந் தலையதனுச்சி பன்னமாதல்
வாங்கிடுதல் மேல்மூச்சிதனோத் தலுடல்
முகமாறல் வருதலிவை காணிமுலார்
மனமிகவருந்துவர் தீர்ந்திடாக் குறியென்று
வகையறிந் துரைப்பை யாலோ."

2. விளக்கொளிக் கண்ணன் அல்லது விளக்கொ டுண்ணன் என்பதும் ஒருவகை பகந்திதோஷம்.

3. இதே செய்யுள் பாலவாகடத்திலும் காணப்படுகிறது. இதில் " இடுத்திடுமிந்த நோய் தான் " என்னும் காலாமடியிலுள்ள சொற்றொடர் பாலவாகடத்தில் " விடுத்திடும் விளக்கை நோக்கா " என்கிற விதமாயுள்ளது.

வெண் கண்ணன்[1]

வெளுங்கள் கழியும் பால்போல வென்றீரம்
மேல் அதுவன்றி காயும்
குளுக்கென இறையப்பண்ணி குடித்த
வண்ணம் பேதிக்கும்
அளுத்திடும் வயிற்றினுள்ளே
ஆனதோர் பலியுமாகும்
புளுக்குன மீதேயென்று பொந்து
வெண் கண்ணனே[2]. (47)

கருடக் கண்ணன்

புதுப்புனல் வழிந்துகொண்டு புளவீனப்பட வெடுக்கும்
எதுப்படக் கண்ணுந்தாயு மிருவர்போன்றிருவ
[னென்று
முதற்பிள்ளைப் பட்டபாடு முந்தியே பத்திநீற்கும் வீத்
ததின் கருடக்கண்ணன் விலங்கிடும் வேல் கண்
[மாதே[3]. (48)

---

1. வெண்கண்ணன் என்பது ஒரு பக்ஷிதோஷம்.

2. வெண்கண்ணன் புள்தோஷத்தைப்பறிய பாடல் பாலவாகடத்தில் சொற்ப மாறுதலுடன் இவ்வாறுளது :—

"வெளுக்கென கழியும்பால்போல் வெளிறிமெய்த்துவண்டு காயும்
குளுக்கென இரைச்சலுண்டாம் குடித்தவல் வணம்பேதிக்கும்
அளித்திடும் வயிற்றினுள்ளே ஆனதோர் வலியுமாகும்
வெளிப்படை சூமோவென்னில் வேங்கண்ணன் குணமதாமே."

3. கருடக்கண்ணன் பக்ஷிதோஷத்தைப்பற்றி பாலவாகடத்தில் பாடம் பின்வருமாறு :—

"புதுப்புனல் வடிந்துகொண்டு புகழ்முலைப் பாலொடுக்கும்
எதுப்படக் கண்ணுந்தாழும் இருபக்கம் பீளைகட்டும்
முதிர் பிள்ளை படும்பாடாக முந்தியே பற்றி நிற்கும்
விதத்தலை வயிறு பார மிகுங் கருடக்கண்ணற்கே."

(செங்கண் புள் தோஷம்)

சிவந்த[1] கண்ணீர் ததும்பும் சிரங்குளிர்ந்
திருக்கும் வேம்பித்
துவந்துபோய் நிலத்தில் வீழ்ந்து
தடக்கையால் முகந்துடைந்தும்
மெலிவாய் அழும் பாலருக்கு
வெப்பு நாருய் பேதிக்கும்
சிவந்ததோர் குணங்கள் கண்டால்
செங்கண்புள் தோஷந்தானே. (49)

வற(ரட்)ப்புள் குணம்

[2]உடலது வறண்டு மெத்த உறங்கிடும் மேனியுலுர்ந்து
கடல் இரைந்தாப்போல சத்தம் கருக்குரி என்று
[மூன்றிது(?)
இடமுடனு வறண்டு திக்கெங்கும் பார்த்து நின்று
விடமது பால்காயும் வெறுண்டும் வற(ரட்)ப்புள்
[தானே. (50)

வேப்பம் பூப்போலப் பொருந்து மூக்கையே துடைத்து
கொப்பாய் நாவும் வறண்டு தண்ணீர் குடிக்கப்
[பரிதவித்தல்
கர்ப்பங் கைமா முக மாதே
செப்பாய் வற(ரட்)ப்புள் தோஷ மென்றே.[3] (51)

---

1. "சிறந்து கண்ணீர் சொரிந்து சிரங்குளிர்ந்திருக்கும் வெம்பித்
தவழ்ந்துபோய் நிலமதில்வீழ்ந்து தடக்கையால் முகந்துடைக்கும்
விவந்தியாய் அழுதுபாலன் வெப்புநீராய் பேதிக்கும்"
என்றவாறு பாடபேதம்.

2. "உடல் ரெண்டு வாய்திடு யுறங்கிடு மேனி வற்றும்
கடலிரைந்தாற்போல் சத்தங் கண்குழி தலையுமாட்டும்
திடமுடன் நாவரண்டு திக்கெங்கும் பார்த்திருக்கும்
விடமது போலக்காயும் விரண்டிடும் வரட்புள்தானே."
என்பது பாலவாகட பாடம்.

3. "வேப்பம்பூப்போல் வயிரெழுகும் விடாதகண்ணீர் தலைவலியும்
பூப்புனல் மாந்திப் புறங்கையால் பொருந்த மூக்கையே துடைக்கும்
கோம்பாய்த் தனக்கே யெதிரில் சலங்குடிக்கக் கண்டு பரிதவிக்கும்
கோப்பான குரலாம் விலாகுளிரும் கேளாய் வரட்புன் தோஷமிதே"
(பாலவாகட பாடம்.)

அந்திப் புள் தோஷம்

பரவுகண் மேனிவாடிப் பச்சறக் கண் விழித்துப்
பின்னும் சீலைபோல கால்குளு(ளிர்)ந்து சீறி சிடுத்தப்
[பலமேலெல்லாம்
நரம்பு தோன்றி மேனியும் வெளுத்துக் காயும்
மாலமெய்யுண்ட(?) கண்ணு அந்திப்புள் தோஷந்
[தானே.[1] (52)

நீர்ப்புள் தோஷம்

நெஞ்சு வரணடு [2]கண்அழிந்துநீரிடும் பெருமூச் சுண்டாகில்
பஞ்சுபோல் கண்வெளுத்துப் பாலுங் குடியாதேஅலறி
துஞ்சா திறவு பகலுந்தான் [3]சுங்கப்பன்றி மிக வெளுக்கில்
செஞ்சொற் கிள்ளை மொழிமாதே [4]செப்பாய் நீர்ப்புள்
[தோஷமென்றே. (53)

காணப்புள் தோஷம்[5]

உச்சி கண்ணுந் தான் குழியும் உண்ணும் பாலும்தங்காது
பச்சைநீர் போலே வயிறு விடும்பறவை குரல்போல்
[சிறியழும்
மிச்சித் திருக்கும் தண்ணீர் எடுத்தே குடிக்கும் மிகவேதான்
கச்சங் கனிந்தமூலை மாதே காணப் புள்ளின் தோஷ
[மிதே. (54)

---

1. இதற்கு பாலவாகட பாடம் பின்வருமாறு :—

" பாலகன் மேனிவாடிப் பசந்துகண் விழித்திட்டந்தி
சீலக்கைகால் குளிர்ந்து சீறும் பாலெதிரெடுக்கும்
மேலெல்லாம் நரம்புதோன்றி மேனியும் வெளுத்துக்காயும்
ஆலமே யுண்டகண்ணு யந்திப்புள் தோஷந்தானே ".

2. " கண் குழிந்து நீரும் பெருமூச்சுண்டாகிப் " (பாலவாகட பாடம்.)

3. " சுருங்கப்பண்ணி மிக வேர்க்கும் " (பாலவாகட பாடம்.)

4. " செய்ய நீர்ப்புள் தோஷமிதே " (பாலவாகட பாடம்,)

5. காணப்புள் தோஷம் என்பது பாலவாகடத்தில் " புள்ளின் தோஷப் பொதுக்குறி " என்றுள்ளது ; அவ்விஷயம் பின்வருமாறு :—

" உச்சி கண்ணுந்தான் குழியு முண்ணும் பாலுந் தங்காது
பச்சை நிறம்போல் வயிறுவிடும் பறவைக்குரல்போற் சீறியழும்
எச்சமிளைக்குந் தண்ணீரை எடுத்துக்குடிக்க மெய்பிறக்கும்
கச்சை யணிந்த முலைமாதே காணும் புள்ளின் தோஷமிதே."

பறவை தோஷம்[1]

குடித்த பாலும் தங்காது குஞ்சியுடம்பு மிக நொந்தும்
இடித்த நெஞ்சும் அந்தரத்தில் மிகவே நோக்கும்
செடி நாறும்படிக்கு மங்கைகால் அழுக்கேறி பதைத்து
[வருத்தப்படுமாலை
துடிக்கும் சமனுமிடையாள் சொல்லும்பறவை
[தோஷமிதே. (55)

பின்னும்[2] :—

குஞ்சுடம்பு நொந்து[3] குடலிலே பாலும் தங்கா
நெஞ்சையும் [4]சுழிய வாங்கும் நெரியது வலிப்
[புண்டாகும்
மிஞ்சிடும்[5] போது சற்றே துணுக்கென வலித்துச் சீறும்
பஞ்சுமெல் லடியினுளே பறவையின் தோஷந்
[தானே. (56)

---

1. 'புள்' என்றாலும் 'பறவை' என்றாலும் ஒன்றே. ஆயினும் புள் தோஷம், பறவை தோஷம் என்று தனித்தனியே நோய்கள் காணப்படுவதற்குக் காரணம் யோசிக்க வேண்டும். பறவை தோஷத்தைப்பற்றி பாலவாகட பாடம் வருமாறு :—

" குடித்த பால் எதிரெடுக்கும் குழிந்திடுந் தலையுங் கண்ணும்
அடிக்கடி திடுக்கெட்டேங்கும் அகமதில் தாகமாகும்
எடுத்திடக் கையில் தங்கா எதிரினைப் பெடுக்கும் பிள்ளை
கடுத்துடன் வயிறுபோகும் கருது நீ பறைவை தோஷம்."

2. 'பின்னும்' என்பதற்குப் பிறகு " குளிதோஷம் " என்று ஓலைப் பிரதியில் தவறுதலாய் தலையங்கம் போடப்பட்டிருக்கிறது ; 'குளி தோஷம்' என்கிற விஷயம் பிறகு வருவதாலும், 'பின்னும்' என்று அடுத்தடுத்து வரும் சொற்கள் 'பறவை தோஷம்' என்பதே தொடர்வதாகக் குறிப்பதாலும், " குஞ்சுடம்பு " " உச்சி முலை " என்னும் செய்யுட்களின் விஷயங்கள் பாலவாகடத்திலும் பறவை தோஷத்தைப்பற்றினவையாகவே இருப்பதாலும் இங்கு " குளி தோஷம் " என்னும் தலையங்கம் இருப்பது சரியில்லை. மேலும் அடியில் வரும் இரு செயுட்களிலும் பறவை தோஷம் என்பதே குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே குளிதோஷம் என்பதை இங்கே நாம் விலக்கி, வேறிடத்தில் அதைப் போட்டிருக்கிறோம்.

3. " குஞ்சியின் உடம்பு நொந்து " என்பது (பாலவாகட பாடம்,)

4. " சுழியாய் வாங்கும் நெற்றியும் வலியுண்டாக்கும் "—பாலவாகட பாடம்.

5. " துஞ்சிடும்போது "—பாலவாகடம்.

பின்னும் :

உச்சி[1] மூலதனைப் பற்றி
உடலெங்கும் வெதுப்பு உண்டாம்
எச்சமாக நாவுலர்ந்து [2]அதுவே
கண்ணும் வெதுப் பெய்து
பச்சை மஞ்சள் முளைத்தாப் போலே[3]
பசும்பொன் நிறமாய் [முக[4]மிருக்கும்
இச்சை புரிந்த குழல் மாதே
இதுவே பறவைதோஷ மென்றே. (57)

குளிதோஷம்[5]

மதலையின் மேனிவாடி வயிற்றினில் பாலும் தங்கா
வீணிலிற்குளி யுண்டாகில் நோவன்றி கண்திறக்கும்
விதனமா யழுதுபிள்ளை வெதும்பி சோர்ந்து விழுந்து
மதலைவாய் வெதும்பும்தோளும் குளித்தவ ளெடுத்தக்
[காலே.[6] (58)

உச்சி குழிந்து கண் குழிந்து உயர்களிச்சல்[7] மிகவுண்டாய்
வெச்சென் றுடலும்மிக்க காய்ஞ்சு வெளிரிக் குஞ்சு
[யுடலுளும்
மச்சமுறவே மிகவற்றி மாறுதாகம் மட்டுவரும்
நச்சை பொரு வேல்விழியாளே நாடிக்குளி தோஷந்
[தானே. (59)

---

1. "உச்சி முளைதனைப்பற்றி உடலமெங்கும்"—பாலவாகடம்.
2. "இரண்டு கண்ணும் வெளுப்பெய்தும்"—பாலவாகடம்.
3. "முறித்தாற்போல்"—பாலவாகடம்.
4. "முகமினுக்கம்"—பாலவாகடம்.
5. மாதவிடாயில் குளித்த பெண் தொடுவது முதலியதால் காணும் கோளாறு குளிதோஷம் எனப்படுகிறது.
6. "மதலையின் மேனிவாடி வயிற்றினில் பாலுந் தங்கா
சதலையிற் குழியுண்டாகிச் சர்த்தியும் எடுக்கும் நீராய்
நுதலினிற் சலமுநண்ணி நோக்கிய விழியுந் தாழ்ந்து
குதலைவாய் கருகித்தோன்றுங் குளித்தவ ளெடுத்தக்காலே."
7. "வயிறு கழிச்சல்" என்றிருத்தல் தகும்.

பாலகன் பவளவாயில் பனியென விளங்கிப் பூறும்
மாலக்கண் வளையரைகும் அடிக்கடி வயிறு போகும்
காலது பின்னிக்கொள்ளும் கத்தியே அலறிச் சீறும்
சாபமே விழுந்து தூரகத்தித்தது நெடுத்த
காலே[1]. (60)

தேயா நிற்கும் மெய்வேலுறுந்தீதே
வெளும்பும் வயிறுகும்
தாயார் மூலையில் வாய்வைத்து
சற்றே உண்ணுந் திகைத் திருக்கும்
காயா துடம்பு கண்பிசையும்
கண்டால் இதுதான் அறிவீரே
பேயால் கொண்ட நோயெல்லாம்
பொன்னை குளித்துக் கண்டதுவே. (61)

எச்சி தோஷம்[2]

உதரமும் காளியா தோன்றும் வாந்தியும மிகவுண்டாகில்
மேல்தலை எடுத்திராமல் கண்களும் உள்ளே வாங்கி
விதம் விதமாகமேனி வெதும்பியே வருவதாகில்
இது எச்சிதோஷமென்று மெண்ணவே
[செப்பலாமே. (62)

தேயு முடம்பு மிட
நாறும் செற்பலை முலை
பேயருவருக்கும் தாயுங் கண்டா
லுத்துவிழா சற்றே வயறுதான் ஓழுகும்

---

1. "பாலகன் பவளவாயிற் பனியென வேர்க்கும் மூக்கு
ஆலகண் வளையமாகு மடிக்கடி வயிறு போகும்
காலது பின்னிக்கொள்ளுங் கதறியே யலறிச் சீறும்
சீலமாய் விழித்துத் தாவுந் தீதவளெடுத்ததாலே".
(பாலவாகடம்.)

2. யக்ஷிணி என்னும் பேய் தாக்குவதாலாகும் கோளாறு எச்சி தோஷம் எனப்படுகிறது. இதுவே எட்சி தோஷம், யக்ஷி தோஷம், யக்ஷிணி தோஷம் என்றும் கூறப்படும்.

பாயும் புலிபோல் பதறியழும்
பலரை(க்) கண்டால் பார்த்திருக்கும்
பாயுமுடை யொன்ரு னரிய
பாகா எச்சி தோஷமிதே.[1] (63)

சிவ்வகை உள்ளியின் போயிருந்த
தோர் கொம்பி லேறில்
அவ்வகை குணங்கள் கண்டால்
அண்ணனைக் கதிகமாகும்
வகைக் கெல்லாம் வந்துமுறை
முறையாக பார்க்கில்
வேல்விழி பாலன்சிவன்
விடுத்தின்ன மருந்து செத்தே. (64)

செங்கிரந்தி

பிள்ளை பிறந்தவுடனே அழுதும்
பின்னே மிடறுந்தனைக் கட்டி
மெள்ளப் புண்குரல் போன்று
விடமை மலமும் வயிறூதி
துள்ளி(க்) கைகால் அசைவற்று
அம்மிகிடக்கும் மெய்யசைந்து
கள்ளமான செங்கிரந்தி இது
தானென்று கண்டு கொள்ளே.[2] (65)

---

1. " தேயுமுடம்பு மிக நாறும் செவ்வன முலைப்பால் மறந்திருக்கும்
தாயைக் கண்டா லொவ்வாது சற்றே வயிறு போஞ்சுரமாம்
பாயும் புலிபோல் பதறியழும் பாலரைக் கண்டால் பார்த்திருக்கும்
பாயும் விடையோன் தானறியப் பகராய் எட்சித் தோஷமிதே. "
(பாலவாகடம்.)

2. " பிள்ளை பிறந்தவுடனழுது பிறகு மிடறுதனைக் கட்டி
மெள்ளப் பூனைக்குரல் போன்று விடாமனீர் மலம் வயிறூதித்
தள்ளிக் கைகால் சிவப்பேறச் சும்மா கிடக்குமே தென்னில்
கள்ளமான செங்கிரந்தி கருத்தா யிதனைக் கண்டுகொள்ளே. "
(பாலவாகடம்.)

கருங்கிரந்தி

[1]முழங்க அழுதுமுலை உண்ணது மூறி முறையும் உடல்
[வெதும்பும்
குணங் கொண்டிருகாது பாச்சியுண்டாய் குணமாம்
மருங்கி யிருமல் கக்கு அதிகமாக வயிறு ஊதும்
புழுங்குங்கரிய கருங்கிரந்தி பொல்லாததுவும்
[பொல்லாதே[2]. (66)

கட்டு மலை வாதம்

கட்டுமலைவாதம் கண்ணை நாக்கைப் புருவத்தை கால்கை
[நெறித்து
மெலிக்குமிது விண்ணைப் பார்க்குங் குடலிரையும்
விட்டுவிட்டு வலிப்பெய்தும் உண்ணுமுலையை யுலகாது
[ஓடுங்காதுடலும் மஞ்சணிக்கும் நண்ணுங்
கட்டுமலை வாத மிதுதானென்று நயந்தறியே. (67)

மாந்தம்

மாதாவயற்றில் மந்தமூலைப்பாலே அருந்திவரும் மாந்தம்
சூதாமாம்பை தேங்கிளநீர் சுரபி[3] மாங்கிஷிகிளி
[யிறைச்சி
[4]பேதா மவரைதுவரை கட(லை) பேசுமொச்சை
[[5]புளிமாங்கொட்டை
மாதாகொள்ளில் பிள்ளைக்கு வரும் கணமாந்தம்
[தப்பாதே. (68)

---

1. " முழிக்கும் முலையுண்ணது " என்னும் சொற்கள் இந்நூலுக்கு மூலமான எட்டுப் பிரதியில் செய்யுளின் மூன்றுமடியின் முதற்பகுதியாகத் தவறுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. " முழுங்கவழுது முலையுண்ணு மூர்ச்சையாகு முடல்வெதும்பும்
கொழுங்கண் திறவாய் வரட்சிகொண்டே யதரங் கறுப்பேறும்
அழுங்கி யலருங்குரல் கம்முமதிகமாய் வயிறூதும்
புழுங்கும் வலிக்கும் கருங்கிரந்தி பொல்லாதெனவும் புகன்றனரே"
(பாலவாகடம்).

3. மாமிசங்கனிகவிச்சு (பாலவாகட பாடம்.)

4. பேதாமலத்துவரை (பாலவாகட பாடம்.)

5. புளியங்கொட்டை (பாலவாகட பாடம்.)

[1]அவபத்தியம் (மாந்தத்தில்)

அன்னப்பால் மலக்கட்டாகி அதுஉடல் கனத்துத்
[தோன்றும்
தின்னத்தால் வாயுபண்டம் தின்னல்மாந்தம்
பின்னத்தானம் கூச்சிட்டு வெள்ளை வெதுப்புக் காணும்
மின்னெத்த விழியாய்கேளாய் மிகுந்திடும் கழிச்சல்
[தானே. (69)

அன்னமே பாலும்நெய்யும் பல்பழமும் வித்தும்
பின்னையும் பயறு தேங்காய் பெரியதோர் தேலிப்
[பழமும்
தின்னிடில் கால்குளு(ளிர்ந்து) தியென வெதும்புமாகி
லொன்றல்லாத் தள்ளை காமமுயர்ந்து நீர்அறிந்து
[கொள்ளே[2]. (70)

மாந்தத்தின் குணமே கேளீர் வயிறுபோம் வெப்புநாறும்
சோர்ந்து கால்குளு(ளிர்)ந்து [3]காணும் தோகையே
[முலை யுண்ணது
வாந்தியும் மிகவே பண்ணும் வாயுவே உலர்ந்து காயும்(?)
மாந்தியே மயக்கமுண்டாம் மாந்தத்தின் குணமீ
[தென்றே. (71)

---

1. மற்ற நோய்களுக்கெல்லாம் இல்லாமல் இங்கே மாந்தத்திற்கு மாத்திரம் அவபத்தியம் கூறும் காரணம் யோசிக்கவேண்டிய விஷயம்.

2. "அன்னமும் பாலு நெய்யு மழகிய பழமும்தேங்காய்
பின்னையும் கடலை வெல்லம் பெரியதோர் கதலிப்பண்டும்
தின்னுமோர் காலந்தன்னில் தியென வெதும்புமாகில்
என்று பிள்ளைக்குத்தானு வந்துமே மாந்தமுண்டாம்"
(பாலவாகடம்.)

3. "கை கால் குளிர்ந்து தோகையே" (பாலவாகட பாடம்.)

பொர மாந்தம்

வாயுடன் நெஞ்சு வெந்து [1]வயிறது காயுமாகில்
சாயவே உடம்புசோர் நன் சடுதியில் பொருமியூதும்
காயமும் வாடித்தானும் கண்களும் மலர்ந்துமூடும்
மாயம் [2]பொரமாந்தமென்று வகுத்தனரென்று
[தானே. (72)

தக்க நென்றியவேதான்(?) சங்கரசிதம் தோன்றில்
கண்ணிலே நீர்முட்டிய சுரங்கனதாது
மெய்க்க வெலந்து(?) கூடி யொன்றதா இருக்குமாகில்
சிக்கென வகைகள்தன்னை தெளியவே விளம்ப
[லாமே. (73)

பொருமுங்கழியும் புரண்டு வலியுண்டாம
மருவுமுலை யுண்ண மயங்கும்
பொருமி சர்த்தி செய்யும் கண்குழிந்தான் நயங்கியே
[யுழன்று
மெத்தயிறும் பொரமாந்த மென்றே.[3] (74)

[4]ஏற்றே தீர்ந்து மிக்கக் கழியுமிடை
யிடை சுரந்தான் தோன்றும்
தோத்த முடலூத்தானும் முறுக்கி
தோன்றும் முதுகு உடம்பெல்லாம்

---

1. "வயிறது கழிச்சலாகும்" (பாலவாகடம்)

2. பொரமாந்தமென்பது பாலவாகடத்தில் போர்மாந்தம் எனப்படுகிறது.

3. போர்மாந்த குணங்களையும் அறற்கான மருந்துகளையும் பற்றி 56-ம் பக்கம் பார்க்கவும்.

4. "ஏற்றே தீர்ந்து" என்னும் செய்யுள் (போர்மாந்த) பொரமாந்தத்தைப் பற்றியது; பாலவாகடத்திலும் அவ்விதமே இருக்கிறது. ஆனல் ஓலைப் பிரதியைப் பார்த்து எழுதிய கையெழுத்துப் பிரதியில் இச்செய்யுள் பால் மாந்தத்தின் கீழ்சேர்க்கப்பட்டிருக்கிறது; அது தவறு என்று தெரிகிறது. இதன் பாலவாகட பாடம் பின்வருமாறு:—

"ஏற்றே யிருந்து மிகக் கழியுமிடையிற் சுரமுந்தான் தோன்றும்
தோற்றுமுடலூத் தானுருக்கும் தோன்றும் விலாவு முதுகெலும்பும்
வேற்றோருடலாய்ச் சர்த்தியுண்டாம் மிகுந்த மலமுமே யொழிக்கும்
கூற்றனைசும் போர்மாந்தக் குணமாஞ்சுதற்குப் பொல்லாதே."

வேத்துக் குடலாய் சக்தி கெடமிக
மின் மலத்தோடே நுரையும்(?)
கூத்தாகிய பொரமாந்தம் மிக்க
சொல்லும் மறவும் பொல்லாதே. (75)

[1]பால் மாந்தம்

பாலது கழியும் பாலது எடுக்கும்
பரிதபித்திடும் உடம்பு பலவிதமாய்
சாலவே சுரங்கால்
வெதும்பில் குளிரும்
தலைஎடுக்காமல் மந்திக்கும் இதற்கு
மருந்து பொடுதலையின் காய் வறுத்துக்
கோலமாய் வசம்புள்ளி பிந்துமரிசி
கொஞ்சம் கொடுத்திட குணமாமே. (76)

---

1. பாலமாந்த மென்பதை பால்மாந்தமென்று இங்கு தவறுதலாய் குறிப்பிட்டிருப்பதாகத் தோன்றுகிறது. பால வாகடத்திலும் பால்மாந்த மென்றே காணப்படுகிறது. இதற்கு பாலவாகட பாடம் வருமாறு :—

" பாலதைக் கழியும் பாலதை யெடுக்கும்
பரிதவித்திடும் பலவிதமாய்ச்
சாலவே கரங்கால் வெதும்பிடுங் குளிருந்தலை
யெடுத்திராமலே மயங்கும்
சீலமாய்த் தாயார் லங்கனமிருந்து திகழ்
பொடுதலையின் காய் வறுத்துக்
கோலவிந்துப்பு வசம்புள்ளி மிளகு
கொள் சமன் கொடுத்திடக் குணமே."

நீர் மாந்தம்

[1]தலையது நோவாய் முகமது மினுங்கும்
தவிக்கவே மலம் சிறுத்திட்டு
முலையது முகவாதுமெல்லாம் பிணம்
போல மூத்திரங் குறுகிடுந்தீங்கு
மலமருந்து உள்ளிமூக்கறட்டை
வளங்குஞ் சாரொவ்வொன்று ஒன்றுகும்
இலங்குரு மணக்கெண்ணை(ணெ)யின் சரி
எறித்திடத்தீரும் நீர்மாந்த மதுவே. (77)

இருமுகல்வால் நீர்துளியும் இடையிடை சுரந்தோன்றும்
பொருமி வயிறும் இரைச்சலுமாய் போதப்பல
[வண்ணந்தான் கழிந்து
சொருகுமுடல் மெலிந்து மிகச் சொருங்கண்மூடி
இருமுமே நீர்கண மாந்தமென்று மறிந்துபார்
[சத்தியமே. (78)

---

1. இந்தச் செய்யுளின் பாடம் பால வாகடத்தில் பின்வருமாறு ; இச்செய்யுள் அங்கு இரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ளது :—

" தலையது நோவாய் முகமது மினுக்குந்
தக்கவே மலஞ்சிறுத்திட்டு
முலையது முகவாதுடம்பெலாங் குளிர்ந்து
மூத்திரம் குறிகடுத்திறங்கும்."
" மலமருந்தீர உள்ளி மூக்கரட்டை
வயங்குசா ரொவ்வொன்றே குழக்காய்க்
குலவிளக்கெண்ணெய் தனிலெரித்தருந்தக்
கொட்டுநீர் மாந்தமுங்குணமே."

செரியா மாந்தம்

மிக்க வெதும்பும் தலைவலியும் மிகவும் வயிறுதான் கழியும்
மைக்கலந்தான் கரைந்தேன் வயிறுபொருமும்
[நொந்து அழும்
பந்தம் படும் துயர் சோருங்கீரைத்தண்டது போல்
சிக்கென்றினகுகள் முலைதானே செரியாமாந்த[1]
மிதே. (79)

கட்டு மாந்தம்[2]

கொட்டாவி தலைநோயும் மலம்போகாமல்
[3]கூறி நரைவிட்டொரு நாளினுக்கவிஞர்(?)
கொட்டாலு முடலெங்கும் அனல்போல
காயும் தூக்கமதுபோலிருந்து சேர்ந்து மாந்தி
[4]பட்டாவி வயிறுமிகக் கழிந்தடங்கும்
பலநாளுமிப்படியே மலச்சிக்குண்டாம்
மட்டாருங்குழல் மடவாய் கட்டுமாந்தம் வகையறியும்
[5]வாகடநூல் ஓதுவோர்க்கே. (80)

---

1. "மிக்க காய்ச்சல் தலைவலித்தல் மிகவே வயிறு நொந்தழுதல்
தக்க மலமாக்கரைத்தாற் போல் சாலக்கழிதல் கண்ணரைக்கண்
தொக்க பக்கந்தான் படுத்துச்சேர்தல் கிரைத்தண்டதுபோல்
சிக்கென்றிலங்கு முகமாதே செரியாமாந்த குணமிதுவே."
(பாலவாகடம்).

2. கட்டுமாந்த பரிகாரமுறைகள் ஐந்து இடங்களில் கூறப்பட்டுள்ளன.

3. "குறுவேர்வை வயிற்றுவலி குடலிரைச்சல்" பாலவாகட பாடம்)

4. "பட்டாலே வயிறு மிகக் கழிந்திடாமல்" (பாலவாகடம்).

5. "வாகடநூல் வல்லீர்தானே." (பால வாகடம்.)

தலை மாந்தம்

அகடது பெக்கவாதி அதிகமாம் சுரமும் தொத்தி
முகடது கலையே பாகை முறிகொட்டாவி யுண்டாய்
விகடமாய் வலிப்பெடுக்கும் விரைவிறைத்திருக்கும்
[வேற்கும்
துகடிலாமின்னே இதுதான் தலைமாந்த மென்ன
வாமே[1]. (81)

தலையும் கனத்து உடம்பூதி
சரீரத்தினிலே வலியுமுண்டாம்
குலையும் வலித்துத் துள்ளி விழும்[2]குளிரும்
சோர்ந்து வேர்த்துவிடும்
[3]சிலையும் புருவந்தலை நீராய்
சேட்டை மிகவே வலியுண்டாம்
மலையினுயர்ந்த தனத்தாளேவாதைப்
படுத்தும் தலைமாந்தம். (82)

விஷ மாந்தம்

[4]சிறியவன் வயிறுமேலாய்ச் சினத்திடு
முருட்டிப் பார்க்கும்
கரியுடனுபைய தாயாரங்கய
நிற்றேங்கா தொன்றும்(?)

---

1. "கூட்டுச்சுரங்கள் தலைவலி வேர்வை கொட்டாவி
சாட்டியத்தொடு தலைகனங் குலைவலி சலம்போல்
ஆட்டமில்லாது குளிர்சுரமதிக மெய்யூதற்
காட்டினுல் தலைமாந்த மென்றதை யறி மாதே."

(இது தலைமாந்தத்தைப் பற்றி பாலவாகடத்திலுள்ள மற்றொரு வகைக் குறிகள் கூறும் செய்யுள்.)

2. "குளிருஞ்சுரமும் வேர்வை விடும்" (பால வாகடம்.)

3. "சிலையின் புருவத்தலை நிமிராசேட்டை மிகவே செய்விக்கும்" (பாலவாகடம்.)

4. இதற்கு பாலவாகட பாடம் பின்வருமாறு :—
"சிறியவன் வயிறிரைந்து சினத்திடு முருட்டிப் பார்க்கும்
கருவுடன் பெற்றதாயார் கையினிற்றங்காப் பிள்ளை
அறிவுள மேனிவாடி அரைக்கும்கீழ் குளிர்ந்திருக்கும்
வெறியென வெருவும் எவர்க்கும் விஷமுள மாந்தந்தானே."

அறின்போ மென்னச் சொருமறை
யிறக்கீழ் குளுந்திருக்கும்(?)
வெறியென விளக்குமாகில்
விஷமுள்ள மாந்தந்தானே. (83)

வாந்தியும் வயிறும் போகும் வாகுசேர் விழியும் பொருமும்
மாந்தியே சோர்ந்து வீழ்ந்து வயிற்றிலே வலியுண்
[டாகும்
[1]சோர்ந்திடும் மலமும்தானும் சிக்கியே வயிறுபோகு
மாய்ந்திடும் நூல்வல்லோர்களது விஷமாந்தந்
[தானே. (84)

வறள் மாந்தம்

தோலும் திரங்கி யுடல் வெளுத்து
சுழலும் மயக்கமுண்டாகும்
[2]பாலுமருந்து மெய்யிளைக்கும்
பார்க்கும்போது பல குணமாம்
[3]காலுங் கையுந்தான் வீங்கி
கடுப்பும் வலியும் காண்பித்து
வாலர்தம்மை யுருவழிக்கும் [4]வறள்
மாந்தத்தின் வகைதானே. (85)

ஊது மாந்தம்

உடலெல்லா மூதிகாணும் வாந்தியும் கழிச்சலுமுண்டாம்
குடலெல்லாம் இரைச்சலாகிக் கூப்பிடும் சமுத்திரம்
[போல
[5]துடியெல்லாம் வலிக்கு மிக்க சுரமுடன் கடுப்புமாகு
மடவினு லூதுமாந்த மதுசெய்யுங் குணங்கள்
[காணே. (86)

1. "சேர்ந்திடு மலமுந்தானுஞ் சிக்கியே" (பாலவாகட பாடம்).
2. "பாலுமெடுக்கு மெய்யிளைக்கும்" (பாலவாகடம்).
3. "காலுங் கையுந்தான் வற்றி" (பாலவாகடம்).
4. "வரள்மாந்தத்தின் குணமிதுவே." (பாலவாகடம்).
5. "தொடையெலாம் வலிக்கும்" (பாலவாகட பாடம்.)

மாந்த சன்னி

பத்தியத் தாழ்வால் மந்தம் பகை செய்யும்
முத்திய சுரமும் தாகமும் உதிர்ந்திடும் நாவில்முள்ளும்
புத்தியும்கலங்கி கண்ணும் போதவே தாமுந்
[தானே[1]. (87)

வலிப்பு மாந்தம்

வயிறுகழியும் விதவிதமாய் மாரைவலிக்கும் பல்கிட்டும்
பயறு கடித்தாப்போல் [2]தந்தம் பதரிக்கடிக்கும்
[பசியெடுக்கும்
கயிறு முறுக்கிவிட்டாப்போல் காலும் கைதானிழுக்கு
மெயிறு திறக்கமாட்டாது இறங்காது அன்னம்
[தண்ணீரே. (88)

வலிப்பு சன்னி

மாந்தமே கோபித்தக்கால் வயிறுபோம் உப்பிக்கொள்ளும்
காந்தல்போல மேனிதானும்[3].....

[4].....ச்சத்தி சலதோஷந் தன்னுல்
பையாவல் குழலார்கள்
பசியற வருந்துதன்னுல் துய்யதோர் குரல் கேட்டு
கண்களும் தோன்றுமென்றே[5]. (95)

1. இப்பாட்டில் நான்காம்அடி விடப்பட்டிருக்கிறது.
2. "தந்தம் பற்றிக்கடிக்கும் இசிப்பெடுக்கும்". (பாலவாகட பாடம்).
3. வலிப்பு சன்னியைப் பற்றிய விஷயமும், வேறு விஷயங்களும் அடங்கிய ஓர் ஏடு மூலப்பிரதியில் தவறிவிட்டது.
4. பாலவாகடத்திலுள்ளபடி இச்செய்யுளில் முழுப்பாகமும் வருமாறு :—

"ஐயது கூடிற்றென்ரு லரிவையர் துயரந்தன்னுல்
செய்ய பற்புனலருந்திச் செறி சல தோஷந்தன்னுல்
பையா வல்குளாலும் பசியுடனிருந்தாலும்
துய்யதோர் குழல்விகட்குக் கணங்களுந் தோன்றுமன்றே."

இங்கு கணநோய்கள் என்பது ஆரம்பிக்கும்.

5. இந்நூலுக்கு ஆதாரமான எட்டுப்பிரதியில் ஒரு ஏடு காணப்படவில்லை யாகையால் 89-வது செய்யுளின் பிற்பாதியிலிருந்து 95-வது செய்யுளின் முற்பாதி வரையிலுள்ள செய்யுட்கள் இங்கே விடப்பட்டுள்ளன.

மாந்தமுதிர்ந்து விழிக்குங்கால் வயிறு
நொந்து நாக்கு வெந்து
ஏந்து மெதிரே மூச்செறிந்து
வெச்சென(த்)தீர் நிற்கும்[1](?)
(போந்த வுடம்பு பலவிதமாய்ப்
பொறுத்துச் சுரமுண்டாம்)[2]
காந்தண் மலர்போல கரமுடையீர் கணத்தின்
வகை என்றுரையீரே. (96)

கணங்கள் செய்யுங் குணங்கள்தானும்
கண்ணது வலியுமாகும்
தணலெழ சுரமுந்தோன்றும் சரீரமும்
வெளுத்து காணும்
அனலெழ வாயுந் தோஷமாகுமாங்
குணமு மென்றே[3]. (97)

மகா சன்னி[4]

முகம் புறங்கால் புறங்கை மொத்தியே மினுமினுக்கும்
நகம் விழி வெளிறிக் காணும் நஞ்சுண்டாப்போல்
[மயங்கும்
மிகமிக வெதுப்புண்டாய் வெடித்து நாவுதடுபுண்ணுய்
இகவறு வறுத்துமாகில் மகாசன்னி
என்னலாமே. (98)

---

1. "எந்த வெதிரே மூச்செறிந்தும் இருமலிருமச் சந்திக்கும்" (பால வாகட பாடம்.)

2. "போந்த வுடம்பு... ....." என்னும் அடி எட்டுப் பிரதியில் காணவில்லை; இது பாலவாகடத்திலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. இச்செய்யுளின் ஓரடி காணவில்லை.

4. "மகாகணம்" என்று இருத்தல் வேண்டும். 95-ம் செய்யுள் முதல் கணநோய்கள் கூறப்படுவதால் 'மகாசன்னி' என்று முடிவில் இருப்பது சரியாகத் தோன்றவில்லை. மேலும் பாலவாகடபாடத்தில் இச்செய்யுள் மகாகணம் என்பதையே குறிக்கிறது. அது வருமாறு :—

"முகமும் புறங்காலும் கையும் மோதியே மினுமினுக்கும்
நகைவிழி வெளிறிக்காட்டும் நஞ்சுண்டார்ற்போல் மயக்கும்
மிகமிக வெதுப்புமுண்டாய் வெடித்துநா உதடுபுண்ணுய்ச்
சுகமிலா வருத்தந்தோன்றும்சொல் மகாகணத்தின் வாறே."

அந்தக கணம்

[1]உச்சி முலைதன்னை பத்தும்
உடலெங்கும் வெதுப்புண்டாய்
இச்சமாந்தால் தாங்க அத்தெயம்
கண்டு வலுப்பெய்தும்
பச்சைமஞ்சள் முறித்தாப்போல முக
மிருக்கும் பாலாவோர்(?)
சத்தமாகும் அந்தக நேருங்(?)
கணமா மறிந்துரையே. (99)

[2]பொர கணம்

கையுங்காலும் குளிர்ந்து காணும்
கண்மலர வனியமாகும்
குய்யவே கரமுந்தோன்றும் குடித்தபால்
ச(ர்)த்தி பண்ணும்
துய்யவே திடுக்கிட்டெங்கும் சோர்ந்து
தான் வயிறு போகும்
பொய்யல்லக் கேளாயிந்தப்
பொரகணத்தின் வாகுதானே. (100)

1, "உச்சிமுலை தனைப்பற்றி உடலெங்கும் வெதுப்புண்டாம்
மிச்சமாக நா உலரும் விழிகளிரண்டும் வெளுப்பெய்தும்
பச்சை மஞ்சளது போலுமிலே பசும் பொன்னிறமாய் முகமினுக்கும்
அச்சம்புரியு முலையாளே அந்தக கணமென்றறிந்துரையே"

(பாலவாகட பாடம்.)

2. இது பாலவாகடத்தில் பேராமகணம் எனப்படுகிறது. அதிலுள்ள பாடம் பின்வருமாறு :—

"கையுடன் கால் குளிர்ந்து கண்ணுமே வேலயமாகும்
குய்யமே கரமுந்தோன்றும் குடித்தபால் சர்த்திபண்ணும்
துய்யவே திடுக்கெட்டேங்கும் சோர்ந்துதான் வயிறுபோகும்
பொய்யல்ல கேளாயிந்தப் பேராமகணத்தின் வாறே."

[1]விஷ கணம்

நெஞ்சுங் கொதிக்க விலாகொதிக்க
நீராயந்த(?) உடலெங்கும்
வஞ்சமது வாயொரு வேளைவெந்தே
சர்வாங்கமும் வெதும்பும்
விஞ்சுமிருமல் வயிறிரையும் விட்டுத்
திடமாய்த் திரும்பெடுக்கும்
மஞ்சுநடையாய் இது விஷக்கணமா
மென்று மருந்துரையே. (101)

கொதிப்புக் கணம்

[2]நெஞ்சுங்கொதிக்க விலாக்கொதிக்ச நேரே
நெற்றி வலித்துவிடும்
பஞ்சுபோல முகம் வெளுக்கும் பார்க்கும்
போது பலவிதமாய்
துஞ்சுவொண்ணு இருமல்வந்து துயரப்
பட்டுத்தலை நோவாம்
கொஞ்சுங் குரலுந்தான்கம்மி கொஞ்சஞ்
சுரமுங் கோத்தமரும். (102)

---

1. இவ்விஷகணம் என்பது பாலவாகடத்தில் வரட்கணம் எனப்படுகிறது ; இதைப்பற்றிய பாலவாகடச் செய்யுள் வருமாறு :—

"நெஞ்சுதுடிக்கும் புகைந்திருமும் நிறமும் வேறே நாகறுக்கும்
வஞ்சமறவே ஒருவேளை வந்தே சரீரமெல்லாம் வெதும்பும்
மிஞ்சுமிருமல் வயிற்றிரைச்சல் விட்டுத் திடமெய்துரும்பெடுக்கும்
மஞ்சார் குழலாய் வரட்கணத்தின் வாகுமிதனை யறிவாயே."

2. கொதிப்புக் கணமென்று தலையங்கமிருப்பினும் இங்குள்ள பாட்டில் அப்பெயரில்லை. ஆனால் பாலவாகட பாடம் பின் வருமாறு அதை விளங்கக் கூறுகிறது :—

"நெஞ்சு கொதிக்கும் விலாக்கொதிக்கும் நேரே நெற்றிவேர்வை விடும்
பஞ்சைப்போலக் கண்வெளுக்கும் பார்க்கும்போது பலவிதமாய்
துஞ்சவொண்ணு இருமல்வந்து துயரப்பட்டுத் தலைநோவாம்
கொஞ்சுங்குரலும் கம்மிவிடும் கொதிப்பு கணத்தின் குணமாமே."

நீர்க் கணம்

[1]இருமும் மேல்மூச்சுண்டாகும் மிச்சக்
கண்கடை நீராம் சொற்
பெருகும் மூக்குதனில் புண்ணுய்ப் பொருந்துஞ்
சுரமுந் தலைநோவாம்
வருமே விலாப்பக்கம் சுழியவாங்கும்
நயமுள்ளென் றறிந்து
சேருந்தாண்டை விலாச்சிலுத்திருக்க இது
நீர்க்கணமென்றறிந்து கொள்ளே. (103)

[2]நீர்க்கணகுணமே கேளீர் நீரின் மேல்
மனது வைக்கும்
வேர்க்கும் கணமுகமே வேர்வையில்
வெதுப்புத் தோன்றும்
நாக்கும் வாய் வரண்டு காணும் நல்ல
நீர் கழிச்சலுண்டாம்
பார்க்கில் ஓர் நீர்கணத்தின் பற்பல
குணங்கள் காணே. (104)

முகமும் புறங்கால் புறங்கையும் மெறவே(?)
மினு மினுக்கும்
தகமையும் தாகமுணடாய் தண்ணீரே
மிக குடிக்கும்

---

1. இங்கு குறிப்பிட்டுள்ள செய்யுள் சில மாறுபாடுகளோடு நீர்க்கணமாந்தநோயைப் பற்றியதாய் பாலவாகடத்தில் உள்ளது.

2. "நீர்க்கண குணமேகேளாய் நீர்வேட்கை யுடலிலன்றி
வேர்க்குங் கைகால்கள் தம்மில் வெதுப்புறுங் கண்களாழும்
நாக்கு வாய்வரண்டு புண்ணும் நாவெடிப்புறு நீர்ப்பேதி
பார்க்கிலோ நீர்க்கணத்தின் பற்பல குணங்கள் தாமே."

(பாலவாகட பாடம்).

மிகவே மயக்கமும் வெதுப்பு முண்டாய்
வெடித்து நாவுந்தான் புண்ணுய்
மகமேரொத்த தனத்தாளே வருநீர்
கணத்தின் வகையாமே[1]. (105)

வரட் கணம்

[2]நெஞ்சுந்துடிக்கும் புகைந்து இருமும் நித்தியம்
விடாத காய்ச்சலுண்டாம்
மஞ்சணிக்கும் நாக்கறுக்கும் மங்காது
தினவு முண்டாகும்
மிஞ்சும்போது வலித்திரைக்கும்
கனமூச் சறையும்
பஞ்சுமேனுச்சி மாவா(?)கேள் பகரில்
அதுதான் வரட்கணமே. (106)

அஸ்தியிற் சுரமுந்தோன்றும் அழன்று நீர்த்தாகமாகும்
முற்றியே சிறுநீர்தானும் முறுக்கியே வெள்ளைகாணும்
சற்றுதான் வயிறுநொந்து சதிருடன் கடுப்புமாகும்
வற்றிடும் சரீரமெங்கும் வரட்கண மென்று
[சொல்லே. (107)

நாக்கில் மஞ்சள்வெள்ளை முள்ளும் நடுவே
[3]வெடிப்பு முண்டாகும்
பார்க்கப் பிள்ளையீடழியும் [4]பருக்கு
முடலும் எரித்துவிடும்

---

1. "முகமும் புறங்கால் புறங்கையுமோதி மினுமினுப்புண்டாகும்
தகைசேர் மயக்கமுடல் சோர்வுதணியா வயிற்றுநோயுண்டாம்
மிகவே சோகம்வெதுப்புண்டாம் விட்டுவிட்டுச் சுரங்காயும்
மகமேரொத்த மனத்தாளே வருநீர்க்கணத்தின் வகையாமே."
(பாலவாகட பாடம்).

2. வரட்கணத்தைப்பற்றிய பாலவாகடச் செய்யுள் விஷகணத்தைப் பற்றிய டிப்பணியில் எடுத்து எழுதப்பட்டுள்ளது. 101-ம் பாட்டின் டிப்பணியைக் காண்க. இங்குள்ள வரட்கணக் குறிகளுக்கும் பாலவாகடத்திலுள்ள குறிகளுக்கும் வேறுபாடு சிறிது இருப்பதையும் பார்க்கவும்.

3. வெடிப்பு மூன்றுகும். (பாலவாகடம்).

4. பருக்காதுடலுமிளைத்து விடும். (பாலவாகடம்).

[1]மூக்கில் சளியும் இருமல் உண்டாய் முகமும்
மஞ்சள் பூத்திருக்கும்
தூக்கம் மிகவே மயக்கமுண்டாம் சொருகும்
வரளின் கணமிதுவே. (108)

மூல கணம்

[2]சீதம் இரத்தந் தினம் ஆசனத்தின் கடுத்து மூக்கும்
இது காய்ச்சல் வயிறிரைச்சல் அண்டாது தலை
[நோவதிகமாய்
பேதப்படவே முகமினுங்கும் சிவக்கும் கறுக்கும்
பிதா மாதா இந்தக்கணம் செய்யும் மேலுண்மையே
[மூலக்கணமறியே. (109)

உதிரமாய் வயிறுபோகும் வாந்தியும் சுரமுங்காணும்
சதிரமெல்லாம் நடுங்கும் சந்துகால் வலியுமுண்டாம்
உதிரவே சீதங்காணும் முக்கியே யடகள்தள்ளும்
மதியுட னறியவல்ல வைத்திய ரென்னலாமே. (110)

மந்தாரக் கணம்

மந்தாரக் கணத்தின் வாறுவகை யறிந்தாரே கேளீர்
முந்தியே கணமு[3]மாந்தம் உதிரவே அசந்துகூடில்
[4]சிந்தையில் சுரமயக்கம் திடுக்கிடும் சுவாஸம் வாங்கும்
காந்தியே வயிறும் உப்பும் கணத்தின் மந்தார
[மாமே. (111)

---

1. மூக்கிற்சளியு மிருதலுடன் முகமும் (பாலவாகடம்).

2. மூலகணத்தைப்பற்றிய பாலவாகடப்பாட்டு வருமாறு :—
"சீதரத்தமுமே கழிந்து தினமுமாசனங் கடுத்தலையும்
மீதுகாய்ச்சல் வயிற்றிரைச்சல் விடாத தலைநோயதிகமாம்
காதப்படவே முகமினுக்கும் கறுக்குஞ்சிவக்கும் பலவிதமாய்
ஓதுமுறுப்பு மிகத்தளரு முரைத்தோ மூலக்கணமென்றே."

3. "மாந்தமோதியே இசைந்து கூடில்" (பாலவாகட பாடம்).

4. "சந்தியில் சுரமயக்கும் சார்ந்திடும்" (பாலவாகடம்).

முக்கு கணம்

[1]சோகமாய் நாக்கு வெந்து சுரமுடன் தலைகள் (தலையும்)
[நாணி
தாகமாய் வயிற்றில்தானும் தான்மிக கடுத்துரத்த
மாகவே கழியும் பிள்ளை அதிகமாய் சீதம் வீழ
தோகைநீ கேளாய் முக்குகணமென்று தொடுத்த
[வாறே. (112)

கக்கும் முலையுண்ணுது காலுங்கையும்
குளிர்ந் திருக்கும்
[2]செரக்கும்(?) உடம்புதான் சோரும் சொரிந்
தெம்பலத்தில் ரத்தம் விழும்(?)
நிற்குங்கடுக்கும் ஆசனவாய் நெருப்புப்
பட்டாப்போல் எரியும்
முக்குங் கணத்தின் குணம் இதென்று
மொழிந்தேன் இதனைப் பாரீரே. (113)

இரத்த கணம்

[3]சீதமும் ரத்தமும் மிகப் பெருகும் திரும்பக்
கெட்ட பால்போல
போதங்கழியும் கருந்தண்ணீர் போலு
மின்னே கழிந்துவரும்

---

1. இப்பாட்டிற்கு பாலவாகட பாடம் பின்வருமாறு :—

"சோகமாய் நாக்குவெந்து சுரமுடன் தலையுநாணித்
தாகமாய் வயிற்றைப்பற்றித்தான் சீதம் ரத்தம் வீழும்
மாகமாய் உறுப்பு தள்ளி மாரூட்ட லுடல் நடுக்கல்
தோகையே கேளாய் முக்குகணமெனச் சொல்லுவாயே."

2. "சொக்குமுடலும் கண் சோரும் தொக்குமிணைக்கு முடல் கறுக்கும்" என்றவாறு பாலவாகடத்தில் இரண்டாமடியின் பாடம்.

3. பாலவாகடத்தில் இச்செய்யுள் சில மாறுபாடுகளுடன் பொதுக் கணக்குறிகளுள் ஒன்றுகப் பின்வருமாறு காணப்படுகிறது :—

"சீதரத்தமாய்க் கழியும் திரும்பக்கெட்ட பால்போலப்
பேதக்கறித் தண்ணீரதுபோல் பின்னும் கழியும் வயிறுப்பும்
ஏதங்கைகால் முகங்கருகி எரிந்து குளிர்ந்து வெதுப்புண்டாம்
கோதை இருமலுண்டாகும் குறிதானறிவாய் கணங்கட்கே."

மெத்த முன்போல காலும் கையும்
ஒருக்கால் வலியுண்டாம்
கோதா யிந்தக்குணங்கண்டால் குணமாம்
குணங்கள் குறித்தறியே(?). (114)

இடைவிடா முக்கி முக்கி இருமலுங் கழிச்சலுண்டாய்
அடைபடா கழிச்சலாகி அடிக்கடி ரத்தங்காணும்
துடைஇடை வலிக்கும் தாகம் சொல்லொண்ணு [1]சுரமுங்
[காணும்
தடைபடா வியாதி என்றும் சாற்றினர் முனிவர்
[தானே. (115)

ஆமக் கணம்

[2]சுழியப்பொருமும் வயிற்றெரியும்
சுவாசம் மிகவுண்டாகும்
கழுத்தை நாணிக்காலும் குளிர்ந்து
கண்ணும் மூக்கும் அழியாது
அழுத்தமாம் சுரந்தோன்றும் மலர்ந்து
சீறி திக்கென்று
சுழிக்குமாம் கணமென்றும் சொன்னர்
முனிவர் சொன்னரே. (116)

---

1. "சுரமுங் காயும்" என்கிற சிறு பாடபேதத்தைத் தவிர பாலவாகட பாட்டிற்கும் இப்பாட்டிற்கும் பேதமில்லை.

2. "சுழிக்கும் பொருமும் வயிறிழியும் சுவாசமிகவு முண்டாகும்
கழுத்தை நாணிக் கால்குளிர்ந்து கண்ணேமூடி விழியாது
அழுத்தமான சுரந்தோன்று மயர்ந்துசீறித் திடுக்கென்னும்
சுழிக்கு மாமகணமென்று சொன்னரானர் தோகைக்கே."

(பாலவாகட பாடம்).

எரி கணம்

[1]பாயில் கிடந்து தரையோடு பாலால்
மோதும் உடம்பெரியும்
வாயில் மூச்சுப் பிறந்து விடும் வாயா
லெடுக்கும் வசமளியும்
நோயில் பட்டு மிகவழிக்கும் நோக்கும்
கீழாய் முகம் சாய்க்கும்
தாயேஅறிய வயித்தியருக்கும்
சாற்றுகிறேன் எரிகணமே. (117)

[2]சுழல் கணம்

சொல்லில் சுழியவே சுவாசம்
வாங்கும்
நளிருடன் சுரமும் தோன்றும் நயனம்
பஞ்சடைந்து காணும்
தெளிவுளன் சற்றும் தோற்றும் திகைக்க
நெஞ்சிரைப்பு மாகும்
குழலிக் கண்ணுச்சிதாழி குணமிது
வறிந்து சொல்லே. (118)

---

1. "பாயில் கிடக்கஓடாது பதைத்தே எரிவுமிகவுண்டாம்
வாயில் மூச்சுப் பறிந்துவிடும் வாச உமிழ்நீர் வடிந்துவிழும்
நோயில்பட்டு மிகஅழுமே நோக்கும்கீழே முகஞ்சாய்க்கும்
ஆயுள்வேத வைத்தியருக் கறைந்தோமிதுவே எரிகணமே."

(பாலவாகட பாடம்).

2. பாலவாகடத்திலுள்ளபடி சுழல்கணம் என்று ஒருநோய் கிடை-யாது. "சொல்லில் சுழியவே" என்கிற செய்யுள் சில மாறுபாடுகளுடன் "கழிக்கணம்" என்பதைப்பற்றி அதில் பின்வருமாறு காணப்படுகிறது :—

"சுழியெனுங் கணமே சொல்லின்சுழியவே சுவாசம் வாங்கும்
நளிருடன் சுரமுந்தோன்றும் நயனம் பஞ்சடைந்து காணும்
தெளிவுடன் சற்றுநொந்து திகைக்க நெஞ்செரிப்பு காணும்
குழியுமே யுச்சிதாழிற் குணமிஃதறிந்து சொல்லே."

சுழிக்கணம்

[1]பால்முலையாய் நீகேளாய் மண்ணில் பிறந்த பாலகருக்கும்
ஈரல் வெந்து சுழிகணமாய் இருமலுண்டாம் வாய்
[இனிப்பாம்
நாறவம் போலத்து வண்டுநாசி இரண்டும் எடுத்தெரியும்
..... (119)

பாரிலுள்ள பாலகருக்குப் பரிந்தே இதனைப் பாரீரே
மாரிலே சுழியவாங்கும் வாயினல் நுரையும் கோழை
சேரிலே பிள்ளைவாந்தி செய்யும் கழியும் காயும்
பாரிலுள்ள பாலகருக்குப் பாரீர் இதனைப்
[பாரீரே. (120)

மின்னே கேளாய் சுழிகணந்தான்
மேல்சுவாசம் மேலு முண்டாய்
பின்னே மார்பு முகம் நரம்பும்
புடைத்துக் காணும் உண்மையிது
சொன்னேம் வயிறுமீரல் நெஞ்சுந்
தோன்று மதரமிவை வெந்து
அன்ன முலையும் குடியாமல்
மலத்தி(?) குடிக்கும் அறிவாயே[2]. (121)

---

1. "பால் முலையாய்" என்னும் பாட்டுக்கு நான்காம் அடி காணப் பட வில்லை. இந்தச் செய்யுளும், அடுத்துள்ள பாரிலுள்ள என்னும் செய்யுளும் பாலவாகடத்தில் காணவில்லை. "பாரிலுள்ள பாலகருக்குப் பரிந்தே" என்பதுகூட அச்செய்யுளின் முதலடியாகத் தோன்றவில்லை.

2. "மின்னே கேளாய் சுழிகணந்தான்
மேவும் வாந்தி யிருமலுண்டாம்
பொன்னே முகமு மார்பு கண்டம்
புடைத்துக் காணு முண்மை யிது
சொன்னேனும் வயிறுமீரல் நெஞ்சு
தொண்டை நாவுமிவை வெந்து
அன்னே முலைப்பால் குடியாம
லலறியழுமீ தறிவாயே."

(பாலவாகடம்.)

தோஷ கணம்[1]

தாகமுங் கழிச்சலுண்டாய் தலையது சுழலுமுண்டாய்
வேகமாய் சுரமும் சற்றே விட்டு விட்டெனவே காயும்
வாகுசேர் கண்ணுந்தாழ்ந்து வாயுந்தா னுலர்ந்து காணும்
சோகமும் வயிற்றில் நோவாய் சேர்ந்துகைகால்
[தண்ணீரே. (122)

கண சன்னி[2]

கண்மூடினப் போலதன் கழிந்து கைகால் குளு(ளிர்)ந்து
மனமிதில் மனிதர்காண மாய்ந்துபேய் சோர்ந்துமீது
குளு(ளிர்)ந்து தூயஞ் சொல்லேயழுது இன்னும்
விண்மீதிலேகு மென்று விரைந்துமே முனிவர்
[சொன்னர். (123)

[3]அக்கர குணம்

தலையும் வலிக்கும் தாகமுண்டாம்
தாதுமிகவும் துடித்து நிற்கும்
குறலையம் வெந்து நா வெந்து
குந்தூதிதான் வரும் பின்னே

---

1. "தோஷகணம்" என்பதன் குறிகுணம் முதலிய விவரம் பால வாகட நூலில் காணப்படவில்லை.

2. கண் சன்னி (அல்லது கண சன்னி) என்றொரு நோய் பால வாகடாதி நூலில் காணப்படவில்லை. ஆனால் அந்நூலில் அசாத்திய குறி குணம் என்கிற தலையங்கத்தின் கீழ் இச செய்யுள் பின்வருமாறுள்ளது :—

"கண்ணையு மூடிக்கொண்டு கழிந்து கைகால் குளிர்ந்து
மண்மீதில் மனிதர்காண மயக்கமாய்ச் சோர்ந்து வீழ்ந்து
கண்மீது பெற்ற தாயார் சாலவு மழவே பிள்ளை
விண்மீதி லேகுமென்று விரைந்துமே முனியுரைத்தார்".

3. அக்காரம் என்பதே அச்சரம் என்றும் வழங்கப்படும். "அச்சர மென்றொரு நோயுண்டு அஃதக்காரமும்" என்று கூறி, இங்குள்ள பாட்டும் பாலவாகடத்தில் பின்வரும் வகையில் காணப்படுகிறது :—

"தலையில் வலியுந் தானுண்டாம் தாதுமிகவும் துடித்து நிற்கும்
குலையும் வெந்து நாவெந்து குளிர்ந்துதானே வரும்பிள்ளை
கலையும் பேசியு நாவெளுத்துக் கலங்கிக் கண்டந்தான் வெந்து
மலையின் மிளகு கொளவொண்ணை வகுத்துச் சொன்னேமெக்காரமே".

கலையும் பேசிய நா
வெளுத்து வந்து
மலையில் மிளகுகொள்ள வொண்ணை
வகுத்தே சொன்னேம் [1]தூக்காமே. (124)

[2]குன்றீரற் குணம்

உந்தி தலைபத்தி ரரல் முன்னளவும் பின்னளவும்
புண்ணை பொருக்காலே சுவாசந்தா னுண்டாம்
வந்து அறம்பூசிப்போல காய்ந்து மார்க்கமாய்
திண்டு முண்டாய் வருத்த மாகும்
இந்தவகை தன்னைக் குன்றி பகர்ந்தா னென்றே
உய்ப்புவாகல் அறியாதார் கணத்தின் பேதம்
கொந்துலவும் குழலும் வாயிதனையே ஆரய்ந்து கொண்டு
படனம் கொடுத்தார் குணமாமே(?) (125)

---

1. "அக்காரமே" என்னும் சொல் "தூக்காமே" என்று பிழைபட எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது,

2. குன்றீரற் சுரமென்பது "கணச்சுரம்" என்று பாலவாகடத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதிலுள்ள செய்யுள் பின்வருமாறு :—

"உந்திதனைப்பற்றி யீரலளவும் புண்ணைய்
ஒருக்காலே சுவாசந்தானுண்டா மிக்க
வந்தசுரம் பூசிலுற்போலே காய்ந்து வருத்தமாய்
திட்டு முட்டாய் மயக்கங்காணும்
இந்தவகை கணக்காய்ச்சலென்றே நாளு
மியம்புவார் புவிமீது நூல்வல்லோர்கள்
சுந்தரியா ளுமைப்பாகன் முனிக்குச் சொன்ன
சூட்சுமமிது தானறிவீ ருண்மைதானே."

[1]அக்ஷரக் குணம்

மூக்குநீர் பாய்ச்ச லாகும்
முகம் மிக வெளிறிப் போகும்
நாக்குமே வெளுத்து[2] மூக்கும்
நாவில் வாயாவி தோன்றும்
தூக்கமும் சுரமும்[3] அழுத்தும்
துணுக்கெனத் தண்ணீர் வாங்கும்
[4]தீர்க்கமாய் குண மிகுத்தால்
சிறந்த அக்ஷரமுமாமே. (126)

குண்டி அக்ஷரம்

அக்ஷர குணமே கேளீர் அரைக்கு மேற் சுரங்கள் காணும்
[5]அக்ஷம் போலவெளரும் ரோகம் மஞ்சள் நீளச்சிறுநீர்
[போகு
மெச்சவாயிற் சுரக்கெனும் இளைத்து உடம்பு கடுப்பாகும்
கொச்சைக் குரலும் கடுப்பெய்து குண்டி அக்ஷரக்
[குணமாமே. (127)

ஊது காமாலை

ஊதுகாமாலைக் குணமே கேளீர் ஊதிமுகமும் காலதைக்கும்
பாதிச்சாமம் பசிஎடுக்கும் பசித்தவுடனே மந்திக்கும்
சீதமும் சிறுத்துவயிறு விடும்சிந்தை மயக்க முண்டாகும்
[6]காதும் அடைத்து பயமாகும் காமாலை ஊது —
[குணமாமே. (128)

---

1. இது பாலவாகடத்தில் உள் அச்சரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பே 124-ம் பாட்டில் அச்சாம் (அக்ஷரம்) என்பது கூறப்பட்டிருப்பதால் இங்கு உள்ளச்சரம் என்றிருத்தல் தான் சரியென்று தோன்றுகிறது.

2. "பூக்கும் நாபி வாயாவி" (பாலவாகடம்).

3. "சுரமும் மெத்தத் துணுக்கென" (பாலவாகடம்).

4. "தீர்க்கவிக் குணங்கள் கண்டால் திகழுள்ளச்சாமுமாமே." (பாலவாகடம்).

5. "மச்சம்போல வெளுத்துடல்" (பாலவாகடம்).

6. "காது மடைக்குமிளைப்புண்டாங் காமாலை யூதற் குணமிதுவே." (பாலவாகடம்.)

மஞ்சள் காமாலை

[1]குண்டியக்ஷர மிகுந்தால் குளுப்
பையாய் காலீம் அடங்கும்(?)
வெண்டி யெச்சீர்த்தவதும்(?)
வெதுப்பு மேல் விலாவில் தோன்றும்
மண்டையில் மலமுசிக்கி(?)
பசு மஞ்சள் சிறு நீராகும்
கண்டிடா கண் வெளுக்கும்
மஞ்சள் காமாலையாமே. (129)

[2]கீரி நோய்

மஞ்சியினம் கலைதானும்(?) மருவிடும்பால் பாலாக
மிஞ்சியே வயிற்றிற் பூச்சி மேனியும் மலைத்து
[காட்டும்(?)
நெஞ்சோடு விலாவில் திட்டில் தெரிகெடப் பேசுமாகில்(?)
எஞ்சவே கீரிநோவென்று அறிவுள்ளோர் அறிந்து
[பாரே. (130)

---

1. "குண்டியக்கர மிகுந்தால் குளுப்பையாய் முகங்கால் வீங்கும்
விண்டிட ரத்தம் வற்றும் வெதுப்புமேல் விலாவில் தோன்றும்
பண்டியின் மலமுஞ்சிக்கிப் பசுமஞ்சட் சிறு நீராகும்
கண்டியாய்க் கண்வெளுக்கு மஞ்சட் காமாலையாமே."
(பாலவாகடம்.)

2. கீரி என்பது ஒருவகை குடற் புழு. இவ்விஷயமான பாட்டு பாலவாகடத்தில் பின்வருமாறு :—

"மஞ்சடை மதலைதானு மருவிடும் பால்பாலாக
மிஞ்சியே வயிற்றிற்பூச்சி மேனியு மிளைத்துக் காட்டும்
நெஞ்சொடு விலாவிற்றட்டி நெறிகெட்டுப் பேசுமாகில்
அஞ்சவே கீரிநோயென்றறிந்து கொள்ளழகுமாதே."

ஆமக்கழிச்சல்

உண்டால் எதிரெடுக்கும் உடல் பல முழக்கங் காட்டும்
[1]சுண்டுமென முலைகள் சாலைசுரம் மிகுந்திருக்கும்மேனி
கண்டுசேர் மொழியுந்தாழ்ந்து காலோடு கையும் நீத்து
விண்டிலாம மென்று விதித்தனர்[2] முனிவர்
[தாமே. (131)

[3]ஐய சுரம்

மெய்யில் வந்த இளஞ் சுரந்தான்
விட்டு விட்டே வெதும்பி விக்கும்
கையும் வெதும்பும் கால் வெதும்பும்
கன்னங் காதில் கையை வைக்கு
முய்யு முழலை வந்தவரை
ஓடி கட்டிக் கொள்ளுமது
அய்யாவிழ யென்காணென்னும்(?)
அதிகமைய சுரந்தானே. (132)

---

1. "சுண்டுமே ரத்தஞ் சாலச்சுரம்" (பாலவாகடம்).

2. "விளம்பினர் முனிவர்" (பாலவாகடம்).

3. இங்கு **ஐயசுரம்** என்று கையெழுத்துப் பிரதியில் குறிக்கவில்லை. ஆனால் இச் செய்யுளிலுள்ள விஷயத்தையும் பாலவாகட பாடத்தையும் கவனித்ததில் இச் செய்யுள் **ஐய** சுரம் என்பதைப் பற்றியதே என்றறிந்து இத்தலையங்கம் இட்டோம். இது பற்றிய பாலவாகடச் செய்யுள் பின் வருமாறு :—

"மெய்யில் வந்தவைய சுரம்விட்டு விட்டேதான் வெதும்பிக்
கையுங் காலுமே வெதும்பிக் கன்னங்காயு நெஞ்சிடிக்கும்
உய்யு முழலை வாந்தியுண்டா மோடியோடிக் காட்டும்
தையம் பிழைப்பதரிது கண்டா யல்கமாகுஞ் சுரந்தானே."

ஆம சுரத்தின் குணம்

[1]ஆமசுரத்தின் குணம் கேளீ ரதிகமாகுமது பாதம்
சாமந்தோறும் வெதும்பிவிக்கும் தன்னைத்தான்
[உறங்கவைக்கும்
சேமமான உடம்புதனை செறுக்கப்பண்ணும் பசிஇல்லை
நாமங்காயு முடம்போயும் நடுக்கி இறுத்தி மது
[வென்றே. (133)

[2]ஆமசுரத்தின் குணங்கேளீர்
அங்கேகால் குளு(ளிர்)க்து விடும்
சாமந்தோறும் எழுந்திருக்கும்
தாயின் முலைப்பால் அருந்தாது
தாமவா யோலைவிடும்(?) சோர்ந்து
கிடக்கும் வாய் அலத்தும்
காமனம்பின் கயற்கண்ணுய்
கனதலை மிக்குங் கண்டீரே. (134)

மீளாதைய சுரம்

அய்யங்களிச்சல் தனைக்கேளீர்
அறவே பொருமி கண் வெளுக்கும்
கையும் காலும் சோர்ந்து விழும்
கண்ணு முழியும் உள்ளே விழும்

---

1. "ஆம சுரத்தின் குணங்கேளா யதிகமாக வெதும்பாது
சாமந்தோறும் வெதும்புவிக்குந் தண்ணீருழலை யுண்டாக்கும்
சேமமாக வுடம்பிளைக்கும் சீறியழுதும் பசியில்லை
நாழங்காரி யுடலோயும் நடுங்கியிருக்குங் கண்டாயே."
(பாலவாகடம்.)

2. "ஆம சுரத்தின் மிகுகுணங் கேளடைவாய்க் கைகால் குளிர்ந்துவிடும்
சாமந்தோறு மெழுந்தலறும் தாயின் முலைப்பாலருந்தாது
தூமவாயி லெடுத்துவிடுஞ் சோராதிருமும் வாயாற்றும்
காமனம்பின் கயற்கண்ணுய் கண்தலை மிகநோய் கண்டாயே."
(பாலவாகடம்).

[2](தொய்யல் சுரமும் விடாததுவும்
சொல்லுந் தோஷ மாறுற்போல்)
மெய்யும் நாக்குமே வறண்டு
விக்க லெடுக்கும் மீளாதே[2]. (135)

திஷ்டி தோஷம்

பாலது கழியும் தான்எதிர் எடுக்கும்
மாந்த வித்திடும் பலவிதமாய்
சாலக்கடுத்த னுடலெங்குஞ் சற்றே
சற்றே குளிரும் தலைகண் வலிக்கும்
மாலைகால மெனவே சுரம் கண்டிடு
சந்து கைகாலுடம்புமே கோமேனி முகமும்(?)
[3]கரிக்கிடுங் கோடிக்கன திஷ்டி
கொண்டிடும் காணுமே(?). (136)

---

1. "தொய்யல் சுரமும்" என்கிற மூன்றும் அடி கையெழுத்துப் பிரதியில் காணவில்லை. இவ்வரி பாலவாகடத்திலிருந்து இவ்வுரை யாசிரியரால் எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. இப்பாட்டின் ஆரம்பத்தில் "அய்யங்களிச்சல்" என்று இருப்பது பிசகென்று தோன்றுகிறது; எனெனில் மீளாத ஐயசுரத்தைப் பற்றியது இப்பாட்டு. பின்வரும் பாலவாகடப் பாடலையும் கவனிக்கவும்:—

"ஐய சுரத்தின் குணங்கேளா யகடு பொருமிக் கண்வெளுக்கும்
கையுங் காலுஞ் சோர்ந்துவிழும் கண்களுள்ளே தான்வீழும்
தொய்யல் கரமும் விடாததுவும் சொல்லுந் தோடமாறுற்போல்
மெய்யு நாக்குமே வரண்டு விக்கலெடுக்கு மீளாதே."

(பாலவாகடம்).

3. நான்காம் அடியில் மோனைப் பிசகியிருப்பதாலே, வேறு பிழைகளும் காணப்படுவதால் இச்செய்யுளும் திஷ்டி தோஷ மென்னும் விஷயமும் சரியாய் அமையவில்லை யெனத் தோன்றுகிறது.

கரப்பான் பதினெட்டு[1]

[2]செங்கரப்பான் மணல் கரப்பான்தானும்
மண்டைக் கரப்பான் பண்ணு மரிகரப்பான்
பொரி கரப்பான்அங்கமதி லெழு கரப்பான்
தானுமிக்க அளரா முதிரக்கரப்பான்
கட்டியோடு பொங்கமாய கரப்பானுந்தான்
புகவரிய சட்டைதடி வெடிகரப்பான்
சிங்கமுக மெரிகரப்பான் வாயுகரப்பான் பித்தகரப்பான்
சிலேத்தும கரப்பான் பதினெட்டாமே. (137)

எல்லாக் கிரந்தியெழும் வாதபித்தமுமாகு
பொல்லாத சேஷ்டுமத்தால் பொங்கிவிடும்—
[வில்லார்க்கும்
நீள் புருவத்தாளே நிறைந்து செய்யும் கரப்பான்
ஏழ் புவியோருக் கென்றியம்பு.[3] (138)

---

1. எட்டுப் பிரதியில் இரண்டாமுறை கற(ர)ப்பான் பதினெட்டுக்கும் (பதினெட்டு) என்கிற தலையங்கம் பாட்டின் முதலில் சேர்க்கப்பட்டிருப்பது பிசகு.

2. செங்கரப்பான் என்னும் பாட்டு எட்டுப் பிரதியில் மிக்க தாறுமாறாக எழுதப்பட்டிருக்கிறது; பாலவாகட பாடத்தைக் கொண்டு இது ஒருவாறு சீர்த்திருத்தப்பட்டுள்ளது. மேலும் 18 வித கரப்பானென்று கூறியும் 13-வகை தான் இங்கு குறிக்கப்பட்டிருக்கின்றன,

3. "எல்லாக் கிரந்தி" என்னும் இச் செய்யுள் பாலவாகடத்தில் கரப்பான் நோயைச் சேராமல் கிரந்தி வகை என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்டிருக்கிறது.

வாத கரப்பான்

இயம்பு திமிர் காய்ச்சலியங் குவிக்குந் திரட்சி
தயங்கு கணங்களத்தொரு கரப்பானும்
வந்தூறுமாக் கணத்தில் வாதக்கரப்பானும்
செந்தாமரையாளே செப்பு.[1] (139)

பித்தக் கரப்பான்

செப்புந்தலை நெறித்துச்சேரும் காய்ச்சல் தினவு
ஒப்ப சிவந்தெரிந்து உஷ்ணமும் தப்பாமல்
வாந்திவரும் நீர்சிவக்கும் வந்துமலம் சிக்கிவிடும்
சேர்ந்த பித்தம் செங்கரப்பான் தின்னும்[2]. (140)

சிலேஷ்மக் கரப்பான்

முன்னம் சிலேஷ்மக் கரப்பான் செய்யும் நெஞ்சுகண்
மண்ணும் வாயில் கிரந்தி பற்றிவிடும்
எண்ணெறி மண்டை வலிக்கும் மணிப்புடைய
வாளத்திறங்கொண்ட வளிர்தான் கேளாய்.[3](?) (141)

---

1. மேலே மூலத்திலிருப்பது பாலவாகட பாடம். இச்சீர் வெண்பாவின், எட்டுப் பிரதியில் இருந்த பாடம் பிழை யுள்ளது. அது பின் வருமாறு :—

" இயம்பு திமிர் காய்ச்சலியங் குவிக்குந் திரட்சி
தயங்கு கணங்களத்தொரு கறப்பானும்
நய்யம்படவே வந்தூரங் கனத்தில் வாத கறப்பானுஞ்சும்
வன்னஞ் செந்தாமரையாளே செப்பு.

2. திண்ணம். (வேறு பாடம்).

3. சிலேத்தும கரப்பான் குறிகுணங்கள் பாலவாகடத்தில் வருமாறு :—

" இசையு நெஞ்சகளடைந்துள்ளே விரணமாகியே தலைவலித்திடும்
அசையும் வயதனில் வெந்துமே திரட்சியாகியே கடுகடுத்திடில்
விசையும் சேத்துமகரப்பானென சிகிச்சைமேவு செவ்வரி பரந்துளே
வசை பொருந்தும் விழிகலேதிரண்ட முகவனிதையே
[யவுஷதங்கேளே."

தோஷக் கரப்பான்

கேளாய் குளிர்காய்ச்சல் கிளகுங்கண்டுங் களலை(?)
மூளாலி தனப்போல முயன்று நிற்கும்(?)
நாள்தோறும் பூதம் போல்வீங்கி வற்றும் புண்ணுகி
மூக்கில் அரிக்கும் மோதும் கரப்பான் தோஷ
[முற்று.[1] (142)

ஊது கரப்பான்

ஓதக் கேளான்றேடி ஈரமற்று லிங்கம் யோனி
கதம் வந்திடும் பூசத்தண்ணி ஆரைமலைப் புண்
[கரைக்கும் பிரண்டைபோல
தடித்திருக்கும் உள்ளஞ்சிவந்து கன்னி உடம்பிலே
வெடித்திருக்கும் துள்ளியே நெருப்புபோல
[சுழன்றுமே
குண்டு நாவுகண்ண விழ
கோதைமாதே கரப்பானின் குணங்கள் தானே[2]. (143)

---

1. பாலவாகடத்தில் தோஷக்கரம்பான் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :—

" உள்ளுமேலு ளரிர் காய்ச்சலாகி யுடம்பெங்கும் புண்ணென
[வழன்றுவாய்
கள்ளுநாறி யுடல்தன்னிலே கழலைகண்டு பூதமென வீங்கியே
எள்ளின் மாமலரையொக்கும் மூக்கினலரித்து நின்றழுது மேங்கிஞல்
துள்ளுமான்கணின் சாயலாய் கொடிய தோஷமான கரப்பானிதே."

இந்த " கேளாய் குளிர் " என்னும் பாட்டு ஊதுகரப்பான் குறிகளைக் கூறுவதாக பாலவாகடத்தில் இருக்கிறது. அப்பாடம் வருமாறு :—

" கேளாய் குளிர்காய்க்சல் கேடாங் கருங்கழலை
மூளாவிதான்போல் முயன்று நிற்கும்—நாள்தோறும்
பூதம்போல் வீங்குவிக்கும் புண்ணுகி மூக்கலிக்கும்
ஊதுகரப்பான் தோஷ முற்று."

2. " ஓதக்கேளான் " என்னும் இச் செய்யுள் ஒழுங்கினமாகவும், கருத்தறிய முடியாமலும் அமைந்திருக்கிறது. இச் செய்யுள் அல்லது இதைப்போன்ற செய்யுள் பாலவாகடத்தில் எங்கும் காணப்படவுமில்லை.

குறிப்பு :—எட்டுப் பிரதியில் ஓர் ஏடு தவறியிருப்பதால் இது முதல் விஷயத்தில் சில பாகம் (4 பாட்டுகள்) விடுபட்டுப் போயிருக்கின்றன. (மூலத்தில் 61-ம் ஏடு தவறியுள்ளது).

முட்டைப்பான்

பஞ்சபூதம் நெஞ்சம் பரிவுடன் வெதுமாகில்(?)
மிஞ்சியே சுவாமிளை மிகக் கண்ணும் கோபம்
[கொள்ளும்(?)
பஞ்சனிவிலா இரண்டும் பரிவுடன் தாக்குமாகில்(?)
மிஞ்சியே முக்கி மூக்கில் மிகுத்த முட்டைப்
[பாலுமே. (148)

தானம் திருச்சன்னி

வேகமாய் சுரமுமுண்டாய் மேனியுமதைப்புக் காட்டும்
மாகமாய்(?) முலையுண்ணாது மூர்ச்சையாய் இருகண்
[சொருகும்
மாகமே(?) பசளைசாடி ஆறங்கைகால் குளிர்ந்து காணும்
தாகமே மிகவுண்டாகும் தானதிருச்சன்னி
[யாமே. (149)

சந்நிபாத குணம்[1]

மாந்தகணம் போராமமொன்றுய் கூடி
வயிறு விடுகத்தானுப்பும் வாந்தி பண்ணும்
சேர்ந்த சுரங்கால் கையுங் குளிர்ந்து ரத்தம்
சீதமிகப் பரபரென்று வாயு தள்ளும்

---

1. இவ்விஷயம் பாலவாகடத்தில் தோஷ சந்நியின் குறி குணம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றிய செய்யுள் அதில் பின்வரு மாறு காணப்படுகிறது :—

" மாந்தகணம் போராம மொன்றுய்க்கூடி
வயிறுவிடுந் தானுப்பும் வாந்திபண்ணும்
சேர்ந்தசுரங் கால்கையுங் குளிர்ந்திரத்தம்
சீதமிகப் பற்றிநின்று வாயு தள்ளும்
போந்தக் கண் நாவெந்து புண்ணுய்த் தோஷமுற்றிப்
போகாமல் சந்நியாய் வலித்து வேர்க்கும்
சாந்தமுட னிதுதீர மாதமொன்று தப்பிலுல்
நோயாறுந் திங்கள் மூன்றே."

புறந்தகண்ணுய்(?) வெந்துபுண்ணு தோஷம்பற்றி
[போகாமல்
சந்நியாய் வலித்து வேர்க்கும்
சாந்தமுட னிவை தீர மாதமொன்று தப்பிலுல்
தோவாருத்திங்கள்(?) மூன்றே. (150)

அபின்னியாத சுரம்[1]

ஆர்க்கும் காயும் நபஞ்தி(?)
சுரத்தை அறியக் கொள்
வேர்க்கும் வெதும்பும் கண்
சிவக்கும் வேண்டும் பலகாலும்
பார்க்கப் பயமாயிருக்கு தென்னும்
பலகாலும் கண்டங்கத்திரியழு(?)
மரிக்கும் வயிறு வருசிக்கு விக்கும்(?)
தெருவில் புறப்பட்டோடிடுமே. (151)

வாத பித்த சிலேஷ்ம நிலை

மாங்கிஷசுரந் தன்னில் வாதமது பித்தந்தானும்
தூங்கிய எலும்பில்யம் சுகபிரந்தி(?) தோன்றும்
[பின்னே(?)
சாங்கியமாக நின்று சரீரத்தை நோவு பண்ணும்
ஆங்கிதை சொல்லவொண்ணுது அனேகமா
[ரோகந்தானே. (152)

---

1. இது வடமொழியில் அபிந்யாஸஜ்வரம் எனப்படுகிறது. ஆலல் பாலவாகடத்திரட்டில் இது அன்பஞ்தி சுரம் என்கிற தலைப்பின் கீழ் குறிக் கப்படுகிறது ; அது வருமாறு :—

" ஆர்க்குங்காயு மன்பஞ்தி ஆனசுரத்தை யறியக்கேள்
வேர்க்கும் வெதும்பும் கண்சிவக்கும் வெந்நீர் வேண்டும் பலகாலும்
பார்க்கப் பயமாயிருக்குதெனப் பதரி அலறிக் கதரியழும்
சேர்க்க சிக்கிவிடுந் தெருவிற் புறப்பட்டோடிடுமே."

மாங்கிஷ சுரம்

அதிகமாய் சரீரமெல்லா மனல்போல சுரமுங்காயும்
சதிரமெல்லாங்[1] கடுகடுக்கும் தான்மூச்சு மெத்தஓடும்
உதிரம் போயுடல் வெளுத்து உருகியே கருகிமேனி
மதியுமே மயங்கி மூர்ச்சை மயிர்க்கூச்சு மாங்கிஷ
[வெப்பே. (153)

ரத்த சுரம்

தாகமும் மூச்சுமொன்றுய் அதிவித முர்ச்சையாகும்
ஆகமே மதங் கொண்டாய் போலதுபோல மிகுந்து
[காணும்
முகமும் கவலை நோவுநுரை ரத்தசுரமிதன்றே[2]. (154)

[3]செங்கிரந்திக்கு மருந்து

கோரோசனை நீரோடு கொடுக்கபின் கற்பூரவள்ளி
நீராடே புரைத்த தருந்த நிகரி குன்றுமணிச்
சாற்றுல் வாரவகுத்த(?) முருக்கிலையின் சாறு மருந்து
[நன்று சடா(?)
மார்வேல் விழியாய் செம்முள்ளி மருநீர் போட்டு
[கொடுப்பாயே. (155)

---

1. "நடுக்குந்தானே". (பாலவாகடத்திரட்டு).

2. "தாகமும் மூச்சு" என்கிற இப்பாட்டில் ஒரு அடி இங்கு காணவில்லை. பாலவாகடத்திரட்டில் முழுப்பாட்டுமே பின்வருமாறு வேறு வகையில் அமைந்துள்ளது :—

"தாகமுங் கழிச்சலாகுந் தலையது சுற்றல் காணும்
வேகமாய்ச் சுரமுஞ்சற்றே விட்டு விட்டேகுங்காயும்
வாகுசேர் கண்ணுந்தாழ்ந்து வாயுடன் நாவுலர்ந்து
சோகமும் வயிற்றில் நோயும் சேர்ந்து கைகால் தண்ணீரே."

3. பல்வேறு சுரம் முதலியவற்றின் குறிகுணங்களைக் கூறிவரும் போது திடீரென்று செங்கிரந்திக்கு மருந்து முதலிய வேறு விஷயம் கூறப்படுவதற்குக் காரணம் யோசிக்க வேண்டியதே. மேலும் செங்கிரந்தியின் குறி குணம் முன்பு (36-ம் பக்கம்) கூறப்பட்டிருக்கிறது. இச் செய்யுளின் பாலவாகட பாடம் வருமாறு :—

"கோரோசனைதான் முலைப்பாலிற்கொடு கர்ப்பூர வள்ளியிலை
நேரோடுள்ளிதனை நறுக்கி நிகருங் குன்றுமணி யிலையின்
சாறுமருந்த முருங்கயிலைத் தன் சாறருந்தச் செங்கிரந்தி
தீரும் செம்முள்ளியினிலையைத் தினமு நீரிற் குளிப்பாட்டே."

கருங்கிரந்திக்கு மருந்து

நெய்யுடனே விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் சமன்
[கூட்டி
நீடும் சங்கிலைச்சாறு சமனுய் விட்டு
[1]தியாமற் கடுகுதான் நீரில் வார்த்துத் திரளுமளவில
வடித்தெரித்து இறக்கிக் கொண்டு
பையவொரு பணவிடை தானுட்கொண்டு பாங்குமே
லெங்குந் தான்தடவி வைத்துச்
செயுமுள்ளிக் கிரந்தி நாயகன் போட்டுத் தண்ணீர்
தினமும் குளிப்பாட்டிட தீருமென்று. (156)

வலிப்புக்கு மருந்து[2]

மூக்கறட்டைச் சாறு முடக்
கொத்தான் செப்பு நஞ்சி
முத்தெருக்கஞ் செவியுட
னேரிலைத் தாமரை தாமரையும்
அறக்கமுடன் நீருமுள்ளியில் இறகுங் கூட்டி
ஆமணக் கெண்ணெயில் எரித்து
உள்ளுக்கும் கொடுத்துப் புறம்பூந்தற்குடன் பூசியிட
அனந்த வலிப்பு நிற்கும் புவியுள்ளோருக்கே. (157)

---

1. "தியாமல் முக்கடுகை நீரைத்துத் தீதில்லா ரவியில் வடித்தே யெடுத்து மையவொரு பணவிடை தானுட் கொடுத்துப் பாங்குடனே மேலெங்கும்" என்று பாலவாகடத்திரட்டுப் பாடம். கருங்கிரந்தியின் குறி குணம்பற்றி 37-ம் பக்கம் பார்க்க.

2. கிரந்திக்கு மருந்து கூறியதும், வலிப்புக்கு மருந்து என்ன ஒழுங்கு முறையில் கூறப்படுகிறதென்பதும், இது வலிப்பு மாந்தத்திற்கா அல்லது வலிப்பு சன்னிக்கா (115-ம் பக்கம்) என்பதும் விளங்கவில்லை. கடைசி அடியில் "அனந்த வலிப்பு நிற்கும்" என்றிருப்பதைக் கொண்டு அனந்தவாதம் என்னும் தலைவலி நோய்க்கு இது மருந்தா யிருக்கலாமென்றும் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

குளி தோஷத்திற்குப் பரிகாரம் (1)

பச்சைப்பசேன ஓலையிலேதான் படுசீராடுசறென் றெழுதிக்
கொச்சே (?) கோழி பலியிட்டு குடநீர் சோர்ந்து
[தான்கட்ட
அச்சமில்லை குழிமிட்டா ணுணநிலத்தின் விள்விலை
மெச்ச துவைத்துவைத்து நீருடனே விரவி
[குழயாட்டிட நன்றே. (158)

[1]குளி தோஷத்திற்குப் பரிகாரம் (2)

பின்னந் தண்ணீர் காட்டாத்தி எழுந்த பருத்தி பயற்றம்
[வேருமே குளிசமது கட்டி
உன்னீர் சொரியப் புறமடைநீர் பெருங்கோழி
[கொடுத்துப் புறப்பாய்
சுத்திப் போட்டக்கால்
ஓம் விழுழைக்கு மென்று(?) கையாகாணர்
[சாற்றினரே. (159)

---

1. இது பாலவாகடத்தில் குளிச தோஷப்பரிகாரமென்று கூறப்பட்டுள்ளது. ஆனல் பாலவாகடத்திலும் குளிதோஷமென்றே இருக்கிறது. பாலவாகடத்திலும், பாலவாகடத்திரட்டிலும் பாட்டு மாத்திரம் இங்கிருப்பதைவிட வேறு விதமாய் காணப்படுகிறது. அது வருமாறு :—

" ஓமந்தண்ணீர் காட்டாத்தி உயர்ந்த பருத்தி பயற்றம்வேர்
ஆமே குளிசமதுகட்டி அன்பாய்ச் சொறியும் பிறமடைநீர்
போமேகோழிப் பலிகொடுத்துப் புறமாய்ச்சுற்றிப் போட்டக்கால்
தாமே குழவி பிழைக்குமென்றுத் தையற்காணர் சாற்றினரே."

(பாலவாகடத்திரட்டு.)

இங்குள்ள " பின்னந் தண்ணீர் " என்னும் பாட்டு முற்றிலும் பிழையுள்ளதாகவும் ஒரு அடி குறைந்ததாகவும் காணப்படுகிறது.

(குளி தோஷ பரிகாரம் 3)

[1]வேலமரத்திருப்பு கூட்டிட னய்யர்களூல் சுத்தி விளங்க
வரிந்திரம் பூசி தூபதீபங்காட்ட கோழி பலிகொடுத்து
தலைசுற்றி பாங்கிற்போட்டு மேலெங்கும் குழாவிளாவியை
[யாதல் இல்லை
இலை யாகுந்தலைக் குளிப்பாட்டிடுமே. (160)

[2]வரட்புள்ளுக்கு(ப் பரிகாரம்)

செம்புத் தகடுதனில் பகிராச வழுத பகிகள்(?)
தப்பா தெழுதநீர் மந்திரிச்சுச் சொரிந்துதான் கட்டிப்
பார்கோலி பலியிட்டவன் ரத்தம் நெற்றியிலே திலகமிட
துப்பார் மேனியருக்குச் சோறுபுளுக்குந் தப்பா
[தென்றேரும்(?). (161)

---

1. " வேல மரத்திருபு " என்கிற பாட்டும் இங்கே அரை குறையாகவும் பிழையுள்ளதாகவும் காணப்படுகிறது. இதன் பாடம் பாலவாகடத்திரட்டில் பின்வருமாறு :—

" வேலமரப் புழுக்கூட்டில் கன்னிநூல்
சுற்றி விளங்குமஞ்சள் அதுபூசித் தூபங்காட்டி
சாலவுமே முக்குளநீர் மந்திரித்துத் தலைமீதே
சொரிக மீள ஆலம் வீழ்தைப்
பாலனுக்குக் குளிசங்கட்டிக் கோழிப்பலிக்
கொடுத்துத் தலைச்சுற்றி அப்பால்போட்டு
மேலுக்கு நிலவிளா ஆதல்வில்வ இலையதல்
போட்டுக் குளிப்பாட்டல் நன்றே."

2. வரட்புள் தோஷக் குறிகளைப்பற்றி 99–ம் பக்கம் பார்க்க.

[1] நீர்ப்புள்ளுக்குப் (பரிகாரம்)

பச்சொந்திநீர் நீங்காரம் வரைந்து பாங்கு பெற
மஞ்சள் நூலாலே சுற்ற
அச்சமறப்புற மடைநீர்தான் சொரிந்து அழகான
செஞ்சேவல் பலி கொடுத்து
ரகசியமாய் யந்திரம் கட்டத் தீரும் நிகரான மருந்து
தனே நிகழ்த்துங் காலே
வெச்செனவே விஷ்ணுக்கிரந்தி சீர்குடி நீர்விடி
வேறே(?) குடித்துவிட வியாதி போமே. (162)

[2] தூங்கும் புள்ளுக்குப் (பரிகாரம்)

வெளவால் சிறகு லனிலூமத்தை(?)
யறுகம் வேரதைச் சுருட்டிச்
(செவ்வாய்க்) கன்னிப்பெண் நூற்ற
நூலால் சிறகுதனில் சுற்றிக்
(கவ்வாய்ப்) புனலுஞ் சொரிந்து குளிசம்
கட்டிக் கோழிப் பலி கொடுத்து
[3] நசூவி விழியாயி முண்டா(?)
குவனே வேறுரைத் தருந்தே. (163)

---

1. நீர்ப்புள் தோஷத்தின் குறி குணம் பற்றி 14-ம் பக்கம் பார்க்க. இதனடியிலுள்ள "பச்சோந்தி" என்னும் பாட்டைப்பற்றிய பாலவாகடத் திரட்டுப் பாடம் பின்வருமாறு :—

"பச்சோந்தி தன்னே ஸ்ரீங்காரஞ் சொல்லிப்
பாங்குடனே பிடித்து வந்து மஞ்சள்நூல் சுற்றி
அச்சமற புறமடைநீர் எழுதரஞ்
சொரிந்தழகான செஞ்சேவல் பலி கொடுத்து
நிச்சயமாய் இயந்திரம் கட்டத் தீரும்
நிகரான மருந்ததனே நிகழ்த்துங் காலே
வெச்சென விஷ்ணுக்கிராந்தி சீரங்கூட்டி
வேறே நீர்க் கொடுத்திடவே வியாதி போமே."

2. தூங்குபுள் தோஷக் குறிகள் பற்றி 14-ம் பக்கம் பார்க்க.

3. "நவ்வி விழியாய்க் கூவிளவேர் நன்றாய் அரைத்துப் புகட்டுகவே." (பாலவாகடத் திரட்டுப் பாடம்.)

நீர்க்கணத்திற்குப் [1] பரிகாரம்

நாயுருவி யரிசி நெரிஞ்சிக்காய் நெய்க் கொண்டான்
கனியோ டுருள்ளி நறுக்கி முலேப்பாலிற்
செயினிக்குக் கோழை யறவடுகவே கொடுத்திந்த
நெய்ப் பண்ண விசரம் செப்புங் காலே
பாய்கண்டங் கத்திரி தூதுவளே இத்திருங்கலே யுழத்
திரிகடுகு திருபலே இருசிர மிண்டங் கொழுந்து
நேபமுடன் போட்டெரித்து பத்ததில் வடித்து கூட்டி
[முள்ளி
வேரசை வள்ளிக்கொடி நித்தமொரு காசிடை
[கொள்ளில் நீங்கிடும் பின்னேயே. (164)

வரட்கணத்திற்குப் (பரிகாரம்)

முள்ளிவேர் செவ்வள்ளிக்கொடி தண்ணீர் முட்டான்
முசுமுசுக்கை தூதுவளே கண்டங்கத்திரி வேரும்
தில்லுங்கமலிப் பிசின் கருஞ்சீரகம் திருந்து(?)
மணித்தக்காளி திருகுகள்ளி வேகம்(?)
வெள்ளுள்ளி வசம்பிலேடொவ்
வொன்று இரண்டு வராகனிடை
[2] விளக்கெண்ணெய் இதற்சமனுய் விட்டுக்கொண்டு
உள்ளுக்குக் கொடுத்துப் பின் மேலும்பூச ஓடியலே
[புக்கும் வரட்கணமுந்தானே. (165)

---

1. நீர்க்கணக் குறி குணம் பற்றி 18-ம் பக்கம் பார்க்க. நீர்க்கணத் திற்குப் பரிகாரமுறை பாலவாகடத்திரட்டில் பின்வருமாறு :—

"அருளினூர் அமுதமெனும் குளிகைதானு
மதிமதுரம் செண்பகப்பூ எலமோடு
திருவு கோரோசனையுஞ் சாத்திரபேதி
சிறந்த வெட்டிவேர் கொஷ்டம் மாசிப்பச்சை
திருவெனவே விளாமிச்ச வேருங் கூட்டிச்
சரியாக ஆதண்டைச் சாறு கூட்டிப்
பருவமதா யொருசாம மரைத்துக் குன்றிப்
பருமனுய் முலேப்பாலிற் பருகிடரே".

2. "விளக்கெண்ணெய் இதற்குச் சமனுய் விட்டுத்தான் கொண்டு எரித்து உள்ளும் கொடுத்து மேல் தடவே". என்று எட்டுப் பிரதியிலுள்ள பாடம் இங்கே பாலவாகடத் திரட்டின்படி திருத்தி யெழுதப்பட்டுள்ளது.

மூலக் கணம் (பரிகாரம்)

[1]மணம்பாசி சமூலம் வெள்ளாட்டுப்பாலில் பாங்குடனே
நேயாமல் துளாவி காய்ச்சிக்குழைத்து ஒன்ருய் காய்ந்த
தண்ணீர் இறக்கிக்கொண்டும் ஓர் எலுமிச்சம்பழம் பிழிந்து
குழம்பானபின் தயிரை கொடுக்கும்போது நற்சீரகம்
[மேல் அதிமதுர மகிந்தே. (166)

பெருமரத்துப் பட்டைதனை வெள்ளாட்டுத் தயிரில்
[2]அரைத்துக் கொடுக்கத் தீரும்
(திரு)வான பசுவின்பாலிற் பருத்திப்பிஞ்சும் சீரகமும்
அரைத்துமே கொடுக்கத் தீரும்
[3]பரிசிரந்தனில் நற்சீரகம் நெய்கூட்டி
வாங்கத் தீரும் அதுதானன்றி
பெருமோதியம் பட்டை பாலிலே பிறங்கி
மாதளம் பிஞ்சு தயிரோடேயே. (167)

---

1. இந்தப் பாட்டு பெரும்பாலும் இங்கு பிழை யுள்ளதாகக் காணப் படுகிறது. பாலவாகடத் திரட்டிலுள்ளபடி இதற்குப் பின் வருமாறு பாடம் :—

"பழம்பாசி சமூலமுடன் வெள்ளாட்டுப்பால்
பாங்குடனே நன்ருகப் போட்டுக் காய்ச்சிச்
செழும்பாக வெந்தபின்பு கோது நீக்கித்
தேசியெனும் பழச்சாற்றைக் கூடவிட்டுக்
குழம்பாக விழுந்தயிரைக் குடிக்கும்போது
குணமாகு மூலகணங் கோதை கேளாய்
அழங்கு கருவேல்பட்டை தண்ணீரோடே
அதிமதுரஞ் சீரகமு மேலங்கூட்டே."

மூல கணத்தின் குறி குணம் பற்றி 28-ம் பக்கம் பார்க்க.

2. "பிறகரைத்துமே யதனைக் கொடுக்க." (பாலவாகடம்).

3. "பரிவான சாறதனிற் சீரகமும் கூட்டிப் பண்புடனே தீரும் பின்னர்" (பாலவாகடம்).

[1]குண்டியக்கரத்துக்கு (மருந்து)

[2]சுண்டிவே ரணலும் ஈச்சங்காய் அளவு அரைத்து
கலங்காயின் வெண்ணெய் கட்டியும் அருந்தத் தீரும்
கொண்ட கருசிலாங்கண்ணியே பாக்களவு அரைத்துக்
கூறுதல் சீதமுடன் அருந்த தீரும்
வண்ட லங்கருங்குழலாய் பச்சை அரிசிச் சோறும்
வயங்காவின் பாலும் பத்தியங் கூடலாமே
[3](குண்டியக்கரமான வியாதி விட்டுக்
குடிபோகுமென்று சிவன் கூறினரே.) (168)

கணத்திற்கு எண்ணெய்

[4]நாயுருவிச்சாறுழக்குக் கரிசலாங்கண்ணி யுழக்கு
வல்லாரைச்சாறு ழக்கு சீதமுடன் அருந்தத் தீரும்
வண்டரும் பூங்குழலாய் காய்கவதும்பை
கண்டங்காரி நொச்சியுடக் குத்துலங்கவும்

---

1. "குண்டிய காத்துக்கு" என்று எட்டுப் பிரதியில் உள்ளது சரி யில்லை. அது "குண்டியக் காத்துக்கு மருந்து" என்று பாலவாகடத் திரட்டின்படி திருத்தப்பட்டது.

2. "சுண்டைவேர் நிம்பக்காயள வரைத்துத்
துலங்காளின் வெண்ணெயுடன் அருந்தத் தீரும்
கொண்ட கரிப்பா னரைப்பாக்களவரைத்துக்
குறுகவே சீரமுட னருந்தத் தீரும்
வண்டணியுங் குழலாய்ப் பச்சரிசிச் சோறும்
வயங்காவின் பாலும் பத்தியமாய்க் கூட்டக்
குண்டியக் காமான வியாதி விட்டு
குடிபோகுமென்று சிவன் கூறினரே."

3. இப்பாட்டின் இந்த 4-ம் அடி எட்டுப் பிரதியில் இல்லை ; பால வாகடத்திரட்டிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டது.

4. இப்பாட்டில் கடைசி யடியின் ஒரு பகுதியைத் தவிர மற்றவை யெல்லாம் பாலவாகடத்தில் வேறு விதமாயிருப்பதைப் பின்வருமாறு பாட்டில் பார்க்கலாம் :—

"நாயுருவிச் சாறுடனே கரிசிலாங் கண்ணி
நல்லதொரு வல்லாரைச் சாறுடனே இன்னம்
தூய கவிழ்தும்பை கண்டங்கரிய நொச்சில்
சோற் சாறுழங்கு வகை எண்ணெய் படி யொன்று
பாயும் வெள்ளுள்ளி திரிகடுகு திரிபலையும்
பாசபல மிலவங்கம் வசம்பிரு வராகன்
ஆய்பதக்கு நீர்வற்றக் கடுகுமது சிவந்தால்
ஆமெட்டுக் கணங்களையு மடக்கு மிதுதானே."

ஆமணக் கெண்ணெய் ஒருபடிதான் கூட்டி பாயும்
வெள்ளுள்ளி திருகடுகு திருபலி இலவங்கு வசம்பு
இவை ஒவ்வொன்று இரண்டு வராகந்தான்
ஆய்பதக்குநீர் வற்றிக்கடுகுஞ் சிவந்ததுவேயாம்
எட்டு கணங்களையும் அடக்குமிதுதானே. (169)

அந்தகன் கணம் (இதற்குப் பரிகாரம்)

[1]பொன்னுங்காண்ணி சிறுகீரை
மூலா விலை வேருடனே
பன்னுங் கடுக்காய் தேற்றுங் கொட்டையு
மொன்றுக மயங்க கரைத்து
மன்னவின் வெண்ணெயும்
பிறட்டிப் பிறங்க(?) வருந்தவனுடனே
மின்னுர் முலைப்பால் கலந்
தொக்கவும் சீருசிறப்பு வதே(?). (170)

[2]தப்பூமரு உலர்ந்தவுடன் தள்ளிப் பின்னுந் தப்புவிக்க
செப்பும் மருந்துதன்னை தினமும் தின்ன
[பார்த்துதான்கொடுக்க
கொப்புகுழலாய் இப்படியே கொடுக்க மூன்றுதினந்தானும்
தப்புவிதியானுந் திரும்பும் தயவே என்னைச்
[சாற்றினரே. (171)

---

1. "பொன்னுங்காணி சிறுகீரை பூலாஅவுரி வேருடனே பன்னும் தேற்றான் கடுக்காயும் பலமோரொன்றுய்த் தானரைத்துப் பொன்னே ஆவின் வெண்ணெயுடன் புரட்டியருந்த அதனுடனே மின்னுர் முலைப்பால் கலந்தொக்க வீறு சிரத்தில் தப்புவதே."
(பாலவாகடத்திரட்டு.)

அந்தக கணத்தின் குறி குணம் பற்றி 115-ம் பக்கம் பார்க்க.

2. "தப்பு மருந்து உலர்ந்தவுடன்" (பாலவாகட பாடம்).

சீதக் கணம் (பரிகாரம்)

சிராங்காய்ச்சொல் இலவங்கம்
சாதிக்காயும் சிவந்த
காசுகட்டியுடன் இலவம்
பிசினும் சாறுமிவை சமனுகவே
திறைத்து(?) சட்டியிலே
இளவறலாய் வறுத்துக் கொண்டு
சேரெண்ணெயுடன் கலந்து அருந்த தீரும்
நேரிழையே என்னவர் நிகழ்த்தினரே. (172)

மகா கணம் (பரிகாரம்)

நீர்முள்ளி ஈருள்ளி திரிபலையும் சமனுய் நிறுத்துமே
பசுவின் மோரில் கிஷாயம்பண்ணி எட்டொன்றுய்
காய்ச்சி இறக்கிக்கொண்டு அதைஇருப்பு மொந்தையிலே
வார்த்துக்கொண்டு சீராக ஒரு சங்கு
இரண்டு சங்கு தினங்கொடுக்க தீராத கணமுந் தீரும்
திருந்தலருங் குழல்மடவாய் மருந்தினைடு(?)
சங்கம் விரை யொக்கச்
சாரித்துக் கொள்ளே(?). (173)

கணம்[1]

போக்கியே கணமும்தீராமல் பொங்கியே கடுப்புக்கண்டால்
தாயாமணக்கின் எண்ணெய்தனில் நிம்பச்சாறு விட்டு
நீக்கிய வெந்தயத்தை நிறைந்தனிலே போட்டு
சீக்கரமாகப் பண்ணி செலுத்திமச் சிறுக
[வென்றே.[2] (174)

என்றுநீ பருத்திவித்தும் இயலும் சாதிக்காய் கூட்டி
நன்று நன்னரிவேரும் நல்வட்டத்திருப்பி யன்றி
குன்று சீரகம் கிராம்பு குருகு புள்ளடிச் சாரோடு
ஒன்று நீ வறுத்துத் தாக்கே உகந்திட கடுப்புப்
[போமே; (175)

---

1. கணத்திற்கு வேரூர் எண்ணெய் முன்பே (143-ம் பக்கம்) கூறப் பட்டிருக்கிறது.

2. இச் செய்யுள் ஒழுங்காய் அமையவில்லை; சில பிழைகளும் உள்ளன.

கடுகுஞ் சீரகமும் கடுகுரோகிணி விடுவமல்லிகை
[மிதுபாலையோடு(?)
முலைப்பாலுடன் நீருள்ளி சிலைங்
கொடு விளக்கெண்ணெய் தனற்கூறும்
[கணங்களே[1](?) (176)

(கணத்திற்குக்) கிஷாயம்

காலமே இந்த எண்ணெய்க் கடுகிய நீருட்டு தந்திட்டு
சிலமேத்த துளசிபோன்று சேமமுள்ளி மணித்தக்காளி
கோலமே ஞானபத்திரிக்குஞ் சங்குந் திப்பிலி
சாலவே ஆலப்புல்லூரி தானிடக் கணங்கள்
[போமே. (177)

சுழி கணம் (இதற்குப் பரிகாரம்)

முலைப்பால் கடுக்காய் காட்டு
மல்லி முதிர்ந்த ஆலின் புல்லுருவி
இலைப்பா லிரண்டு ஈருள்ளி இவை
யாமணக் கெண்ணெயுடன்
[2]தலைப்பா லேற்றி எரிந்தணச்
சொன்னபடியே கொடுத்திடவே
[3]குலைப்பாய் வந்தச் சுழிகணமும்
குறுகியோடி விடுமே. (178)

சிறு புள்ளடியும் கழல்கொழுந்தும்
சிறந்த அவுரி சாணைக்கி
நறுமென பொடுதலையோர் பிடியும்
நய்யுதலைக்கு நல்லெண்ணெய்
நீர் முன்னிறையாய்(?) கதிரோன்
நேரே வைத்து நீரருந்த
நருமெனங் குழலாய் மேல்பூச
நாதன் அருளால் கணந்தீரும். (179)

1. இச் செய்யுளும் முழுப் பிழையுள்ளதாகக் காணப்படுகிறது.

2. "தலைப்பால் கருக்கி யெரித்தனே" (பாலவாகட பாடம்.)

3. "சொலிப்பாய் வந்த சுழிகணங்கள் சொல்லாதோடிப் போய் விடுமே." (பாலவாகடம்)

கடுக்காய் காட்டு மல்லிகையும் கடியகுமரி வெந்தியமும்
ஈருள்ளி [1]ஆமணக்கெண்ணெய் முடுக்காயாமணக்
கெண்ணெயுடன் இதனை எரித்து உள்கொடுக்க
மடுக்க மாந்தமும் சுழிகணமும் பாரிலே ஓடிப்
[பறந்திடுமே. (180)

கணத்திற்கு நெய்

கோஷ்டம் நல்லெண்ணெய் பசுவின் நெய் குறித்த
[சண்பகப்பூ கெந்தகம்
திட்டிய அவாறிதுயினிலகு மிளகு கடுகுரோகிணி
[2](நாட்டிலாமிச்சை மிக்க நலந்தரு கிராம்பு பாகம்)
ஈட்டியே சாறுகொண்டு எரித்து இறக்க கணம்
[போமே.[3] (181)

[4]கணம் எட்டுக்கும் (பரிகாரம்)

சங்குடன் செருப்படை துளசி துறப் பூலாவுந்
தருகளச்சி நரிப்பயற்றின் வேர்
அங்கதொரு படியதனிற் கோவையப்பன்
பயடா(?) நெரிஞ்சி தூதுவளைவேர் கிராம்பு

1. "ஆமணக் கெண்ணெயுடன் முருகாதெரித்துக் கொடுப்பீரேல் துடுக்காய் வந்த சுழிகணந்தான் சொல்லாதோடிப் போய்விடுமே." (பால வாகடம்).

2. (நாட்டிலாமிச்சை மிக்க நலந்தரு கிராம்பு பாகம்) என்பது பால வாகடத் திரட்டிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டது.

3. பாலவாகடத்தில் இப்பாட்டு பின்வருமாறு காணப்படுகிறது :—
"கோஷ்டம் நல்லெண்ணெய் நெய்யுங் குறித்த சண்பகப் பூ கந்தம்
நீட்டிய அவுரிதுய்ய நிலக்குமிழ் கடுகுரோணி
நட்டிலாமிச்சை மிக்க நலந்தரு கிராம்பு பாகம்
ஈட்டியே சாறுகொண்டு எரித்துண்ணக் கணம் போமின்னே."

4. வாத கணம், பித்த கணம், சிலேஷ்ம கணம், மாந்த கணம், நீர்க் கணம், பிரளிக்கணம், சூலிகணம், சுழிகணம், மகாகணம், ஊதுகணம், வறட்கணம், கொதிப்புகணம், வீக்ககணம், பிறக்கணம், அந்தககணம், மந்தாரக்கணம், எரிகணம், நீராமகணம், ஆமகணம், முக்குகணம், மூலகணம், பேராமகணம், சிங்கிகணம், இரத்தகணம் என்று கணநோய்கள் 24 உண்டு. இவற்றுள் எந்த எட்டு கணங்களுக்கு இந்த மருந்தென்று பாட்டில் குறிப்பொன்றுமில்லை. இவ்விவரம் பாலவாகடத்திரட்டில் கணவகுப்பு (பாட்டு 353, 354) பார்க்கவும்.

இங்கு திப்பிலி சாதிக்காய் பூரலியல்
வசம்பு உள்ளி கடுக்காய் தேக்கு
துங்க நெய்தான் படியில் எரித்தருதைப்பூ
சொல்லிய கணமும் சுரமும் போமே. (182)

[1]வரட் கணத்திற்கு(ப் பரிகாரம்)

நய நவநீதந் துஞ்சு கறுத்து ரேசனஞ் சேர
செய்யுந் தலைக்குந்த சொல்லுமே தொயடு
வய்ய வரட்கணமே தீரும் கடுவிடமார்
கணங்கே இக்கணமே செய்வாய் இது. (183)

காரைநாக நிறச்சாறும் கரும்புநீர் பஞ்சதாரை
ஒரொரு வகைக்குநாழி உடனுடன் நாழிப்பால்
சேரவே விட்டுப்பாகா யிதிரவில் நெய்விட்டுச்
சாறுநா ளெட்டுக்கொள்ள சகல கணந் தவிழ்க்குந்
தானே. (184)

ரத்தக் கடுப்புக்கு (மருந்து)

வெந்தயம் [2]மோராமலமதைத்தா படி யாவின் பாலின்
வெந்திறக்கி மனமையதால் வெல்லங் கூட்டி
கந்தமலர்ப் பூங்குழலால் பசுவின் நெய்யால்
கருகாமல் கும்பாமல் களியாய்க் கிண்டி
உந்திடு வயிற்றரி கடுப்போடு உதிரந்தானு
மோடுமடி புறப்பட்டதுள்ளே (வாங்கும்)
[3]அந்திவிஷம் தீரும்போது கொள்வீராகில் அதிசார வகை
யணைத்து யணத்தும் அகலுந் தானே. (185)

---

1. வரட்கணத்திற்கு முன்பே பரிகாரமொன்று (பக்கம் 141) கூறப் பட்டுள்ளது. இது மற்றொரு முறை இங்குள்ள "நய நவநீதம்" என்னும் பாட்டு அரைகுறையாகவும் பிழையுள்ளதாகவும் காணப்படுகிறது.

2. "வெந்தியமோர் பலமதைத்தான் படியாவின் பால்" (பால வாகடத் திரட்டு).

3. "அந்தி சந்தி இருபோதுட் கொள்வீரானால்" (பாலவாகடத் திரட்டு).

மாந்த கணத்திற்கு (மருந்து)

வேலிப் பருத்தி மூலமுடனே
வெள்ளைச் சாரணை குட்டி விளா
[1]மூலி வெண்வேலால் வசம்பும்
ஊதிய வெள்ளை வெங்காயம்
[2]கோலி நறுக்கி தீச்சாறு மெதி
கொடுத்த வெண்ணெய்தனி லெரித்து
சிலமூலைப் பாலதனில் கொடுக்க
கொந்தி மாறுத கணம் போமே.[3] (186)

போர் மாந்தத்திற்கு எண்ணெய்

செந்த பழம்பாசியோடு முசுமுசுக்கை வேரும் சிறுபுள்ளடி
செப்பு நெரிஞ்சி சித்தாமணக் கெண்ணெய்
எந்த வசம்புள்ளி யிதமருப்பொடி
பிணி யதனை இயம்பக் கேளாய்
மாந்தமோடு கணமிவை போராமம் விட்டுவயிறு
கழிச்சலும் தீரும் வாகடமா மிதுவே
ஓர்ந்துணர்ந்து பொதியமலை குருமுனி வந்தானும்
உலகறிய மருள்சித்த ருரைத்தார் பரிசித்துமே. (187)

மறுநாள் மூலமீருள்ளி சமனுச் செத்தி
வாணமா யேரண்ட மதனிற்பாதி
சிறவிது அடுப்பேற்றிற்றும் போது
சிறப்பான சாதிக்காய் சாதிபத்திரி
திறக்க வித்துப்போட்டு இறக்கி வைத்துக்கொண்டு
சிறப்பாகக் கரண்டி எண்ணெய் கொள்ள
பறக்கும்நோய் மாந்தகணம் வயிறுப்பல்
சுரம் அஸ்திசுரம் பறக்கும் பாரே. (188)

---

1. "மூலி வேளை வேர் வசம்பு முதிய வெள்ளை" (பாலவாகடம்).

2. "கோலி நறுக்கிச் சாற்மேதி கொடுத்து." (பாலவாகடம்).

3. மாந்த கணத்திற்கு இது 7-வது மருந்து, (67-ம் பக்கம் பார்க்க).

காட்டு மல்லிகை ஈருள்ளி
கரிய சீரகம் கடுக்காயும்
நாட்டுக் கடுகுரோகணியும் நல்ல
சிரப்பால் விளக்கெண்ணெய்
கூட்டி எரித்து பாலகருக்குக்
கொடுக்க மாந்தம் போர்மாந்தம்
[1]ஓட்டி விடுங்காண் ஒன்றுதலை
உலகோருக் கெல்லா முரையீரே. (189)

வலிப்பிற்கு மருந்து

மூக்கரட்டை சாரணை முடக்கொத்தான்
முத்தேக்கஞ் செவிசெப்பு நெரிஞ்சுவேர் ஓரிலைத்
[தாமரையில் இறகு
சித்தாமணக் கெண்ணெயில் எரித்து உள்ளுங் கொடுத்து
தாக்குடனே மேனும் பூசத் தயங்கி வலிப்புத்
[தீரும். (190)

[2]பொர மாந்தத்திற்கு (மருந்து)

ஆமணக் கெண்ணெய் அளந்து குருணி விட்டு
தாமணிக் குழலேதான் வெய்யிலில்
ஓமமுடன் சாதிக்காய் சாதிபத்திரிதான் வசம்பு
[கொத்தமல்லி
கோதில்லா வெள்ளுள்ளி கூட்டு. (191)

பஞ்ச திரவியமும் பண்பான திப்பிலியும்
மிஞ்சா வராகனிடை இரண்டாய்
பஞ்சாதம் அரைத்துக் கரைத்து
மெருகான பதம்பார்த்து உரைத்தபடி இறுதுக்
[கொள்ளே. (192)

---

1. "ஓட்டி விடுங்காண் இந்தெண்ணெய் உலகோர்க்குண்டு செய்து கொடே." (பாலவாகடத்திரட்டு). (இந்நோயின் குறி குணம் முதலியதை 56, 70-ம் பக்கங்களிற் பார்க்க).

2. பொரமாந்தத்திற்கு இது 8-ம் பரிகாரமுறை. (மேலே யுள்ள குறிப்பைப் பார்க்க).

உள்ளேதான் கொள்ளக் கொடுசீர் கரண்டி எண்ணெய்
விள்ளாத சீதம் விடுவிக்கும்
மெள்ளப் போம் அஸ்திசுரம் போம்
இதற்கு நல்லசீரான பத்தியமே செய். (193)

[1]பொர மாந்தத்திற்கு (மருந்து)

வேலிப் பருத்திவேர் கோழியவரை
வேருங் கிளுவை யொடு
பாலிற் பெரிய இலைக்
கள்ளிப் பச்சை
வெளிச்சை வசம்புள்ளி கடுகுரோகணியும்
சிராருள்ளி கருஞ்சீரகம்
ஏலங் குழலே நிறைகழிஞ்சி
மிதமாய்க் கூட்டிக் கொள்வீரே. (194)

நிலச் சித்தாமணக் கெண்ணெய்
நிகரின வெள்ளாட்டுப் பால்
சால வெரித்து முலைக்
காம்பில் சற்றே தடவி
முலைகொடுக்க ஆலித் துண்ணும் பிள்ளை
தன்காமம் வாராதன்றியாமே(?)
சூலுக் கெண்ணெய் கொடுத்தாலும்
தோணைக் காமம் தோணுதே. (195)

[2]சொரியா மாந்தத்திற்கு (மருந்து)

வேலிப்பருத்தி யிலைச்சாறு வாட்டிப்
பிழிஞ்சு மிளகு வசம்புள்ளி
காலக் கரைத்து நெய்துளி
விட்டே தானருந்த குணமாகும்

---

1. பொரமாந்தத்திற்கு இது 9-ம் பரிகார முறை.

2. சொரியா மாந்த நோயின் குறிகுணம் பற்றி இதற்கு முன் (110-ம் பக்கம்) பார்க்க.

மேலு மெருமை வெண்ணெயுடன்
இசைந்த மருந்தினுடன் இஞ்சி
(கோலங்கேளும்) பெரும் தும்பை
[1]கூட்டி எரித்திடினும் குணமாமே. (196)

[2]கட்டு மாந்தத்திற்கு

[3]அடவநீர்திருடி மலைவற்காலி பாலவை கொண்டும்
ஒவ்வொன்றேர் உலகு அளந்து கொண்டு
திடமுடன் ஆமணக்கெண்ணெய் நாழிகூட்டி திருபலை
வெள்ளுள்ளி இவைஇரண்டு வராகனிடை
பொடிசெய்து பொட்டாங் கெண்ணெய்
தன்னை எரித்துள்ளுங் கொர
காசிடைமேல் விலாவிற்பூசில் தடமுடைய
கட்டுமாந்தங் கண
பேதங்கள் சேராதென்று கரத்தான்
சாற்றிய சத்தியமே. (197)

[4]பொரமாந்தத்திற்கு (மருந்து.)

எட்ட விமோதண்டத் தயிலமாதே இவை ஒவ்வொன்றும்
ஒரு படியால் பால் நாழி
மட்டவிழும் நொச்சி இலைச்சாறு நாழிவயங்
கோஷ்டம் சுக்குமிளகு திப்பிலி

---

1. "கூட்டி யருந்திடினுங் குணமாமே". (பாலவாகட பாடம்).

2. கட்டு மாந்தத்திற்கு இது 8 வது பரிகார முறை.

3. "அடவியினில் திருடி மலைவர்க்காலிப்பால்
அவை யொவ்வொன்றே குழக்களந்து கொண்டு
திடமுட னமணக்கெண்ணெய் நாழி கூட்டித்
திருபலை வெள்ளுள்ளி விராகனெடை யிரண்டு
பொடிசெய்து போட்டெண்ணெய்தனை யெரித்துப்
புகட்டுமோர் காசெடைமேல் விலாவிற்பூச
தடமுடையக் கட்டுமாந்தங் கணபேதங்கட்
சாராதென்று மைக்கரனுர் சாற்றினரே."
(இது பாலவாகடத் திரட்டிலுள்ள பாடம்.)

4. பொரமாந்தத்திற்கு இது 10–ம்பரிகாரமுறை (151-ம் பக்கம் பார்க்க-)

மிட்டத் திரிபலை இந்துப்போடு வெங்காரந் தானிவை
ஒவ்வொன்று ஐந்து வராகனிடை
கூட்டி நற்குமரி பாலில்அரைத்து மேல் கரைத்து எரித்து
உள்கொடுத்துத் தடவ நோயறுமே. (198)

எண்ணெய்.

இரு சீரகம் வெளிச்சப்பிசின் தான்றிக்காய்
ஈரவெங்காயச்சாறு
கறுப்பட்டி மிளகு இயலாமை ஓடு சிவதை
வரிசையுள்ள வசம்பதாகக் கடுகுரோகணி
அரத்தை வளர் சீந்தில்தண்டு பற்படகம் அசமதம்
கொத்தமல்லி கம்பீளிப்பிசின் வாகான வில்வப்பிசின்
[வலிய கஞ்சாங்கோரை
வரிகடுக்காய் வாள்புளிகள் இவை சரியாய்
பரிகு வெந்தயம் இரண்டு பங்கிட்டு சூர்ணம் பண்ணி
[விளக்கெண்ணெய்
வரியகுமரிச்சாறு அந்த எண்ணெயிற்பாதி வாரடவே
எரிக்கும் பதந்தனில் நிம்பப்பழச்சாறு ரெட்டிவார
பொருமலோடும் உப்புசமுண்டிய சுரங்கள்இவை
தீரும் போட்டி எண்ணெய் முலைப்பாலிற் கொடுக்கப்போய்
வயிறு கட்டு விடுமே. (199)

[1]கணமாந்தத்திற்கு (மருந்து)

புங்கும் புளி நொச்சி வேம்புடனே தலைமாம் மேரு
வேலிப்பருத்தி கருவேப்பிலை நாரத்தை
சங்கவுரி பொன்னுவாரை ஒவ்வொன்றொரு பிடிதானிலை
ஈர்க்கெடுத்தும் ஒரு சட்டிதனில் இட்டு

---

1. கணமாந்தத்திற்கு இது 4-ம் பரிகாரமுறை. இங்குள்ள பாட்டு பாலவாகடத்தில் பின்வருமாறு காணப்படுகிறது :—

"புங்குபுளி நொச்சில் மா வேம்போடொக்கப்
பொடுதலை வேலிக் கரு வேப்பிலை நாரத்தை
சங்கவுரி பொன்னவரைப் பிடி ஒவ்வொன்று
தானுமிலை ஈர்க்கெடுத்துச் சட்டியிட்டு
தங்கு ரோகிணியுமிந்தோமமு முடிந்து
தான்போட்டுத் தண்ணீரும் நாழி வார்த்து
அங்கெரித்து வற்ற முடிந்தம்மருந்தை
கரைத்துக்கொடு மாந்தகண மக்ன்று போமே."

தங்கு கடுகுரோகிணி இந்துப்பும் முடிந்து தான்போட்டு
தண்ணீர் நாழி வார்த்து
அங்காழக்காய் வற்றிமுடித்த மருந்தையளந் தரைத்துக்
கரைத்துக் கொடுக்கக் கணமாந்தத்தை அடக்கி
[விடுமே. (200)

[1]மாந்தத்திற்கு (மருந்து).

சீந்திற்றண்டும் கடுக்காயும் சிவதைவேறும் களிப்பாக்கும்
[2]காந்தஞ் சுக்கு ரோகிணியும் கள்ளிச்சாறு
குங்கலாந்திட்டு
எந்துமுலையாளிந் நிரை எட்டொன்றுக்கிக் கொடுப்பீராய்
மாந்தமோடு சுரம் தீரும் வயிறுகழியுங்
[கண்டீரே. (201)

நன்னாரி சிறுகீரை காட்டுமல்லிகை
நாவலரே நடுப்
பொன்னுரு சங்குவேர் பாவட்டை
நீலி பொருந்து கொஞ்சி
என்னுகுக் காய்கின்ற வட்டக்கிலுகிலுப்பை
இலை இவைகளெல்லாம்
இன்னர் தம்பிள்ளைகளுக் கியறத்தம்(?)பின்பு
வெருண்டோடு மாங்கள் மிகவும் நன்றே[3]. (202)

---

1. மாந்தத்திற்கு இது 8-ம் மருந்து (149-ம் பக்கம் பார்க்க.)

2. "காய்ந்த சுக்குரோகிணியுங் காயுந் நீரில் தகர்த்திட்டு
எந்துங்கையா யிந்நீரை யெட்டொன்றுக்கிக் கொடுப்பாயேல்
மாந்தமான சுரமும் போம்"
(பாலவாகட பாடம்.)

3. இப்பாட்டு பாலவாகடத்தில் பின்வருமாறு காணப்படுகிறது :—
"நன்னாரியுஞ் சிறுகீரை வநமல்லி நாவலிரண்டு
பொன்னுருஞ் சங்கம்வேர் பாவட்டை நீலிபொருந்து கொஞ்சி
எந்நாளும் காய்க்கின்ற வட்டக்கிலுப்பை இவைகளெல்லாம்
மின்னுர் பிள்ளைக்கிய மாந்தகணம் விரண்டோடிடுமே."

[1]வாந்திக்கு (மருந்து).

மாந்தம்போம் வாந்திக்கு

வசம்புடனே மயிலிறகு சாம்பலாக்கி
வசமாகவோர் பிறகு(?)முலைப்பால் வார்த்து
கசமாக நறுக்கி யதன்பின்பு சற்றே காலமே
தேனுமே துளியே குத்தி
நிசமாக சீரகமும் இராம்புங்கூட்டி நிர்ணயமாய்
நிமப்பித்து(?) மேலேதூவி
வசமாகவே அந்தமாந்தமெல்லாம் போராமமோடு
வாந்தியும் போமே[2]. (203)

பொர[3]மாந்தகணம் (மருந்து).

பெருவசம்பு ஓமம் புழுங்கலரிசி அவுரியது
வேரு மோரஞ்சு கறுவறுத்து
மருவே காய்ச்சி வகையாய் இருத்து
வருந்த போராமம் போம் மங்கி. (244)

---

1. வாந்திக்கு இது 3-ம் பரிகாரமுறை (61—63-ம் பக்கங்கள் பார்க்க.) இங்கு "மாந்தம் போம் வாந்திக்கு வசம்புடனே மயிலிறகு சாம்பலாக்கி" என்று எட்டுப்பிரதியில் வரிகள் தவறுதலாக மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. "மாந்தம் போம் வாந்திக்கு" என்பது மாந்தம் போராமம் இவற்றிற்கு என்றிருத்தல் வேண்டும். பிறகு "வசம்புடனே மயிலிறகு சாம்பலாக்கி" என்பது செய்யுளின் முதலடியைச் சேர்ந்த வரியாகும்.

2. இந்தச் செய்யுளில் ஐந்து அடிகள் அமைந்திருப்பதற்குக் காரணம் யோசிக்கவேண்டும்.

3. மாந்தத்திற்கு இது 8-ம் மருந்து (149-ம் பக்கம்.) போரமத்திற்கு இது 11-ம் மருந்து (152 ம் பக்கம்.) மாந்தகணத்தின் குறி குணங்களைப்பற்றி 17 முதல் 20-ம் பக்கம் வரையில் பார்க்க.

[1]மாந்தகணத்திற்கு (மருந்து).

வெளவேர் சுக்குடனே வெந்தியமும் வெள்ளுள்ளி
பாளைசேர வசம்பு ஓமம் விழி
நாளைபொன்னு நீர்நாழிஎலி லென்றுய்(?) நீபருந்த(?)
மாருதம்போம் காரேனும் மேன்மொழியாய்
[காண. (205)

[2]மாந்தம் பாலிகிருகைக்கு.

வேலிப்பருத்தி ஒரு பிடியும் விரும்பும் சுக்கு சடாமாஞ்சி
கோலவிளவும் வசம்புள்ளி குறுக்கி மிளகு
[மாமையோடு
சில ஓம சீரகமும் சிறுக வறுத்து நீர்வார்த்து
போலவுளுந்து நீர்வார்த்துப் போதுவிடிய
[குடிப்பீரானுல்
பால்மாந்தம் பால்கிருகை வகையுள்ளதுவும் போம்
[காணே[3]. (206)

அதிசார சுவாசகாசத்திற்கு கிஷாயம்.

அஞ்சன்வேர் நெற்பொரியும் மாஞ்சிலோடு
அதிமதுரம் சர்க்கரை தேள்ளாவி யுண்ணக்
கொஞ்சனவே கொஞ்சு(பிள்ளை)க் காய்ச்சல் தீரும்
குயில்மொழியீர் இன்னுமொன்று கூறக்கேளாய்

---

1. மாந்தகணத்திற்கு இது 9-ம் மருந்து. இது சம்பந்தமான செய்யுள் பெரும்பாலும் வேறுவிதமாய் பாலவாகடத்தில் இவ்வாறு காணப்படுகிறது :—

"வேளைவேர் சுக்குடனே வெந்தயமும் வெள்ளுள்ளி
பாளை வசம்புபகரோமம்—வாள் விழியாய்
ஒன்றுகக் காய்ச்சியுடன் குழவிக்கீந்துவிடக்
கண்டவுடன் மாந்தம்போம் காண்."

2. மாந்தத்திற்கு இது 10-வது மருந்து.

3. இந்தப்பாட்டிலும் ஐந்துஅடிகள் இருப்பது யோசிக்கத்தக்கது.

தஞ்ச மெனிலதிவிடயந் தேனிற் கொள்ளத்
[1]தாக்குமது அதிசார சுவாசகாசம்
சஞ்சனலாபி குழல்மடவார் பிள்ளைக்கென்று
[வைத்தியநூல்
சிவனுரைக்குமாறு தானே. (207)

அதிசாரசுவாச வாந்திக்கு.

சங்கியுடன் திப்பிலியு மதிவிடயம் கூட்டி தேர்ந்த நெடுங்
குழந்தைக்குக் கொடுப்பீராகில்
இங்கிதமாய் சுரமோடு சுவாசம் வாந்தியோடும்
இன்னுந்தீரும் இன்னும் சொல்லக் கேளும்
தங்கிய ஆலமுகிள் நாவற்று நீரிலாமிச்சைவேர் காய்ச்சிக்
குழந்தைக்குக் கொடுப்பீராகில்
ஆங்கியனும் சுரகாசம் வாந்தியோடதிசாரம் தாக
மிவை அகலுந்தானே. (208)

[2]சிறுபாம்புக்கு (கடிக்கு மருந்து).

நித்தமெலிச் செவியும் முள்முருங்கை நல்வேரும்
திரிபலை ஓணங்கொடி நீர்
உத்தகளவாய் விளங்கமெலந்.....வி மாந்தள
அத்திவளதாய் விளங்கம் பூச்சிவிழுந்தான்[3]. (209)

---

1. "தாகமுடனே அதிசாரஞ் சுவாசம்போகும். மஞ்சணவுங்குழல் மடவாய் பிள்ளைக்கென்று" (பாலவாகட பாடம்.)

2. மாந்தம், கணம் முதலிய நோய்களைப்பற்றிய விஷயங்களுக் கிடையில் சிறுபாம்பு விஷக்கடி, விஷம் முதலியதைக் கூறவேண்டிய சந்தர்ப்பம் என்னவென்று விளங்கவில்லை. இதற்கு முன்பே விஷயங்களை வரிசைக்கிரமமாகக் கூற வேண்டியதில் சில ஒழுங்கீனங்கள் காணப்பட்டன. இனி இதுமுதல் அவ்வொழுங்கீனம் வெகு அதிகமாகக் காணப்படும்.

3. இச்செய்யுளில் சில பிழைகள் காணப்படுவதோடு ஒரு அடியும் குறைவாயிருக்கிறது.

சிறுபாம்பு விஷமருந்து கேளீர் முருங்கை
இலை தன்னை ஞெப்பாய்
இடித்து வைத்து நாழி
நீரே வைத்து
நாலிலொன்றாய் ஏற்பக்காலமே கொடுத்த
இலையை வயிற்றிலே வைத்து
கோரப்பாய் கட்டச்சென்று விழுங்கொடிய
கீரி கீரிபாம்பு இதுவே[1]. (210)

[2]ஆமக்கடுப்புக்கு (மருந்து).

கற்றாழை கொண்டுவந்து கடுகவே சமன்தூக்கி
இத்தைக்கேள் வெந்தயத்தோடு எலுமிச்சஞ்சாறு
[விட்டு
சுத்தமாய் எரித்துப் பின்னை சுகம்பெற பாலகருக்குச்
சற்றுநீ கொடுத்தாயானால் சகலமாம கடுப்புந்
[தீரும்[3]. (211)

[4]மாந்தசன்னிக்கு (மருந்து).

கஞ்சாவேரும் ஊமத்தைக்கட்டி
கடியதிராயின் வேரும்
பஞ்சாஇந்த வேப்பெண்ணெய் பைய
வறுத்துப் பொடியாக்கி

---

1. இந்தப்பாட்டும் பெரிதும் ஒழுங்கினமாயுள்ளது.

2. சிறுபாம்புகடி விஷயத்திற்கு அடுத்து ஆமக்கடுப்பு, மாந்த சன்னி முதலிய நோய்களையும் பற்றிக்கூறும் சம்பந்தம் யாதென்று யோசிக்க வேண்டும்.

3. "கற்றாழைகொண்டு" என்கிற செய்யுள் பாலவாகடத்திரட்டின்படி முக்குக்கணத்திற்கு மருந்து முறையைக் கூறுகிறது; அங்கே அது பின்வரு மாறு காணப்படுகிறது :—

"கற்றாழை கொண்டுவந்து கழுவின சோறெடுத்து
எற்றான வெந்தயத்தோ டெலுமிச்சம்பழச் சாறுவிட்டு
சுத்தமாய்க் காய்ச்சி பிள்ளை சுகம் பெற பாலகர்க்கு
சற்றுநீ கொடுத்தால் முக்குக்கணமது தரியாதென்றே."

4. மாந்தத்திற்கு இது 11-வது மருந்து. (156-ம் பக்கம் பார்க்க)

துஞ்சா நெருப்பில் புகை காட்ட தொற்றும்
சன்னி அத்தனையும்
மஞ்சார் குழலாயடிதொழுது மாந்தம்
போகுங் கண்டீரே. (212)

மாய்ந்து வேப்பெண்ணெய் வேளைவருமூமத்தை கஞ்சா
சேர்ந்திடு முருங்கையோடு சித்தர மூலங்
காய்ந்துவெள்ளுள்ளி வசம்பு கம்பளி [1]மஞ்ஞை இறகுப்
போர்ந்து நீர்க்கோழியண்டம் புகைத்தாந்திரிகம்
[போமே. (213)

[2]சுரத்திற்கு (மருந்து).

ஏலமதிமதுரம் பர்ப்படகம் ஏற்ற
சீந்திலறுகு காந்தம்
சாலவில்வப் பழத்துடனே சமமாம்
பிச்சம்(?) வேப்பீர்க்கு
கோலிருநாழி நீர்விட்டு கொதிக்கக்
காய்ச்சி யுழக்காக்கி
பாலர்பெரியோர் மாந்தருக்கு
வருந்திக் கொடுக்க தாகம் போம். (214)

[3](பழஞ்சுரத்திற்கு மருந்து).

அரிய தூதுவளை சிறுகாஞ் சொறி
வேரான சீந்தில் பர்ப்படகம்
பெரிய நொச்சி பேராமுட்டி
பின்னுஞ் சிற்றாமுட்டியுடன்

---

1. மஞ்ஞை = மயில்.

2. "ஏலமதி மதுரம்" என்னும் முறை தாகம் தீர்க்கும் மருந்தாக இருக்கிறது. பாலவாகடத்திரட்டிலும் தாகத்திற்கே இம்முறை கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு "சுரத்திற்கு" என்று தலையங்கமிடப்பட்டுள்ளது.

3. பழஞ்சுரத்துக்கு இது மருந்தென்று கூறப்பட்டிருந்தும், அவ்விதம் எட்டுப்பிரதியில் தலையங்க மேதும் காணவில்லை; பாலவாகடத்திரட்டில் இது "பழஞ்சுரத்துக்குக் குடிநீர்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

[1]கரிய கடுக்காய்தான கூட்டிக் கஷாயந்
தான் வைத்து தானிருத்து
உரிய திப்பிலி பொடி தூவி உகந்து
கொள்ள பழஞ்சுரம் போமே. (215)

ஆமசுரத்திற்கு.

[2]உத்தாமணியும் பாவட்டை யுகந்தசங்கு காவட்டை
சித்தமுருங்கை நுணு(யீர்க்குஞ் சேரக்கூட்டுப்
[பொடுதலையும்
ஓத்த ஓமந் திப்பிலியுமுற்ற வசம்பு துளியோடும்
சுத்தமாகக் கருஞ்சீரம் சுகமாய்முடிந்தே யட்டிடுமே).
[3](நீகேள் கரண்டிதானேராகக் கொள்ளவே
வாகாய்க் கரப்பான் வகைதீரும்—தோகாய் கேள்)
சூலைக்கும் தான்கொடுக்கச் சொன்னர் வகைஅறிந்து
பாலிக்கும் பத்தியம் செய்யப்பா. (233)

---

1. "சிறிய கடுக்காய்தான்" (பாலவாகடத்திரட்டு.)

2. இந்தப் பாட்டில் "யீர்க்கும்" என்கிற இரண்டாவது அடியிலிருந்து நான்காம் அடி முடிவுவரையில் பாலவாகடத்திலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டது. இந்தப் பாட்டு முதல் ஓலைச்சுவடியில் மூன்று ஏடுகள் (78 முதல் 80-வது வரையில்) காணவில்லை. ஆகவே சில விஷயம் இடையில் (216 முதல் 232-ம் பாட்டு வரையில்) இங்கு விட்டுப் போயிருப்பதாய் அறிக.

3. ஓலைச்சுவடியில் இழந்துள்ள ஏடுகளில் போனதுபோக 81-ம் ஏட்டில் 233-ம் பாட்டின் கடைசி இரண்டு அடிகள் இருக்கின்றன; அதற்கு முந்திய இரண்டு அடிகளையும் பாலவாகடத்திரட்டிலிருந்து கண்டறிந்து இங்கு சேர்த்திருக்கிறோம். இப்பாட்டின் ஆரம்பம் "நீ கேள் கரண்டிதான்" என்பது. கரப்பானுக்கு "செருப்படை எண்ணெய்" என்பதைக் கூறும் ஒன்பது பாட்டுகளில் இது இறுதிப்பாட்டு. அவ்வொன்பது செய்யுட்களையும் இந்த டிப்பணியில் எடுத்தெழுத வியலவில்லை; அதன் முதற்பாட்டை மாத்திரம் இங்கு எடுத்து எழுதுகிறோம்:—

"செருப்பினடி யிரண்டோடு சேர் கிரந்தி நாயகம்
வெருக்கில் நிலக்கிழங்கு கொச்சில்—நெடுக்கஞ்சங்
குப்பியிலை சங்கோடு கொட்டைக் கரந்தையும்
செப்புங் கழல் துளசி சேர்."

மற்ற எழுப்பாட்டுகளையும் அப்புஸ்தகத்தில் கரப்பான் பகுதியில் படித்துப் பார்க்க.

(இதில் கிடைத்துள்ள வரையில் கரப்பானுக்கு இது 2-வது பரிகார முறை.)

[1]கரப்பானுக்கு.

கரிசாலைவேரும் கம்பத்திருய் வேரும்
கனத்த கருடன் கொடியுடனே
பொரிச்சால் பொரியும் பொரிகாரம்
பூதக்கரப்பான் படையுடன்
நரிச்சா[2]றன்ன வசம்புள்ளி யெனவே
கெட்ட கரப்பான்கள்
[3]மதிச்சால் தொண்ணூற்றுறும்
மாண்டோர்மென்று போயினரே. (234)

எட்டுவகை கரப்பானுக்கு.

[4]எண்வகைக் கரப்பான் இழந்திட வகையுள்ளி
நீருள்ளி கருஞ்சீரகமும்
இயம்பிய பூதகரப்பானும் வடக்கிலுகிலுப்பை
வேர் காட்டினில் பாகல்

---

1. கரப்பானுஞ் இது 3-வது பரிகாரமுறை.

2. "எரிச்சாலெண்ணெய் வசம்புள்ளி" (பாலவாகடத்திரட்டு.)

3. "மறுத்தால் தொண்ணூற்றுறு கரப்பான்" (பாலவாகடத்திரட்டு)

4. முன்பு கரப்பான் பதினெட்டுக்குள்ளவிதமே (131-ம் பக்கம்) இச்செய்யுளிலும் எண்வகை கரப்பான் எவையென்று குறிப்பிடவில்லை. இது சம்பந்தமாய் பாலவாகடத்திரட்டிலுள்ள பாடம் வருமாறு:—

"எண்வகைக் கரப்பானிகழ்த்திடக் கேளாயீருள்ளி கரியசீரகமும்
இயம்பிய பூதகரப்பானுமீ வட்டக்கிலுப்பைவேர் காட்டினிற்
[பாகல்
ஒண்டிய மூலமுடன் சதகுப்பையுயர் வெள்ளைக் காக்கணன்
ஓதிய தேவதாரமும் வசம்பு முள்ளாறுகூட
னன்புள சீனப்பட்டையுஞ்சுத்தி வின்றிடும் வகைவகைப்பலங் கால்
நாடு நேர்வாள விதையிருபதுபின் நற்சங்கங்குப்பி நீர் நாழி
அண்டரைத்ததில் சிற்றுமணக்கெண்ணெ யதுவொரு நாழி விட்ட
ருந்த ஆமொரு காசாயுடல்தனிற் பூசவையெட்டு மகலுமா
[மென்றே."

(கரப்பானுஞ் இது 4-வது பரிகாரமுறை.)

ஒன்றிய மூலமுடன் சதகுப்பைப் உயர்வெள்ளைக்
காக்கணைமூலம் மோதிய
தேவதாரம் நேர்வசம்பு உயர் சங்கு
வெள்ளறுகுடனே
நன்னிய சீனிப்பட்டைப் பிச்சுத்தினவன்றிடும்
வகை வகைப் பலங்கால்
நாடுநேர் வாள
விதை இருபதும்
பின்னல்ல சங்கங்குப்பிச்சாறு நாழியொன்று
அரைத்து அதில்
சிற்றுமணக்கெண்ணெய் இவை யொரு நாழி
இட்டு அருந்தஆமிரு
காசிடை உடலிற்பூச அவதின்
மடரு முப்புகலுவாயே(?) (235)

[1]தலை மாந்தத்திற்கு.

[2]வேலிப்பருத்தி குப்பைமேனி வேளை
இரண்டு மூலையுடனே
ஆலித்துண்ணும் கத்தரிஇலை அஞ்சு
வகைக்குச் சாறுகொண்டு

---

1. தலைமாந்த குறிகுணம் :—

"தலையுங் கனத்தே யுடலூதிச் சரீரந்தனிலே வலியுண்டாம்
குலையும் வலித்துத் துள்ளிவிழும் குளிருஞ்சுரமும் வேர்வைவிடும்
சிலையின் புருவத்தலைநிமிரா சேட்டை மிகவே செய்விக்கும்
மலையினுயர்ந்த தனத்தாளே வாதைப்படுத்துந் தலைமாந்தம்"

(பாலவாகடத் திரட்டு.)

2. இதனடியில் வரும் இரண்டு பாட்டுகளும் பொதுவாக மாந்த நோய்க்கு பாலவாகடத்தில் கூறப்பட்டுள்ளன.

"வேலிப்பருத்தி மேனியுடன் வேளையீண்டு பொடிதலையும்
ஆலித்தின்னு மகத்தியிலையாறும் வதக்கிச் சாறு கொடு
கோலவசம்பும் ஆமையோடுங் குலவுமோமஞ் சுட்டரைத்துக்
காலிற்கையிற் றுவளையிட்டுக் கடுகக் கொடு மாந்தம்போம்."

(பாலவாகடத்திரட்டுப் பாடம்.)

கோலவசம்பு மாமையோடு கொடி
ஓமம் சுட்டரைத்து
காலில் தலையும் துவளையிட்டு கடுகக்
கொடுக்க மாந்தம் போமே. (236)

உத்தாமணியும் போய்மருட்டி
உகந்த சாணக்கிலையுடனே
வித்தாரமுள்ள வெதுப்படக்கி
வெண்ணெய்ச்சி இவைஆறும்
ஒத்தே வதக்கி சாறுகொண்டு உகந்து
வசம்பு சிறுதேக்கு
சற்றே ஆமைஓடுசுட்டு [1]சத்திக்கொடுக்க(?)
மாந்தம் போமே. (237)

[2]உப்பு மாந்தத்திற்கு.

குப்பமேனியும் உப்பும் கசக்கியே கொள்ளச்
சாரமே காசிடை தானுமே
செப்பாகுமே உப்பலு மாந்தமும்
சீக்கிரத்திலே துறத்திவிடும்
தப்பிலுல் முக்காவேளையும் சுக்குடன் தக்க
ஓமம் வறுத்துடங்கையிட
ஒப்பில்லாதொரு உப்பலுமாந்தமும் ஓதுவார்கள்
உயர் தொழிலாணியே(?) (238)

சொரியா மாந்தம்.

[3]ஓமமுடன் கோஷ்டமும் சிற்றரத்தை உயர் வசம்பும்
கருக்கிட்டுக் கிஷாயமாக்கிச்
சாமமுடன் அருந்திடவே சொரியாமாந்தமும் கழிச்சலுமே
போமென்று கருதிச்சொன்னமே

---

1. "சாற்றிற்கொடு மாந்தம்போமே." (பாலவாகடத்திரட்டு)
2. உப்பு மாந்தக் குறிகுணம் :—

"தெளிந்த தாகமுஞ் சுரமுடன் பிதற்றலுஞ் சேரு மிக்க
களங்கமாயிரைந்துப் பிறப்பிக் கழிந்துடனே
வளர்ந்த வாந்தியு மூலையை ந்தாமலு மயக்கந்
தளர்ந்தாலுப்பு மாந்தமென்றறியாய் நீதானே."

(பாலவாகடத்திரட்டு.)

3. "ஓமமுடன் கனகோஷ்டங் உயர்வசம்பும்" (பாலவாகடபாடம்.)

சாமமுடனுப்பலும் போம் வலியும் தீர்ந்து [1]சதிருடனே
சொன்னதெல்லாம் செருக்கும் பிள்ளை
நாமமுள்ள சொல் கேட்டு நாமுரைத்தோம் நலமாகும்
தரணியோருக்கு நன்மைதானே[2]. (239)

[3]நீர்மாந்தத்துக்கு (மருந்து).

நொச்சி இலை வேலிஇலை குப்பமேனி நுணைஇலை
பேய்மிரட்டி தும்பையோடு
பச்சிலை எல்லாம் வெதுப்பீயேதான் பதமாக சாறு
மிகப் பிழிந்து கொண்டு
உச்சிதமாம் வசம்புள்ளி மிளகோடு ஓமமுகந்து
வருமுதல் சாற்றில் அரைத்துக் காய்ச்சி
நிச்சயமாய் பாலகர்க்குக் கொடுக்கவேதான் [4]நீர்மாந்தம்
ஏகுமென்று நித்தன் சொன்னான். (240)

[5]போர்மாந்தத்துக்கு (மருந்து).

உத்தாமணியை அனல் தாக்கி ரசம் வாங்கி
பெத்தோரப் பாலில் சீரகமும் கடுகுரோகணியும்
வித்தாரமாக உரைத்து அருந்தவே பொரமாந்த மயக்கம்
[போம்
தாமரைபோல முகமுண்டாய் நலமாகும் மாந்தம்
[நாடாதே. (241)

---

1. "சதிருடனே யுண்டதெல்லாம் செரிக்கும் பிள்ளை" (பாலவாகடத்திரட்டு.)

2. நீர்மாந்தக் குறிகுணம் 18, 109-ம் பக்கங்கள் பார்க்க.

3. செரியாமாந்தத்தின் குறிகுணம் முன்பு 19, 110 ம் பக்கங்கள் பார்க்க.

4. "நீர்மாந்தம் போகு நித்தமுனி சொன்னாரே." (பாலவாகடத்திரட்டு.

5. போர்மாந்தத்துக்கு இது 12-ம் மருந்து (155-ம் பக்கம் பார்க்க.)

அசமதாம் வசம்புடனே
ஆயோடிடு சீரகமும்
வசமாய் சிறுதேக்குடனே வகையாய்
வறுத்து மணிச்சாற்றில்
நிசமாய் குழப்பிக் கொதியிட்டு நிறைய
சங்கு கொடுப்பீராய்
அசையாமாந்தம் வயிறுஉப்பல் அகலப்
போகும் அணுகாதே. (242)

[1]சுழிகணத்திற்கு (மருந்து).

சிங்கி கர்க்கடகம் சிந்தில் சீரகம் வில்வஓடு
[2]எங்குமே புகள்விடையம் ரோகிணி கண்டகாரி
[3]ரெங்கமா முசுக்கைமுள்ளி பூகல் தூதுவளை திப்பிலியும்
கங்கைநீரால் காச்சிக்கொள்ள கணங்கள் சுவாசம்
[போமே. (243)

[4]சீதசுரத்திற்கு (மருந்து).

நாட்டுமூலம் தூதுவளை நல்ல
கண்டங்கத்திரி வேர்
கோஷ்டம் சிங்கி முசுமுசுக்கை முள்ளி
கொடியவரத்தை திரிகடுகு

---

1. சுழிகணத்தின் குறிகுணங்கள் முன்பே (123-ம் பக்கம்) கூறப்பட்டிருகின்றன.

2. "உங்கதி விடைய நீதானும் உரோகிணி" (பாலவாகடத்திரட்டு.)

3. "பொங்கமா முசுக்கைமுள்ளி புகல்கணை தூதுவளை கங்கைநீர் காய்ச்சிக்கொள்ளக் கணஞ்சுழி சுவாசம் போமே." (பாலவாகடத்திரட்டு.)

4. கரப்பான்கள், கணங்கள், மாந்தங்கள், சீதசுரம் முதலிய விஷயங்கள் இங்கு ஓர் ஒழுங்குமுறையின்றி, தோன்றியவாறு குறிக்கப்பட்டிருக்கின்றன. சீதசுரக்குறிகள் பின்வருமாறு ;—

"சீதசுர தாகமது சில்லென்னல் காய்தல்கண்
போதமிகச் செருகல் புன் தாகம்—கோதின்
கடிவிடம் போலுடலம் காண்டலயர்தல்
கடிமலர்க் கூந்தலாய் காண்."

(பாலவாகடத்திரட்டு.)

[1]எட்டு படியே கிஷாயம் வைத்து இதமாய்
ஆறுபோது அருந்தில்
ஓட்டமிடும் சுரமிருமல் காய்ச்சல்
சீதசுரமும் போமே. (244)

[2]ஆமசுரத்திற்கு (மருந்து).

உத்தாமணியும் பாவட்டை உகந்தசங்கு தூதுவளை
மெத்தக் கடுகும் பொடுதலையும் வேண்டும் ஓமம்
[திப்பிலியும்
ஒத்தமிளகு வசம்புள்ளி ஓடித்த ஆமையோட்டுடனே
குற்றமறவே முடிந்திட்டு குடிப்பீராமங்
[குடிப்போமே. (245)

[3]விக்கல் அதிசாரத்திற்கு (மருந்து).

சீந்தியும் திப்பிலியும் விடையங்கூட்டித் தேனேடு
குழந்தைக்குத் திரிக்கவேணும்
தாங்கிய ஆலமானுவத் துளிர்தான் காய்ச்சித்
தரிப்பீரானல் ஆகியெட்டுச் சுரந்தான்(?)

---

1. "ஏட்டின்படியே குடிநீர்வைத்து இதமாயாறு போதருந்த ஓட்ட மோடுஞ் சுரமிருமலொடுங்கிச் சீதசுரம் போமே."

(பாலவாகடத்திரட்டு.)

2. ஆமசாரத்தின் குறிகுணங்களைப்பற்றி 129-ம் பக்கம் பார்க்க. ஆமசாரத்திற்கு இது 2-ம் மருந்து. (160-ம் பக்கம் பார்க்க.) இதனடியில் வரும் செய்யுள் பாலவாகடத்திரட்டில் உள்ள பாடத்தினும் பெரும்பாலும் மாறுபடுகிறது. அது பின்வருமாறு :—

"உத்தாமணியும் பாவட்டை யுகந்த சங்கு காவட்டை
சித்தமுருங்கை நுணையீர்க்குஞ் சேரக்கூட்டுப் பொடுதலையும்
ஒத்த வோமந்திப்பிலியு முற்ற வசம்பு துளியோடும்
சுத்தமாகக் கருஞ்சீரம் சுகமாய் முடிந்தே யட்டிடுமே."

3. விக்கலுக்கு இது 2-ம் பரிகாரமுறை. (61-ம் பக்கம் பார்க்க.)

விக்கல் அதிசாரம் இடை அடங்குமாறு
பண்டு தரிக்கச்சொன்னர்
இந்தப் பார்தனிலே நாமும்இதைப்
பகருகின்றோமே[1]. (246)

[2]கண்ணுக்கு (மருந்து).

[3]பளம்பாசிகள் பூண்டு வெதுப்படக்கி பகல்
நல்ல வல்லாரை தகரை கூட்டி
இளம்பாகாகக் காய்ச்சி நீர்தனிலேதான் கூட்டி.
இரு சீரகமும் கோரோசனையுந் தான்
விரும்பாலகர் தனக்கு விரும்பக் கொள்ளவிட்டு ஓடுங்
கணமெல்லாம் வெதுப்புமாகும்
இளம்பாலர் தங்களுக்கு நல்லதென்று கேவலமாய்
உரைக்க இது கேளுந்தானே. (247)

---

1. இச்செய்யுள் பெரிதும் ஒழுங்கினமாகக் காணப்படுகிறது.

2. கணநோய் முதலியவற்றைக் கூறுமிடத்தில் "கண்ணுக்கு மருந்து" என்கிற விஷயம் வருவதும் முற்றிலும் ஒழுங்காயில்லை. இச்செய்யுளி லேயே ஓடுங்கணமெல்லாம் என்றிருப்பதைப் பார்க்கவும். பாலவாகடத் திலும் இவ்விஷயம் கணநோய்க்கே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே "கண் ணுக்கு" மருந்தென்கிற தலையங்கம் தவறென்று தெரிகிறது.

3. "பழம்பாசி கணப்பூண்டு வெதுப்படக்கி
பகிய நல்ல வல்லாரை தகரை கூட்டி
குழம்பாகக் காய்ச்சிய நீர்தன்னிலேதான்
கூட்டியிரு சீரகங்கோரோசனை
விழும்பாலர் கணந்தனுக்கு விரும்பிக்கொள்ள
விட்டோடுங் கணமெல்லாம் வெதுப்புமாறும்
கொழும்பாலர் தங்களுக்கே யேலாதென்று
கேவலமா யுரைக்கலினி கேளுந்தானே."

(பாலவாகடத் திரட்டுப்பாடம்.)

[1]கணம் என்னப்பட்ட அகற்த்திற்கு(?).

அதிமதுரம் மேலோடு லவங்கப்பட்டை
ஆண்செண்பக மொட்டு கோஷ்டந்தானும்
விதியுடனே சுக்கும் சீரகமும் முத்தம் விதமாக
வறுத்துப்பொடி இடித்துக் கொண்டு
சதிருடனே சர்க்கரையுங்கூட்டிச் சேர்த்து சகலபிள்ளை
அருந்திடவே சபலமாகும்
மதியுடைய பெண்ணரசே கணமும் போகும் மறுகாய்ச்சல்
என்றதெல்லாம் மாறுந்தானே. (248)

[2]குளிர்காய்ச்சல் கடுப்புக்கு (மருந்து).

உள்ளியின் தைலம் வாங்கி ஒக்கவே
திருயின்(?) வேரும்
கொள்ளிய(?) பொன்னுங்கண்ணி
சாரணைவேரும் காட்டில்

---

1. பாலவாகடத்திரட்டில் இத்தலையங்கம் "கணக்காய்ச்சல் மாற லுக்கு" என்று இருக்கிறது. இப்பாட்டிற்கு அதிலுள்ள பாடம் வருமாறு:—

"அதிமதுர மேலமுடன் லவங்கப்பட்டை
யான சண்பகமொக்கு கோட்டந்தானும்
விதியுடனே சுக்குஞ்சீரகமு முத்தம்
விதவிதமாய் வறுத்திடித்துப் பொடித்துக்கொண்டு
சதிருவனே சர்க்கரையுங் கூடச்சேர்த்துச்
சகலபிள்ளை யருந்திடவே சபலமாகும்
மதிநுதல்சேர் பெண்ணரசே கணமும் போகும்
மாறிவருங் காய்ச்சலெலா மாறுந்தானே."

(இச்செய்யுளின்படி இவ்விஷயம் கணத்திற்கும் மறுசுரம் என்கிற முறைக்காய்ச்சலுக்கும் பரிகாரம் கூறுவதால் "கணம் என்னப்பட்ட சுரத்திற்கு" என்கிற தலையங்கம் முற்றிலும பிசகானது என்று தெரி கிறது). இந்த முறை கணத்திற்கு 5-வது பரிகாரமாகும். (153-ம் பக்கம்).

2. குளிர்ச்சுரக்குறி குணம் வருமாறு :—

"குளிர்ச்சுரமே முன் குளிர் கூடினபின் காய்ச்சல்
நளிராலுடல் வளைதல் நாவும்—களியின்றி
நீர்வாண்டு வேட்கையுறல் நேருமுடல் மேற்றோலில்
சார்ந்த நமை யுண்டென்று சாற்று."

(பாலவாகடத்திரட்டு)

தள்ளியே அரைத்த உண்டைதான்
இரு கழஞ்சி கூட்டி
கொள்ளிவோர் ஆமம் போகும் குளிர்சுரம்
கடுப்பும் [1]போமே. (249)

[2]ஆம சுரத்திற்கு (மருந்து).

[3]வேப்பிலுப்பை மாவிலங்கை பாவட்டை முருங்கை
[விருப்பமுடன்
இலையீர்க்குச் சிறு பிடிகள் சேர்த்து
கோப்பிலோதி நுணை உத்தாமணி வேணித்தண்டும்
கொடி சாரடைவேரும்
பேய்ப்பாச் சொத்தித்தண்டும்(?) காய்ப்பிலே வறுத்து
இரு நாழி நீரில் கற்கந்
திப்பிலி மிளகு மாமையோடு வாய்ப்பிலே வசம்பு ஓமம்
சுக்கு முடிந்திட்டால் வகையாக ஆமசுரம் [4]மாறல்
[போமே. (250)

---

1. "உள்ளியைத் தைலம் வாங்கி யொக்கவே தாராலின்வேரும்
தள்ளிய பொன்னுங்காணி சாரணைவேருங் கூட்டி
ஒள்ளிய மாயரைத்தங் குண்டையோர் கழஞ்சதாக்கிக்
கொள்ளவே யாமமற்ற குளிர்சுரங் கடுப்பும் போமே."
(பாலவாகடத்திரட்டுப் பாடம்).

2. ஆமசுரத்திற்கு இது 3-ம் பரிகாரமுறை. (166-ம் பக்கம் பார்க்க).

3. இப்பாட்டு பாலவாகடத்திரட்டில் பின்வருமாறு காணப்படுகிறது:—

"வேப்பிலுப்பை மாவிலிங்கு பாவட்டைச் சிக்கு
விருப்பமுடனிலை யீர்க்குப்பிடிகள சேர்த்துக்
கோப்பிலோதி நுணைவேலி வேளைவேரும்
கொடிய சாரணைவேரும் பெரும்பாச்சோற்றி
காப்பிலே வறுத்திரு நாழி நீரிற்
கற்கந்திப்பிலி மிளகு மாமையோடு
வாய்ப்பசுக்கு வசம்போம முடிந் திட்டக்கால்
வகையாக வாமசுரம் மாறல் போமே."

4. மாறல் = முறைக்காய்ச்சல்.

[1]அக்கரம் பதினெட்டுக்கு எண்ணெய்.

இன்பூறல் சிறுகீரை முசுமுசுக்கை கோவை
எலிச்செவியும் குரும்பை பொன்னுங்கணி யிண்டு
அன்பான குப்பைமேனி அவுரியோடு
பொடுதலை நல்ல ஆடாதொடை
அன்பான வல்லாரை துளசிவாய்விளா தூதுவளை
கோழியவரை கொன்னை
முன்பானத் தகரையான தகரையோடு முருங்கப்பட்டை
விஷ்ணுக்கிராந்தி கூட்டே[2]. (251)

[3]கூட்டோ நிலைத்தாமரை பர்ப்படகம்
நிம்பங் கொள்ளாளை
வாட்டு நறுவிலி இலைபுரசு ரசமெல்லாம்
வாங்கி எண்ணெய் கொட்டி வகையாய்ச் சேர்த்து
பூட்டு கற்ககத் திரவியம் ஓர்உள்ளி துத்தம் ஞவில்(?)
[கோரோசனை கட்டிதானே. (252)

---

1. சூலி, நீதி, சோதி, வீமி, குண்டி, சபாலி, குமரி என்று ஏழு அக்கரங்கள் தான் உண்டு. பதினெண் அக்கரங்கள் எவை எனத் தெரியவில்லை.

2. பாலவாகடத்திரட்டிலுள்ளபடி (1) இந்த மருந்து முறைக்கு பாலசஞ்சீவி எண்ணெய் என்று பெயர். இதன் பிறகு 253 ம் பாட்டின் முடிவிலும் இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. (2) இம்முறை கணம், அச்சரம், காய்ச்சல் ஆகியவற்றிற்கு ஏற்ற மருந்தென்றும் அங்கு கூறப்பட்டுள்ளது.

3. இப்பாட்டு முற்றிலுமே ஒழுங்காகக் காணப்படவில்லை; பாட்டு நாலு அடிகளுள்ளதாகவுமில்லை. இது பாலவாகடத்திரட்டில் பின்வருமாறு காணப்படுகிறது :—

"கூட்டுமோரிதழ் வனசம்படகம் நிம்பம்
கொள்ளாளை நெரிஞ்சில் நரிப்பயறீருள்ளி
வாட்டு நறுவிலியினிலைச் சுரசமெல்லாம்
வாங்கி யெண்ணெய்க் கொன்றிரட்டி வகையாய்ச்சேர்த்துப்
பூட்டு கற்கம் பஞ்சமூலஞ் ஜாதிக்காய்
புதிய கருஞ்சீரகமும் ஜாதிப்பத்திரி
நாட்டு பஞ்சத்திரவியமோடுள்ளி துத்தம்
நற்கோரோசனை காசுக்கட்டி தானே."

(பஞ்சத்திரவ்யம் என்பதைப்பற்றி 172-ம் பக்கம் பார்க்க.)

[1]கட்டி கடப்பிசினேர்கள் இஞ்சி
கூட்டிக் கலந்து அரைத்து மெழுகுபதம் இறுத்துக்
[கொண்டு
திட்டமுடன் அருந்திட அக்கரக்காய்ச்சல் போச்சு
அந்தபதினெண் கணமும் நசைகெட்டோடும்
வட்டமுலைப் பெண்ணரசே பத்தியங்கேள்
வகையான ஈருள்ளி முருங்கைக்கீரை
சட்டமுடன் துந்துசொன்னேன் பாலசஞ்சீவி
இந்த எண்ணெய் சபலந்தானே. (253)

(ஆமபேராம அத்திசுரங்களுக்கு மருந்து).

நாய்வேளை நற்செம்பருத்தி
சிறுமணத்தக்காளி பொன்னைவரை சிறுதகரை
[பழம்பாசி[2]
சமுத்திரச்சோகி பகிரம்மா பச்சரிசிப்பார்(?) (254)

பாரில் விளாவிடம்பின் பட்டை இலை
எலுமிச்சை செம்பருத்தி இரண்டு செம்முள்ளி
காரமால் துளபந்துவன் இலைவளரும் பாவட்டை
[இலையே[3] (255)

---

1. "கட்டிக்கம்பிப் பிசினியொரு கழஞ்சு கூட்டிக்
கலந்தரைத்து மெழுகுபதம் வடித்துக்கொண்டு
திட்டமுடனருந்திட அக்காங்கள் காய்ச்சல்
சேர்ந்த பதினெண் கணமும் நிசைகெட்டோடும்
வட்டதனப்பெண்ணரசே பத்தியங்கேள்
வகையான ஈருள்ளி முருங்கக்கீரை
கட்டமுடனே உண்ணச்சொன்னேன் பாலசஞ்சீவி
இந்த எண்ணெய் சபலந்தானே."

(பாலவாகட பாடம்.)

2. இந்தப்பாட்டு ஒழுங்கீனமாகவும் குறைவாகவும் இருக்கிறது.

3. இந்தப்பாட்டும் அரைகுறையாகவே காணப்படுகிறது.

பரிவாம் பொடுதலையும் பச்சைகழையின் இலை
நரியான பயறு செருப்படியும்—அரிதான
கோழியவரை துவரை
சுரைக் கொள்ளுப்பட்டை வாழும்முருங்கை
[அகத்தியே. (256)

கற்றுழஞ்சோறு கணப்பூண்டு ஈருள்
சித்தவரை இறகுநீலை சிறுசிள்ளி—கொத்தாருங்
கோடகசாலை இலை இவைதான் கொண்டு
தனிச்சாறு சமன் காடிதனில் வார்ப்பதற்குத்
[தான். (257)

ஆமணக்கெண்ணெய் அளந்து குருணி விட்டுத்
தாமணிக்குழலே தான்—வெய்யலில் வை
ஓமமுடன் சாதிக்காய் சாதிபத்திரி தன்வசம்பு
கொத்தமல்லி கோதில்லா வெள்ளுள்ளி. (258)

[1]பஞ்சத்திரவியமும் பண்பான திப்பிலியும்
மிஞ்சாவராகனிடை இரண்டாய்—அஞ்சாது
அரைத்துக் கரைத்து மெழுகான பதம் பார்த்து
உரைத்தபடி இறுத்துக்கொள்ளே. (259)

---

1. அதிமதுரம், எலம், கோஷ்டம், சென்பகப்பூ, லவங்கம் இவ்வைந்தும் பஞ்சத்திரவ்யம் எனப்படும்.

உள்ளேதான் கொள்வதொரு சீர்கரண்டி எண்ணெய்
விள்ளாத சீதம் விஞ்சிக்கு மென்ன—மெள்ளப்போம்
அஸ்திசுரம் போகும் இதற்கு நல்ல சீரான
பத்தியமே செய்[1]. (260)

---

1. இங்கு ஆமசுரம் முதலியதற்குப் பரிகாரமாய் "நாயர்வேளை" முதல் "உள்ளேதான்" என்கிறவரையில் பத்துப் பாட்டுகள் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. அவை எல்லாம் வெண்பாக்கள். இப்பாட்டுகளுக்கும் இதே முறையில் பாலவாகடத்திரட்டிலுள்ள ஏழு பாட்டுகளுக்கும் பல மாறுதல்கள் காணப்படுகின்றன; இங்குள்ளவை ஒழுங்காகவுமில்லை. ஆகவே அந்த 7-பாட்டுகளையும் இங்கே விளக்குகிறோம்:—

"நறுவேளை நாய்வேளை நற்செம்பருத்தி
சிறுமணித்தக்காளி செவ்வவரை—சிறிய
தகரை பழம்பாசி சமுத்திராசோகி
பகரம்மான் பச்சரிசி பார்."

"பாரில் விளாவடிம்பு பட்டையிலைவேலி
சேரும் பருத்தியிண்டு செம்முள்ளி—காரி
துளபந் தராயினிலை சொல்லும்பருத்தி
பளையாம் பாவட்டை பரி."

"பரிவாம் பொடுதலையும் பச்சைக்கழற்சி
நரிப்பயறு புள்ளடியும் நாடி—அரிதான
கோழியவரை சரக்கொன்றையின் பட்டை
வாழ்முருங்கையும் அகத்தி வை."

"கற்றுழைசசோறும் கணப்பூண்டு மீருள்ளி
சிற்றரும் பீர்க்கு சிறுசின்னி—பற்றுன
கோடகத்தின் சாலைகொண்டு தனிச்சாறு சமன்
சாடிதனில் வார் பதக்குதான்."

"ஆமணக்கெண்ணெ யளந்தே குருணிவிட்டு
தாமரைக்கும் வெயிலிலேதான் வைத்தல்—ஓமமுடன்
சாதிக்காய் சாதிபத்திரி தண் வசம்பு கொத்துமல்லி
கோதில்லா வெள்ளுள்ளி கூட்டு."

"பஞ்சத்திரவியமும் பண்பான திப்பிலியும்
எஞ்சாவராக னிரண்டாகும்—அஞ்சா
தரைத்துக் கரைத்து மெழுகான பதம்பார்த்தே
குறைத்தபடி யிறுத்துக்கொள்."

"உள்ளேதான் கொள்வதொரு கரண்டிவெண்ணெயாம்
விள்ளாதவாமம் விழுவிக்கும்—மெள்ளமெள்ளப்
போராமம் அத்திசுரம் போக்குவதற்கு நல்ல
சீராகப் பத்தியமே செய்."

[1]கோரோசனை லேகியம்.

முலைப்பால் வயது பதினறுள்ளவளுக்கு முந்தூர் முலைப்பா லூறிய தளமெல்லிய இவள் வயதும் ஐம்பத்திநாலும் இசைந் தார் நாழியதற்கு அப்பால் முயலும் விருத்தருக்கு நீர்நாழி மூன்று நாழிக்குங்(?) கொடுத்திடவே உரை செருத்தி ராக்க முடன் உயர்ந்த கலைக்கொம்பின் நேய சேரதனில்(?) துளசிக் கொடி முடக்கொத்தானும் உள்ளி குருவிளா வேலிப்பருத்தி நான்குவகை கருஞ்சீரகம் காசிடைபோட்டு சிவந்திடும் பதத்தி விறக்கியே அரைத்து, திரும்ப வள நெய்தனிலே கரைத்து மருவு ரோசனையும் காசிடை நான்கு சாதிக்காயுடன் பத்திரி ஏலம் வகைக்குக் காசிடை பொடியும் மதுதனிலே இட்டு, அதனை இப்படியுமான இயலப்போட்டு அதை கிண்டி இருந்திடும் புட்றி இயலபோட்டு அதைகிண்டி இருந்திடும் புட்டிவெல்லம் சர்க் கரையும் பூரம் சொல்லவே உலகில் பெரிய மானிடருக்கு தூது வளங்காய் அளவு அது துலங்கிய குழந்தைக்கு அதில் பாதி சுகமுடன் அருந்திடக்கேளு இல்லதோர் மாந்தம் இருமல் பேராமமிதன் கனவாய் வெத்த முக்குணமும் ஏங்கிய 2-ம் பிழைத்து பெருக்குமென்று இயம்பினோர் விளக்கெல்லாம் வாயில் இதுபெரியோர் கோரோசனைக்கு சத்தி ஆசனங்கா லெரிவுமே போக்கும் அத்தனை வினையுங் கண்டிடுமே தலபுடன்? (?)அறிந்து நீர் பாரும் வல்லவர்சொல்லை அறிந்து வாகடத்தை வருக்கு இவை மறவாமனத்துடன் படிக்க வல்வினை அகற் றிடும் இதுவே[2].

(261—265)

---

1. கோரோசனை லேகியம் எந்த நூலிலும் அரிது. மேலும் இங்கு அதைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் சரியா என்பதும் சந்தேகம். விஷயமும் மிக்க ஒழுங்கினமாகவும் எழுதப்பட்டுள்ளது.

2. இச்செய்யுள் இரண்டு எண்சீர் விருத்தமோ அல்லது பதினான்கு கழிச்சீர் விருத்தமோ நன்கு விளங்கவில்லை; அடிகள் ஆரம்பமும் முடிவும் எங்கென்பதும் குறிக்க முடியாமல், திருத்தமுடியாத பல பிழைகள் அடங்கியதாகவும் காணப்படுகிறது.

[1]வெட்கைக்கு (மருந்து).

திசையாம் முலைப்பாலில் சேருமென்னப் பாதி
பசையாகும் பஞ்சவிடையம்—விசையறக்
குப்பை மரமஞ்சள் கடுகுரோகிணி காட்சி
யொப்புடனே வெட்கையறுமோது. *(263)*

[2]கழிச்சலுக்கு (மருந்து).

ஓதும் வெண்குள்ளி விரை தோலித்து உட்பருப்பு
மாது புளியம்விதை தோலுரித்துப்பால்—மேதினியில்
ஓர் கழஞ்சுண்ண வெண்ணெயில் மெள்ளவிடும்
நீர்கழிச்சல் நின்றுவிடும் தேன்மொழியாய் நேர். *(264)*

[3]ஆமசுரத்திற்கு கிஷாயம்.

கூறுமெனும் பாவட்டை கொன்ற செறி(?) ஏரண்டம்
வீறுன வேலிப்பருத்தி வெறிவையின்(?)—காறுகின்ற
நன்மிளகு கூட்டி நயமாய் கிஷாயமிடில்
அஞ்சன மில்லையாம சுரம் செப்பு[4]. *(265)*

---

1. வெட்கை—நீர்வெட்கை; நாவறட்சி.

2. கழிச்சல் குறிகுணம் பின்வருமாறு:—

"வாந்தி பிராந்தி மூர்ச்சையதாய் வாயுங்குரலுஞ் சோரணித்துக்
காய்ந்துமேனி வெதுவெதுப்பாய்க் கைகால்குளிர்ந்து வலியுண்டாம்
சோர்ந்து கழியு மலந்தானும் சீர்கெட்டிருக்கும் பலவிதமாய்ப்
போந்தமாந்தக் கழிச்சலிது பொல்லாதெனவே புகன்றனரே."

(பாலவாகடத்திரட்டு).

3. ஆமசுரத்திற்கு இது 4—ம் பரிகாரமுறை (169-ம் பக்கம் பார்க்க).

4. இப்பாட்டு பாலவாகடத்திரட்டில் பின்வருமாறுள்ளது:—

"கூறுகின்ற பாவட்டை கொன்றை சிற்றாமுட்டியின்வேர்
வீறுடன் வேலிப்பருத்தி வேருடனே—காறுகின்ற
நன்மிளகு கூட்டி நலமாகக் கஷாயமிடச்
சென்மமிலை யாமசுரஞ் செப்பு."

[1]விஷ மாந்தத்திற்கு (மருந்து).

முருவலி நன்னரியோடு வெள்வெங்காயம்
வசம்போடு இந்துப்பு கடுக்காய் முள்ளியம்
மருவிய நாரத்தை எலுமிச்சை வெள்ளை (வாகான)
தலைதாங்கி கீழாநெல்லி
[2]வருசுரையும் பூசுணியும் பெய்ப்பாச்சோத்தி வளர்
[குரட்டை
மால்கரந்தையோர் வகை ஒன்றுக்கி
[3]பெருகநீ விட்டுக்காய்ச்சிக் கொள்ள மேல்
விஷமாந்த கணம் போமே. (266)

[4]பழைய வெதுப்புக்கு (மருந்து).

வேசது சமூல பலமது அன்பது காடி பதக்கு விட்டு எரித்திட்டால் பன்னெண்ணை பகரெரு நாழியிற் கரக்கம் தழைத்திடு வெருகங்கிழங்குக்கு ஒரு பலஞ் சுக்கோடு மறமஞ்சளத்தான் கடுகு தேவதாரமோரத்தை சதகுப்பை செவ்வியம் லவங்கம் (மி)ளகு கரியசீரகம் ரேணுகம் வகைக்கு கழிஞ்சு அரைத்து எரித்து மேல்பூச சுழிகிடும் மாந்தமோடு சுரமும் ஏழுவகை

---

1. விஷமாந்தகணத்தின் குறிகுணம் 111, 116-ம் பக்கங்கள் பார்க்க.

2. "வருவியதோர் பூசுணியுமே பாற்சொற்றி" (பாலவாகட பாடம்).

3. "பெருக நல்ல நீர் விட்டுக் காய்ச்சிக்கொள்ளப்
பிலத்த விடமாந்தகண விக்கல் போகுமே."
(பாலவாகட பாடம்).

4. பழையவெதுப்பு = புராணசுரம்; கீடித்த காய்ச்சல்.

கணமும் வெப்புச் சேத்திமத்தில் இயங்கிடும் சுரம் உடல்ப் பொதிந்து மிருதிடு சுரங்கோர்வையும் விட்டு அகலும் இது வெருக்கெண்ணை இயல்பே[1]. (267)

நடுக்கல் சுரத்திற்கு (மருந்து).

நளிர் குளிர் நடுக்கல் வெப்புவிட்டு
அகலநாடுமோர் நாழியாக
நல்லெண்ணெய் நாழி தேவதாரகுரும்பை
நாக மிந்திரத்தைச் சொலங்
தளிர்தமிழ் மதுரம் முருக்கரு வசம்பு
சாரணை செவ்வள்ளி ஏல
சாதிக்காய் லவங்கம் திருப்பி
நன்னரி சந்தனமும் சீந்தில் வெள்வேலும்
ஒளிர் மரமஞ்சள் சில சிறுமூலம் ஓதும்
பொன் மெழுகு ரோகிணி
சுக்கோடு நல்மஞ்சள் திப்பிலி
காசு உயர சிறுமட்டிலாம் பிச்சை
தெளிகடல் நுரை இவ்வகை
அரைக்கழிஞ்சி சேர்த்
ததை தெரித்துமேல் பூச்சோ சுரமும்
மழலை நளிர் குளிர் நடுக்கல்
தீர்த்திடு மோர்எண்ணெய் சியலே[1]. (268)

---

1. இப்பாட்டு மிகவும் ஒழுங்கீனமாயுள்ளது; அடிகளின் ஆரம்பம் முடிவுகள் விளங்கவில்லை; ஆயினும் இது பதினென்கு சீராசிரிய விருத்தமாயிருக்குமென்று தோன்றுகிறது.

2. இப்பாட்டும் ஒழுங்காகக் காணப்படவில்லை. ஐந்து அல்லது ஒன்பது அடிகள் எந்த விருத்தத்திலும் கிடையாது.

[1]பழஞ்சுரத்திற்கு (மருந்து).

முக்கூட்டெண்ணெய்.

சுரமிது தணிய பசுவின்நெய் நாழி
சொல்லிடும் பால் இரு நாழி தோன்றும்
ஓர் ஆறு நாழி நல்லெண்ணெய்
வகையது நாழியிற் கற்கம்
வரும்பெருகுரும்பை மதுர நன்னரி
வளர் கருவேலிலை ரோகிணி
வாருசெவ்வள்ளி
கொடிய முக்கராவேர்
வருமரமஞ்சள் சந்தனத் தேரெமெறு
சுக்குக் காசுடன் ஒக்குவாய்
வாய்ந்திடும் கோஷ்டம் இவ்வகைக்கு
ஓரு களஞ்சி அரைத்து

---

1. பழஞ்சுரத்திற்கு இது இரண்டாவது பரிகாரமுறை. (159-ம் பக்கம் பார்க்க.) இம்மருந்து இங்கே முக்கூட்டெண்ணெய் என்றிருக்க, பாலவாகடத்தில் கோஷ்டஎண்ணெய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

" சுரமது தணிய பசுவின் நெய் நாழிச்
சொல்லிடும் பாலிரு நாழி
தோன்றுமோராறு நாழி நல்லெண்ணெய்
தொகையது சேர்த்தில் கற்கம்
வரும் பெருங்குரும்பை மதுரநன்னரி
வளர் கருவேலிலை ரோகிணி
வாரு செவ்வன்னிக்கொடி அமுக்காவேர்
வரு மரமஞ்சள் சந்தனமும்
திருவுள சுக்குக்காசுடன் அரக்கு
திமிர்த்திடுங் கோஷ்ட மிவ்வகைக்கு
திகழொரு கழஞ்சரைத் தெரிந்திதை
சேய்கட் சிரத்தினு முடம்பினிற் பூச
பரவிய பித்தசுரம் பரிதாபப்
பல் வலசுரம் பழவெதுப்பும்
பானுமுன் பனிபோற்பறந்திடு மிதன்பேர்
பாருதற் கோஷ்ட எண்ணெய்ப் பகரே "

(பாலவாகடத்திரட்டு.)

எரித்ததை சுரனுடம்பினிற் பூசிய
உடனே பாவித்த சுரம் பரிதாபம்
பலபல சுரம் பழவெதுப்பும் பானு
முன் பனிபோல் பறந்திடும் அதன்
பெயர் பாருமுக்கூட்
டெண்ணெய் பகரே. (269)

[1]வாத கரப்பானுக்கு (மருந்து).

வீங்கிய கரப்பான்விட்டு அகல இலைக்கள்ளி
